
ஆனந்தம் அடி
ஆனந்தி

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஆனந்தம் அடீ ஆனந்தி |
| ஆசிரியர் பெயர் | : | காஞ்சனா ஜெயதிலகர் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| முதற்பதிப்பு | : | ஜுன், 2002 |
| தாளின் தன்மை | : | 11.6 கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 1X 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 216 |
| கணிப்பொறி அச்சு | : | அன்னை கிராபிக்ஸ் சென்னை-14 |
| நூல் கட்டுமானம் | : | சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : | **அருணோதயம்** 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014. |
| விலை | : | ரூ. 50.00 |
| அச்சிட்டோர் | : | சேகர் ஆப்செட் சென்னை-5 |


ஆனந்தம் அடீ
ஆனந்தி

anandhan engaged to sudhangi who is rich girl
anandhi from london comes to stay in thier house
later everybody likes her at end marries anandhan

# ஆனந்தம் அடீ ஆனந்தி



## 1

ரம்மியமான அதிகாலைப் பொழுது.

குருவியின் 'கீச்கீச்' கோரஸ்சால் கீழ்வானம் மகிழ்ந்து சிவக்கிறதா அல்லது வானத்தின் வர்ண ஜாலக்குகளைக் கண்ட பரவசத்தில் பறவைகள் கீதமிசைக்கின்றனவா- என்பது புரியாது மயங்கி மகிழக்கூடிய அதிகாலை 21 புள்ளிகளை வைத்து நேர் புள்ளியாய் மூன்று புள்ளி வரையிலாய் குறுக்கி அத்தனை புள்ளிகளையும் வளைவு சுழிவுகளுக்குள் அடக்கி விட்ட திருப்தியில் நிமிர்ந்தாள் பொன்னி.

''ஏய்... நீ கிட்டு வாங்கத்தான் போறே. ஒரு மணி நேரமாக் கோலம் இழுத்திட்டு இப்ப அதை வேற அழகு பார்த்துட்டு நிக்கிறே...''

''போக்கா... கோலங்கூட அம்சமாப் போடக் கூடாதாக்கும்.... இன்னைக்கு அப்படி அமைஞ்சுபோச்சு...''

''உன் வீட்டு வாசல்ல வீதியை அடைச்சு கோலங்கட்டு. யாரு வேணாம்னா? வேலைக்காரின்னா வாசல் தெளிச்ச கையோட மாவால நாலு இழுப்பு இழுத்துட்டு அடுத்த வேலைக்கு ஓடணும்.''

''பக்கா... இன்னைக்கு அந்த பெஷல் கெஸ்டு வரு வாங்களாம்ல...?''

''கெஸ்டு இல்லடி... கெஸ்டு... அதாவது விருந்தாளி...''

''இளையவளின் தப்பைச் சரிசெய்தாள் பெரியதாயி.''

''அதுக்குத்தான் இந்தக் கோலம்.''

''முதலில் சின்னம்மா வரும். மடி நிறையத் தரும். வாங்கிக் கட்டிக்க...''

பொன்னியின் வாய் கோணியது.

''சுதாம்மா வர்றப்ப நான் எதிர்க்க வர்றதே கிடையாதே. நம்ம பெரியம்மாளுக்கே அதைக் கண்டா பயந்தான்.''

''கோலம் மாதிரியே வார்த்தையையும் வளைச்சு வளைச்சு பேசுவே. விருந்தாளி அறை சுத்தமா இருக்கா...''

''அதத்தான் ஒரு வாரமாத் தினமும் துடைக்கேனே... வர்ற பொண்ணு யாருக்கா?''

கோல டப்பாவை வைத்து விட்டு மாவு படிந்த கைகளைக் கழுவியபடி குரல் தணித்துக் கேட்டாள் பொன்னி.

''பெரியம்மாளோட அண்ணன் பொண்ணாம்.''

''அதாரு, நமக்குத் தெரியாத அண்ணன்?''

''ஒன்றுவிட்ட உறவு. வெளிநாட்டுலேயே ஒண்டியா இருந்திருக்காரு. வெளிதேசத்திலேயும் கட்டுப்பாடாய் வாழ்ந்திருக்காருன்னாப் பாரேன்...''



''நல்லவுக எங்கேயும் ஒழுங்காத்தான் இருப்பாங்க. நம்ப ஊரிலேயும் கஞ்சிக்கு வக்கில்லாதவங்க கண்ணு அடுத்த பொண்ணைத் தேடுது... பவுசாய் இருக்கவங்க மட்டு மென்ன?''

''இப்படி ரொம்ப வாயாடினா உனக்குக் கல்யாணம் ஆவாது...''

''போகட்டும்... இத்தனை நாளாய் அவரு ஏன் இந்தப் பக்கம் வரலியாம்?''

''வேலைதான். கோமகவராமுல்ல... நம்ப பெரிய தம்பிக்கு இப்படி வீட்டுல ஒரு வயசுப் பொண்ணைக் கூட்டிவந்து வச்சிருக்கிறதுல பிரியமில்ல... ரெண்டு மாசத்துக் குன்னா அது ஒரு பொறுப்பு தானே? ஆனா கேக்கறவரு பெரிய இடம். அம்மாவும் கெஞ்சிக் கேக்க அரைமனசோட சம்மதிச்சிட்டாரு.''

தனக்குத் தெரிந்த சில தகவல்களை ஒலிபரப்பாத விசுவாசமான வேலைக்காரி பொன்னி என்பதால் பெரியதாயி மெதுவாகப் பகிர்ந்து கொண்டாள்.

குவளை நீராகாரத்தை ஒரே மூச்சில் குடித்துவிட்ட பொன்னிக்குத் திருப்தியாயில்லை.

''நாங் கேட்டதுக்கு பதிலச் சொல்லுங்கக்கா...''

''என்னடி கேட்ட?''

''கோமகவரு சரி. நம்ப பண்ணை வீடும் செயலானது தான் - பெரியம்மாளோட அண்ணன் இது வரை ஏன் எட்டியே பார்க்கலியாம்?''

''அவரு நம்ப நாட்டிலேயே இல்லியேடி... இப்ப அம்மாளோட அண்ணன் பொண்ணு கல்யாணம் பெங்களூர்ல நடந்துச்சல்ல... அங்கதான் ரொம்ப நாள் கழிச்சு இவுக ரெண்டு பேரும் பார்த்துகிட்டாங்களாம். கல்யாணத்திலே இருந்து

திரும்பினதும் பிரியமாய் தன் உறவைப் பத்தியே பேசினாங்க அம்மா...''

''அவருக்கு உடன் பொறப்பெல்லாம் கிடையா தாமா?''

''கூடப் பொறந்த பொண்ணுக இல்லை. அதனால அவருக்கு நம்ப அம்மாமேலே தனிப் பாசம். தவிர பெண் குழந்தையை அத்தைகிட்ட விடறதுதான் ஊரு வழக்கம்.''

''அந்தப் பொண்ணுக்கு எத்தனை வயசிருக்கும்?''

''ஆங்.. வந்ததும் பாரு. இன்டர்வ்யூ எடுக்காளென்னை...''

''அம்மா... கஞ்சி கொணந்திருக்கேன்... சாப்பிடறீங்களா?''

இலக்கின்றி ஜன்னல் வழியே வெறித்த தனம்மாள் தன் பார்வையைத் திருப்பவில்லை.

அவள் பண்ணை வீட்டின் எஜமானி.

ஆனால் இன்னும் எத்தனை நாள் இப்பதவி நீடிக்குமோ தெரியவில்லை. நடுத்தர உயரம் - பருமனிலிருந்த தனம்மாள் விதவை என்றாலும், வெளிர் நிறப் பட்டுகளையே உடுப்பாள். கழுத்தில் கனத்த பவளமாலை, காதுகளில் ஒன்பது கல் வைரத்தோடு ஜோடி.

பாத்திரத்தை மேசை மீது வைத்த வேலைக்கார சின்னப்பூ அதை வாகாய்க் கட்டில் பக்கம் நகர்த்தினாள்.

''பரிமாறட்டுமாம்மா?''

''என்னத்தடி பரிமாறப் போறே? பூரியும், பொங்கலுமா எடுத்து வந்திருக்கே? இந்த ராகிக் கஞ்சியை அப்படியே குடிக்க வேண்டியது தானே... அதுல உப்பும் இருக்காது. வெல்லமும் கிடையாது...''

''சின்னம்மா உங்க நல்லதுக்குத் தானம்மா சொல்லு தாக...''



வீட்டின் எஜமானி தன்னைச் சுட்டுவிடுவது போல பார்க்கச் சின்னப்பூ வாய் மூடிக்கொண்டாள்.

''யாருடி சின்னம்மா? இன்னும் என் மகனுக்கும் அவளுக்கும் நிச்சயதார்த்தம் கூட நடக்கலை. அதுக்குள்ள யாரு அவளை அப்படி கூப்பிடச் சொன்னது?''

''சின்னவருதாங்க... சின்னம்மா சொல்படி செய்யணும்னு சொன்னாங்க. நாங்க அப்படியே கூப்பிடுறோம்...''

மகனது உத்தரவு என்பது தெளிவானதும், வேறுவழியின்றி கஞ்சியைக் குடிக்கலானாள் தனம்மாள்.

இன்று களியில் மோர் கலந்திருந்ததால் குடிக்கச் சுவையாகவே இருந்தது. இதே பண்ணை வீட்டில், தான் வகை தொகையாய்ச் சாப்பிட்டதெல்லாம் 50 வயது தனத்திற்கு ஞாபகம் வந்தது.

சாப்பாட்டு வேளையில் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தால், அப்படியே சாப்பிட உட்கார்ந்து விடலாம்.

எப்போதும் கூடுதலாய்ப் பத்து பேருக்குச் சமைத்த வீடு இது.

ஆனால் நிலையான வருமானம் இன்றிச் செலவுகளை மட்டும் செய்தால் குடும்பப் பொருளாதாரத்திற்கு சரிப்படாது என்பது தனத்திற்குத் தெரியவில்லை.

அதிகப் படிப்பற்ற தனத்திற்கு, தான் பிள்ளைச் செல்வத்திற்குக் குறைவின்றி ஆணில் ரெண்டும், பெண்ணில் ரெண்டும் பெற்றுவிட்டதில் ஏகப் பெருமை.

அதிலும் பெரியகுளம் அருகேயிருந்த அம்மிராசு குடும்பத்தில் மூத்தவர் சுந்தரசாமி, பிள்ளையற்றவராகிப் போக, இளையவர் ராமசாமியின் கொடி உயர்ந்தது. அதற்கு ஒரே காரணம் குடும்பத்திற்கான வாரிசுகளைத் தான் பெற்றுத் தந்ததுதான் என்பதை உணர்ந்த தனமும் ஆர்ப்பாட்டம் செய்தாள்.

அவளும் ஓரளவு வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவள்.

''எங்க, சொந்தத்துல கல்யாணம் ஒன்னு வருதே... நமக்குத் துணி எடுக்கணும்'' என்பாள்.

''ஏன் தனம்... தீபாவளிக்கு எடுத்ததை இன்னும் நீ உடுத்தி நான் பார்க்கலை. அன்னைக்கு கொஞ்ச நேரம் கட்டிக் களைஞ்சதுதான் மிச்சம்.'' குழைவார் ராமசாமி.

''அதே நிறத்துல ஊர்க்காரிகள் ரெண்டு பேரு சேலை எடுத்ததாக் கேள்வி. அவங்க அதைக் கட்டிட்டு வர, ஊருக்கே பெரிய குடும்பத்துப் பொண்ணு நானும் அதுல போறதா...? குழந்தைகள் உடுப்பும் தீபாவளி முழுக்க போட்டுப் புரட்டினதுல பழசாத் தெரியுது. நாங்க மினுமினுன்னு போனாத்தானே உங்களுக்கு மதிப்பு...''

''பின்னே?'' தலையாட்டிவிடுவார்.

தனக்குப் பிள்ளை பிறக்காத துக்கத்தில் மூத்தவரின் மனைவி சதா விரதம், வேண்டுதல் என்று தன்னை வருத்திக்கொண்டு அல்பாயுசில் போய்ச் சேர, வீட்டின் எஜமானியாகத் தனத்தின் கை உயர்ந்தது.

ஆனால் பதவிக்கு ஏற்ற புத்தியும், பணிவும் அவளிடம் இல்லை!

சர்க்கரை கிலோ என்ன விலை என்பது தனத்திற்கு மட்டுமல்ல, அவளின் வேலையாட்களுக்கும் தெரியாது. அவர்களும் பண்ணை வீட்டிற்கு வந்த இறங்கும் மூட்டைகளிலிருந்து அள்ளிக்கொள்பவர்கள் தானே!

வேலையாட்கள் எஜமான் வீட்டில் வாரி இறைத்தது போக, தங்கள் வீடுகளுக்கும் பருப்பு, புளியைக் கடத்தினர்.

அத்தனையையும் கவலையுடன் கவனித்திருந்தார் மூத்தவர் சுந்தரசாமி. வாரிசு இல்லாத அவருக்கு, தன் மனைவியும் போனபிறகு எதிலும் பற்றில்லை. அதற்காகத்



தம்பியும் தனமும் தாறுமாறாய்க் குடும்பத்தை ஓட்டுவதைக் கண்டுகொள்ளாது விடவும் மனமில்லை.

தம்பியின் மூத்த மகனைப் பிடித்துக் கொண்டார்.

மூத்தவன் ஆனந்தன் கூர்மையானவன்.

ஆனந்தனைத் தன் அறையில் அமர்த்து படிக்கச் சொன்ன சுந்தரசாமி அப்படியே அவன் உலகைப் பார்க்கவும் படிக்கவும் கற்றுத் தந்தார்.

வேலைக்காரர்களிடம், உறவினர்களிடம், நண்பர்களிடம், வியாபாரம் நிமித்தம் பழகும் முறைமைகளை ஆனந்தன் பெரியப்பாவைப் பார்த்துப் பழகினான்.

பெரியவரிடம் ஊர் காட்டும் மதிப்பை தன் தந்தையிடம் காட்டவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

அது ஏன் என்பதையும் அவனால் மெல்ல கணிக்க முடிந்தது.

தன் பெற்றோர்களிடம் அதுபற்றி பேச முயன்றால்-

''போடா பெரிய மனுசா... சொல்ல வந்துட்டான். தினம் பண்ணைக்குப் போவணுமாம், மேற்பார்வை செய்து கணக்கைச் சரிபார்க்கணுமாம். இது தானாய்ச் சுழலுற சக்கரம்டா... எல்லாம் அதது போக்குல நடக்கும். நிலத்தை ஒத்திக்கு விட்டா, காசையோ பொருளையோ கொண்டுவந்து தந்துட்டுப் போறான்.''

''அதையாவது நாம சரியான்னு பார்க்கணும். இல்லையா?''

18 வயது ஆனந்தன் சொன்னது தகப்பனுக்குச் சிரிப்பாய்ப் பட்டது.

தாய் தனமும் உடன் சேர்ந்து சிரித்தாள்.

ஆனால் நச்சுக் காய்ச்சல் கண்டு ஒரே வாரத்தில் கணவன் இறந்த பிறகுதான் அவளுக்கு வாழ்க்கை அவ்வளவு சுலபமானது இல்லை என்பது உறைத்தது!

தம்பியின் மரணம் கந்தசாமியை நெருக்க, அவர் மேலும் மும்முரமானார்.

சொத்துகள் அத்தனையும் ஆனந்தன் பேருக்கு மாற்றப் பட்டன.

"இனி நீ எச்சரிக்கையாய் இருக்கணும்ப்பா..." என்று சுதா பெரியப்பா சொல்ல, துள்ளல்கள் மறந்து விறைப்பானான் ஆனந்தன்.

இளைஞன் என்று தன்னை ஏமாற்றிவிடுவார்களோ என்று எதையும் சந்தேகத்துடனேயே பார்த்தான்.

எல்லோரிடமும் சற்று மிரட்டலாகவே பேசினான்.

காசை இறுக்கிப் பிடித்தான்.

மூன்றாம் ஆண்டு பெரியவர் கந்தசாமியும் இறந்து விட, அவன் தோள்களில் பளு ஏறியது.

தம்பி - தங்கையைச் சிறந்த பள்ளி, கல்லூரிகளின் விடுதிகளில் சேர்த்தான். கரைய இருந்த சொத்துகளைக் காப்பாற்றினான்.

நூற்றுக்கணக்கான ஏக்கருள்ள தோட்டங்கள் எங்கும் அவன் காலடிகள் பதிந்தன. புதுப் புது உத்திகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கினான். விரைவில் மதுரை ில்லாவில், விவசாயத்தில் விளைச்சல் காண்பதில் கில்லாடி ன்ற பேரை வாங்கிவிட்டான்.

முனைப்பும் உழைப்பும் ஆனந்தனை கம்பீரமாய் ருவாக்கின. மாநிறமும், நல்ல உயரமுமாக இருந்த அவன் லில் இள்ளிப் பிதுக்கச் சதையே கிடையாது என்றாலும் ண்ட தோள்களும் முகக்களையும் அவனை அழகன் என்று த்துச் சொல்லின.

இத்தனையும் பார்த்தால் பெண்ணைப் பெற்றவர்கள் னைச் சும்மா விடுவார்களா?



முதல் கட்டமாய் தனம்மாளை மொய்த்தனர்.

விதவையான பின் முன்பு போல புதுசும், அலங்காரமுமாய் இருக்க முடியாத தனம் மிக வாடிப்போனாள்.

உறவுக் கல்யாணங்கள், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுதான் அவளுக்கான ஒரே ஆசுவாசம். ஆனந்தனும் அதை மறுக்கவில்லை. தடை போடவில்லை. முக்கியத்துவம் ஏதுமின்றி இவற்றில் கலந்துகொண்ட தனத்திற்கு திடீரென மறுபடி கிடைத்த மரியாதைகள் இனித்தன.

விசேஷ வீட்டில் இவள் போய் இறங்க...

'அம்மாவை முன்னே கூட்டிப் போய் உக்கார வையுங்க...'

'பச்சடியை இன்னும் கொஞ்சம் வை....'

'அம்மாவுக்குக் காத்து வருதா... இல்லை, விசிறி கொண்டு வீசச் சொல்லவா... இவளைத் தெரியுதில்லை...? என் மகள் கோதை...'

'அண்ணி, உங்க வீட்டுல எத்தனை முறை சாப்பிட்டிருக்கோம். அந்தச் சுவையில் இன்னைய வரைக்கும் வேறெங்கும் சாப்பிட்டதில்லை. உங்க மனசு அப்படி...'

ஆளாளுக்கு இப்படிக் கொண்டாடினார்கள். தனம் ஓரமாய் உட்கார நேரவில்லை.

அவளை நடுவே அமர்த்தி சுற்றிலும் வண்டுகளாய் வந்து துதித்து ரீங்கரித்தார்கள்!

தனத்திற்கு இதற்கான காரணம் புரியச் சிறிது காலமானாலும், புரிந்ததும் மும்முரமாய்த் தனக்கான மூத்த மருமகளைத் தேடலானாள்.

ஆனால் இவள் இரு ஆண்டுகளாய்ப் பண்ணிய அலம்பல், ஆராய்ச்சிக்கெல்லாம் 'சட்'டென்று முடிவு வந்தது!

ஒரு நாள் தாய் முன் வந்து நின்ற ஆனந்தன், ''அம்மா... நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்... பொண்ணு சுதாங்கினி... சின்னபிராகங்கர அந்த அழகேசனின் மகள்...'' என்றான்.

தனம் விழித்தாள்.

''என்னடா திடீர்னு? அவங்க எங்கிட்ட தூது விடட்டும்... பிறகு பார்த்துப் பேசி...''

''அவர் நேரே எங்கிட்ட பேசிட்டாரம்மா... நம்ப நிலத்தை ஒட்டி இருக்கிற பெரிய மாந்தோப்பைச் சீதனமாய்த் தர்றாராம். ஒரு கிலோ நகை, 10 இலட்சம் ரொக்கம், மதுரையில் ஒரு வீடும் வரும். சரின்னுட்டேன். சுதாங்கினி படிச்சிருக்கா. ஷி இஸ் ஸ்மார்ட்... வேறென்ன?''

தன்முன் பரப்பப்பட்டிருந்த விதவிதமான விளையாட்டுப் பொருட்கள் அனைத்தும் ஒருங்கே பிடுங்கப்பட்ட குழந்தையானாள் தனம்!



## 2

கல்யாண வீடுகளுக்குப் போய் வந்தால் ஒரு ஆர்ப்பாட்டமான அலுப்புடன்தான் இருப்பாள் தனம்மாள். குடிக்கக் கெட்டியான மோர் தந்துவிட்டு எஜமானியின் கால்களைப் பதமாய்ப் பிடித்து விடுவாள் பெரியதாயி.

பல ஆண்டுகளாய்ப் பண்ணை வீட்டில் வேலை பார்த்து வரும் பெரியதாயிக்கும் தனத்தை ஒத்த வயது என்பதால் இருவருக்குள்ளும் பேச்சு சரளமாய் உருளும்.



''யப்பா... ஆளாளுக்கு என்னைப் பாரு, என் பொண்ணைப் பாருன்னு என்னைப் பிய்ச்சு எடுத்துட்டாங்க தாயி...''

''இருக்காதாம்மா பின்னே? நம்ப சின்னவருக்குத் தோதாய் ஏதேனும் பொண்ணு அம்மா கண்ணுல பட்டுச்சா?''

''தோப்புக்காரரு குடும்பம் பரவாயில்லை. மரியாதை தெரிஞ்சவங்க. ஆனால் பொண்ணு பல்லு வேசாய் தூக்கலா இருக்குதே...''

''அப்ப வேணாம்மா... காலம் முழுக்க நாம பார்க்க வேண்டிய முகராசி...''

''கோதைப் பொண்ணு பார்க்கத் தேவலை. ஆனால் சும்மாச் சும்மா சிரிக்கிறா. ஆனந்தனுக்கு அதெல்லாம் பிடிக்காதே. தங்கச்சிங்க சிரிச்சாலே முறைப்பான்.''

''பவுனாட்டம் நிறமிருக்கனும்மா...''

''வேலாயுதம் மகள் நல்ல சிவப்பு. ஆனால் உயரம் குறைவு. இவன் தோளுக்கேனும் வரவேணாம்.?''

ஆனால் ஆனந்தன், தான் இன்னாரைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாய்ச் சாதாரணமாய் ஒரு அறிவிப்பு விட, தனத்தின் அலட்டல்களுக்கு வழியில்லை.

மகன் பொருட்டு கடந்த இரு ஆண்டாய் அவளுக்குக்கிடைத்து வந்த ராணி மரியாதை கையில் இருந்து உருவின பலூனாய்ப் பறந்தேபோனது!

தன்னைக் கலந்து ஆலோசிக்காமல் மகன் திருமண முடிவெடுத்தது தனம்மாளுக்கு அதிர்ச்சிதான்.

வரப்போகும் மருமகள் சுதாங்கினியைப் பிடிக்காமல் போக இந்த ஒரு காரணமே போதும்.

போதாததற்கு ஊரறிய நிச்சயதார்த்தம் நடக்கும் முன்னே சுதாங்கினி அடிக்கடி இவர்கள் வீடு தேடி வந்தாள்.

"சீர், செனத்தின்னு ஆசை காட்டி மாப்பிள்ளையைப் பிடிச்சிட்டேம்மா சுதா. இனி அங்கே போக வரான்னு இருந்து மற்றதைச் சாதிக்கறது மகளே உன் சமர்த்து" என்று போதித்திருந்தார் அவள் தந்தை.

உரிமையுடன் வந்து புழங்கிய சுதாங்கினியின் நடவடிக்கைகள் இங்குள்ளவர்களுக்கு எரிச்சல் மூட்டியது.

"வாசல்ல எதுக்கு இத்தனை பெரிய கோலம்?" என்பதிலிருந்து "வேலைக்கு இவ்வளவு பேர் வேணாம்" என்று சில வேலைக்காரர்களை வீட்டிற்கு அனுப்பியது வரை அவளும், ஆனந்தனைப் போல கடுமையான போக்குடையவளாய் இருந்தாள்.

"கண்டதையும் சாப்பிடாதீங்க அத்தை. இரத்த அழுத்தம், சர்க்கரை ரெண்டும் உங்களுக்கு லேசா அதிகரிக்கும் கட்டத்துல இருக்கு - காலையில கேப்பைக் கூழ் மட்டும் குடிங்க. காய்கறிகளை வேகவச்சால் போதும். தாளிக்க வேணாம்" என்று கரிசனையுடன் உத்தரவிட்டாள்.

வீட்டின் அறைகளை உன்னிப்பாய்ப் பார்த்துவிட்டு ஆனந்தனிடம், "வீட்டை நல்லா பராமரிக்கறீங்க... ஆனால் அலங்காரம் சரியில்லை. சரி, இனி அதெல்லாம் என் பொறுப்பு... அசத்திடுறேன்." என்று வரிந்து கட்டினாள்.

இவள் வேகத்திற்கு பயந்த குடும்பத்தினர் எட்டியே நின்றனர்.

ஆனந்தனின் தம்பி, தங்கைகள் பற்றி இங்கு குறிப்பிட்டாக வேணும். மூத்த தங்கை அமுதினி மனையியல் பட்டப்படிப்பை முடித்திருந்தாள்.

"அண்ணா, எனக்கு இலக்கியம் படிக்க ஆசை" என்று அவள் கெஞ்சியதை ஆனந்தன் காதில் ஏற்றிக்கொள்ளவில்லை.

"நாளை உன் வீட்டைத் திறமையா நிர்வாகம் பண்ண மனையியல் தான் சரி. இலக்கியமெல்லாம் வேணாம்" என்ற



அதட்டலுடன், தங்கையைத் தான் தேர்ந்தெடுத்த படிப்பிலேயே சேர்த்திருந்தான்.

இலக்கியத்தின் மீதான தன் ஆர்வம் நிறைவேறாததால் அதை வேறு வகையில் அடையும் தீவிரம் அமுதினியிடம் இருந்தது.

ஒரு இலக்கிய ரசிகனைத் தன் வாழ்க்கைத் துணையாகத் தேடும், கனவிலிருந்தாள் அவள்.

அவளுக்கடுத்தவன் ஆகாஷ்.

பெயருக்கேற்றாற்போல் வேலியை விரும்பாத குணம்.

அளக்கவோ, அடக்கவோ முடியாத உற்சாகத்துடன் வளைய வருபவன். அண்ணனைக் கண்டால் மட்டும் பம்மிப் பதுங்குவான்.

கைக்காசை தாராளமாய் இறைக்கும் குணமும்கூட. அதனால் கல்லூரி நண்பர்களுக்கும், வீட்டில் வேலைக் காரர்களுக்கும் குட்டி துரையைப் பிடிக்கும்.

ஆகாசுக்குப் பிடித்த குலோப்ஜாமூனும், மசால் தோசையும் அடிக்கடி தயார் செய்யப்பட்டு அவன் அறைக்குக் கொண்டுபோய் படைக்கப்படும்.

ஆனால் இருபது வயதைத் தொட்டுவிட்ட அவன் தேவைகள் இப்போது மாறிவிட்டன.

அறையில் இரகசியமாய் ஒளித்து வைக்கப்பட்ட 'அந்த'ர(ங்)கப் பத்திரிகைகள் அவனை நாலூறச் செய்தன.

கடைக்குட்டி அகிலாவிற்கு எல்லா வீடுகளையும் போல இங்கும் செல்லம் அதிகம்.

ஆனந்தனுக்குமே அவளைக் கண்டால் முகம் இளகும்.

"என்ன எப்படியிருக்கே?" என்றவன் கனிவாய்க் கேட்டுத் தட்டிக் கொடுப்பது, தன் 13 வயதுத் தங்கையை மட்டும்தான்.

இதில் வயது வேறுபாடு குறைவாய் இருந்தது ஆகாசக்கும், அமுதினிக்கும் இடையேதான். இரண்டே ஆண்டு. மூத்தவள், ஆனந்தனுக்குப் பிறகு ஒரு குறைப் பிரசவம் நேர்ந்ததில் சில ஆண்டு குழந்தை தரிக்காமல் தனம்மாளுக்கு வைத்தியம் நடந்த பிறகுதான் அமுதினி பிறந்தாள். அப்போதே ஆனந்தனுக்கு ஏழு வயது என்பதால் பொறுப்பான அண்ணனாய்த் தங்கையை அவ்வப்போது பார்த்துக் கொள்வதோடு தன் கடமை தீர்ந்தது என்று ஒதுங்கி நிற்பான்.

''மணியான மூன்று குழந்தை போதும்'' என்று இருந்தவர்களுக்குக் கூடுதல் பரிசாய் ஏழு ஆண்டுக்குப் பின் கிடைத்த சிறப்புப் பரிசு அகிலா.

பெரியவனுக்கு 15 வயதான பிறகு, தான் வயிற்றைச் சாய்த்தபடி நடக்கவேண்டி இருக்கிறதே என்று தனத்திற்கு வெட்கம் இருந்தாலும் பண்ணைக் குடும்பத்திற்கு நாலு வாரிசுகளைத் தரப்போகிறோம் என்ற பெருமிதம் அதை அடித்துப் போட்டது.

அதிலும் அகிலா, தன் அக்காளைப் போலவே அழகும் நிறமுமாய்ப் பிறந்துவிட, குடும்பத்திற்கே பூரிப்புதான்.

ஒடிசலான உடல்வாகு என்றாலும் எந்த நிமிடமும் தான் ஒரு முழுமையான பெண்ணாகப் பூத்துவிடலாம் என்ற மெல்லிய வளைவுகளுடனும் குழந்தை முகமுமாய் இருந்த கடைக்குட்டி அகிலா முதற்கொண்டு யாருக்கும் வீட்டிற்கு மருமகளாய் வரப்போகும் சுதாங்கினி மேல் பற்றில்லை.

தங்கள் வீட்டிற்கு வந்து தங்களையே திருத்தும் அவள் போக்கு எல்லோருக்கும் எரிச்சலூட்டியது.

இப்போதே இப்படியென்றால் உரிமையுடன் சுதாங்கினி இங்கு வாழப்போகும் நாட்கள் எப்படியோ என்ற பயம் வேறு!



தங்கள் குடும்பச் சூழ்நிலையில் வீட்டிற்கு விருந்தாளி வருவதை யாரும் ஆவலாய் எதிர்நோக்கவில்லை என்பது தான் உண்மை.

ஆனால் தமையன் கேட்க, தனம்மாவுக்கு மறுக்க முடியவில்லை.

ஒன்றுவிட்ட அண்ணன் துரைராஜை பெங்களூர் கல்யாணம் ஒன்றில் பல ஆண்டு கழித்துப் பார்த்தவள் அவர் தன்னைக் கொண்டாடிய விதத்தில் குளிர்ந்து விட்டாள்.

பெங்களூரில் பட்டு நெய்யும் இடத்திற்கே கூட்டிச் சென்று தினுசுக்கொரு சேலை வாங்கித்தர, நெகிழ்ந்தாள்.

தாய் வீட்டுச் சீதனமாய்த் துரும்பே வந்தாலும் பெண்களுக்கு அது கரும்புதானே!

ஆக அண்ணனை மகிழ்ந்து அதட்டினாள்.

''இதெல்லாம் சரிண்ணே... ஆனா நீ எப்ப எங்க ஊருக்கு வர்றே?''

''பேரென்னம்மா... பேய்க் குளமா... பெரிய குளமா...?''' - சீண்டினார் துரைராஜ்.

''போங்கண்ணே... குளத்துப் பண்ணைன்னுவாங்க... நம்ப பண்ணையே ஒரு ஊரு அளவிலே இருக்குமே...''

''எனக்கு கிராமமெல்லாம் சரி வராதம்மா... சாயங்காலமானாரெண்டு 'பெக்' அடிக்கணும். அதுக்கான கூட்டணி வேணும். ஜாலியா விளையாடணும். ஆனால் என் பொண்ணு நம்ம கிராமம் பார்க்கணும்பா... எனக்கு ஒரே பொண்ணு... நினைவிருக்குல்ல...?''

''ஆனந்திதானே... இப்ப என்ன பண்ணுறா...?'' பாசத்துடன் விசாரித்தாள் தனம்.

''இங்கிலாந்து பல்கலைக்கழகத்துல படிப்பு முடிச்சிருக்கா. மேற்படிப்புச் சேர இரண்டு, மூணு மாச மாகும். அவளை வேணும்னா உங்க குளத்துல தள்ளலாம் தங்கச்சி...''

கைகளைத் தட்டி ஆரவாரமாய்ச் சிரித்தார் துரைராஜ்.

''அனுப்புங்கண்ணே... என் மகள் அமுதுக்குத் தோதான வயசிலிருப்பா. நம்ப பக்கத்துப் பழக்க வழக்கமெல்லாம் சொல்லித் தாரேன்... அம்மா இல்லாம வளர்ந்த பொண்ணில்லையா... பாவம்...''

''ம்ம்...'' அண்ணாந்து பார்த்தபடி யோசித்தார்.

''ஏன் அனுப்பக்கூடாது? முதல்ல ஆனந்தியைக் கேட்கணும். 'டக்'னு முடிவு சொல்லிடுவா, பாக்குவெட்டற நிறுவல. நம்ப பாட்டி பாக்கு வெட்டறது நினைப்பிருக்குதா தனம்... டக்... டக்னு...?''

அபிநயித்தவர் அரை மணி நேரத்தில் இங்கிலாந்தில் இருந்த தன் மகளுடன் தொடர்புகொண்டு பதிலும் பெற்று விட்டார்.

''தனம்... அவள் வாரேன்னு சொல்லிட்டாள்...''

''ஆனந்தி எங்ககூட தங்க வர்றாளாமா?'' தனம் சந்தேகமாய்க் கேட்டாள். கூடவே உள்ளுக்குள் ஒரு பயப் பூரான் 'நமநம' என நெளிந்தது.

இதேபோல வெட்டு ஒன்று துண்டு ரெண்டு ரகம் அவள் வீட்டிலும் உண்டே!

குடும்பத்தின் தற்போதைய தலைவனான ஆனந்தன் இதற்கு என்ன சொல்வான்?

அயல்நாட்டில் படித்து வளர்ந்த முறைப்பெண் தன் கிராமத்திற்கு வருவதை வரவேற்பானா...?

இல்லை, ''அதெல்லாம் நமக்குச் சரிப்படாது'' என்று மறுத்து விடுவானா?

ஆனால், தன் தங்கையின் குடும்பக் குழப்பங்கள் அறியாத துரைராஜ் உற்சாகமாய்த் திட்டங்கள் தீட்டினார்.

''பாரு தனம். நம்ப ஆனந்தி தைரியமான பொண்ணு. தன்னம்பிக்கை உள்ள எல்லாரையும் போல கொஞ்சம் தன்னிச்சையாய் நடந்துக்குவா... நம்ப இந்திய கலாச்சாரப்



பிடிப்பும் உண்டு. இதுவரை பயல்களோட சுத்தினதில்லை. ஆனா அவளும் இருபது வயசைத் தாண்டியாச்சு... அவள் கல்யாணத்தைப் பத்தி நாம யோசிக்கணும்ல...?''

''ஆமா இல்லைனா பின்னே?''

பலக்கத் தலையாட்டினாள் தனம்.

தன் மகளுக்கு வரன் தேட வேணும் என்ற தவிப்பு அவருக்கு.

''இலண்டன், பாரிசெல்லாம் அதுக்குத் தோதுப் படாதும்மா...?''

''எதுக்கண்ணே...?'' அப்பாவித்தனமாய் விழித்தாள்.

''கல்யாணம் காட்சிக்குப் போய் நமக்கு எந்தப் பையன் தோதுன்னு நோட்டம்விட...''

''ஓகோ...?''

''உன் வீட்டுல ஆனந்தி இருந்தால் மதுரையில் நடக்கும் விசேஷங்களுக்கு நீ அழைச்சிட்டுப் போவே. நம்ப சடங்கு சம்பிரதாயமெல்லாம் அவளுக்குப் பழக்கப்படும். நமக்கும் இப்படியொரு கல்யாணம் நடக்கும் என்கிற ஆசை அவள் மனசுல விழலாம்... எப்படி?''

பெரும் திட்டம் தீட்டிவிட்ட உற்சாகத்துடன் தலை ஆட்டினார்.

''ஆகட்டுண்ணே... சரிதான்.''

ஆனால் இந்த அளவிற்குச் சுலபமாய், தனம்மாளின் மகன் ஆனந்தன் அவளுக்கு ஜால்ரா தட்டவில்லை!

''இது யாரு... திடீர் மசாலா மாதிரி திடீர் மாமா?''

''என் ஒண்ணுவிட்ட அண்ணன்ப்பா... அத்தனைப் பிரியமாய்ப் பழகுவார்...''

''ஓ... அதான் நான் பார்த்ததே இல்லை போல...''

''குரலில் நிறைய நக்கல்!''

துரைராஜின் 'ஆனந்தி ஏற்றுமதி நிறுவனம்' பற்றி, அதில் என்னில் இருந்து இறால் வரை ஏற்றுமதி செய்வது பற்றி, தனம்மாள் தனக்குத் தெரிந்தவரை சொன்னாள்.

''சிறுவயசிலேயே அண்ணி போயிட்டதால குடும்பத்து உறவு நைஞ்சுபோச்சு... மனுசன் வியாபாரத்தோட இதையும் பார்க்க முடியுமா?''

''மறுகல்யாண நினைப்பில்லாம அண்ணன் இருந்துட்டார். நம்மை விட்டால் அவருக்குப் பெரிய உறவு வேற யாருக்கா...?''

''அதுக்காக ரெண்டு மாசம் கல்யாணம் ஆகாத வயசுப் பொண்ணு ஒருத்தி இங்க... இருக்கறதுன்னா...''

''அருமையான பெண்ணாம்டா... பாய் பிரண்டுன்னெல்லாம் அவளுக்கு யாரும் கிடையாதாம்...''

''அப்ப பார்க்க இவள் கோரமா இருக்கணும்...'' சர்வ நிச்சயமாய்ச் சொன்னான் ஆனந்தன்!

ஆனாலும் பரிதாபமாய் விழித்த தன் தாயைப் பார்த்தவன் மனம் கனிந்திருந்தது.

சுதாங்கினியுடன் தன் திருமணம் நிச்சயமானதைக் கேள்விப்பட்டதில் இருந்து, தாய் சுருதி இறங்கி இருந்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை.

ஆனால் தன் தாய்க்குக் கெட்டிக்காரத்தனம் போதாது என்று நினைத்த அவன், வருங்கால மனைவி சுதா தன் வீட்டு ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுக்கவுமில்லை. வீட்டு நிர்வாகமும் வீட்டாரும் மேலும் சிறப்பாக வழிமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று அவளிடம் அவன் கோடு காட்டியதுண்டு. சுதாவும் அத்தனையையும் தன் கடமை என்று இழுத்துப் போட்டுச் செய்கிறாள். இந்த மாற்றம் எல்லாருக்கும் கசக்கிறது என்பது ஆனந்தன் கருத்துக்குப் புரிந்தது. ஆனால் அவன் அதைக் கண்டுகொள்ளவில்லை.



ஆனால் சற்று இக்கட்டான இந்த நேரம், முன்பின் அறியாத இந்த உறவுப் பெண் வருவது எப்படி...?

அவள் வருகையால் தன் தாயின் அகமும் முகமும் மீண்டும் மலருமானால் அதைத் தடுப்பானேன்?

முடிவெடுத்த ஆனந்தன், ''ஆகட்டும்மா... இது உங்க வீடு... ஆனந்தி வரட்டும்... இருக்கட்டும்'' என்றான் புன்னகையுடன்.

''நீயும் கொஞ்சம் அனுசரணையா இருக்கணும்ப்பா...''

''விருந்தோம்பல் நம்ப பண்பும்மா...'' என்றான் அவன் வரப்போகும் விருந்தாளியைப் பற்றி எதும் அறியாமல்!

தினமும் விருந்தினர் அறை சுத்தப் படுத்தப்பட்டது.

''விசா கிடைக்கிறதுல சிறு பிரச்சினையாம்... கிடைச்சதும் வந்திடுவா...'' என்று பண்ணை வீடு ஆவலாய் ஆனந்திக்காகக் காத்திருந்தது.

**மா**டியில் குளித்து, பூசைகளை முடித்து அன்றைய நாளுக்காகத் தயாராகிவிட்டிருந்தாள் தனம்மாள்.

அந்நேரம் கீழ்வாசலில் வந்து நின்ற காரின் சத்தத்தைத் தொடர்ந்து வேறு பல விசித்திர ஒலிகளும் கேட்டன.

நோட்டில் படம் வரைந்து கொண்டிருந்த இளைய மகளை விரட்டினாள்.

''என்னடி... அகி அது. கலாட்டா பாரு...''

கொண்டையிட்டு முடிந்ததிலேயே அவளுக்கு மூச்சு வாங்கியது.

வெளிப்புற ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த அகிலா குதித்தாள்!

''ம்மா... நாய்... பெரிய நாய்ம்மா...''

''என்னடீ உளர்றே...?''

"அம்மா... இது பாரு... வந்து பாரேன்..."

நீளப் பின்னல் துடிக்க மேலும் குதித்தாள் அகிலா.

மகள் வர்ணிப்பது நாயையா அல்லது ஆனையா என்பது புரியாமல், அறியும் ஆவலுடன் ஜன்னலுக்கு நகர்ந்தாள் தனம்.

அங்கிருந்து பார்த்தால் தெரியும்.

"ஆனந்தி வந்துவிட்டாளா?"

"அவங்களாத்தான் இருக்கும் போல... என்னம்மா இப்படி இருக்காங்க? நாயைப் பாருங்களேன்..."

தனம்மாளுக்கு வயிறு கலங்கியது.

## 3



ஜன்னல் கம்பிகளை முட்டுவது போல முகத்தை ஒட்டி வைத்தும் துப்பட்டாவை தவிர வேறெதும் அவள் கண்ணிற்குச் சிக்கவில்லை.

"சரி போய் விருந்தாளியை மாடிக்குக் கூட்டி வா" படபடத்தாள்.

'இவளை உள்ளே ஏத்தவே நான் படாதபாடுபட, தாயமே... என்ன அழிம்பு பண்ணுது இந்தப் பொண்ணு?'

தனத்தின் குழப்பத்தைப் போலவே கீழ்வீட்டின் களேபரமும் கூடியது. அதில் நாயின் குரைப்பும் கலந்திருந்தது!

'ஆண்டவா... சோதனை வேதனையெல்லாம் தாங்குற தெம்பு எனக்கு இல்லைப்பா'. கைகூப்பி தொழுது கண்திறந்த போது எதிரே நின்றாள் அந்தப் பெண்!



தான் காண்பதை நம்பமுடியாமல் விழிகளைத் தட்டித் தட்டித் திறந்தாள் தனம்.

'நான் ஆனந்தி அத்தை.'

நம் தொலைக்காட்சி சின்னப் பெண்கள் போல தமிழில் மிழற்றினாள் அந்தப் பெண். தேவதையாட்டம் தன்னைக் கட்டிப் முத்தமிட்ட அவளை ஆச்சரியமாய் பார்த்தாள் தனம்மாள்.

என்ன ஒயில், உயரம், தன்னம்பிக்கையான சிரிப்பு!

"வாம்மா வா... நீ வந்ததுல மகிழ்ச்சி."

"எனக்கும் மகிழ்ச்சிதான் அத்தை."

"தமிழ் சரியா வராதோம்மா?"

"வரும் வரும்... வராம எங்கப் போகும்? முதலில் கொஞ்சம் அப்படி இப்படி ஆடும். சமாளிச்சிடுவோம்."

தங்களைச் சுற்றிலும் வாய் திறந்து நின்ற தன் குடும்பத்தை அறிமுகப்படுத்தினாள் தனம்.

"இவங்க என் பிள்ளைங்க. பெயர் அமுதினி, ஆகாஷ், அகிலா."

"ம்ம்... தெரிஞ்சுகிட்டேன். மூத்த அத்தான் வெளியே போய் இருக்காராம்."

"ம்ம்... அவனுக்கு எப்பவும் வெளி வேலைதான். ஆகாஷ் அறைக்குள்ளேயே முடங்கி சதா எதையாவது வாசிச்சபடி இருப்பான். நீ வரவும் தான் வெளியே தலை நீட்டறான்."

பெருமிதமாய் சொன்னாள் தனம்.

ஆனந்திக்கு மிக மங்கலாய் தன் தாயின் முகம் நினைவிருந்தது. அன்னை உயிருடன் இருந்திருந்தால் வருகிறவர்களிடமெல்லாம் தான் வென்று வரவேற்பறையில் அடுக்கியுள்ள கோப்பை, பரிசுகளை இப்படித்தான் காட்டிப் பெருமைப்பட்டிருப்பாள்.

''புத்தகம் படிப்பியா? என்ன புத்தகம்?'' - கேட்டான்.

'பொதுவாய் எதார்த்தம்'' சமாளித்தான் ஆகாஷ்.

''அப்புறமாய் உன் அறைக்கு வர்றேன். உன் புத்தகமெல்லாம் பார்க்கணும்.''

''ஐயோ... இல்ல... எல்லாம் நூலகத்தில் எடுத்தது... திருப்பித் தந்துடுவேன்...''

பதற்றத்துடன் கைகளை ஆட்டி ஆட்டிப் பேசினான்.

''உங்க பொண்ணுங்க ரெண்டு பேரும் ரொம்ப அழகு அத்தை.''

''நீயும்தான் மகா அழகு. சேலை கட்டினால் இன்னும் அம்சமாய் தெரிவே.''

''தன்னையே பார்த்துக்கொண்டாள் ஆனந்தி.

''சென்னையிலே நாலு சல்வார் வாங்கினேன் அத்தை. மற்றதெல்லாம் பேண்ட், சட்டைதான்...''

''ஐயோ... வந்தும்மா... அதெல்லாம் இந்த ஊர்ல உடுத்த ஆகாது. இராத்திரி படுக்கறப்ப வேணா போட்டுக்க.''

'அடடே... அப்ப நான் ரெண்டு மாசமும் சிறைவாசம் தானா?'

''அது எம்மா, என் சேலை இல்லை, அமுது சேலை வழுவழுன்னு கட்டிக்கோ...''

''அது நழுவிடாம என் இடுப்பில் நிக்கணுமே!''

வாய்விட்டுச் சிரித்தவளை பார்த்த தனத்தின் வயிறு சுருண்டது! இவளை எப்படி சமாளிப்பது என்ற பயம் பிடரியில் ஏறி அமர்ந்தது.

அது விசாலமான சமையலறை.

சுழன்ற கிரைண்டர் இரைச்சலை மீறி வேலையாட்கள் பேசினார்கள்.



''விருந்தாளி வந்ததும் வராததுமா பரிசு அடிச் சுட்டியோ?''

பொன்னி போட்ட கோலத்தைப் பாராட்டி அவளுக்கு விருந்தாளி அளித்த 'செண்ட்' புட்டியை ஆளாளுக்கு முகர்ந்தனர்.

''யப்பா... நூறு ரோஜாப் பூவைப் பிழிஞ்சாப்பல வாசம்!''

காலை உணவு தயாராகி மேசைக்குப் போன நேரம் பெரியதாயி ஓட்டமாய் நுழைந்தாள்.

''முத்து கேசரி செய். இல்லை இனிப்பு புட்டு அவி. நல்ல சேதி.''

''என்ன எங்களுக்கும் பரிசு வருதா?''

''நம்ப சின்னப்பொண்ணு அகிலா வயசுக்கு வந்திடுச்சு...''

''ஆகா... இலண்டன் அம்மா காலெடுத்து வைச்ச நேரம் பார்த்தியா?'' சிலாகித்த முத்து வேலையில் இறங்கினாள்.

''இனி பெரிய நாய்க்கும், சேர்த்து சமைக்கணும் - ரெண்டு மாசம்.''

''சின்னவரு வந்து பார்த்தால் என்னன்னு சொல்லுவாரோ?''

பரபரப்பும் பதற்றமுமாய் வேலையில் மும்முரமாயினர்.

தன் அடர்ந்த தலைமுடியை சீவி சீவி கலைத்தான் ஆகாஷ்.

அவன் கண்கள் தேடியது அழகிகளை மட்டும்தான்!

ஆனால் இக்கிராமத்தில் ஒல்லியும் வெளுப்புமான அழகிகளுக்கு வழியேயில்லை - எல்லாம் உழைப்பில் திரண்ட தேகங்கள்.

தன் அறைக் கதவு தாழிடப் பட்டிருக்கிறதா என கவனித்தவன் சுவர் அலமாரியைத் திறந்து துணிக்குவியலுக் குள் துழாவினான்.

'வழுவழு' என்று விரலில் பட்ட புத்தகங்கள் அவன் முகத்தில் வெளிச்சம் ஏற்றின. அதன் நடுப்பக்கத்தைத் திறக்க -அவன் வாய் தானாய் திறந்தது-

'யப்பா... பளிங்குல செஞ்ச வெளிச்சம் போட்டாப்பல என்னம்மா மினுங்குது உடம்பு! எப்படி இத்தனை மெல்லிசா இருக்காளுக?''

தனக்குள்ளாகப் பேசியவன் வண்ணத் தாளில் விரலை ஓட்டினான். அவன் வாலிப உடல் சிலிர்த்தது. அடிவயிறு வெப்பமானது.

அவன் விரல்கள் தொலைபேசியின் எண்களைத் தட்டின. கொஞ்சம் கொஞ்சமாய் பேச்சில் அவன் தன்னை இழந்து கொண்டிருந்த போதுதான் அறைக் கதவு தட்டப் பட்டது.

அவசரமும் எரிச்சலுமாய் புத்தகங்களை ஒளித்தவன் கதவைத் திறந்தான்.

சலவைத் துணிகளுடன் அச்சமும் குறுகுறுப்புமாய் நின்றாள் வேலைக்காரப் பெண் பொன்னி.

இளையவரின் கதவு ஏன் சதா பூட்டியிருக்கிறது என்ற சந்தேகம் அவளுக்கு.

போன வாரம் 'ஐயா' என்று குரல் கொடுத்தபடி சகஜமாய் கதவைத் திறந்துவிட, நரசிம்ம அவதாரமல்லவா எடுத்துவிட்டார்?

'இப்படி கதவைத் திறக்கிற திமிரெல்லாம் எங்கிட்ட வேணாம். எவ்வளவு நேரமாய்க் கதவுக்கு வெளியே நின்னே ஒட்டுக் கேட்கறியா சனியனே?''

பொன்னி அன்று நடுங்கி விட்டாள்.



கதவைத் திறந்ததும் இளையவர் கையில் பிடித்திருந்த போனை ஏன் பாம்பைப் போல உதறினார்? யாரோடு பேச்சு? அதைத்தான் ஏன் ஒட்டு கேட்க வேணும்? - யோசித்தாள்.

ஆகாசக்கும் ஆத்திரம் தாளவில்லை.

எப்பேர்ப்பட்ட உரையாடலைக் கலைத்துவிட்டாள் இந்த முட்டாள். சற்று முன் கண்குளிரப் பார்த்த காகித தேவதைகளுக்கு நேர்மாறான கருவாடு இவள்.

'இனி இப்படி என் கதவைத் தொடவேக்கூடாது' எனும்படி கத்தி அனுப்பினான். மூக்குறிஞ்சியபடி வந்த பொன்னியை விசாரித்தாள் பெரியதாயி.

''இளையவரு ஏசிப்புட்டாரு அக்கா.''

''நீ என்ன செஞ்சே? அதைச் சொல்லு.''

''அவர் அறை பக்கமே போகக்கூடாதாம்.''

''அடி மக்குபய புள்ள... ஆம்புளைப்புள்ள தனிச்சு இருக்கையில் இப்படி நீ 'மளுக்'னு நுழையலாமா? வெக்கங் கெட்டவளே... கண்ணைத் துடை.''

''இல்லக்கா... அவரு போன்ல பேசினதை நான் ஒட்டுக் கேட்டேனாம்... ரொம்ப ஏசிப்புட்டாரு...''

''தோலாய்ப் பிறந்தால் ஊசிக்கு அஞ்சலாமா? போ... போ...''

பொன்னியை அன்று விரட்டிய பெரியதாயின் மனதுக்குள் சஞ்சலம் புகுந்தது. வீட்டில் புயல் கிளம்பப் போகிறது என்பதாய் அவள் மனம் குறி சொன்னது.

உலக்கையின் பின்னே பூனைக்குட்டியாய் மூலையில் சுருண்டிருந்த அகிலாவை விநோதமாய் பார்த்தாள் ஆனந்தி.

தான் வயசுக்கு வந்த நாள் நினைவிற்கு வந்தது. அப்போது ஆனந்தி பள்ளி மாணவி.

அன்று இலண்டன் அருகே உள்ள ஒரு கிராமத்திற்கு அழைத்துப் போய் பழங்கால வீடுகளைப் பராமரிக்கும் முறை

மாணவ மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுக்க பற்றி இருந்தார்கள்.

குளியலறையில் ஆனந்திக்குத்தான் 'பெரியவளானது' புரிய, தன் தோழிமுன் எச்சரிக்கையாய்த் தந்திருந்த பாதுகாப்பை எடுத்துக்கொண்டாள். போகிற போக்கில் வேறு வழியில்லாமல் அப்பாவிடம் விசயத்தைச் சொல்ல, அப்பா குதூகலத்துடன் கைகுலுக்கினார். இவள் பள்ளியிலிருந்து களைத்துத் திரும்ப, அவளுக்குப் பிடித்த 'பாஸ்தா', ஐஸ்கிரீம் எல்லாம் வாங்கி வைத்திருந்து பரிமாறினார்.

தொடர்ந்த சனிக்கிழமை அன்று கடைகளுக்குக் கூட்டிப் போய் நகை, துணிமணிகளை வாங்கிக் குவித்தார்.

ஆக, தான் ஒரு முழு பெண்ணாகிவிட்ட பெருமிதமும், அதைக் கொண்டாடிய அன்பான அப்பாவால் மகிழ்வாய் கழிந்த ஒரு நிகழ்ச்சி இங்கு அப்படியாய் இல்லை ஸைப்பட்டது.

சற்று முன்பு வரை குதித்து ஆடிய சிறுமி இப்போது அடிபட்ட பட்டாம்பூச்சி போல முடங்கிக் கிடந்ததைக் காண வருத்தமாக இருந்தது.

இந்த நிகழ்வு நல்லது என்றாலும் எதிர்பாராத அதிர்ச்சி. கூடவே உடம்பின் வேதனையுடன் இருப்பவளை வீட்டார் சகஜமாய் ஏற்றுக் கொண்டால் மனதுக்கு இதமாக இருக்கும்.

இப்படி ஒதுக்கி... காட்சிப் பொருளாய் வைப்பது பாவம்.

கீழே உலக்கையின் மறுபக்கம் அமர்ந்தாள் ஆனந்தி.

''நீயாளா பெரியவளாயிட்டதா சொல்றாங்க... அதெல்லாம் பேருக்குத்தான் அகில். உனக்கு என் பரிசு பிடிக்கும் பாரு - நாம சேர்ந்தேகூட விளையாடலாம்.'' இவள் கண்சிமிட்ட, இளையவள் புன்னகைத்தாள்.

ஆனந்தி நீட்டிய பொம்மை ரகங்களை ரசித்தாள்.



''ஆனா இனிமே அக்கா மாதிரி மாசா மாசம் பின்னறைக்கு நானும் போயிடணுமாம்... எனக்கு அங்கே பிடிக்கவே பிடிக்காது. என் அறையில் படுத்தால்தான் தூக்கம் வரும்.''

ஆனந்திக்குப் 'பின்அறை' விசயம் புரியவில்லை.

காற்றும் வெளிச்சமும் அதிகம் புகாத பின்பிற அறை ஒன்றில்தான் அந்த மூன்று நாட்கள் பெண்கள் கழிக்க வேண்டும் என்பது புரிய மேலும் வருத்தமானது.

''அம்மாமார் எல்லாரும் இப்படி பழங்காலம்தான். உங்க பெரியண்ணா வரட்டும்... அவர்கிட்ட சொல்லி முதல்ல இந்த உலக்கையைத் தூக்கிட சொல்வோம்.''

''ஐயோ, அண்ணன் அம்மாவுக்கும் மேல...'' முனங்கினாள் சிறுமி.

''கட்டுப்பெட்டியா?'' குரல் தணித்துக் கேட்டாள் ஆனந்தி.

''கடுமையான பெட்டி!'' சொல்லி விட்டு நாக்கைக் கடித்துக்கொண்டாள் அகிலா. தன் உடன் பிறந்தவனை மூன்றாம் நபரிடம் அதுவும் சற்று முன்பே அறிமுகமான ஒரு பெண்ணிடம் விட்டுக் கொடுத்த சங்கடம்.

ஆனந்தி வாய்விட்டுச் சிரித்தாள்.

'கலகல'வென்ற மகிழ்ச்சி அருவி அகிலாவின் சங்கடத்தை அடித்துப் போனது.

''இப்படித்தான் நினைச்சதைப் பேசிடணும். ஆனா உன் அக்கா அமுதினி இப்படியில்லை... கொஞ்சம் பயந்த சுபாவமோ?''

தன் பிறை நகங்களை ஆராய்ந்தபடி கேட்டாள்.

''பயமெல்லாம் இல்லை... கோபம்...'' இப்போது அகிலாவின் நாக்கு தளர்ந்துவிட்டது.

''அடடே... யார் மேல?''

எல்லோர் மேலயும். இப்ப யார்கிட்டேயும் அமுதன்மாமுல்லே மாதிரி பேசறதில்லை. ஆனால், முக்கியமாக அனந்தி அண்ணன் மேல் கோபம்...''

"ஏன் இப்படி ஐஞ்சாறு ஆண்டாய் மாசா மாசம் உங்களுக்கும் பிள்ளைங்க உட்கார வச்சுட்டாரேன்னா?''

இப்போது அகிலா கலகலவென நகைத்தாள்.

"உங்களை இந்த மாசத்தோட சரி அண்ணி. இனிமே பிள்ளைகளுக்குப் போகணும். அங்க தனி தட்டில் சாப்பாடு வரும். புத்தகம் படிக்கலாம். நிறைய தூங்கலாம்... இப்படி மாறி மாறி செஞ்சாலும் போர்தானே.''

"அப்ப கோபம் எதுக்கு?''

"அது...அது வேற விசயம்...'' சிறுமியின் குரல் மிகத் தணிந்தது.

"இது குடும்ப விசயம்னா வேணாம். இரு சாக்லெட் எடுத்துட்டு வர்றேன்...''

"இருங்க அண்ணி... நீங்களும் எங்க உறவுதானே தவிர ரெண்டு மாசம் எங்களோடவே தங்கப் போறீங்க... நீங்களும் தெரிஞ்சிக்கிறது நல்லதுதான்... வந்து... வந்து... அது ஒரு ஆளை விரும்புச்சு...''

"அப்பா இங்கெல்லாம் இது கிடையாதுன்னாரே... கேட்டுக்கூட இம்பாலியின் அப்படீன்னா எப்படி?''

நிறைவான ஆர்வத்துடன் கேட்டாள் அனந்தி.

"பூங்கா, கடற்கரை என்று இல்லாட்டியும், கல்யாண வீடு, கவிதை அரங்கம், திருவிழா எல்லாம் இருக்குல்லா'' குறும்பாய்ச் சிரித்தாள் இளையவள்.

ஜிமிக்கிகள் ஆட, அவள் தலை அசைத்தது வெகு அழகாக இருந்தது.

"நம்ப ஊர் பொண்ணுங்க அழகுதான். பார்த்ததும் ஆண்கள் அலை பாய்வாங்க... அதென்ன அமுதினிக்குக்



கவிதை எல்லாம் அத்தனை இஷ்டமா என்ன? அவள் மனையியல் மாணவி தானே?''

"அக்காவுக்கு இலக்கியம் பிடிக்கும். கிடைச்ச புத்தகமெல்லாம் வாசிப்பா...''

"உங்க வீட்டுல புத்தகம் வாசிக்கிறது. ஆகாஷ் மட்டும்தான்னு நினைச்சேன்...''

அகிலா முகம் சுழித்தாள்.

"ஆமா... அவன் அறையிலே அவன் சொன்னது மாதிரி நாவல் புத்தகம் ஒன்றுகூட நான் பார்த்ததே இல்லை.... சதா அறை பூட்டி இருக்கும்... உள்ளார என்னதான் செய்வானோ? மகன் புத்தகம் வாசிக்கிறதாய் சொல்றது அம்மா விடற உட்லாங்கடி...! அம்மா ஏமாளி - அவங்க சொல்றதை எல்லாம் நீங்க நம்பிடாதீங்க...''

"சரிமகளே... இனி உன்னை மட்டும் நம்புறேன்.''

"பத்திரிகையிலே வர்ற கவிதைகளை வாசிச்சிட்டு ஆகா ஓகோன்னுவா அக்கா.. இங்கே ஒரு கல்யாணத்துக்குப் பொண்ணு மாப்பிள்ளையை வாழ்த்தி பேச வந்தாராம் இளமுருகு...''

"நான் நல்லா மென்று உச்சரிக்க வேண்டிய பேர்...'' இளமுருகு...ம்ம்?''

"அது உட்லாங்கடி பேரு... அதாம் புனை பெயர்! பிறகு திண்டுக்கல்லில் கவியரங்கம் நடக்க, அக்கா ஏதோ சாக்கு சொல்லிட்டு அங்கேயும் போய் பார்த்துச்சாம். அதிலேருந்து சதா அவருபத்தின பேச்சுதான். அவருக்கும் அக்காவைப் பிடிச்சுட்டது போல... கிடைச்ச ஒரே ரசிகையை யார் விடுவா? ஏதோ சாக்குல அவரும் நம்ப வீட்டுக்கு வந்தாரு. அம்மாகிட்ட பேசி நான் உங்களுக்குச் சுத்தி முத்தி சொந்தம்னு வேற சொல்லிகிட்டாரு...''

"அப்ப கல்யாணம் கலப்புதானே?''

"இல்லை அண்ணி... கவிதைன்னு ஏதோ கிறுக்கிட்டு நல்ல படிப்போ சம்பாத்தியமோ இல்லாதவனுக்குத் தங்கச்சியைக் கொடுக்க முடியாதுன்னு அண்ணன் 'தடா' போட்டுட்டார்."

"அத்தைக்கு இந்த சம்பந்தத்துல சம்மதமா?"

"அக்கா அமுதனைப் பார்த்து அம்மாவுக்குப் பொறுக்கலை..."

"ஆக ரெண்டு பேருக்குள்ளும் அதிகம் பழக்கமில்லை... ஒரு மாதிரியான ஈர்ப்பு. அவர் கவித்திறமை மேல் அமுதுக்கு மதிப்பு... அவ்வளவுதான். அதிலேயும் இங்கே பதைப்பட்ட ஆண்களைப் பார்த்துப் பழகுகிற வாய்ப்பும் இல்லை" "இப்படி நினைக்கதான் போல அண்ணன், பாலா சாரை கூட்டிட்டு வந்தார்."

"அதாரு பாலா?" விழிகளை விரித்தாள் ஆனந்தி.

"அண்ணன்கூட படிச்சவராம். சோழவந்தான்ல பால் பண்ணை, தோப்பு, தியேட்டர்னு பெரிய பணக்காரர், அண்ணன் மாதிரியே குடும்பச் சொத்தைப் பெருக்கின கில்லாடியாம்."

"ம்ம்... உங்க அக்கா பாலாவைப் பார்த்தாளா... பிடிச்சிருந்ததா?"

"அவன்தான் இளமுருகுன்னு கண்களை இறுக மூடிட்டிருந்தாளே..."

"அப்ப அமுதுவும் கடுமையான பெட்டிதான்!"

இரு பெண்களும் சேர்ந்து சிரித்தது, சலங்கை கட்டிய நாட்டியக்காரி ஒருத்தி அந்த அறை முழுக்க ஓடியது போலிருந்தது.

"அப்ப அமுதினி இலக்கியம் படிச்சி இருக்கலாமே...?"

"அதுக்கும் அண்ணன் சம்மதிக்கலை... பொண்ணுக்கு அது அவசியமில்லைன்னுட்டார்..."

"அது தப்பாச்சே! எல்லா முடிவுகளையும் ஆண்களுக்கே விட்டுட்டு பொண்ணுங்க வாயை மூடிட்டு



உட்கார்ந்தால் ஆம்பளைங்க அலட்டல் ஜாஸ்தியாயிடும். நம்ப வாழ்வுக்கான முடிவுகளை நாமதான் எடுக்கணும்... ஆம்பளை அந்நேரம் குதிச்சா நாம் அவங்களை அடக்கித் தான் வைக்கணும்... அதட்டணும்... இல்லைன்னா ரொம்ப திமிராய் ஆயிடுவாங்க... சகிக்கக்க முடியாது!"

"அண்ணனை அதட்டி அடக்கறதா? நாங்க அவர் முன்னே வாயை திறக்கமாட்டோம் அண்ணி..."

"அப்பமன்னா அவர் கண்டிப்பா அப்படித்தான் இருப்பார். தான் தோன்றித்தனமாய் விட்டிருக்கீங்க... எங்க இன்னும் அவர் என் கண்ணிலேயே படலியே?"

"திரும்பினால் கண்ணுல படுவேன்! வெளிநாட்டில் படிச்சுட்டா முதுகிலேயும் கண் இருக்கும்னு மெத்தனமாய் நினைக்கக்கூடாது."

பின்னாலிருந்து அதட்டிய ஆண்குரலில் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர்.

வாசலில் நின்ற அண்ணன் முகத்தில் தெரிந்த கோபத்தில் அகிலா நடுங்கிவிட்டாள். ஆனால் அதைத் துளியும் லட்சியமே செய்யாமல், "அலோ அத்தான். நான் ஆனந்தி" என்று அவனை நோக்கி வலதுகரத்தை நீட்டிய ஆனந்தி இயல்பாய் ஆனந்தனை நெருங்கினாள்!

## 4



**வே**லைப்பாடுமிக்க மரச்சட்டத்தில் அகப்பட்டிருந்த அந்த ஆளுயரக் கண்ணாடியின் முன் அரை மணி நேரமாய் நிற்கிறாள் சுதாங்கினி.

தேடக்கூடிய பொருளாக இருந்தால் அந்த நிலைக் கண்ணாடி அந்த நேரம் தேய்ந்து கரைந்திருக்கும்! பாக்கு நிறப்பட்டுச் சேலையை ஐந்தாம் முறையாக அவிழ்த்துக் கொசுவினாள்.

அறைக்குள் எட்டிப் பார்த்த தாய் அதட்டினாள்.

''என்னடி இன்னுமா கிளம்பலை?''

''எல்லாம் சரியா இருக்கான்னு...''

''என்ன புதுசா சந்தேகம்? ஏதோ இப்பத்தான் முதன் முதலா மாப்பிள்ளை வீட்டுக்குப் போறாப்பல?''

''அதுல்ல... வந்து... எப்படி இருக்கேன்ம்மா?''

''எப்பவும் மாதிரி சுமாராய் இருக்கே. இன்னும் பத்து நிமிடம் இப்படியே நின்னா அலங்காரம் கலைஞ்சு வெறு சுமாராய் ஆயிடுவேக்கா!'' வந்து நின்ற சுதாங்கினியின் தம்பி கிண்டலடித்தான்.

''டேய் சுந்தரம்... கிளம்பறச்சே அக்காளைக் கோபப் படுத்தாதே...''

''இல்லைன்னா நீ சாந்த சொரூபினியா? ஆனந்தன் அத்தான் வீட்டுல பொம்பளை விருந்தாளி வந்துட்டதாய்க் கேள்விப்பட்டதுமே கொதிக்க ஆரம்பிச்சுட்டியே...''

''போடா... நான் என்ன குழம்பா கொதிக்க?''

நக்கல் பிடித்த தம்பிப் பயல் நகருவதாயில்லை.

''குழம்பு இல்லக்கா. குழப்பம்...''

''எல்லாம் தெளிவாத்தான் இருக்கேன். ஆனந்தன் எனக்குத்தான், நான் அவருக்குத்தான்னு முடிவாயிடுச்சே... நம்ம தாத்தா திடீர்னு சாகலைன்னா இந்நேரம் நான் அவர் பெண்டாட்டி...''

''வந்திருக்கிற அத்தானோட மாமன் மகள் பேரழகாம். நாராயணன் வந்து மெனக்கெட்டு சொன்னான்.''

''நாராயணனுக்கு என்ன தெரியும்?''



''கண்ணு நல்லாத் தெரியும் அக்கா... நம்புங்கள் அந்த நாராயணனை! டி.வி.யில் வர்ற உலக அழகிங்க கணக்கா இருக்காங்கன்னு ஒரேயடியா வழிஞ்சான்!''

சுதா பல்லை அழுந்தக் கடித்தாள்.

இரு வீடுகளுக்கும் நடுவே இரண்டு மைல் இடைவெளி இருந்தாலும் தன் ஆட்களைச் சதா அங்கு அனுப்புவாள் சுதாங்கினி.

அங்கிருந்து தகவல்களை பெறவும் தெரியும். பல பெரிய இடங்களே ஆசைப்பட்டு வலைவீசிய பெரும் திமிங்கலத்தைத் தான் பிடித்துவிட்டகர்வம் அவளுக்கு. ஆனால், அதில் தன் நிதானத்தை இழக்க வில்லை. அவன், சற்று அசந்தாலும் பெரும் மீன் கை நழுவிப் போகக்கூடும் என்ற எச்சரிக்கை உணர்வும் கூடவே இருந்தது.

ஆனந்தனுக்குத் தன்மேல் காதல் மயக்கம் ஏதுமில்லை என்பது அவளுக்குத் தெரியும்.

அருகருகே இருக்கும் சொத்தும் இணைய தன் பண்ணையை மேலும் விஸ்தரிக்கலாம் என்ற நோக்கத்தில் தான் தங்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்டது என்பதில் அவளுக்கு வருத்தம்தான்.

பெருமூச்சுடன் கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தை நிதானித்தாள்.

ஐந்தடி உயரம்.

அந்த உயரத்திற்குப் பொருந்தாத 55 கிலோ எடை என்பதால் அவள் பார்வைக்குச் சற்று குண்டுதான். நிறம் தூக்கல் என்றாலும் முன்பற்கள் நான்கு, நாங்களும் தூக்கலாய் இருக்கிறோமே என்று நிமிர்ந்து கொண்டதில் அவள் முகலட்சணத்தின் மாற்று குறைந்துவிட்டது. தன் முந்திரிக் கொட்டைத் தனமான பற்களைக் காட்ட சுதா விரும்பாததால் சிரிக்கும் பழக்கத்தை நிறுத்திக் கொண்டாள். வேண்டிய சில

சந்தர்ப்பங்களில் மெத்தனமாய்ப் புன்னகைப்பதோடு சரி. அதுவே தனக்கு கம்பீரமாய் இருக்கிறது என்று திருப்திபட்டுக் கொண்டான்.

ஆனந்தனை மணந்துகொண்டால் இந்த வட்டாரத்துக்கு ராணி தான் தான் என்ற மிதப்பும் இப்போது சேர்ந்திருந்தது.

அதில் இந்த இலண்டன் முறைப் பெண்ணின் வருகை குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டது.

ஆனந்தியின் வருகையைப் பற்றி ஆனந்தன் குறிப்பிட ''அப்படியா... மகிழ்ச்சி'' என்றவளுக்கு

''ரெண்டு மாசம் இங்கதான் இருப்பா'' என்பதை கேட்க 'கருக்' என்றது!

''கல்யாணமாகாத பெண்ணை நீங்க இத்தனை நாள் வைச்சுக் காப்பாத்தறதுன்னால்...?'' இழுத்தாள்.

''அவள் என்ன ஊசிப்போகிற பண்டமா? இருக்கட்டும். தாய் இல்லாத பொண்ணாம்'' என்ற அவன் பதிலில் வாய் மூடிக்கொண்டாள்.

ஆனால், நெஞ்சோரம் நமைச்சல் தொடங்கிவிட்டது. ஆனந்தனின் வேலைக்காரர்களுக்கு கையில் பணம் தந்து தாஜா பண்ணியிருந்தாள்.

'அந்த இலண்டன் பொண்ணு வந்ததும் எனக்குத் தகவல் வந்திரணும் என்ன?' என்று.

ஆக ஆனந்தி வந்ததுமே மூச்சிரைக்க சுதாவிற்குத் தகவலும் வந்துவிட்டது. ''பொண்ணு மகா அழகும்மா... அது சிரிச்சு சிரிச்சு பேசுறதுல வீடே கலகலங்குது'' என்ற உபரி தகவல் வேறு!

ஆக பட்டு சகிதமாய்ச் சிங்காரித்த பிறகும், தான் இன்று அழகாகவே இல்லை என்ற குறையில் தவித்தாள் சுதாங்கினி.



''பாக்கு நிறம் டல்லடிக்குது இல்லையாம்மா... தளிர்பச்சை கட்டிக்கவா?''

''நேரத்துக்குப் போகணும், இப்பவே கிளம்பினாலும் தாமதமாய்த்தான் போவே.''

தாயின் இந்த மிரட்டலுக்குப் பலன் இருந்தது.

தோற்றத்தைவிட 'டான்' என்று நேரத்திற்குப் போய் இறங்கும் கம்பீரம் தனிதானே?

''டிரைவர்... சீக்கிரம் காரை எடு'' அதட்டலுடன் காரில் ஏறினாள் சுதாங்கினி.

போருக்குக் கிளம்பும் ஒரு ராணியைப் போலப் புறப்பட்டு விட்டாள்!

''**எ**னக்கு இதெல்லாம் கொஞ்சமும் பிடிக்கலை... இவள் வரும்முன் அப்படி சொன்னது தப்புன்னு கொண்டாலும் வந்தவளைப் பார்த்ததும் நான் நினைச்சது சரிதான்னு நிச்சயமாயிடுச்சு.''

உறுமிய மகனை அச்சத்துடன் பார்த்தாள் தனம்மாள்!

''என்னா சிரிப்பு! வயசுக்கு வந்துட்ட அகிலா குட்டியைப் பார்க்கப்போனால், அங்கே அவளுக்குத் தப்பான உபதேசம் நடந்திட்டு இருக்குது. 'ஆண்பிள்ளை பேச்சைக் கேட்கக்கூடாது. நம்ம இஷ்டத்துக்கு முடிவெடுக்கணும்... ஆணை எதிர்த்துப் பேசணும், அடக்கணும்'னு உபதேசம்!''

தனம்மாளின் கண்கள் வெளியே பிதுங்கின. பாதியில் தவித்த சிரிப்பை அவசரமாய் உள்ளுக்குத் திணித்தவள், ''ஆனந்தி அப்படியாப்பா சொன்னாள்?'' என்றாள் வருத்தமாய்.

''ம்ம்... என்ன வார்த்தை அது? 'போர் அடிச்சிடுவோமாம்' சலிக்காம உழைச்சுக் கொட்டற நாங்க சலிச்சிடுவோமா? இவள் வர்றான்னு போன மாசமே போனில் ஐ.எஸ்.டி. வசதி செய்து வைச்சாச்சு. குளிக்க ஷவர்,

புது மெத்தைன்னு நீங்க கேட்டதுக்கு மேலேயே செய்தாச்சு...''

ஆனந்தன் அதிகமாய் பேசுபவனில்லை. அதிலும் உழைப்பின் பலனைச் சுவைத்தபிறகு பேச்சை சுருக்கி விட்டவன். அவனே இப்படி பேசும்படி ஆனந்தி வைத்து விட்டாளே...?

இப்போதெல்லாம் வீடு மிக இறுகிவிட்டது. இப்படி குஷியாய் பேசி குதூகலமாய் வளைய வர ஒரு பெண் தேவைதான் என்றாலும், வந்த முதல் நாளே ஆனந்தியின் பேச்சு அதிகம்தான்.

''அறியாப் பிள்ளைப்பா... ஏதோ விளையாட்டாய்ப் பேசி இருப்பா.''

''அதட்டலுக்கும் பயப்படறாப்பல தெரியலைம்மா... சிரிப்பு மாறாம எங்கிட்ட கைகுலுக்க வர்றா! இப்படி தொட்டுப் பேசறதெல்லாம் இங்க வேணாம்னு சொல்லி வையுங்க... கட்டுப்பாடாய் வளர்ந்த அமுதினியே நம் சொல்படி கேளாமல் பாயறா... இவள் எப்படியோ?''

தனம்மாளின் முகம் வாடியது.

''ஆகட்டும்பா.''

அவன் எண்ணங்களைத் திசை திருப்பினாள் தாய்.

''இப்ப சுதாங்கினி வர்ற நேரமில்லையாப்பா?''

இதற்குச் சற்று பலன் இருந்தது.

''ம்ம்... முகம் கழுவிட்டு வர்றேன். ஆனா இவளைச் சுதா முன்னே கண்டபடி உளற வேணாம்னு கண்டிச்சு வையுங்க. அப்படியே ஒரு சேலையில் சுத்தி நிற்க வையுங்க.''

''அது நாலு சல்வாருங்கதான் கொண்டுவந்திருக்காம்.''

''இது வேற எனக்குச் செலவு... மதுரைக்குக் கூட்டிப்போய் நாலு சேலை வாங்கிக் கொடுங்க. அதுவரை



வீட்டுல உள்ள சேலையைக் கட்டட்டும். ஆனா முதல்ல வாயைக் கட்டப் பழகணும் அவள்...''

உத்தரவிட்டு நகர்ந்தவனைத் திகைப்புடன் பார்த்தாள் தனம்மாள். மூத்தவள் அமுதினியை அழைத்து விவரங்களை அவள் காதிலும் போட்டாள்.

''எல்லாம் அண்ணன் உத்தரவாக்கும்?'' மகள் சலித்தாள்.

''பின்னே சேலையைக் கொண்டு கொடு. ஆனந்தி சுதா வர்ற நேரமாச்சு.''

''யாரைக் கட்டணும்? எதைக் கட்டணும் எல்லம் சின்னவர் விருப்பப்படிதான் இங்கே நடக்கணுமாக்கும்?'' என்ற மகளின் முனங்கல் காதில் படாதது போல இருந்து கொண்டாள் தனம்.

தாய் சொன்னது போல தன் சேலைகள் இரண்டையும், ஒருமுறை ஆசைப்பட்டு வாங்கி, அண்ணன் முறைத்ததால் அணிந்த மூச்சோடு கழற்றிவிட்ட வெல்வெட் இரவிக்கை யையும் ஆனந்தியிடம் தந்தாள் அமுது.

''நன்றி... ரொம்ப அழகான சேலை'' ஆவலுடன் சேலைகளைத் தோள் மீது போட்டு அழகு பார்த்தாள் ஆனந்தி.

''கட்டிக்கத் தெரியுமா? இல்லைன்னா நான் வந்து உதவுறேன்?''

''அதெல்லாம் தெரியும் அமுது. எங்க குடும்ப நண்பர்கள் பெரும்பாலும் தமிழர்கள்தான். இலண்டன் ரோட்டிலே நடந்தால் சேலையும் சல்வாரும் கண்ணுல பட்டுகிட்டே இருக்கும். நிறைய நம்மாளுங்க உண்டு. தவிர தமிழ்நாட்டிலேருந்து வியாபார நிமித்தம் யாரேனும் வரும்போது எங்க வீட்டுலதான் தங்குவாங்க. எனக்கு விதவிதமான சேலை, நகைன்னு வாங்கிட்டு வருவாங்க...

அவங்களுக்குக் கட்டிக் காண்பிக்கணுமே... அப்படிப் பழனெது."

"ம்ம்... அதையெல்லாம் கொண்டு வந்து இருந்தால் இங்கக் கட்டி இருக்கலாம்லா?"

"இந்த வெயிலுக்கு தோது இல்லைன்னுதான்... எடுத்துட்டு வரலை."

தோள் குலுக்கிப் புன்னகைத்தவளை விழி எடுக்காமல் பார்த்தாள் அமுதினி.

முதல் பார்வையிலேயே ஆனந்தி மிக அழகு என்பது தெரிந்தாலும் அவள் பேசும் முறையும் சிரிப்பும் அவளை மேலும் வசீகரமாக்கின.

"இப்ப சுதா அண்ணி வர்றாங்க. அதான் சேலை கட்டிக்கச் சொன்னாங்க அம்மா."

"அது யாரு?" ஆனந்தியின் நீள விழிகள் குண்டாயின.

"சுதாங்கினி. எங்க பெரியண்ணாவுக்கு நிச்சயிக்கப் பட்ட பொண்ணு."

"சரி... ஆனா அவங்க வரும்போது நாமெதுக்கு இடைஞ்சலாய் அவங்க நடுவே இருக்கணும்?"

"அவங்க வர்றதே உன்னைப் பார்க்கத்தானே?"

"அப்ப நாளை நான் பேண்ட் போட்டுக்கலாமா?"

"ஐயோ... நாலு சல்வார் வைச்சிருக்கியாமே... அதுல ...ன்று..."

யோசனையாய் தலையாட்டினாள் ஆனந்தி.

"ம்ம்... அப்படின்னால் அப்பாவுக்கு போன் போட்டு, ...ன் அலமாரியை அடைச்சுட்டு இருக்கிற சேலைகளை ...னுப்பச் சொல்லணும்."

"இரவிக்கைங்க?"



"எல்லாம் பக்காவாய்த் தயார். இப்ப கட்ட சமயமும் சந்தர்ப்பமும் வாய்ச்சி இருக்குது. அப்பாவின் நண்பர்கள் யாராவது சதா இந்தியா வருவாங்க. இருபது கிலோ பெட்டியை எத்திட்டு வர்றது சிரமமில்லை..."

"அப்ப உடனே போன் போடேன்."

"ஐ.எஸ்.டி. வசதி...?"

"நீ வர்றதாய்ச் சொன்னதும் அண்ணன் செய்த முதல் வேலை அதான். நம்பரைத் தட்டினா உடனே நீ உங்க அப்பாகிட்ட பேசலாம்."

"நல்லா இருக்கே... உங்க அண்ணா கொஞ்சம் சிடுமூஞ்சியாய்த் தெரிஞ்சாலும் சிந்திக்கிறார்... செயல் படறார்... சிந்தனையாளர்களுக்குச் சுலபத்தில் சிரிக்க வராதுதான்."

மும்முரமாய்ப் பேசியவளைப் பார்க்க அமுதினிக்குச் சிரிப்பு வந்தது.

"பரவாயில்லை நீ கூட சிந்தனையாளர் வர்க்கம்னு நினைச்சேன். சிரிக்கிறே! சிரிக்கும்போது இன்னும் அம்சமாய் இருக்கே!"

வெட்கத்துடன் தன் அறைக்கு வந்த அமுதினி வெள்ளிக் கிண்ணத்தில் பறித்து வைக்கப்பட்டிருந்த மல்லி அரும்புகளைத் தொடுக்கலானாள்.

ஜோடி மொட்டுகளை எடுத்து நாரை லாவகமாய் விரல்கள் சுழற்ற, அவள் மனமும் சுழன்று பின்னே போனது...

தவிர வெண்மலர்கள் அவர் நினைப்பைத்தானே தருகின்றன. அந்தக் கருத்த முகத்திற்கு முத்துச்சரம் போன்ற அவர் சிரிப்பு வெகு அம்சம்.

அவர் கண்களில் மட்டும் முன்போன்ற கூர்மை.

பெருமூச்சுடன் கண்ணாடி பார்த்தவள் துளி மை எடுத்துத் தன் இமைகளில் தடவினாள். மையிட்ட கண்கள் உயிர்த்தன.

'மன ஆழியை அளக்கும் நாழி அவளின் விழி!'

கவிதை அரங்கில் இளமுருகு தன்னையே பார்த்தபடி உச்சரித்த வரிகள் மனதில் ஓடி முகம் சிவக்க வைத்தன.

அவரின் கடல் போன்ற மனதை இச்சின்ன விழி, நாழியாகி அளந்துவிடுமென்றதாக்கும்?

பெருமிதமாய்ச் சிரித்துக் கொண்டாள் அப்பேதை.

அவள் இளமுருகுவை முதலில் சந்தித்தது ஒரு திருமணத்தின்போது அது பள்ளித் தோழியின் திருமணம்.

மணமக்களை வாழ்த்திப் பேச அவன் மேடையேற, கூட்டம் சலசலத்தது. அதுவரை அமுதுவின் வானதிற பட்டுச் சேலையையும் அதற்கும் பொருத்தமாய் அவள் கழுத்தில் கிடந்த நீலக்கல் மாலையையும் ரசித்துக் கொண்டிருந்த பெண்கள் தொடியில் கட்சி மாறினார்கள்.

''ஏய், இவரு எப்ப வந்தாரு?''

''இளமுருகு இல்லாம பெரிய கல்யாணமேதும் நடக்குதாக்கும்?''

மற்றொருத்தி உரிமையாய் நொடித்தாள்.

''கவிஞரு பேச வந்துட்டா எவனும் பந்திக்கு முந்த மாட்டான் பாரு.. உக்காந்து கேட்பான்...''

''யாரு கேட்காட்டியும் நீ கேட்படி சிங்காரி...''

தான் கல்லூரிப் படிப்பிற்காக வெளியூர் போயிருந்த காலத்தில் இந்த வாலிபன் பிரபலம் ஆகியிருக்கிறான் என்று யூகித்தாள் அமுது.

அவளும் அவனை ஆர்வமாய் கவனித்தாள்.

ஒல்லியாக இருந்ததால் சிறு கூடுதல் உயரம் போன்ற தோற்றம். நல்ல கருப்பு.



அதை எடுத்துக்காட்டும் தும்பைப்பூ நிற வேட்டி. கழுத்து வைக்காத ஜிப்பா.

லேசாய் எண்ணெய் வைத்து, படிப்படியாய் வளைத்து வாரியிருந்த கேசம். காலில் வெள்ளை செருப்பு.

'யார் ஜாடையிலோ இருக்காரே?' அவள் யோசிக்க, அவன் பேசினான்.

''கொடியும் மலருமாய், வானும் மதியுமாய், கடலும் அலையுமாய் இன்று இணைந்திருக்கும் தம்பதிகளே, அவர்களை வாழ்த்த வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே...''

இவளுக்குள் பொறி தட்டியது.

அழுத்தம் திருத்தமாய் இளைஞன் பேசக் கூட்டம் ஓரளவு அமைதியாய் கேட்டது.

திடீரென்றுதான் அமுது அதை உணர்ந்தாள் - அவன் விழிகள் தன் மீதே நிலைத்திருப்பதை...!

ஒருவேளை தன் பெண் ரசிகைகளைப் பார்த்துப் பேசுகிறாரோ என்று இவள் இடம் மாறி அமர, காந்தத்தைத் தொடரும் இரும்பாய் அவன் பார்வை இவளையே கவ்வித் தொடர்ந்தது!

அமுதுவிற்குள் படபடப்பு.

இவளுடன் வந்த தாயார், ''நான் கிளம்பறேன்... நீ சிநேகிதிகளோட பேசிட்டு வா... காரை அனுப்பறேன்.'' என்று போயாயிற்று.

பேசாமல் அம்மாவுடனேயே போயிருக்கலாம்.

அவளையே கூர்ந்து பார்த்தவன், ''கண்ணே நீ என்றும் எனக்கு... இக்கண்ணன் இனி உனக்கு....'' என உரத்த குரலில் சொல்ல துணுக்குற்றாள்!

''இப்படி ஒரு இனிய உறுதி மொழியுடன் புதுத் தம்பதியினரை மாலை மாற்றிக் கொள்ளும்படி வேண்டு

இறேன்'' என்றவன் பேச்சைத் தொடர, இவளுக்கு வியர்க்கத் தொடங்கியது.

அந்தக் கவல் தனக்காகவா?

கண்டதும் காதல் வசப்பட்டு விட்டானா?

அவனுக்கு எப்படியோ... தனக்குள் ஏது வில்லையே...?

நெஞ்சு படபடப்பதும் வியர்ப்பதும் காதலா?

இவை மாரடைப்பிற்கான அறிகுறிகள் அல்லவா? அதற்குள் கவிஞன் கீழிறங்க, சிலர் கை தட்டினர்.

தன்னிச்சையாய் அமுதினியும் கை தட்டினாள்.

எங்கே தன்னருகே வந்துவிடுவானோ என்ற அச்சத்தில் அவசரமாய்ப் பாட்டிகளின் கூட்டத்தின் நடுவே அடைக்கலம் ஆனாள்.

இப்போதும் கவிஞனின் பார்வை அவளை உரசியது... உறுத்தியது.

உபரியாய் உதடுகளில் ஒரு நக்கல் புன்னகை வேறு!

விருந்தை நினைக்காமல் வீடு வந்து படுத்த அமுதுவிற்கு அன்று உறக்கம் வரவில்லை.

ஆனாலும் மூன்றாம் நாள் சலனம் மறைந்து அவள் இயல்பானபோது அடுத்த சந்திப்பு நேர்ந்தது.

இல்லை... அது அவன்... அவரே ஏற்படுத்திய சந்திப்பு.

ரசம் வைக்க வேப்பம்பூ பொறுக்கிக் கொண்டிருந்த பொன்னிதான் அவர் வரவைச் சொன்னாள்.

''அம்மா... கல்யாணங்கள்ல பேசுறவரு வந்திருக்காரு...''

ஒருகணம் 'கருக்' என்றாகிச் சுதாரித்து கொண்டாள்.

''அது யாரு?''

''கவிஞரும்மா... உங்களைப் பார்க்கணுங்காரு..?''

''அது... அம்மாவையா இருக்கும்...''



''இல்லையாம்... உங்கசின்னம்மா என்கிறாரே இருத்தமா? நானும் அமுதும்மாவா என்றதும்.. அவங்களேதான் என்கிறார்...''

எத்தனைத் துணிச்சல்... வீடு வந்து அழைக்கும் அளவிற்கு....

மனது பொறுமியது... ஆனால் அவளுக்கு போய்ப் பார்த்துப் பேச துணிவில்லை. உதடு உலர, அம்மாகிட்ட போய்ச் சொல்லு பொன்னி'' என்று பம்மினாள். ''அதுதான் சரி. உங்களைக் கொண்டு நிறுத்தினால் சின்னவரு என்னைக் கூறு போட்டுருவாருல்ல?''

அமுதுவால் வெறுமே அறைக்குள் உட்காரவும் முடியவில்லை.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த கூடத்திற்குப் போக, 'பளிச்' சென்று எழுந்து நின்று கரம் குவித்தான்.

''வர்ற 16 ம் தேதி திண்டுக்கல்ல கவியரங்கம் நடத்தறோம்... அம்மாவோட நீங்க அவசியம் வந்து கலந்துக்கணும்...''

''ம்...ம்..'' அமுது முனகியது அவளுக்கே கேட்கவில்லை.

பதினாறாம் தேதி தன் தோழியின் நிச்சயதார்த்தம் என்ற புளுகலுடன் கிளம்பி விட்டாள்.

அத்தனை தைரியம் தனக்கு வந்தது எப்படி என்பது அவளுக்குப் புதிர் தான்!

தன் மகள்களின் அழகு பற்றித் தனம்மாளுக்குப் பெருமை உண்டு.

செருப்பு தேய மாப்பிள்ளை தேடி அலையாமல், நல்ல வரன்கள் வீடு தேடி வரும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

வந்த சில வரன்கள் -

''அடடே... புளியங் கொம்புல்ல... உடனே தேதியைக் குறிப்பா...'' என்று பெண் வீட்டார் ஆலாய்ப் பறக்கக் கூடியவை அல்ல.

ஆக, ''பார்ப்போம்... இப்பத்தானே படிச்சு முடிச்சு இருக்கா? ஒரு ரசம் வைக்கக் கூடத் தெரியலை... சொல்லிக் கொடுக்கணும்...'' என்று நாசுக்காய் ஒதுக்கினாள் தனம்மாள்.

''நம்பப் பொண்ணு காலேஜ் படிப்புன்னு இத்தனை காலம் கோயம்புத்தூரில் இருந்துச்சு. இனி தங்கரதம் கணக்காவர்றப்ப... நாலு பேர் கண்ணுல பட்டால்தானே பெண் கேட்டு நம்ப வீட்டுக்கே ஓடி வருவாங்க?'' என்று பெரிய தாயி ஓதியதற்குப் பலன் இருந்தது.

ஆக அமுதினி வெளியே கிளம்ப முடிந்தது.

இளமுருகிற்குக் கை கால் புரியாம பரவசம் இவளைக் கண்டதில்!

முன் இருக்கையில் அமர்ந்த அவளுக்கு அடிக்கடி குளிர்பானம் வந்தது.

அங்கு விற்பனையில் இருந்த தன் கவிதை நூலைத் தன் கையெழுத்திட்டு அவளிடம் தந்தபோது விரல்கள் உரசின.

அவள் கூசினாள்.

அன்றிலிருந்து வெள்ளையாய், கவித்துவமாய் எதைப் பார்த்தாலும் அவர் நினைப்பு சுடுகிறது... சுவைக்கிறது!


ஆனால் தனக்கு மாப்பிள்ளை தேடிய அண்ணனிடம் அமுது தன் விருப்பத்தைக் கோடிட்டு காட்டியதும்... அவன் றலில் வீடே அதிர்ந்து விட்டது.

''அன்றாடம் காய்ச்சற அளவுகூட அவன் கவிதையில் க வராது... முட்டாள் பெண்ணே...''

அன்றிலிருந்து அமுதினி பேச்சை, சிரிப்பை மறந்து ட்டாள்.

வீடு இறுகிக் கிடந்தது.





# 5

கனவுகளில் திளைத்த அமுதினியை, கதவு தட்டப்படும் சத்தம் கலைத்தது. கதவைத் திறந்தவளுக்கு சில நொடிகளுக்குப் பேச்சே எழவில்லை.

''என்ன அப்படி பார்க்கறே...? பயங்கர அதிர்ச்சியாகவா இருக்குது?''

நகைப்புடன் கேட்டாள் வந்திருந்த ஆனந்தி.

''ஆனந்த அதிர்ச்சிதான்.'' என்றபடி வந்திருந்தவளை ரசித்தாள் அமுதினி.

ஆனந்தியின் அலசி உலர்த்திய கூந்தல் மேல் முதுகு வரை படர்ந்திருந்தது. லேசான ஒப்பனையில் இருந்த முகம் அட்டைப்பட அழகிகளுக்கு எல்லாம் சவால் விடும் கவர்ச்சியுடன் காணப்பட்டது. கருநீல வெல்வெட் ரவிக்கையும், ஆகாயநீல மைசூர் பட்டும் அவளது கொடி உடலை மேலும் நளினமாய்க் காட்டின.

''நீ மாடல் செய்வியா ஆனந்தி...?''

''படிப்பு கெட்டிருமே... தவிர முரட்டு ஜீன்சும் தொளதொளப்பாய் மேலே சட்டையும் போட்டால் நாம் யார் கவனத்தையும் ஈர்க்க மாட்டோம்.''

''உன் உயரம் என்ன?''

''ஐந்தே முக்காலடி...''

''இங்கே உனக்கு லேசில் மாப்பிள்ளை அமையாது. ஆனால் அது எங்க அண்ணனுக்கு ஏற்ற உயரம்?''

கருத்து சொன்ன அமுது, நாக்கை ஏனோ கடித்துக் கொண்டாள்.

''உனக்குன்னு வாங்கி வந்த பரிசைத் தர வந்தேன் அமுது - இப்பவே போட்டுக்கறியா?''

ஆனந்தி திறந்த வெல்வெட் பெட்டிக்குள் கண்களைப் பிடுங்குமளவு ஜொலிப்பில் சிரித்தது ஒரு நெக்லஸ்!

சின்னஞ்சிறு சதுர கிரிஸ்டல்கள் சாத்தியமான அத்தனை வர்ணங்களையும் வாரிக் கொட்டின.

''யப்பா... பிரமாதமான வேலைப்பாடு... இது... இது''

''உனக்கு என் பரிசு.''

''நகையை எடுத்து அமுதுவின் கழுத்தில் போட்டு அழகு பார்த்தாள் மற்றவள்.

''இது உனக்குன்னே செய்த நகை...''

''விலை அதிகமிருக்கும் போல?''

''விரைவில் கல்யாணமாகப் போகும் உனக்கு எங்கள் வாழ்த்துக்களுடன் இது...''

புன்னகைத்த அமுதினியின் முகத்தில் திருமண பேச்சைக் கேட்கும் கன்னிப் பெண்களுக்கான நாணப் பூக்களில்லை.

மாறாக விரக்திதான் சாயலிட்டது.

''உன் தலை உலர்ந்தாச்சி போலயே... வா தளரப் பின்னி பூ வச்சுவிடறேன்.'' பேச்சை மாற்றினாள்.

ஆனாலும் ஒருவரை ஒருவர் அலங்கரிக்க, பேசிச் சிரிக்க, இரு பெண்களுக்கும் மிக நெருங்கி விட்டதான தோழமை உணர்வு.

அவர்கள் தயாராகவும், கீழே காரின் 'ஹாரன்' ஒலி.

''வா கீழே போலாம். சுதாங்ணி வந்தாச்சு போல...''

அறிமுகப்படுத்தப்பட்ட சுதாங்கனிக்கு விருந்தாளியுடன் சரளமாய் பேச முடியவில்லை.



அவளுக்கு இந்த சந்திப்பு ஆனந்த அதிர்ச்சியெல்லாம் இல்லை.

சுத்தமான 'அக்மார்க்' அதிர்ச்சி! தன்னைவிட முக்காலடி உயரமாய், லண்டனின் பனிக்காற்று உருவாக்கிய பளிங்கு சருமத்துடன், அம்சமான முகம், அலங்காரம், ஒயிலுடன்... எல்லாவற்றிற்கும் மேலாய் 'தான் அழகு' என்ற எண்ணமும் கூட இன்றி இயல்பாய் நின்ற புதியவளைப் பார்க்க உடம்பே எரிந்தது!

''ரொம்ப நாளாய் உன்னை... உங்களை எதிர்பார்த்திருந்தோம்...'' என்றாள் சம்பிரதாயமாய்.

''நானும் அத்தை வீட்டுக்கு வர ஆவலாய் இருந்தேன். 'விசா' கிடைப்பதில் சிறு தாமதம்.''

''பயணமெல்லாம் சவுகர்யந்தானே?''

''ஆமா. வாழ்த்துக்கள் சுதாங்கனி - நீங்கதான் இங்கே... வீட்டிற்கு மூத்த மருமகளாய் வரப் போறதாய் சொன்னாங்க...''

சிநேகத்துடன் கை பற்றி வாழ்த்தினாள் ஆனந்தி. இப்போது சுதாவின் முகம் சற்று மலர்ந்தது.

ஆனால் ஓரக்கண்ணால் பெருமிதத்துடன் தன் அருகே நின்ற ஆனந்தனைப் பார்த்தவளுக்குத் 'துணுக்' கென்றது.

அவனும் விழி விலக்காமல் புதியவளையே பார்த்திருந்தான்! அதற்குள் தனம்மாள்.

''எல்லாம் தயார் - சாப்பிட உக்காரலாமே'' என்று அழைக்க, மறு அறைக்கு நகர்ந்தனர்.

குழல் விளக்குகளின் ஒளியில் வெள்ளிப் பாத்திரங்களும் தட்டுகளும் மின்னின.

மேசையில் பரப்பப்பட்டிருந்த பதார்த்தங்கள் நாவூறச் செய்தன - நெய், மசாலை, தேங்காய் கலந்த உணவின் மணம்.

குடும்பத்தினருடன் அமர்ந்திருந்த இளையவன் ஆகாஷ் அதிகம் பேசவில்லை.

"இப்படி எல்லாருமாய்ச் சேர்ந்து சாப்பிட உட்கார்வது சரிது - இது ஆனந்தியின் வரவுக்கான விருந்து..."

சொன்ன ஆனந்தனுக்கு நன்றி சொல்ல ஆனந்தி வாய் திறக்கும் முன் சுதாங்கினி அவசரமாய்ப் பேச்சை மாற்றினாள்.

"அடடே... அமுது நெக்லஸ் என்னமாய் மின்னுது... சூப்பர் டிசைன். நீங்க வாங்கினதாய்ச் சொல்லவே இல்லை யேங்க...?"

"அதானே... எதுமா இது...?"

"ஆனந்தியோட பரிசும்மா... இப்பத்தான் போட்டு விட்டா...?"

"அத்தானுக்குக் கல்யாணமாகப் போற செய்தியை இங்க வந்துதான் தெரிஞ்சுகிட்டேன் சுதாங்கினி... இல்லைன்னா உங்களுக்கும் இதே போல வாங்கிட்டு வந்திருப்பேன்..."

"இந்த மாடலை காட்டி அதேபோல செய்திட்டாப் போச்சு... இல்லையாங்க...?"

சற்று அலட்சியமாய்க் கேட்டாள் சுதா.

"எனக்கு உடம்புல சர்க்கரை அதிகமா இருக்கா, இரத்த அழுத்தம் எப்படீன்னு நாமே பார்த்துக்கறாப்பல ஏதேதோ கருவிங்க வாங்கிட்டு வந்திருக்கா... இனி அதுக்குத் தகுந்த மாதிரி நான் சாப்பிட்டுக்கலாம். ஒரேயடியாய் வாயைக் கட்ட அவசியமில்லை..."

சுதாவிற்கு எரிச்சல் கூடியது.

"நாக்கைக் கட்டியே வச்சிருந்தா அடிக்கொரு தரம் சோதிச்சுப் பார்க்க வேணாமே..." என்றாள் சற்று ...சென்று.



"கஷ்டம்ங்க... இத்தனை விதவிதமாய் சமைச்சு, அத்தையைத் தொடக்கூடாதுங்கறது நியாயமா?"

"அப்படி சொல்லுடி கண்ணு... இன்னைக்கு நீ வந்த 'குஷி'யிலே எல்லாத்தையும் சாப்பிட்டுப் பார்க்கத்தான் போறேன்..."

'கண்ணுவாமே கண்ணு...? தன்னை ஒரு முறையேனும் இப்படி அழைத்ததுண்டா தன் வருங்கால மாமியார்? இரத்த உறவின் பாசம் தனி போலும். இந்தப் புது குட்டிக்கும் ஆட்களை வளைத்துப் போடும் திறமை இருக்கிறது!' தனக்குள் கரித்தாள்.

அதிகம் பேசாமல் அமுதினி பரிமாற, சிறு கிண்ணத்தில் காரட் அல்வாவை எடுத்துக் கொண்டு, "ஒரு நிமிடம்" என்று கிளம்பினாள் ஆனந்தி.

"எங்கேம்மா?"

"நீங்க சாப்பிட ஆரம்பிங்க அத்தை... ஒரே நிமிடம்..."

ஆனால் யாரும் சாப்பிடத் தொடங்கவில்லை. சுதாவும் தான் எப்படி முதலில் வாயில் வைப்பது எனத் தட்டை அளைந்தபடி இருந்தாள்.

"என் ஆகாஷ்... பரிசுகள் பெண்களுக்கு மட்டும் தானா... இல்ல உனக்கும் ஏதேனும் உண்டா?"

"ரோலக்ஸ் கடிகாரம் அண்ணே. நான் ஒருமுறை பார்த்து ஆசைப்பட்ட அதே தினுசு."

"ம்ம்..." ஆனந்தனின் புருவங்கள் உயர்ந்தன.

ஓட்டமாய்த் திரும்பிய ஆனந்தி மன்னிப்பு கோரும் பாவனையில் அனைவரையும் பார்த்துப் புன்னகைத்தாள்.

"அப்படி எங்கம்மா ஓடின?"

"அகிலாவுக்கு இனிப்பு தரப்போனேன் அத்தை."

சுதாங்கினிக்கு மறுபடி 'சுருக்'கென்றது.

'அடி முட்டாளே... இதை எப்படி மறந்து போனே? சின்னவள் அகிலா வயசுக்கு வந்ததாய்த் தகவல் சொன்னாங் களே... வெறுங்கையோட வந்ததுமில்லாம 'உட்கார்ந்த வளை' போய் வாழ்த்தவும் இல்லையே... ஒரு வார்த்தை விசாரிக்கவுமா மறந்திடும்?'

தன்னையே திட்டிக் கொண்டாள்.

''அதானே... அகிக்குட்டி எப்படி இருக்கா?''

குரலில் நிறைய இனிப்பைக் குழைத்துக் கேட்டாள்.

''மூஞ்சியைத் தூக்கி வைச்சிகிட்டிருக்கா. தனியே உட்கார பிரியமே இல்லை. பின் அறைக்குப் போக முடியாதாம்... வீட்டுப் பழக்கத்தை மாற்ற முடியுமா?'' தனம் அலுக்க,

''அதெல்லாம் அடுத்த மாசம் வழிக்கு வந்திடுவா அத்தை...''

''அனுசரணையாய்ப் பேச முயன்றாள் வருங்கால மருமகள்.

''அகிலா சாப்பிட்டாளாம்மா?'' ஆனந்தன் கேட்க,

''தோ... இப்ப அனுப்பிடலாம்... ஏய் சின்னப்பூ...'' குரல் நீட்டினாள் தனம்.

''அவள் சாப்பிட்டாச்சு அத்தை அவள் அறையில் உட்கார்ந்து நானும் அவளும் 'கேரம்' விளையாடினப்பவே சமையல் வாசம் மூக்கைத் துளைச்சது. நான்தான் போட்டுத் தந்தேன். ஆனா அப்போது அல்வா தயாராகலை. அதான் இப்ப போய் தந்தேன்.''

சுதாங்கினி பற்களைக் கடித்தாள்!

'வந்து என் குடியைக் கெடுக்கறியேடீ பாவி!' என்று மனதுள் கருவினாள்!

உணவை முடித்து அனைவரும் முன்னறைக்கு வர, வேலைக்காரி தாம்பூலத் தட்டை எடுத்து வந்து வைத்தாள்.



''அத்தை பீடா சுருட்டித் தந்தால்... அது தனி சுவை. அதான் பல்லுல கறை ஏறினாக் கூட பரவாயில்லைன்னு நான் அதற்கு இன்னும் தடை போடலை'' அறிவித்தாள் சுதாங்கினி.

தனம் வெற்றிலையைத் துடைத்து, சுண்ணாம்பு தீவி, பாக்கு, கல்கண்டு, ஏலம் சேர்த்து சுருட்டியதைக் கண் எடுக்காமல் பார்த்தாள் ஆனந்தி.

''அடுத்த பீடாவை நான் செய்யட்டுமா அத்தை?''

''செய்யேன் கண்ணு.''

''தப்பு வந்தால் சொல்லுங்க அத்தை'' என்றபடி ஆனந்தி சுருட்டிய பீடாவிற்கு கை நீட்டியவன் ஆனந்தன்!

''தா... அம்மா கைப்பக்குவம் கொஞ்சமேனும் இதில் இருக்குதான்னு பார்ப்போம்'' வாயிலிட்டு மென்றவன், ''ம்ம்... அருமை. இந்தப் பக்குவம் எல்லாத்திலேயும் இருந்துட்டா கவலையில்லை'' என்றான் அவளை ஊன்றிப் பார்த்தபடி.

''பக்குவம் என்கிறது ஈடுபாடும் பழக்கமும்தானே'' என்றபடி அடுத்ததைத் தயாரித்தவள், அமுதுவிற்குத் தந்தாள்.

மென்ற அமுதினி ''அம்மாவைப் போலவே சுருட்டி இருக்கே... உனக்கு ஈடுபாடு அதிகம்தான்'' பாராட்டினாள்.

''எங்க காலத்துல கல்யாணம் ஆகாததுங்க வெற்றிலை போடவே கூடாது. இப்ப செரிமானத்துக்குத் தோதுன்னு எல்லாரும் மெல்றாங்க.''

''ஆகாஷ்! உனக்கு?''

''எனக்கு வேண்டாம். நான் என் அறைக்குப் போறேன்.''

ஒரு மாதிரியான தவிப்புடன் எழுந்தான்.

''ஒரு நிமிடம். பெரிய அத்தானுக்கு நான் பரிசு தரப்போறதை நீயும் பார்க்கணும். ஒரு நிமிடம் உட் காரேன்...''

ஆனந்தன் வியப்புடன் சுற்றிலும் நடப்பவற்றைக் கவனித்தான். வந்த ஒரே நாளில் ஆனந்தி குடும்பத்தில் அனைவருடனும் நன்கு பழகிவிட்டது புரிந்தது.

குடும்பத்தின் பிரியத்தைப் புதியவள் இத்தனை சுலபமாய், சீக்கிரமாயப் பெற்றுவிட்டது ஆச்சரியம்தான்.

அம்மாவின் பாசத்திற்கு அர்த்தம் உண்டு.

சில காலமாய் முகம் தூக்கி வைத்திருந்த அமுதுகூட இன்று தளர்ந்து இயல்பாய் இருக்கிறாள். ஆகாஷ் முகத்திலும் புன்னகை.

ஆனால், சுதாவின் முகத்தில் இத்தனை நாட்கள் கொலுவிருந்தகளையை இன்று காணோம் என்பதும் அவன் கூரிய பார்வையில் இருந்து தப்பவில்லை.

குடும்பத்தினர் ஒருவரைப் பார்த்து மற்றவர் சிரிக்கும் நிலையில் இருந்தது. தனக்கான பரிசு என்ன என்பது அவர்களுக்குத் தெரியும் என்பது புரிய ஆனந்தனின் ஆவல் அதிகரித்தது.

ஆனால், அறைக்குள் நுழைந்த பரிசைப் பார்த்தவன் திகைத்தான்.

சுதாவோ 'வீல்' என்று அலறியே விட்டாள். யக்கத்துடன் நுழைந்த அப்பரிசு இந்த அலறலில் பம்மியது.

''அது அழகான நாய்க்குட்டி-உன்னை அவங்க ிர்பார்க்கலை அதான்...வா.'' - அது சமாதானப்பட்டு ன்னேறியது.

ஆனந்தியை ஒட்டி நடந்து வந்தது.

''ஏய்... இவர்தான் உன் எஜமானர்...''

ஆனந்தனை நாய்க்கு அறிமுகப்படுத்த, அது தன் வெட் நிற விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தது. ர் வால் மெல்ல ஆடியது.

''அவருக்கு வணக்கம் சொல்லு.''



தரையில் அமர்ந்த நாய் தன் வலது முன்னங்காலை உயர்த்தித் தந்தது. ஆனந்தன் இன்னும் திகைப்பில் இருந்து மீளவில்லை. என்றாலும் இந்த சிநேகக் கை நீட்டலைத் தட்ட முடியாது. கை நீட்டினான்.

''இதுதான் பரிசா?''

''ஆமா அத்தான். பிடிச்சிருக்கா? ரொம்ப யோசிச்சு உங்களுக்காய்த் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்த பரிசு.''

''இது என்ன சாதின்னே ஆனந்தி? எங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் அல்சேஷனும், பாமரேனியனும்தான்.'' - நாயின் தலையை வருடிய ஆகாஷ் கேட்டான்.

''இது கிரேட் - டேன் வகை. சென்னையில் இருக்கும் அப்பாவின் நண்பர் ஒருத்தருக்கு இதுதான் வியாபாரம். இதன் பெயர் பைரு.''

''அதென்னம்மா பெயர் பைரு?''

''இந்தியப் பெயராய் வைக்கணுங்கற ஆசை. பைரவர் என்பதன் சுருக்கம் தான் 'பைரு.' நீங்க பண்ணையைச் சுற்றிப் பார்க்கும்போதெல்லாம் இவனையும் கூட்டிட்டுப் போகலாம். அத்தான்! உங்களுக்கு நல்ல துணை, பாது காப்பும்கூட.. 'பைரு'ன்னு இவனைக் கூப்பிடற சில முறை யாவது கூடவே என் நினைப்பும் வருமே... பைருவைப் பிடிச்சிருக்கா?''

''அதை, இந்த நாயை இத்தனை மைல் இழுத்துட்டு வர்றதுக்கு முன்னே கேட்டிருக்கணும்.'' - மறுபடியும் 'சுள்' ளென்றாள் சுதா.

''மன்னிக்கணும்... உங்களுக்கெல்லாம் ஒரு இனிய ஆச்சரியமாய் இருக்கட்டுமேன்னுதான் இவனை நிச்சயமாய்ப் பிடிக்கும்னு... குறைஞ்சது 12 ஆண்டாவது என்னைத் தினமும் நினைப்பது போல ஒரு பரிசு தரணுங்கற ஆசையிலே கொண்டுவந்தேன். இவனைப் பிடிக்கலைன்னா திருப்பி...'' தடுமாறினாள்.

''பிடிச்சிருக்கு.''

புன்னகைத்த ஆனந்தன் நாயைத் தட்டித் தந்தான். பைரு உற்சாகமாய் வாலாட்டியது.

''ரொம்ப மகிழ்ச்சி அத்தான்!''


''தப்பு ஆனந்தி பரிசு தந்தது. நீ. உனக்குத்தான் நான் நன்றியும், மகிழ்ச்சியும் சொல்லணும்.''

சூழல் இயல்பாக, தனம்மாளும் நிம்மதியானாள். சுதா முகத்திற்கு மட்டும் சிரிப்பு வராமல் சண்டித்தனம் செய்தது!

**தூ**க்கம் வராமல் புரண்டு தவித்தாள் அகிலா. மூன்று வயதிலேயே தகப்பனை இழந்த அவள், தாயை ஒட்டியே இருந்துவிட்டாள். சமீபமாய் மகளைத் தனிக்கட்டிலில் படுக்க தனம் பழக்கியிருந்தாள். என்றாலும் இப்படி இருட்டுத் தனியறையில், முரட்டு மெத்தையில் உறங்கவே முடியாதெனத் தோன்றியது அந்தச் சின்னப் பெண்ணிற்கு.

வெளியே காலடிச் சத்தம் கேட்கவும் தன் அறைக் கதவைத் தாழிடாதது ஞாபகம் வந்தது. அவசரமாய் எழுந்தவள் பயத்தில் உறைந்தாள்.

கதவை யாரோ மெல்ல திறந்து கொண்டிருந்தார்கள்.



## 6

**ஏ**ற்கெனவே எரிச்சலும், சிறு பயமுமாய் இருந்த அகிலாவை இப்போது பயம் முழுதுமாக ஆக்ரமித்தது.

''வாரது?''. என்று கேட்க வாய் திறந்தால் காற்றுதான் ...து! ஏற்கெனவே வலித்த வயிறு இப்போது சுருண்டு ...த்தது.

''முழிச்சிருக்கியா அகி?''



குரலோடு விலகிய கதவு வழியே வெளிச்சமும் வர, இழுத்துப் பிடிக்கத் தன் மூச்சைத் தளர்த்தினாள் அகிலா.

''ஐயோ... பயந்துட்டேன்ணி... நீங்கதானா?''

''பின்னே யார் வர முடியும்? பைரு வெளியே காவலுக்குப் படுத்திருக்கானே? தவிர பொன்னியும் பக்கத்திலேதான் தூங்கறா...''

''ம்ம்.''

''திருடனோ, எலியோ எதுவும் வராது.''

''சரி. நீங்க ஏன் தூங்காம இப்படி வந்தீங்க?''

''பெரிய பொண்ணு தூங்கிட்டீங்களான்னு பார்க்கத் தான். படுக்கறப்ப கதவைப் பூட்டிடணும் அகி.''

''ஆமாண்ணி... மறந்துட்டேன்.''

''தூங்கவும் மறந்துட்டியா? மணி 11. இங்க தூக்கம் வரலைன்னால் என் அறையில் வந்து படுத்துக்கோயேன்.''

''ம்ஹூம்... அம்மா விடமாட்டாங்க.''

''சரி. அதைப் பிறகு பார்ப்போம். இப்ப நீ தூங்கற வரை நான் கூடவே இருக்கேன்.''

''உங்களுக்கும் பிரயாண அசதி இருக்குமே?''

''ஃப்ளைட்டிலே நல்ல தூக்கம். தவிர ஒரு குழந்தையின் குதூகலத்துடன் கட்டிக் கொண்டாள் ஆனந்தி.

''அப்ப சரி - வாங்க பேசுவோம்.''

அழைப்பு விடுத்தாள் அன்றுதான் வயதிற்கு வந்திருந்த பெரிய மனுஷி!

''விடி விளக்கைப் போடலியே நீ?'' எழுந்து போய் ஆனந்தி சுவிட்சைத் தட்ட மிருதுவான நீல ஒளி அந்த அறையை ரம்மியமாய் நிரப்பியது.

''அடடே....இது எப்போ, எப்படி வந்துச்சு?''

''உனக்கு இருட்டு பிடிக்காதுன்னதும் தானாய் முளைச்சிட்டதாம்'' கண்சிமிட்டிய மூத்தவளின் கைகளைப் பற்றினாள் இளையவள்.

''உங்க ஏற்பாடா? உங்களை எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கண்ணி.''

''எனக்குந்தான்... அதான் தூக்கம் வரலை.''

''ஆனா காலைல அண்ணன் உங்களை கொஞ்சம் திட்டற... மிரட்டறாப்பல பேசினதும் எனக்கு ஒரு மாதிரியாய் போச்சண்ணி. ஆனா நீங்க தைரியமாய் அவங்க முன்னே போய் நின்னு பேசிட்டீங்களே?''

''எது இல்லைன்னாலும் பரவால்ல அகி. ஆனா தைரியத்தை மட்டும் நாம விட்டுடக்கூடாது. அதுவும் நான் உன்கிட்ட பொய்யாகவோ புதுசாவோ எதும் சொல்லலியே... உள்ளதைத்தான் சொன்னேன்?''

அகிலா சிரித்தாள். ''ஆண்களை அவங்க இஷ்டத்துக்கு விட்டுரக் கூடாதுன்னீங்க. ஆனால் எங்கண்ணனை யாராலும் மாத்த முடியாது.''

ஆனந்தி ஒரு நிமிடம் யோசித்தாள்.

''ஒரேயடியாய் அப்படி சொல்லாதே. சுதாங்கனி கறாரான பேர்வழியாய் தெரியறாங்க. நினைச்சதைத் துணிச்சலாய் பேசறாங்க... கல்யாணமானதும் அத்தான் மாறத்தான் வேண்டியிருக்கும்'' - தீர்மானமாய் சொன்னாள்.

''சுதாண்ணி உங்ககிட்ட எப்படி பழகினாங்க? கொஞ்சம் 'கன்'னு பேசுவாங்க...''

''ம்ம்- நம்ப பைருவைப் பார்த்து கொஞ்சம் அரண்டுட்டாங்க...''

''நாங்கெல்லாம் அவங்களுக்கு பயப்பட, அவங்களை அரட்டவே பைரு வந்தான் போல.''



''சரி - படுத்துட்டே பேசு - அப்படியே தூங்கிடலாம்.'' மிக மெல்லிய குரலில், இருவரும் பேசியபடி இருக்க, ஒரு கட்டத்தில் 'ம்ம்' கொட்டியபடி கண்களை மூடிய அகிலா உறங்கிப் போனாள்.

அவளுக்கு போர்த்திவிட்டு அறையிலிருந்து நழுவிய ஆனந்தியை இரு கண்கள் கவனித்தபடி இருந்தன.

காலை உணவு முடிந்ததும்.

''உங்ககிட்ட பேசணும் அத்தான்'' என்று வந்து நின்ற ஆனந்தியைப் பார்த்த ஆனந்தன் முகத்தில் முன்பிருந்த கடுமையில்லை.

''ம்ம்.''

''காலைல பைருவை ஒரு நடை வெளியே கூட்டிட்டு போனீங்க போல?''

''ம்ம். நீ சொன்னது போல அவனு... அதுக்கு கேப்பைக்களி பால் முட்டை எல்லாம் வச்சாங்களான்னு பார்க்கப் போனேன். ரொம்ப உற்சாகமாய் தின்னது அதான் அழைச்கட்டு போனேன்.''

நாயுடன் பேச்சும் விளையாட்டுமாய் நடந்த அவனும் அப்பொழுதை மிக ரசித்திருந்தான்.

''இதெல்லாம் ஒரு எஜமானுக்கான நாய்ங்க. மொத்த விசுவாசத்தையும் ஒருத்தர் மீது வைக்கும் - குடும்பத்துக்கும் நல்ல காவல்.''

''மறுபடி நன்றி ஆனந்தி... இது யாருமே எதிர்பாராத நூதனமான பரிசு - அதான் சுதாக்கு கொஞ்சம் அதிர்ச்சியாயிடுச்சு.''

''புரியுது - அவங்களும் இன்னும் பக்குவப்படணும் போல!''

அவன் பேச்சு விளையா இல்லை இயல்பானதா என்பது புரியாது குழம்பியவள் பேச்சை மாற்றினாள்.

''ஏதோ பேசணும்னியே...?''

''ஆமா இங்குள்ள வங்கிக்கு என்னை நீங்க அழைச்சுட்டு போகனும். எனக்கு ஒரு தனி கணக்கு ஆரம்பிக்கனும்னா அதுக்கு ஊர் பெரிய மனுஷரின் அறிமுகம், சிபாரிசு தேவைப்படுமே... அதான் நீங்க கூட வரணும்.''

ஆனந்தனது முகம் மாறியது.

அவனுக்கு இதுவும் புதியது - ஆனந்தியின் வாழ்க்கை முறைக்கு இங்குள்ள அனைவரும் பக்குவப்பட வேணும் போலவே!

வீட்டுப் பெண்கள் இதுவரை அவனிடம் கோயிலுக்கோ கல்யாணத்திற்கோ போக கார் தேவை என்பதுதான் வழக்கம் - பணம் தேவையென்றால், கேட்டு,அவன் தருவதை மறுபேச்சின்றி வாங்கிக் கொள்வதோடு சரி.

''உனக்கு வேண்டிய பணத்தை அம்மா மூலம்... எங்கிட்ட வாங்கிக்கலாம்.''

அவன் சொல்ல ஆனந்தியின் விழிகள் விரிந்தன.

அவனையும் மீறி அவளுடையது மிக வசீகரமான முகம் என்று நினைத்தான். அவளைப் பார்த்த விழிகளை லேசில் பிடுங்க முடிவதில்லை.

அதிலும் அப்படி கண்களை விரிக்கையில் ஓவியம் போலவே இருக்கிறாள்.

''அப்படீன்னா அமுதுக்கு தனியே வங்கியிலே கணக்குக் கிடையாதா?'' ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''அவளுக்கு வங்கி எங்கே இருக்குதுன்னு கூட தெரியாது.'' என்றவன் சற்று திண்ணக்கமாகவே புன்னகைத்தான்.

''ஏன்...அத்தையோட அங்கே போயிருக்கக் கூடுமே?''

''அம்மா வங்கிக்கா...? நோ நோ - அவங்க ஏரியா - கோயில், கடை, கல்யாணம் அவ்வளவுதான்.''



அவள் விழிகள் மேலும் அகண்டன.

'யப்பா எத்தனை பெரிய கண்கள்' என்ற ஆச்சரியத்தை அவனால் அடக்க முடியவில்லை. எதிரே நிற்பவரை தன்னுள் வாங்கி விழுங்கி விடுவன போன்ற ஆழம் அவற்றில் இருந்தது.

''எனக்கு 18 வயசு ஆனதும் தனி கணக்கை ஆரம்பிச்சுட்டேன் அத்தான். எனக்கும் அப்பாவுக்குமாய் ஜாயின்ட் அக்கௌன்ட் உண்டு.''

''பெண்களுக்கு ரொம்ப வசதியான விஷயமாச்சே அது? கணக்கிலே, காசைப் போட ஒரு ஆண். செலவழிக்க 'செக்' கிழிக்கறது நீங்க.''

தோளை அலட்சியமாய் குலுக்கினாள்.

''ஒரு நிமிஷம் அத்தான். 14 வயசிலிருந்து நானும், எங்க கணக்கிலே காசைப் போட்டதுண்டு.''

இப்போது அவன் விழிகளில் வியப்பு!

''14 வயசிலே நீ சம்பாதிக்க ஆரம்பிச்சாச்சா?''

''ம்ம். பேபி சிட்டிங் செய்வேன். அதாவது தெரிஞ்சவங்க குடும்பத்துக் குழந்தைகளை அவங்க பெற்றோர் வீட்டில இல்லாதப்ப நாம போய் கவனிக்கணும். அவங்க வீட்டு நாயைக் குளிப்பாட்ட கூட அழைப்பாங்க. மணிக்கு இத்தனை பவுன்ட்டுனு சம்பளம் உண்டு. 16 வயசிலே 'மெக் டோனல்ட்ஸ்ல' சாப்பாடு பரிமாறியிருக்கேன் - அதுல நல்ல வருமானம்.''

அவன் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி தெரிந்தது.

''உங்கப்பா பெரிய வியாபார புள்ளி - பிறகென்ன?''

''அது அப்பாவின் சம்பாத்தியம் - என் சின்ன தேவைகளுக்கு நானே சம்பாதிச்சுட்டேன் - அதிலே தப்பில்லையே?''

''இங்கே பிள்ளைகளின் தேவைகளைக் கவனிக்கறது பெற்றோர் கடமை'' கடுப்புடன் சொன்னான்.

ஒதுங்கி நின்று இந்த சம்பாஷணையைக் கவனித்திருந்த தனம்மாளும் ஆகாஷும் ஒருவரை ஒருவர் சங்கடமாய் பார்த்தனர் - இப்படியெல்லாம் யாரும் ஆனந்தனோடு நின்று வாயாடுவதே இல்லையே...!

''பெற்றவர்களை சின்ன விஷயத்திற்காயும் நச்சரிக்காமல் இருக்கிறது நல்ல பிள்ளைகளின் திறமை!''

சொல்லிவிட்டு உற்சாகமாய் சிரித்தாள் ஆனந்தி.

இப்படி மடக்கி வார்த்தையாடுவது ஆனந்தனுக்குப் புதிது. அவனுக்கு அது பிடிக்கவுமில்லை.

அவள் தொடர்ந்தாள் - ''இப்ப 2 வருஷமாய் அதை விட சுவாரஸ்யமான வேலை பார்க்கிறேன் அத்தான். கேலரிகளில் நடக்கும் ஓவிய, சரித்திர கண்காட்சிகளில் விளக்கவுரை தர்றேன். நடக்கும் கண்காட்சி பற்றிய பெரிய, சின்ன குறிப்புக்கள் அத்தனையும் நமக்கு அத்துப்படியாய் இருக்கணும். நேர்த்தியாய் விவரித்தால் ரொம்ப ரசிப்பாங்க - டிப்ஸ் குவியும்.''

இறுகிய தன் முகத்தைத் திருப்பியவன்,

''சரி, வங்கிக்குப் போலாம் - காரிலே ஏறு'' என்று விலகினான். ஆனால் காரின் முன்புறம் ஏறப்போனவளை அவசரமாய் தடுத்து,

''பின்னால ஏறிக்கோ...'' என்றும் உத்தரவிட்டான்.

''ஏன்?''

''வந்து வந்து ... ஒரு பயலையும் கூட்டிட்டுப் போகணும். டேய்... யாராச்சும் ஒருத்தன் ஓடி வந்து ஏறு...''

உத்தரவில் ஒரு பயல் ஓடி வந்தான் - வியர்த்த மேனுடம்பைச் சட்டையால் துடைத்து அதையே அவசரமாய் போட்டுக் கொண்டான்.



இந்நாள்வரை வேலையாட்கள் ஏறாத வாகனத்தில் தான் ஏறப்போகும் பூரிப்பில் இருந்தது அவன் முகம்.

ஆனந்தன் அமர்ந்து மறுகதவைத் திறந்து 'ஏறுடா' எனவும், மாறி ஏறி நுனி சீட்டில் பவ்யமாய் உட்கார்ந்தான்.

காரின் ஏ.ஸி. குளிர் பயலின் முகத்தை மேலும் பரவசமாக்கியது. தான் முன் இருக்கையில் அமருவதைத் தவிர்க்கவே பயல் ஏற்றப்பட்டிருக்கிறான் என்று யூகித்த ஆனந்திக்குள் நமட்டுச் சிரிப்பு.

''ம்ம்... வசதியான கார் - இது என்ன தயாரிப்பு அத்தான்?'' பின்னால் இருந்து கேட்டாள்.

''க்வாலிஸ் - அந்தயாரிப்பின் முதல் ஆண்டு நிறைவைக் கொண்டாட பிரத்தியேகமாய் வந்த மாடல் இது-கறுப்பும், தங்க நிறமுமாய், தோல் ஸீட்களுடன்.''

விவரித்த அவன் தொனியில் லேசான பெருமிதம். பெரும்பாலான ஆண்களைப் போல அவனுக்குத் தன் காரின் மேலிருந்த ஈடுபாடு அதில் புரிந்தது.

''ம்ம் - ஆனால் எனக்கித்தனைப் பெரிய கார் அவசியமில்லை.

அவன் புருவங்கள் மறுபடி முடிச்சிட்டன.

''அடிக்கடி உங்களை இப்படி தொந்தரவு செய்யக் கூடாதில்லையா? அதான் எனக்குன்னு ஒரு சின்னக் கார் - ஆங்... நம்ப முன்னாடி போற கார் - அதென்ன?'' விரல் நீட்டினாள்.

''மாருதி எஸ்டீம்.''

''புதுக கூட அவசியமில்லை. ரெண்டு வருஷப் பழையக் கார் ஏதேனும் சகாய விலைக்கு வருமில்லையா?''

''உனக்கு எங்கே, எப்போப் போகணுமோ அதுக்கான வசதி செய்து தர்றது என்கடமை. எங்கிட்ட கேட்கலாம்.''

அவன் குரலில் கடுமை இருந்தது.

ஆனால் அவள் சற்றும் பின்வாங்கவில்லை. முக மலர்ச்சியும் மாறவில்லை. "நிச்சயமாய் அத்தான். ஆனா இப்படி இவரைத் தொந்தரவு பண்றமேன்னு எனக்குக் குறுகுறுக்குமே - தவிர நான் முறையாய் கார் ஓட்டுவேன்."

"இந்தியாவிலே கார் ஓட்டறது வேறே..."

"பிரிட்டிஷ்ஷர்ஸ் ஆண்டதால நம் ஊர்லேயும் காரின் வலப்புறம்தான் ஸ்டியரிங் வீல் - சாலையின் இடப்புறம் போகணும்னுதான் விதி - ஐரோப்பாவிலே தான் எல்லாம் உல்டா. இலண்டன்ல எனக்கு எதும் பிரச்சனையில்லை."

"டிரைவிங் லைசென்ஸ் இருக்காதே?"

"ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்கும் ஒரு தரம் நீங்க என்னை அழைத்துப் போக நேரும். சரியாய் ஓட்டிக் காட்டி லைசென்ஸ் வாங்கிடுவேன்."

அனைத்துக்கும் இயல்பாய், சொடுக்கினாற் போல அவளிடமிருந்து வந்த பதில்கள் அவனை எரிச்சல் படுத்தின.

"அது அப்புறம் - முதல்ல உன் வங்கி வேலையை முடி."

கார் அப்பழைய கட்டடத்தின் முன் நிற்க, இவளுக்காய் காத்திராமல் இறங்கி வங்கிக்குள் போனான்.

நெற்றி நிறைய திருநீறுடன் இருந்த வங்கி மேலாளர் வாயெல்லாம் சிரிப்பாய் ஆனந்தியைக் கவனித்தார்.

'அதுக்கென்ன பேஷாய் செய்துடலாம்' 'பின்னே? அதுக்குத்தான் நாங்க இருக்கோம்.'

என்றபடி அவளது வேலையில் மும்முரமானார்.

பல ஆயிரங்களைப் போட்டு கணக்கை ஆரம்பித்தவள்,

"இன்னொரு உதவி ஸார்' - என்றாள்.

"சொல்லுங்கோ - செஞ்சுடலாம்."



"எனக்கு ரெண்டு வயசுல ஒரு மாருதி கார் வேணும்..."

ஆரம்பித்தவளை இடை வெட்டினான் ஆனந்தன்.

"உன் வேலை ஆச்சல்லா? நீ காரிலே போய் உட்கார் - எனக்கு 10 நிமிஷ வேலை இருக்குது - வந்துடறேன்."

கார் சாவியை அவளிடம் நீட்டினான்.

ஒரு பெருமூச்சுடன் அவனைப் பார்த்தவள்.

"நன்றி ஸார் - வரேன்" என்று வங்கி மேலாளரிடம் விடைபெற்று காருக்குத் திரும்பினாள்.

அப்போதுதான் அந்த ஆசை எழுந்தது.

"அந்தப் பெட்டிக் கடையிலிருந்து ஒரு சோடா வாங்கிட்டு வர்ரியா?"

காரின் அருகே காவல் போல நின்றிருந்த வேலைக்கார சிறுவனை அனுப்பியவள் காரோட்டியின் இருக்கையில் அமர்ந்து காரை உசுப்பினாள்.

அது மெல்லிசாய் உறுமியது.

'லவ்லி என்ஜின்' பாராட்டியவள்,

'வா, ஒரு சுற்று அடிச்சுட்டு வரலாமா?' கேட்க, கார் கிளம்பியது! குதித்து

பத்தாம் நிமிடம் வங்கியிலிருந்து வந்த ஆனந்தன் காரைக் காணாது திகைத்தான்!

"டேய், காரை எங்கே?"

"அம்மா... ஓட்டிட்டுப் போனாக..."

கோபத்தில் சிவந்த சின்னவரின் முகத்தைக் கண்டவனுக்கு நடுங்கியது.

"ஐயா... சோடா..." நீட்டினான்.

"நீயே குடி."

உறுமலுடன் பெரிய எட்டுக்களை வைத்த எஜமானரைப் பார்த்தபடி நின்றான். அதற்குள் ஒரு சுற்று அடித்து வந்த 'க்வாலிஸ்' பயலைத் தாண்டி ஆனந்தனை ஒட்டி நின்றது.

ஆனந்தி மறு இருக்கைக்கு நகர, ஏறிய ஆனந்தனின் கோபத்தில் குலுங்கியபடி கார் மறுபடி சீறிக் கிளம்பியது.

பார்த்திருந்த வேலைக்கார பயலுக்கு நிஜமாகவே சோடா ரொம்பத் தேவைப்பட ஒரே மூச்சில் அதை குடித்துத் தீர்த்தான்!



# 7

ஊரின் புழுதி சாலைகளைக் கடக்கும் வரை ஆனந்தனும் ஆனந்தியும் பேசவில்லை. நடைபாதைக் கடைகள், வாகனங்கள் என்று சாலையும் சிக்கலாகவே இருந்தது.

''இந்த நெரிசல்ல லைசென்ஸ் இல்லாம நீ ஓட்டினது... பெரிய தப்பு...'' அவன் சாட, குற்ற உணர்வுடன் அடங்கி யிருந்தாள்.

வழக்கம்போல நிமிர்ந்து, இயல்பாய் பதிலளிக்க முடியாத சூழ்நிலை. ஏனெனில் இம்முறை அவள் செய்தது தப்புதான்.

ஆக தளைந்து போனாள்.

''ஸாரி அத்தான்... கார் ஓட்டறது எனக்கு இஷ்டம் - அதான்... ஆவலை அடக்க முடியாம காரை எடுத்துட்டேன்.''

''..............''



விலைப் பிடித்திருந்த அவன் விரல்களில் படு இறுக்கம்.

''ஸ்மூத் இன்ஜின் - பவர் ஸ்டீயரிங்னு நல்ல கார். இது...'' பாராட்டில் மனம் இளகுவானோ என்ற நப்பாசையில் பேசினாள்.

''இதைக் கொண்டு மோதியிருந்தா... இல்லை ஆளைத் தட்டியிருந்தா?''

''நான் திறமையாய் ஓட்டுவேன்...''

''அதைப் பிறர் உயிரைப் பணயம் வச்சு சோதிக்கக் கூடாது.''

இம்முறை மறுக்க மனதின்றி ஒப்புதலாய் தலையசைத்தாள்.

அதற்குள் ஊரை விட்டு வெளியேறி இருந்தனர் புழுதி அடங்கி பசுமை சூழ்ந்தது.

''பேங்க் மானேஜர்ட்ட ஏதோ பேசினீங்களே... விஷயம் முடிஞ்சதா?''

''ம்ம் - புது தோப்பு விலைக்கு வருது - அதுக்கான லோன் அப்ளை செய்தேன்... தோப்பு இந்தப் பக்கம்தான்... நம்ப நிலத்தை ஒட்டி இருக்குது - பத்து நிமிஷம் பார்த்துட்டு போலாமா?''

''நிச்சயமாய்.''

காரை மண்சாலையில் திருப்பிய ஆனந்தனின் பார்வை தூரத்தில் வந்த ஒரு இளைஞனிடம் படிந்தது - உதடு வெறுப்பாய் சுழித்தது.

குண்டும் குழியுமான சாலையில் குலுங்கிப் போன காரை ஒரு மர நிழலில் நிறுத்தினவன் ஒலிப்பானை அழுத்தினான்.

தோப்பிலிருந்து இருவர் ஓடி வந்தனர்.

ஒருவரிடம் வேலை சம்பந்தமாய் பேசியபடி நகர்ந்த ஆனந்தன் மற்ற பெரியவரை ஆனந்தியிடம் அனுப்பினான்.

கூப்பிடு தொலைவிலிருந்த சில மண் குடிசைகளி லிருந்து எட்டிப் பார்த்த சில குழந்தைகள் 'டுர்டுர்' என்று தங்கள் கற்பனை கார்களில் பறந்து வந்தனர். இரண்டிலிருந்து ஆறு வயது வரை இருந்த அத்தனைப் பிள்ளைகள் உடம்பிலும் பொட்டுத் துணியில்லை. பரட்டைத் தலைகள்.

சில தலைகளில் வாடிய பூச்சரம்.

எல்லா மூக்குகளிலும் சரமாய் சளி!

தன்னை மீறி முகம் சுளித்து விட்டாலும் அவள் மனம் கசிந்தது.

இந்த 10, 12 குழந்தைகளுக்குத் தர தன்னிடம் ஏதாகிலும் இருக்குமா எனத் தவித்தது.

கைவைத்த பனியனும் இடுப்பில் கட்டிய துண்டுமாய், அவளை நெருங்கிய பெரியவர்.

''இளநீ வெட்டித் தரட்டுமாங்கம்மா?'' கேட்டார் பணிவாய்.

''இல்ல... வேற ஏதாக்கம் இருக்குமா?''

''இது வெள்ளங்கோயிலு - இதத் தாண்டினா சுடுகாடு - ஆக டீக்கடைக் கூட கிடையாதேம்மா... பசிக்குதா?'' பெரியவர் பரிதவித்தார்.

''பரவால்ல - யாரிந்த பிள்ளைங்க?''

''இங்கக் கூலி வேலை செய்றதுகளோட பிள்ளைக. விவரம் வரவிட்டு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிருவாக... அங்க சாப்பாடு கிடைக்குமில்ல? அது மட்டுக்கும் இப்படி ஓடிகிட்டு திரியும்ங்க,''

''நம்ப தோட்டத்திலேயா வேலை பாக்கறாங்க?''

''சுத்து வட்டாரத்துல எங்கன வேலை இருக்குதோ அங்க போயிக்கறதுதாம்மா.''



''கூலியைக் கூட்டி தரலாமே?'' ஆனந்தி சொல்ல, வருத்தமாய் சிரித்தார்.

''வர்ரதை நிர்வாகஞ் செய்யவுந் தெரியணுமேம்மா. எல்லா பயலுவளும் குடிப்பானுங்க. வயசுப் பொண்ணுக சீட்டுல சேர்ந்து புடவ எடுத்து, தினம் அஞ்சு ரூவாக்கு பூ வாங்கி தோளு வரைக்கு தொங்க வுடும்ங்க. பிறவு புள்ளக் குட்டிங்க இப்படி அம்மணமாத் திரிய வேண்டியதுதான்.. ஆங்... பெரியம்மாளுக்குப் பிடிச்ச ரஸ்தாளி பழம் வந்துச்சு - இங்க ஊதப் போட்டு கனிய வச்சேன். காருல வச்சுறேம்மா - இப்பப் பசிக்கு நீங்க ரெண்டு சாப்பிட்டுக்கலாம்...''

''ம்ம்...''

பெரியவர் அகல, பிள்ளைகள் துணிவுடன் முன் னேறினர். அனைவர் விரல்களும் வாய்க்குள்தான்.

''ஐய... விரலை வாய்க்குள்ளயா வச்சுக்கறது?'' என்று பொய்கோபத்துடன் கேட்ட ஆனந்தியை முறைத்தன.

''நான் அப்படியா வச்சிருக்கேன்? வச்சா நல் லாருக்குமா?''

இவளும் அதே போல செய்ய, ஒரு கால் சிரிப்புடன் விரல்களைத் துப்பினர்.

''சமர்த்து - ஓடையிலே போய் கை கழுவிட்டு வாங்க - பழம் தரேன்.''

அவள் சொன்னதை கவனிக்காதது போல காரைத் தொட்டு தொட்டு ஆராய்ந்தனர். பொடிசுகள் சக்கர ஆராய்ச்சியோடு திருப்தியடைந்தன.

''உங்க அப்பா, அம்மா எங்க?''

''ம்ம்... தோத்தத்துக்கு...''

காலைல என்ன சாப்பிட்ட?''

''ம்ம்... இட்லி...''

''அம்மா செஞ்சாங்களா?''

''ல்ல... கடையில் வாங்கினேம்...''

பெரியவர் சொன்னது போல இதில் நிர்வாகக் கோளாறுதான் அதிகம். சிறு பழத்தாரை தூக்கி வந்த பெரியவரிடம் அதை வாங்கி காரின் பின்னால் வைத்தான்.

''உங்களைச் சின்னவர் கூப்பிட்டாப்பல கேட்டுச்சு.'' பொய் சொல்லி அவரை கிளப்பினான்.

''தோ போறேங்கம்மா...''

ஓடியவர் முதுகு மறைந்ததும் பூரித்த மஞ்சள் பழங்களைப் பிய்த்து ஆளுக்கு இரண்டாய் தந்தான்.

''வீட்டுக்குள்ளே போய் சாப்பிடுங்க...''

பொடிசுகள் காது கேளாதது போல கார் ஆராய்ச்சியைத் தொடர்ந்தன.

''சின்ன முதலாளி குச்சியோட வர்றார் - அடிப்பார்.'' - இப்போது மிரட்டினான்!

நண்டு சிண்டுகள் குடுகுடுவென ஓட, பெரிசுகள் அலட்டாமல் நடந்து குடிசைகளுக்குள் புகுந்து மறைந்தன.

மனபாரத்தையும் மீறி சிரித்தான்.

''ஸாரி - கொஞ்சம் தாமதமாயிடுச்சு...'' என்றபடி சற்று காரில் ஏறிக் கொண்டான் ஆனந்தன்.

''பரவாயில்லை. நல்ல குளுமையான இடம். நான் தாஜ் மஹால், அரண்மனைகள், சூரிய கோயில்னு பார்த்திருந்தாலும் நம்மூர் கிராமத்தை இப்பத்தான் சரியாய் பார்க்கிறேன்...''

''இங்குள்ள கும்பக்கரை அருவி ஓரளவு டூரிஸ்ட் ஸ்பாட்... ஒரு நாள் பிக்னிக் போல நீங்க பெண்களாய் போயிட்டு வரலாம்.''



''ஏன் அங்க ஆண்கள் வரக் கூடாதா?''

அவனையும் மீறி சிரித்தான். பளபளவென திரண்ட அவன் கன்னங்களை சீரான பல்வரிசையை வியந்து பார்த்தாள்.

''நீங்க அடிக்கடி சிரிக்கணும் அத்தான் - யு லுக் யங்.''

''இளமையாய் தெரியறேனா - நான் இளைஞன்தான்.''

''உம்'னு இருக்கறப்போ 40 வயசுக்காரராய் தெரியறீங்களே...''

''வெறுமே சிரிச்சு, 'யங் லுக்' கொடுத்திட்டிருந்தா நம்ம வேலைகளைப் பார்க்கறது யாரு?''

''சிரிச்சா வேலை நடக்காதா என்ன? இங்கிலாந்தில் வேலையில் சேருறவங்களுக்கு முதல் பாடமே - 'சிரிப்பு மாறக் கூடாது'ங்கறதுதான்.''

''அது 'ஷோ'வான வேலை - இது கடும் உழைப்பு.''

''பொன்னி உழைச்சாலும் நிறைய சிரிக்கறாளே...''

''பொம்பளை சிரிச்சா நல்லதில்லை - ஆபத்து.''

''ஆபத்து எதிராளிங்களுன்னு வேணா வச்சுக்கலாம்.''

மறுப்பாய் தலையசைத்தான்.

தொடர்ந்து பேசாமல் பிரதான சாலையை எட்டிய அவன் விழிகள் சுற்றிலும் அலசின... பின் வெறுப்பால் சுருங்கின.

அந்த திசையில் இவளும் பார்த்தாள்.

முன்பு கவனித்த அதே சைக்கிள் பேர்வழி வெள்ளை வேட்டி ஜிப்பாவில் மரநிழலில் காத்து நின்றான்.

கார் அலட்சியமாய் வேகமெடுத்து விரைந்தது.

''கவிதையை குழப்பினது போதாமல் இப்ப குடும்பத்தைக் குழப்பறான் - முட்டாள்.''

ஆனந்தன் முணங்க இவளுக்கு நின்றது யார் என்பது பிடிபட்டது - இதுதான் கவிருன் - இளமுருகு...!

"யாரை முட்டாள்ங்கறீங்க..?" மெள்ள வினவினான்.

"இந்த உலகத்துல பணம் சம்பாதிக்கத் தெரியாதவன் எல்லாரையும்தான்..."

"இங்கே கல்யாணம் கூட சம்பாதிக்கறதுக்கான ஒரு வழிதான் போல...?" அறைப்பட்டாற் போல விதிர்த்துத் திரும்பினான்.

இவள் எல்லாம் அறிந்தவளா...இல்லை தெரிந்தது போல உளறுபவளா? தன் கருத்தை சுருக்கமாய் சொன்னான்.

"செல்வம் செல்வத்தோடு சேரணும் - அதுதான் இயல்பு..."

"நாம ரெண்டு பேருமே பணக்காரங்கதான் அத்தான் - ஆனா நீங்க என்னைக் கல்யாணம் செய்துகிட்டா நாம் சந்தோஷமாயிருக்க முடியுமா? ஆக செல்வத்தையும் மீறி சில விஷயங்கள் இருக்கும்னு தோணுது..."

இது அடுத்த அடி!

இருவரும் சற்று நேரம் பேசவில்லை.

தன் இஷ்டத்திற்கு தங்கைக்கு மாப்பிள்ளைத் தேடும் அனந்தன் ஏன் தன் குடும்பத்தினரின் சம்மதம் இல்லாமல் சுதாங்கினியைத் தனக்காய் முடிவு செய்தான்?

வெளிநாட்டில் வளர்ந்த அவள் வெளிப்படையாகவே அந்த சந்தேகத்தையும் அவனிடம் கேட்டு விட்டாள்.

"உங்க மனைவியை அத்தைத் தேர்ந்தெடுத்ததாய் தோணலை... நீங்க தேர்ந்தெடுத்த சுதாவை விட்ல மற்ற யாருக்கும் பிடிச்சதாயும் தெரியலை. கூட்டுக் குடும்பத்திலே எல்லார் விருப்பமும் முக்கியமில்லையா? கல்யாணத்தை வியாபாரமாய் மட்டும் நினைக்கறீங்க... அது தப்புன்னு படலையா?"



இத்தனை நேர்மையான பேச்சை அவன் இதற்கு முன் சந்தித்ததில்லை. திகைப்புடன் தன் விருந்தாளியை வெறித்தான்.

பண்ணையிலும் ஆனந்தனுக்கு இதே சிந்தனைதான். தன் குடும்பத்தினருடன் இது வரை அனைத்தையும் நேர்க்கமாய், தீர பேசாதது தப்போ என்று முதன் முறையாகத் தோன்றியது.

சுதாங்கினியை மருமகளாய் ஏற்றுக் கொள்வதில் தன் குடும்பத்திற்கு சம்மதமில்லை என்பதை ஓரளவு உணர்ந்திருந்தாலும் முழுக்க ஒத்துக் கொள்வதைத் தவிர்த்தான் - ஒதுக்கினான்.

ஆனால் அந்தப் பரங்கிக் காயை ஓங்கிப் போட்டு உடைத்து விட்டாளே இப்பெண்!

"நினைச்சதை நினைச்ச நேரத்தில் பேசறதை நிறுத்திடு ஆனந்தி. அது குடும்பத்தைக்குழப்பமாக்கும்." என்று உடனே அவளை எச்சரித்திருந்தாலும் மனம் அலைபாய்ந்தது. காசுக்காகத்தான் சுதாங்கினியை திருமணம் செய்கிறாய் என்று நேரே குற்றம் சாட்டப்பட்டதில் நிலை குலைந்திருந்தான்.

கல்யாணம் வியாபாரம் அல்லதான்.

அதில் பரஸ்பர விருப்பம் அவசியம் இருக்க வேணுமோ?

அதைத்தான் 'காதல்' என்கிறார்களா?

தனக்குள் அந்தக் கிளுகிளுப்பில்லையோ? வீட்டிலும் கல்யாணக் களையோ குதூகலமோ இல்லை. பக்குவமாய் வெந்த சாதம் என்று அவன் மூடி வைத்திருந்ததை ஆனந்தி திறந்து கிளறி விட்டாள்.

அது ஆவி பொங்க அனலடித்தது...

''என்ன, லார் தூக்கத்துல நடக்கற மாதிரி வர்ரீங்க...?''

உற்சாகமாய் சிண்டிய குரல் ஆனந்தனை பூமிக்கு இறக்கியது.

''அடடே.... பாலா... என்ன திடீர்னு?''

''மறந்தாச்சா? நூறு தென்னங்கன்னுக்கு சொல்லி வச்சிருந்தேனேப்பா...''

''ஓ... மறந்துதான் போச்சு... ருமடன் மாறிடுச்சு... அதான்...''

''ஆளும் மாறித்தான் தெரியறே...'' நமுட்டாய் சிரித்தான் பாலரமணி ஆனந்தனின் கல்லூரி சிநேகிதன்.

''என்ன மாற்றம்?''

''வழக்கமாய் ஒரு சிங்க நடையிலே வருவே. இப்ப மேகத்தைக் காலால துழாவறாப்பல ஒரு ஸ்டைல்... தான் எதிரே நிக்கறது கூட தெரியாதளவு யோசனை... ம்ம்?''

''காலை வராம... வாப்பா - சாப்பிடலாம்.''

ஆனந்திக்கு டிபன் பரிமாறிக் கொண்டிருந்த தனம் வந்த இரு இளைஞர்களையும் உட்கார்த்தி பரிமாறினாள்.

அறிமுகப் படுத்தப்பட்ட ஆனந்தியை புன்னகையுடன் விசாரித்தான் பாலா -

''என்ன, எப்படியிருக்குது நம்மூரு?''

''முழுக்க பார்த்த பிறகுதான் அபிப்ராயம் சொல்ல முடியும்?''

வந்த வித்தியாசமான பதிலில் சற்று தடுமாறினான்.

''பார்த்தவரை அத்தை குடும்பம் அருமையானது. உங்க பழக்க வழக்கம், பேச்சுக்கு, நான் இன்னும் பழக்குவப்படணும்னு தோணுது...''

ஓரக்கண்ணால் ஆனந்தனைப் பார்த்தபடி சொன்னாள்.



''ஆமாங்க... இங்க கொஞ்சம் மூடு மந்திரமாத்தான் பேசுவோம்.''

''ஆனா உணர்ச்சிகளை முழுக்க மறைக்க முடியற தில்லையே... அப்பட்டமாய் உங்க முகங்கள்ல தெரியுதே...'' நகைத்தாள்.

''அம்மா ஸைக்காலஜி மாணவியா?''

''ம்ம்... சோழவந்தான்ல நீங்க பெரிய சாதனை யாளராமே? பாராட்டுக்கள்.'' ஆனந்தன் சட்டென நிமிர்ந் தான்.

''அதாரு சொன்னா?''

''யாரோ... அமுது ஏன் அங்க நிக்கறே...? ரவா இட்லி பிரமாதம் - வாயேன்.'' பேச்சை மாற்ற வேண்டிய நிர்பந்தத்தில் அமுதுவை அழைத்தான்.

அகிலா மூலம்தான் பாலா பற்றி தெரிந்து கொண்டதை வெளியே காட்ட முடியாதே.''

''யாரு சொன்னா?'' ஆனந்தன் விடவில்லை.

''பொன்னி...? அவதான்னு நினைக்கறேன்.''

பாலாவிற்கு ஒரு மரியாதையான புன்னகையைத் தந்து விட்டு அமர்ந்து சாப்பிடலானாள் அமுதினி.

''பொன்னி பேச்சு வரவும் அம்மா சொல்லிவிட்ட நினைப்பு வருது''எங்க பண்ணையில வேலை பாக்கற குருசாமிக்கு அவளைக் கேட்கச் சொன்னாங்க.''

தனம்மாளிடம் கோரிக்கை வைத்தான் பாலரமணி.

''யாரு? போனதரம் உங்கக் கூட வந்த பயலா? வாட்ட சாட்டமாத்தான் இருந்தான்.''

''குணமும் பழுதில்லம்மா - உழைப்பாளி . சொந்தமாய் ரெண்டு ஏக்கர் கூட வாங்கிட்டான். பாதி நேரந்தான் நம்ப நிலத்துல வேலை.''

''எல்லாம் அம்சமாத்தானிருக்குது - அவ அதான் பொன்னியுடைய அப்பனை வரச்சொல்லி பேசறேன்.''

நீங்க சின்னா முடிஞ்சிடும் - அதுக்கு மேல என்ன?''

இந்த உரையாடலில் யாரும் எதிர்பாராத நேரம் அமுதினி குறுக்கிட்டாள்.

''ஆமா வேலைக்காரங்க கல்யாணத்துக்கு மட்டும்தான் இங்க அம்மாவைக் கேட்கணும்.''

ஆனந்தியே அதிர்ந்து போனாள்.

சின்ன அகிலாவின் தயவில் குடும்ப நிலவரம் புரிந்திருந்ததால் அவளுக்கு அமுதுவின் நக்கல் புரிந்தது.

ஆனந்தன் தன்னுடைய, தங்கையினுடைய திருமணத்தை தாயை ஆலோசிக்காமல் தன்னிஷ்டத்திற்கு முடிவு செய்ததைக் குத்திக் காட்டுகிறாள்!

பாலாதான், ஆனந்தன் தன் தங்கைக்குப் பார்த்திருந்த மாப்பிள்ளை என்பதும் தெரிந்ததால் சற்று சங்கடமானது சூழ்நிலை.

அதிலும் அமுதுக்கு திடீர் என்று எப்படி இந்தத் துணிச்சல்?

ஆனந்தனுக்குள்ளும் இதே கேள்வி எழுந்தது போலும். 'நீ தான் காரணம்' என்பது போல ஆனந்தியை வெறித்தான்.



## 8

ஜன்னல் வழியே இலக்கின்றி பார்த்திருந்தாள் ஆனந்தி. கொட்டத்தில் பசுக்கள் வாலால் ஈயோட்டியபடி அசை போட்டிருந்தன. இவள் சிந்தனையும் அசை போட்டது.



தான் இங்கு வந்தது தவறோ?

சுமுகமாய் சுழன்ட ஒரு குடும்பச் சக்கரத்தைத் தடம் புரட்டி விட்டோமோ?

''ஆனந்தி...'' அவள் சிந்தனைக்குத் தடை போட்டது அந்த அழைப்பு. அவசரமாய் திரும்பியவள் அழைத்தாள்.

''வா... வா... அமுது.''

அறைக்குள் வந்தவள் ஆதரவுடன் இவள் தோளில் கை வைத்தாள்.

''ஸாரி ஆனந்தி. நான் துடுக்காய் பேசினதும் அண்ணன் உன்னை முறைச்சார் எனக்கு அது சங்கடமாய் போச்சு...''

''உன்னை எதும் திட்டினாரா?''

''ஆச்சரியமாய் இல்லை - ஆனா உன்னைக் குற்றம் சாட்டறாப்பல பார்த்தது தப்பு. உனக்கு இங்கே என்ன நடக்குதுன்னே தெரியாது...''

''எது தெரியாது?''

''வந்து... பாலரமணி... வந்து அண்ணன்...''

''உனக்காக பார்த்திருக்கிற மாப்பிள்ளை பாலா ஆனா உனக்கு அவரைப் பிடிக்கலை அதானே?''

''உனக்கெப்படித் தெரியும்? யார் சொன்னா? பிடிக்கலைன்னு இல்லை பாலா நல்லவர் ஆனா...''

அமுதுவின் முகம் சிவந்தது.

''ஆனா இளமுருகுவை அவர் கவிதையை உனக்கு அதிகம் பிடிச்சிருக்கு அப்படித்தானா?''

இப்போது ஆச்சரியத்தை மிஞ்சி அச்சம் தெரிந்தது அமுதினி முகத்தில் ...

''இதெல்லாம் யார் சொன்னது... அம்மாவா?'' மெள்ள கேட்டாள்.

''விஷயம் எப்படியோ எங்காதுக்கும் வந்தது... நீ கவிஞரை நேசிக்கிறயா அமுது -அதாவது அவரைத்தான் கல்யாணம் செய்துக்கணுங்கற அளவு?''

ஜன்னல் கம்பிகளைப் பற்றிய அமுது வெளியே பார்த்தாள் - அவள் விழிகளில் நீர் தேங்கியது.

''தெ... தெரியலையே. அவர் கவிதை, புகழ் மேல ஒரு மயக்கம் ஏற்பட்டதுதான். ஆனா அவரை... அவரிட்ட நான் நாலு வார்த்தை நின்னு பேசினதில்லை. அதாவது அவர் எப்படிப்பட்டவர்னு தெரியாது...''

''நல்லது தெளிவாய் யோசிக்கறே. அப்ப ஏன் உன் அண்ணன் மேல கோவம்?'' மெள்ள திரும்பி இவளைப் பார்த்த அமுது புன்னகைத்தாள்.

''எல்லாம் தெரிஞ்சுதான் வச்சிருக்கறே-ம்ம்? என் விருப்பம் அறியாமல் அண்ணன் முடிவெடுத்ததுதான் பிடிக்கலை....''

''இளமுருகு பற்றி சொன்னியா?''

''அம்மாட்ட கோடி காட்ட, அம்மா, அண்ணன்ட்ட ஏதோ சொல்லியிருக்கணும் - ஆனா அண்ணன் ஒரேயடியாய் குதிச்சு பாலாவைக் கொண்டு வந்து மாப்பிள்ளைன்னு நிறுத்த எனக்குள்ளே ச.கோ.... எரிச்சல்.''

''ஆக உனக்கே இளமுருகு மேலிருக்கறது காதல்ங்கற நிச்சயமில்லை.''

''பெரியவங்க தேடி, அமைச்சுத் தர வரன், வாழ்க்கை நல்லபடி இருக்கும்னும் தோணுது...''

''குழப்பம்தான் - எல்லாத்தையும் சொல்லி - உங் அண்ணாட்ட 2, 3 மாச அவகாசம் கேளேன் - அதுவரைப் றந்த வீட்டு அன்பை நிம்மதியாய் அனுபவி எதுக்கிந்த றைப்பு...?''

''அண்ணாட்ட பேச முடியுமான்னு தெரியலை... ஆனா வி முறைக்க மாட்டேன்.''



''வெள்ளிரிக்கா மாதிரி குளுகுளுன்னு பாரு - பேக...''

''சரி - இப்ப என் அறைக்கு வா.''

''எதுக்கு?''

''அண்ணனோட பேங்க்குக்கு போயிருந்த சமயம் இங்கேக் கல்யாணப் பத்திரிகை வைக்க நம்ப உறவுக்காரங்க வந்திருந்தாங்க...''

''ம்ம்''

''மதுரையில மில் ஓனர்ஸ்.''

''பேரென்ன?''

அமுது சொன்னாள்.

''தெரியுமே - இலண்டன்ல எங்களோட 4 நாள் தங்கி யிருந்தாங்க...''

''ஓஹோ... நான் அவங்களோட உட்கார்ந்து பேச முடியலை - பலகாரம் காபி கலக்கறதுன்னு இருந்தேன். அவங்க வீட்ல கல்யாணம் முடிவாயிருச்சு போல. ஆடி மாசத்துக்குள்ளே கல்யாணத்தை வச்சிடணும்னு நாள் குறிச்சு, புயலாட்டம் வேண்டப்பட்ட வீடுகளுக்கு பத்திரிகை வைக்கறாங்க...''

''பாவம் - ஏன் அலையணும் பத்திரிகையை தபால்ல அனுப்பினால்..?''

''சண்டைதான் வரும்!''

கண்களை உருட்டினாள் ஆனந்தி.

''ஓஹோ அப்படி வேறயா - எப்ப கல்யாணம்?''

''அடுத்த வாரம் - நாம போகணும் - உனக்கான சேலை, நகையெல்லாம் பார்த்து எடுத்துக்கோ... அதான் விஷயம்.''

''அப்பாட்டேருந்து அதிகாலமே போன் வந்தது அமுது. பெரிய பெட்டி நிறைய சேலை, சில சின்ன நகைங்கன்னு அப்பா அனுப்பிட்டாங்களாம் - நம்ப கார்கோ ஏஜெண்ட் இந்தியா வர்றதால அவர் மூலம் வருது''

''அப்ப சரி... வந்து அனந்தி.''

கைகளைக் கட்டி தானும் அமுதுவையே குறுகுறு வெனப் பார்த்தாள் ஆனந்தி.

''பரவால்ல சொல்லு.''

''உங்கிட்ட பேசறது... மனசுக்கு ஆசுவாசமாய் இருக்குது. நினைப்பை நீ கலபமாய் வெளியே சொல்றதைப் பார்த்துதான் எனக்கும் துணிவு வந்திருக்கனும்...''

''குடும்பத்துக்குள்ளே பேசறது தப்பில்லைதான்... ஆனா பாலா ஸார் எதிரே நீ அப்படி ஒரு குண்டைப் போட்டது இசகு பிசகாயிடுச்சு...''

''நிஜந்தான் - ஆனா இப்ப மனப்புழுக்கம் குறைஞ் சிடுச்சு... அண்ணன் மேல கூட கோபமில்லை...''

''கேட்க சந்தோஷமாயிருக்கு...''

நிஜமாய் மகிழ்ந்து போனாள் புதியவள். இருவரும் ஒருவர் கைகளை மற்றவர் பற்றி சிநேகத்துடன் சிரித்தனர்.

''யம்மா...'' வெளியேயிருந்து குரல் வந்தது.

''யாரு பொன்னியா? உள்ள வா.'' எட்டிப் பார்த்தவள் ஆமை போல மறுபடி தலையை இழுத்துக் கொண்டாள்.

''என்ன பதுங்கறே?''

''இல்லம்மா... நா அப்புறமாட்டு வரேன்.''

''வாங்கறேன்ல?''

''உன்னைத் தனியாப் பார்க்கனும் போல அமுது நா இருக்கறதால பொன்னி கூச்சப்படறா.''

''அப்படியா? ஆனந்தி நம்ப வீட்டுப் பொண்ணு. அவளை கோலம் போட்டு அசத்தலா வரவேற்ற நீ பதுங்கலாமா?''

''இல்ல வந்து பெரியம்மாட்ட ஒரு விஷயத்த உங்க மூலமாச் சொல்லணும்னுதான்.'' பின் கொசுவம் வைத்த சேலைக் கட்டிய சிறு பொம்மை போல வந்து அறைக்குள்



நின்ற பொன்னி கைகளை பிசைந்தாள். நெற்றி வியர்த் திருந்தது.

''என்ன சொல்லனும் அம்மாட்ட...?''

''எனக்கு வெளியில மாப்பிள பாக்க வேண்டாம்னு.''

இரு பெண்களும் சற்று வியப்புடன் பொன்னியைப் பார்த்தனர்.

''ஓ... பாலா ஸார் உனக்கான மாப்பிள்ளைப் பற்றிப் பேசினதை நீ கேட்டியாக்கும்?''

''க்கும்.''

''உனக்கு அந்த மாப்பிள்ளையைப் பிடிக்கலையா?''

''அதெல்லாம் யோசிச்சதில்லம்மா. நம்ப வூட்ல பால் கறக்கல ரங்கனை எனக்கு ஒத்து வரும்னு தோணுச்சு.''

''அட.... என்ன காதலா?''

''அந்தக் கஸ்டமெல்லாம் படலீங்கம்மா. எனக்கும் அவருக்கும் சரிப்படும்னு ஒரு நினைப்பு. வீட்ல சொன்னேன். சரின்னுட்டாங்க.''

''பாத்தியா ஆனந்தி - இங்க இத்தனை நடந்திருக்குது - இவளை விவரமாய் கேட்காம அங்கே முடிவெடுத் திட்டிருக்காங்க.''

''இதை உடனே நம்ப அம்மாட்டயும் சொல்லி யிருக்கலாமே பொன்னி?'' ஆனந்தி கேட்டாள்.

''எனக்கென்னம்மா அவசரம் ? முதல்ல நம்ப சின்னம்மா கல்யாணம் நடக்கனும் - அதுல நாங்க ஓடியாடி வேலை செய்யனும்... பிறகுதான்... மித்த விஷயத்தை அம்மா காதுல போட்டுரணும் - அதான் ... வரட்டா? வேலை கிடக்குது.''

''விசுக் விசுக்'' என நடந்து போனவளை முறுவலுடன் பார்த்திருந்தனர். ''எளியவங்க வாழ்க்கையை எளிமையாவே அமைச்சுக்கறாங்க... நாமதான்..''

''நாமும் இனிமையாய் அமைச்சுடலாம் அமுது.'' வரவிருப்பது துன்பங்களும்தான் என்பது அறியாமல் இருவரும் இன்பமாய் புன்னகைத்தனர்.

இளைய மகள் முகத்தை அப்படியும் இப்படியுமாய் பார்த்த தனம்மாள் திருஷ்டி கழித்தாள்.

''எங்கண்ணேப் பட்டிடும் போலயே?''

ஆனால் அகிலா முகத்தில் பெருமிதமில்லை.

ஒரு வாரம் நிழலில், ஊட்டமாய் சாப்பிட்டவளின் அழகு மெருகிட்டிருந்தது. மஞ்சள் தேய்த்த சருமம் பொன்னாய் மினுங்கியது.

''அம்மா... இப்ப நா இந்த நகையெல்லாம் கழட்டிடலாம்லா? இந்த சட்டையும் வேணாம்மா.''

''உனக்குன்னே ஆசாரிட்ட சொல்லி செஞ்சதுடி. இந்த ஜிமிக்கியும் மாட்டலும் உம்முகத்துக்கு என்னமா பொருந்துது?''

''ஆனா ஸ்கூலுக்கு இப்படியேப் போக வெக்கமா இருக்கும்மா... அப்புறம் எல்லாரும்... கேப்பாங்க.''

''என்னன்னு?''

''சமைஞ்சிட்டியான்னு.''

''ஆமான்னு.''

''ச்ச... அத எம்மா வெளியே சொல்லிக்கணும்?''

''சந்தோஷ சமாச்சாரந்தானே?''

''நமக்குள்ள சந்தோஷப்பட்டுக்குவமே? நல்லவேளை ...ண்ணன் விசேஷம்லாம் வேண்டாம்னாங்க... அப்புறம் ...த்த பஃப் கை ரவிக்கை யெல்லாம் இப்ப யாரும் ...டறதில்ல.''

''இல்லாததுக பொட்டையா வரும் நீ சிங்காரமாத்தான் ...கணும். அதிலும் விசேஷத்துக்குப் பிறவு ஜிம்பிளா



போக வேண்டாம்னு - நானே தையக்காரன்ட்ட சொல்லி இந்த மாடல்ல தைக்க வச்சேன்.''

''அமுதுக்காவை இப்படியா ஸ்கூலுக்கு அனுப் பனீங்க?''

''அவ எங்க எங்கைக்குள்ளார வளந்தா? அவளை ஊட்டி ஆஸ்ட்டல்ல சேத்து படிக்க வச்சான் உங்கண்ணன். உங்கப்பா இறந்தப்ப உனக்கு மூணே வயசு.

''இவளுக்காகத்தான் என் உயிரப் பிடிச்சிட்டு இருக்கேன். இந்தக் குட்டிய என்னைய விட்டுப் பிரிச் சுடாதீங்கன்னு' நா அழவும் உங்க பெரியப்பா ஏதுஞ் சொல்லல... அப்ப அவரும் இருந்தாரு.''

''சும்மாவே ஒரு வார லீவுக்குப் பிறகு தாவணி போட்டுட்டுப் போனா ஸ்கூல்ல எல்லாரும் கேலி பண்ணுவாங்க... இப்படிப் போனா...''

''அவனுங்களை எங்கிட்ட வரச் சொல்லு.''

''அதெல்லாம் யாரும் வரமாட்டாங்க. இப்படிப் பார்த்தா ஆம்பள வாத்தியாருங்கக்கூட ஒரு மாதிரி சிரிப்பாங்க...''

''இதான் இப்படி பட்டிக்காட்டு ஸ்கூல்ல படிச்சால் வர்ர வினை - தராதரந் தெரியாததுங்க.''

''நாமதான் அதுக்குத் தக்கன நடந்துக்கணும்மா...''

''சரிதான்டீ பெரிய மனுஷி.''

தனம் பூரித்து மகளைக் கட்டி உச்சி முகர்ந்தாள். எப்படி பேசுற... ஆனா ஒரு வாரத்துக்கு இப்படிப் போவியாம் - பெத்தவ என் ஆசைக்கோசரம் - பிறகு சாதாரணமான ரவிக்கை - சரியா?''

''ரவிக்கை இத்தனை நீளமாய் இருக்கறது பிடிக்கலைம்மா - பாவாடைக்குள்ள செருகிக்க வேண்டி யிருக்குது.''

''நான் சமைஞ்சதும் இப்படித்தான் போட்டிருந்தேன்.''

''போட்டு விட்ல இருந்திருப்பீங்க - ஸ்கூலுக்கா போனீங்க?''

''அது வாஸ்தவந்தான் - ஒரே வாரம்மா கண்ணு எனக்காக...''

''சரி.''

அரைமனதாய் சம்மதித்தாள் அகிலா.

சின்ன ஊரில் பெருந் தனக்காரர் வீட்டுப் பெண்ணா யிருப்பதில் இது ஒரு அசௌகர்யம்.

''அவளுக்குத்தான் இருக்காம் - பீத்திக்கறா.''

''ஏன்மா இத்தன சலங்கையும் குஞ்சமும் கட்டாட்டி உங்க மாட்டு வண்டி நவராதாக்கும்?''

''அந்தச் சலங்கச் சத்தத்தான் பெட்ரோலு போல. ஒரு ாளு எங்களைப் போல நடந்துதான் வாவேன்.''

''வேணாம் - ஜாஸ்தித் தொலைவு - சாப்பாட்டு க்காவது எடுத்துட்டு வாவேன்.''

''அதான் அடுக்கு மாடி கணக்கா மதியம் காரியரு ந்துல்ல அகிலாவுக்கு? அதுல விதவிதமா வர்ரத நமக்கும் ா - ஆனா நாமதான் அது நமக்கு ஜீரணிக்குமோ ல்லையோன்னு அஞ்சி சாப்பிடறதில்ல...''

இப்படி ஆளாளுக்கு இகழ்ச்சியாகவோ, வஞ்சப் ச்சியாகவோ பேசுவார்கள்.


மனம் விட்டு பேச, சிரிக்க, அகிலாவிற்குப் பள்ளியில் கிதி அமையாமற் போனது. பேச்சு அத்தனையையும் கோணாமல் கேட்டுக் கொள்ள வேணும். எல்லாம் கிற மாடுகள்.

இப்போது இத்தனை அலங்காரமாய் போனால் றக் குச்சி கொண்டு குத்தினாற் போல ஆகிப் போகும். ஆனால் அம்மாவின் ஆசையைக் கெடுப்பானேன் என துணிந்து விட்டாள்.



வழக்கம் போல பள்ளிக்குச் சலங்கை வண்டியில் பழங்காலத்து பஃப் சட்டை, தரையில் புரளும் பாவாடை, பூவேலை செய்த தாவணி, பின்னலின் மேழ மணிக் குஞ்சம், உச்சியில் ஐந்து முழப் பூ, மேனியில் தகதக வென மின்னும் நகைகளுடன் அகிலா போய் இறங்க, பள்ளிக்கூடமே வாய் பிளந்தது.

பிறகு வாய் வலிக்க பேச ஆரம்பித்தது...!



# 9

மதிய தூக்கம் வெகு சுகமான அனுபவம். இந்தியா வந்த பத்து நாட்களில் அச்சகத்திற்கு அடிமையாகி இருந்தாள் ஆனந்தி.

ஆரம்பத்தில் உறங்கி எழுந்ததும் தலை த[illegible]ந்தது போலிருந்தது. ஆனால் வெள்ளி டபராவில் ஆவி பறக்க வரும் காபியை மாலை வெயிலில் காய்ந்தபடி உறிஞ்ச உறிஞ்ச உடம்பு சுறுசுறுப்பாகி விடும்.

'சர்சர்...' பால் பீய்ச்சப்படும் ஒலியில் அவள் மதிய உறக்கம் கலைந்தது.

இரண்டு தரம் புரண்டவள் எழுந்து ஜன்னல் பக்கம் போனாள். குத்துகாலிட்டிருந்த ரங்கனது தொடைகளுக் கிடை இருந்த பாத்திரத்தில் பால் உற்சாகமாய் பாய்ந்து நுரைத்தது.

இதுவே தனக்கு பள்ளி எழுச்சி போலாகி விட்டதை நினைக்க சிரிப்பு வந்தது. கிராமத்திற்கே உரிய இந்த ஒலிகள், அமைதி, இனிமைக்காக இங்கிலாந்து போன பின்பு தான் ஏங்கப் போவது புரிந்தது.

வந்த காபியை ருசித்து பருகினாள்.

மின் பார்க்குலேட்டரில் தயாராகும் பாலத்தில் இச்சுவை, மணம் எல்லாம் வராது. இரண்டாம் மாட்டையும் கறந்து முடித்த ரங்கன் கன்றுகளை அவிழ்த்துவிட அவை துள்ளிக் குதித்தன.

அவற்றைப் போய் முகர்ந்து தடவி விடும் ஆர்வத்தில் படியிறங்கினாள்.

கொல்லைப்புறக் காற்று குளுமையாய் வீசியது.

வகைக்கொன்றாய் செழித்து நின்ற மரங்கள் வெயிலை ரட்டியடித்தன.

காற்றில் பாடுகளின் வாசனைக் கலந்திருந்தது. மியமாய்.

பால் மணத்த கன்றுகளைக் கொஞ்சியபின் காலார ந்தவளை அக்காட்சி மென்னியைப் பிடித்து நிறுத்தியது.

வைக்கோல் போருக்குப் பின்னே நிற்பது யார்?

ஊன்றிப் பார்க்க ஆள் யாரென்பது புரிந்தது.

அவனை இங்கு எதிர் பார்க்கவில்லை.

இது அவன் வீடுதான் என்றாலும் வைக்கோல் போரின் னே பதுங்கியபடி நிற்பானேன்?

நேரே போய் பேச்சு கொடுத்து.

'என்ன? இங்கே? ஏன்?' என்று கேட்டுவிடும் ரகம் ி. வெளிநாட்டில் ஒருவர் சமாச்சாரத்தில் மற்றவர் நீட்ட முடியாது. ஆனால் அப்பா அவளை அப்படி வில்லை.

ன்னடீ ராஜாத்தி - முகம் வாடியிருக்குது?'

ாட்டு தான் இளம்புது - என்ன குஷி?' என போது கேட்டு, மகள் சொல்வதைக் காது கொடுத்து ரகம் அவர்.

னால் தாயில்லாத ஏக்கத்தை அதிகம் உணர்ந்த வள். ஆக மெள்ள அவனை நெருங்கினாள்.



பாக்கெட்டிலிருந்து ஒரு தாளை எடுத்துப் பார்த்தவன் எக்குறைய நெற்றியில் அறைந்து கொண்டான்.

''கடவுளே... இப்ப என்ன பண்ணப் போறேன்...'' பய முணங்கலுடன் அப்படியே முகத்தைத் துடைத்தான்.

அழுகிறானா என்ன?

ஆனந்திக்குள் படபடத்தது.

ஒரு வாலிபனை அரற்ற, அழ செய்யக்கூடியது காதல்தானே?

இப்படி நிலைகுலைந்து போயிருப்பவன் முன் போய் நின்று மேலும் அதிர்ச்சி தர விரும்பவில்லை அவள்.

சத்தம் போடாமல் நழுவுவதுதான் சரி என்று விலகினாள். ஆனாலும் கடைசியாய் ஒரு முயற்சி என்று நெருங்கி, எம்பி அவன் கையில் இருந்த காகிதத்தை உற்று பார்த்தாள்.

அதில் எழுத்தை விட எண்கள் அதிகமிருந்தன.

ஏதோ பில்...தொலைபேசி பில்லோ?

ஆகக் காதல் கத்திரிக்காய் சமாச்சாரமில்லை. ஆனால் தொலைபேசி பில்லைப் பார்த்து ஆகாஷ் இப்படி அழுது புலம்பத் தேவை என்ன?

யோசனையுடன் நழுவினாள்.

வீட்டினுள் அகப்பட்ட பெரியதாயிடம் கேட்டாள்.

''அமுது எங்கே?''

''சமையல்ல இருக்காங்கம்மா - புதுசா டிபன் அயிட்டம் தயார் பண்ணுறாங்க. உருளைக்கிழங்கு விரலு விரலா அரிஞ்சு மசாலிட்ட மாவுல முக்கி வறுக்கறாங்க - இனிப்புக்கு அன்னாசிப்பழ அல்வா.''

''ம்ம். சுடச்சுட சாப்பிடணும்'' புன்னகைக்க முயன்றாள் ஆனந்தி.

"சாப்பிடுங்கம்மா. நீங்க வந்த பிறவுதான் அமுதும்மா முகம் பழையபடி மலர்ந்திருக்குது. இப்படி சமையல்ல அவங்க கரண்டியப் பிடிக்க கொள்ளை நாளாச்சுதே. நல்ல கைமணம் உண்டு... தாளிச்சு இறக்கின காய்கூட அப்படி ருசிக்கும். அத விட்டுட்டு அறையிலேயே முடங்கிக் கிடந்தாங்களே... உங்களோட பேசி சிரிக்க இருக்கறதுல எங்களுக்கும் மனதிருப்திம்மா..."

இயந்திரமாய் புன்னகைத்தாள் ஆனந்தி. ஆனால் இதென்ன ஒரு பக்க பாரம் இறங்க மற்றொரு முனைத் தூக்கிக் கொள்வது போல அமுதினி சமாதானமாகி சகஜமாய் புழங்க அங்கே ஆகாஷ் குமுறுகிறான்!

அவன் துன்பம் என்ன?

ஆனால் சமையலறையில் நுழைந்தவளுக்கு குழப்பம் ஒதுங்கியது.

அங்கிருந்த உற்சாகச் சூழலே காரணம். ஏதோ பண்டிகை சமயம் போல வாசனையும் வார்த்தைகளுமாய் அமளிப்பட்டது அடுக்களை.

உண்மையிலேயே அமுதுவின் கைப்பக்குவம் வையாக இருந்தது.

ருசித்து சாப்பிட்டாள்.

அமுதினி என் எனும் முன்னே எண்ணையாகி நின்றனர் யாட்கள். இத்தகு வாழ்விற்குப் பழகிய பெண் ஒரு ாரண கவிஞன் வீட்டில் குடித்தனம் நடத்த முடியுமா? முருகிற்கு நிலையான சம்பாத்தியம் தரும் வேலையோ வது சொத்தோ உண்டா?

அமுதுவுக்குள்ளும் இத்தகு சந்தேகங்கள் அவ்வப் எழுந்திருக்கும் என்பதை யூகிக்க முடிந்தது.

பிறந்ததிலிருந்து பழகிய வாழ்க்கை முறையை யே புரட்டிப் போடுவது சிரமம்.



ஏழ்மையிலிருந்து சுபிட்சத்திற்குப் போவது சந்தோஷம்... ஆனால் நிலை இறங்கினால்? ஒருவருக்கொருவர் பழகி, கருத்து ஒருமித்தவர்களால் அம்மாற்றத்தை ஏற்க முடியும்.

ஆனால் ஒரு சில பார்வைகளை மட்டுமே பரிமாறிவிட்டு கிளர்ச்சி அடைந்தவர்களால் தாக்கு பிடிக்க முடியாது.

அமுதுவிற்குள்ளும் இதே போன்ற சந்தேகங்கள் எழும்புகின்றன என்பதே நிம்மதியான விஷயந்தான்.

அவள் சிந்தித்து நல்ல முடிவிற்கு வரட்டும்.

இப்போது மனம் ஆகாஷிற்குத் தாவியது.

பித்தளை தூக்கு ஒன்றை புளி போட்டு தேய்த்துக் கொண்டிருந்த பெரியதாயி பக்கமாய் போய் அமர்ந்தாள் ஆனந்தி.

பாத்திரத்தில் பளபளப்பு ஏறிக் கொண்டிருந்தது.

"ஆயா... இங்க போஸ்ட் எப்ப வரும்?"

"அது காலைல பத்து, பத்தரைக்குள்ளார வந்திரும்மா - குரல் குடுத்துட்டு நவராம நிப்பாரு தபால்காரரு... இங்கேருந்து காபியோ மோரோ வெயிலுக்கு எத்தாப்பல போகவுந்தான் நகருவாரு..."

"தபாலை வழக்கமா யார் வாங்குவா?"

"நாங்கதான்... வாங்குறவங்க முன்னறையில இருக்கற வட்ட மேசை மேல தபாலை வச்சிடணுங்கறது சின்னவர் உத்தரவு... எல்லாத்தையும் அவருபாத்துட்டுதான் அவங்க வங்களுக்குத் தருவாரு."

"நேத்து, இன்னைக்கெல்லாம் தபாலை யார் வாங்கினா?"

"அதாரு? தெரிலியேம்மா."

"கேட்டு சொல்ல முடியுமா?"

ஆனந்தியின் குரல் தழைந்த விதம் வைத்து விஷயம் பெரியது என்று பட்டு விட்டது பெரியதாயிக்கு.

''கேட்டு சொல்றேம்மா.'' என்றாள் தானும் மெதுவாய். பாத்திரத்தைத் தேய்த்தது போதும் என்பது போலக் கழுவி கவிழ்த்தாள்.

''வேற யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்று ஆனந்தி சொல்ல,

முதியவளின் முகத்தில் குழப்பம் ஏறியது.

''எம்மா... உங்களுக்கு வர வேண்டிய தவாலு ஏதும் காணாம போயிடுச்சோ? முக்கிய தகவலா?''

''எனக்குத்தான் அப்பா அடிக்கடி போன் பண்ணி பேசிடறாரே...'' அந்நேரம் இவர்களைக் கடந்து போன அமுதா.

''ஏன் ஆனந்தி... நீ அப்பாக்குப் போன் போடறதே இல்லையா? மாமாதான் நம்மை நான் தவறாம கூப்பிடறாங்க. இன்னைக்குக் காலைல நீ குளிக்கறப்பா போன் கால் வந்தது நான்தான் பேசினேன்... ஜாலியாய் பேசுனாங்க. எப்ப வர்ரீங்க மாமான்னேன்...'' என்றவள் சட்டென பேச்சை நிறுத்தினாள்.

முகம் பூவாய் சிவந்தது.

''உன் கல்யாணத்துக்கு வர்ரதாய் சொல்லியிருப்பாங்க சரிதானா?''

''ம்ம்.''

''உங்கேள்விக்குப் பதில் சொல்லிடறேன் இங்கேருந்து நான் அடிக்கடி இங்கிலண்டிற்கு போன் போட்டா பில் எக்கச்சக்கமாய் வரும். ஒரு நிமிஷம் பேசவே 80, 100 ரூபாய் ஆகும். வந்ததும் போட்டேனே? தவிர அப்பா பிஸி ஆள். அவங்களுக்கு வசதி பட்ட நேரமாய் போடட்டுங்கற எண்ணமும்தான் நான் இங்க சதா ஃப்ரீயாகத்தான இருக்கேன்.''



''நிமுஷத்துக்கு நூறு ரூவாயா... ஐயோடா...'' என்றாள் அவர்கள் பேச்சுக்குக் காது கொடுத்திருந்த பொன்னி.

''இளையவரு சதா போனுலதான் பேசுதாரு... அப்ப பில் நிறைய வருமில்லா?''

''இன்னைய தபாலை யார் வாங்கினது பொன்னி?''

''இளையவருதான். நாலைஞ்சு நாளாய் தபால்காரருக் காய் தவங்கிடந்துல்ல வாங்குறாருல்லா?'' பெரியதாயியும் ஆனந்தியும் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர்.

'ஏதோ சரியில்லை' என்பது அவர்களுக்குப் புரிந்திருந்தது.

**வே**ர்க்கடலையை வெளியே பரப்பினால் வறுத்து எடுத்து விடலாம் போல உக்கிரமாயடித்தது வெயில்.

கிழவி ஆடுகளுக்கான தழைகளை வெட்டிச் சுமந்து வந்திருந்தாள். தழைக்கட்டை கீழே சரித்தவளின் உடம்பு வியர்த்து நனைந்திருந்தது. நினைந்த முதிய உடலை வெயில் வறுத்து காய வைத்தது.

''ஸ்ஸ்... யப்பா முருகேசா... இன்னுமா நீ எந்திக் கலை?'' பேரனுக்கென்று கலந்து வைத்த காபித்தண்ணி அப்படியே ஈமொய்த்துக் கிடந்ததைக் கண்டு கத்தினாள்.

அந்த ஆறிய கருப்பட்டி காபித் தண்ணீர் காய்ந்த அவள் தொண்டையில் அமிர்தமாய் இறங்கியது.

பாம்படத்திற்காய் வளர்த்து, இப்போது காலி யாயிருந்த காதுகள் அவள் குடிக்க குடிக்க 'டப்டப்' என ஆடின.

''ஏடேய்... உடம்பு கிடம்பு எதுஞ் சரியில்லையா?''

கரிசனையுடன் கேட்டபடி ஓட்டு வீட்டிற்குள்ளும் போய் பேரனைத் தேடினாள். நாடாக்கட்டிலில் கிடந்தான் அவன்.

"மூதி, கட்டில்ல கிடக்கது அவந்தானா இல்ல வெத்துப் போர்வைத்தானான்னுந் தெரியல... இப்படித் தேசலாவா இருக்கும் ஒரு வாலிபப் புள்ள உடம்பு? தோளும் மாரும் விங்கிப் புடைச்சுட்டு இருந்தாவில்லா? ஆங்... உழைக்கற உடம்புதான அப்படிப் பெருகும்? இப்படி மோட்டு வளையை, வெறு வானத்தப் பார்த்துட்டு நிலாவு, முகம், முழின்னு உளறிட்டு கிடக்கவும் மேனி காத்தாத்தாம் போவும்."

சட்டென்று எழுந்தான் அவள் பேரன்.

"மப்ச்... நல்லதா ஒரு கதை யோசிட்டு இருந்தேன் கெடுக்க வந்துட்டியா?"

"எந்திருச்சு மூஞ்சு முகரயக் கழுவியிட்டு வயித்துக்கு எதாச்சும் தந்த பிறகு யோசிக்கது?"

"வயித்துக்கு என்ன வச்சிருக்கே? பூரியா, பிரியாணியா?"

"ஆங்... வருவாப்பா மவராசி உனக்கதெல்லாம் ஆக்கிப் போட"

நொடித்தாள் கிழவி.

"வருவா, பாத்துட்டே இரு."

"உழைச்சா காசாச்சும் வரும்... உளறினா?"

"கவிதை உனக்கு உளறலாய் படுதா?

"கவிதாராணி தருவாள்
கவியெனக்கு
காசு பொருள் புகழ்,
கன்னியும் கூடவே" - கண் செருகி பாடினான் இளைஞன்.

"பாட ஆரம்பிச்சுட்டான்... இனி விடிஞ்சது போ..."

ஆயாசமாய் சலித்த கிழவி கதவை மூடினாள்.

வெளியே நடந்த முருகேசன் திகைத்தான்.

அங்கு நின்றவளைப் பார்த்து மூச்சும் விட மறந்தான்.



கவிதைகளைப் பொழியும் அவன் வாய் அந்நேரம் பேச்சும் மறந்தது!

காகிதம் பறக்காமலிருக்க அதன் மேல் கனம் வைப்பது போல, கையிலும் மடியிலும் கனத்த புத்தகங்களுடன் இருந்தாள் ஆனந்தி.

"எனக்கு இங்குள்ள லைப்ரரிக்குப் போகணுமே - ப்ளீஸ். என்ற கோரிக்கையுடன் அவள் போய் முதலில் நின்றது ஆகாஷிடம்தான். அவன் முழித்த முழியும், விட்ட அசட்டு சிரிப்பும், இந்த விஷயத்தைக் கேட்க வேண்டிய ஆள் இவனில்லை என்பதைப் புரிய வைக்க, அதற்கும் அவள் ஆனந்தனிடமே போக நேர்ந்தது.

"நிச்சயமாய்" என்ற தலையசைப்புடன் ஆனந்தன் தன் மேசை இழுப்பறையிலிருந்து ஐந்து வாசகர் சீட்டுகளை எடுத்து நீட்டினான்.

"வீட்டு உறுப்பினர்கள் அத்தனை பேருக்காகவும் வாங்கின உறுப்பினர் சீட்டுகள் இவை - இது வரை பயன்படுத்தப் படலை. நான் எப்போதாவது சரித்திர நாவல்களை எடுத்து வாசிப்பதுண்டு. டிரைவர்ட்ட சொல்றேன். லைப்ரேரியன் நமக்குத் தெரிஞ்சவர் - உனக்கு உதவுவார்."

காலையில் அகிலாவுடன் சற்று நேரம் கழித்த பின் சமையலலையும் விடக் கூடாது என்று அடுக்களைக்குள் புகுவாள் ஆனந்தி.

காய்கறி அரிய, குழம்பு கூட்ட, மோர் சிலுப்ப என்று எதையாவது இழுத்துப் போட்டு செய்தபின் தலையணை உறைகளுக்கு வர்ணம் தீட்டுவாள்.

இதற்குள் ஒவ்வொரு அறையிலும் அவள் முத்திரை விழுந்திருந்தது. தலையணை உறை, மேசை விரிப்புகளில் கொத்து பூக்கள், சிரிக்கும் பாப்பா அல்லது பாடும் குருவிகள் என்று கலை நயமான முத்திரை.

மாலையில் தோட்ட வேலை, பொன்னியிடம் கோல ட்யூஷன், ரங்கன் மேற்பார்வையில் மாடுகளைக் குளிப் பாட்டுவது என்று மேலும் பல கலைகள் அவள் கை வந்து கொண்டிருந்தன!

ஒழிந்த வேளையில் அவள் புத்தகங்கள் விரித்த கற்பனை உலகில் சுகமாய் இளைப்பாறினாள்.

ஜன்னலோரம் ஒரு மூங்கில் நாற்காலியை நகர்த்தி போட்டு புத்தகத்துடன் அமர்ந்தால் லயித்து விடுவாள்.

''ஆனந்தி...''

அத்தனை லயிப்பிலும் அக்குரல் அவளைச் சுண்டி இழுக்கது. ஆனந்தனின் ஆண்மை மிக்க குரலில் தன் பெயர் மிக இனிமையாய் ஒலிப்பதாய் பட்டது.

''சொல்லுங்கத்தான்.''

புத்தகத்தை மூடியபடி எழுந்தாள்;

''உன் கார் வந்தாச்சு?''

என்ன சொல்கிறான்?

அவன் முகம் ஏனிப்படி கடுகடுக்கிறது?



## 10

''உன் கார் வந்தாச்சு'' என்று கடுகடுப் பாய் சொன்னவன் முகத்தை குழப்பத்துடன் பார்த்தாள்.

சிரித்த சில முறை ஆனந்தனின் முகம் இளகி வெகு ர்ச்சியாயும், இளமையாயும் தோன்றியதே.

அப்படியே இராமல் இதென்ன முரட்டு முகமூடன் ம்?



இந்நினைப்பில் அவளுக்குள் சிரிப்பு குமிழிட்டது.

''உன்னைப் பார்க்க மிஸ்டர். வில்லியம்ஸ் வந்திருக் கார்.''

''கார்னிங்க, இப்ப வில்லி அங்கிள்ன்றீங்க?''

''அவர் உனக்காய் ஒரு காரையும் ஓட்டிட்டு வந்திருக்கார் - இப்பத் தெளிவாயிடுச்சா?''

''ஆச்சு. பாங்க் மானேஜர்ட்டயும் எனக்கு கார் வந்துட்ட விவரத்தைச் சொல்லணும்... பழையது ஒன்னு தேடச் சொன்னேன்.''

''நா அப்பவே அவர்ட்ட தேட வேண்டாம்னும் சொல்லிட்டேன்.''

இப்படி சொன்னவனை காரமாய் பார்த்தாள்.

''எனக்குத் தெரிஞ்ச கார் ப்ரோக்கரிட்ட தான் சொல்லி வச்சிருந்ததால்.''

''ஓ...'' புன்னகைக்க முயன்றாள்.

பேசியபடி முன்னறைக்கு வந்திருந்தனர்.

'காபியா, மோரா, ஜூஸா? நம்ப தோப்பு இளநீரைக் குடிக்கணும் நீங்க. கல்கண்டு கரைச்ச பன்னீராட்டம் இருக்கும்.'' என்று வில்லியம்ஸை தடபுடலாய் உபசரித்துக் கொண்டிருந்தாள் தனம்மாள்.

''வாங்க அங்கிள்...''

''ஹலோ சின்னப் பொண்ணே - எப்படியிருக்கே?''

அவள் தோள்களை பற்றி மேலும் கீழுமாய் பார்த்தார் வில்லியம்ஸ்.

''நல்லாவே இருக்க. பத்து நாள்ல பூசினாப்பல ஆயிட்டம்மா - அத்தைம்மா நல்லாவே கவனிக்கறாங்க.''

''ம்ம்... ஒரு நாளைக்கு நாலு தரம் சாப்பிடறேனே...''

மூன்று வேளை உணவு போக இடையிடையே, இங்கு யாராவது எதையாவது சாப்பிட நீட்டுகிறார்கள்தான். முதலில் அவளுக்கு அது சற்று சங்கடமாயிருந்தது என்றாலும் இப்போது பழகிவிட்டது.

முதல் நாள் தன் மருமகளைப் பார்த்ததுமே தனம் - ''என்னம்மா இப்படி கழுத்தெலும்பு துருத்திட்டு நிக்குது - ஆழாக்கு எண்ணையை அதுல விட்டா நிக்கும் போலயே - உன் உடம்பைத் தேத்துணும் நான்'' என்று வரித்து கட்டியிருக்காள்.

தான் சொன்னதை ஓரளவு நிறைவேற்றிய பூரிப்பில் பளபளத்தது அத்தையின் முகம்!

''இந்தாம்மா உங்கப்பா அனுப்பின பெட்டி. உன் சாமான்களோட நீ சொன்ன பரிசுகளையும் வச்சிருக்காராம்.''

''ரொம்ப நன்றி அங்க்கிள்... சென்னையிலிருந்து ஒரு ஆள் போட்டு அனுப்பியிருக்கலாமே... நீங்க ஏன் அலையணும்?'' வாஞ்சையுடன் கேட்டாள்.

''உன்னைப் பார்க்கத்தான். அதோட இந்த அருமையான குடும்பத்தைச் சந்திக்க முடிஞ்சதே - எப்படியிருக்கான் பைரு?''

''அவனும் குண்டாயிட்டான் - அத்தான் அவனுக்கு தனியா ஒரு ஷெட் போட்டிட்டார்-தினம் அவரோட ஒரு நடை... எல்லாரோட கொஞ்சல்னு குஷாலாயிருக்கான்.''

''கார் இருந்தா வசதின்னு அப்பாட்ட சொன்னியாம் - சென்னையில என்னுடைய இந்த 'லென்' சும்மாத்தான் நிற்கும் - நீ பயன்படுத்தலாமேன்னு கிளப்பிட்டு வந்தேன்... லைசென்ஸ் எல்லாம்?''

''அதெல்லாம் என் பொறுப்பு மிஸ்டர் வில்லியம்ஸ்.''

''ஆகட்டும்ப்பா ஆனந்தன் - தொழில் எப்படி போகுது?''



தொழில், அரசியல், பணவீக்கம் பற்றியெல்லாம் விவாதித்து முடித்ததும் கிளம்பி விட்டார் வில்லியம்ஸ்.

''ஒரு நாளாவது இருந்துட்டுப் போலாமே அங்க்கிள்...''

''ஒரு வாரம் தங்கணும்னு நானும் சொன்னேம்மா நமக்கு உதவன்னு இத்தனை அலைஞ்சவர் பயண அலுப்பு மாறாம கிளம்பறதா... கேட்க மாட்டேனுட்டார்'' தனம் குறை பட்டாள்.

''நான் மதுரைக்காரம்மா... அக்கா இன்னும் தல்லாக்குளத்தில இருக்காங்க ஒரு மணி நேரப் பயணந்தானே? நாளைக்கு அங்கேருந்து ஃப்ளைட்.''

''மதுரைக்கு நான் உங்களைக் கொண்டு போய் விடறேனே அங்க்கிள்...''

''உனக்கு இன்னும் லைசென்ஸ் இல்லை.''

கறாராய் எச்சரித்தான் ஆனந்தன்.

''ஆமம்மா... நம்மூர் நெரிசல், ரோடு எல்லாம் உனக்குப் பழகணும் முதல்ல.''

''அவளை அதுக்கெல்லாம் பழக்கறது எம் பொறுப்பு - இல்லைன்னா காரை எடுக்க விட மாட்டேன்.''

''நல்லது தம்பி... இத்தனைப் பொறுப்பாய் நீங்கயிருக்கக் கவலையில்ல. தவிர என்னை மதுரைக்குக் கூட்டிப் போக தம்பி கார், டிரைவர் எல்லத்துக்கும் ஏற்பாடு செய்துட்டார்...''

''அப்படீன்னா சரி, அங்க்கிள்.''

அரைமனதுடன் ஆனந்தனைப் பார்த்து ஒரு சின்ன நன்றிப் புன்னகையை வீசினாள்.

அவன் அதைப் படிக்க, ரசிக்க மனமின்றி வெளியே விரைய, அவளையும் அறியாமல் நீளப் பெருமூச்செறிந்தாள்.

தன் புடவைகளை வேலைப்பாடு மிக்க பீரோ அலமாரியினுள் அடுக்கி முடித்த ஆனந்தி, அப்பா தான் கேட்டுக் கொண்டபடியே வாங்கி அனுப்பியிருந்த மூன்று புடவைகளுடன் படி இறங்கினாள்.

மூன்றும் அதற்கான பிரத்தியேக பெட்டிகளுள் இருந்தன.

தையல்காரர், வண்ணான் இவர்களுக்கான கூலியைச் சரிபார்த்துத் தந்து விட்டு அத்தைத் தனம் வரும் வரைக் காத்திருந்தாள்.

''வேலை முடிஞ்சுதாத்தை?''

''ஒருத்தர் மாத்தி ஒருத்தர் யாரேனும் வந்தபடித்தான் கண்ணு இருப்பாங்க. நம்மது பெரிய வீடில்லையா?'' இப்போது வேலைகளைத் தானே சற்று பார்க்க ஆரம்பித்திருந்த தனம் சந்தோஷமாய் அலுத்தாள்.

''சுதாங்கினி அதற்குப் பிறகு நம்ப வீட்டுப் பக்கமே வரலையே?''

''நானும் அதையேத்தாம்மா நினைச்சேன். முன்னே வாரத்துக்கு ரெண்டு தரமாவது வந்து தாட்பூட்னு தர்பார் நடத்திட்டுப் போவா... நீ வரவும் வந்து பார்த்துப் போனதோட சரி.''

''போனும் பண்ணலியா அத்தை? நீங்களாவது போட்டு வரச் சொல்லுங்களேன்.''

தனம் காது கேளாதது போல நழுவ முயன்றாள்.

'விட்டது சனியன்னு விடு' என்று புதிதாய் வந்த இந்தப் பெண்ணிடம் சொல்லி விட முடியுமா?

''எல்லாருக்கும் பரிசுப் பொருள் வாங்கிட்டு வந்து தந்தேன் அத்தை. ஆனா சுதாங்கினிக்கு ஏதும் வாங்கி வரலை.''



''அவனைப் பத்திதான் உனக்கு ஏதும் தெரியாதே. உங்கத்தான் திடுதிப்னு இவளைத்தான் கலியாணம் கட்டிக்கப் போறேன்னான். நாங்களும் வாயத் திறக்கலை...''

''அதனால இப்போ அப்பாட்ட சுதாவிற்குமாய் ஒரு புடவை எடுத்து அனுப்பச் சொன்னேன்.''

''இதென்னம்மா-திருநெல்வேலிக்கே அல்வா வாங் குறாப்பல இலண்டனிலேருந்து நம்மூருக்குப் புடவையா?''

''இலண்டன்ல 'தாரிணி'ன்னு ஒரு டிஸைனர் கடை பிரபலம் அத்தை இந்தியாவிலேருந்து ராஸில்க் வரவழைச்சு அதிலே புதுவிதமான வேலைப்பாடு செய்து விற்பாங்க. ஆங்கிலோ இன்டியன் சேலைன்னு வைங்களேன். ரொம்ப நூதனமாய் இருக்கும். அதைக் கட்டிட்டுப் போனால் பழகாத பொண்ணுங்க கூட வந்து தொட்டுப் பார்த்து. 'இதை எங்கேங்க வாங்கினீங்க - பிரமாதம்'னுவாங்க.''

''அடடே... அதான் இந்தப் பெட்டிகள்ல இருக்குதா கண்ணு? எடேன் பார்ப்போம்.''

''ஒன்னு சுதாக்கு - மற்றது நம்ப அமுதுக்கும் அகிக்குட்டிக்கும்.'' ''அடடே... அகி வயசுக்கு வந்ததுக் காக்கும்? யோசனையாய் அங்கேருந்து வரவழைச்சிருக்கியே கண்ணு - பிரிச்சு காட்டேன்?''

''சுதாவும் வரட்டுமே அத்தை? எல்லார் முன்னேயும் 'டாண்ட டொய்ங்'ன்னு பிரமாதமான பின்னணி இசையோட பிரிச்சு காட்டறேன்.''

''ம்ம்.''

வேறு வழியின்றி வருங்கால மருமகளுக்கு அழைப்பு விடுத்தாள் தனம்மாள்.

சுதா வாராததால் வீடே இளைப்பாறியது போல் நிம்மதியிலிருந்தது - அதைக் கெடுக்க அவளுக்கு அழைப்பு விடுவதில் அத்தனை ஆர்வமில்லைதான்.

ஆனால் வீட்டின் பிரச்சனைகளைப் புதிதாய் வந்த ஆனந்தியிடம் முழுக்கப் பிட்டுக் காட்டவும் மனமில்லை.

ஆனால் மனதுக்குள் பொறுமல் இருந்தது.

''வீட்டுக்குக் கடைக்குட்டி வயசுக்கு வந்ததைச் சொல்லி விட்டும் மருமகளாய் வரப்போறவள் பாசமாய் நாலு முழப் பூ கூட வாங்கி வைக்கலை அப்படிப்பட்ட அவளுக்கு இலண்டனிலேருந்து ஆங்கிலோ - இன்டியன் சேலை வந்திருக்காம்லா?''

அடிக்கடி சம்பந்தியாகப் போகிறவங்க வீட்டுக்கு வர்ரது அத்தனைக்கும் கௌரவமில்லைன்னு அவளைப் பெத்த மகராசியும் கூட வந்து எட்டிப் பார்க்கலை. ஜாடையாய் கேட்டா,

''எங்க வீட்டுல பெரிய சாவு விழுந்துருச்சே அண்ணி. இன்னும் ஆறு மாசத்துக்கேனும் நாங்க நல்லதுகள்ல கலந்துக்கக் கூடாதேன்னு' பசப்பறா சுதாவோட அம்மா. ஊர் கல்யாண வீடு அத்தனையிலும் இவளப் பாக்கறேனே? ஊரு பெரிய தனக்காரரு பிள்ளையத் தன் மாப்பிள்ளையாப் பிடிச்சுட்ட ஜபர்தஸ்தோட வந்து இறங்குறாளே...''

தனம்மாளின் இத்தகு பொறுமல்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது போல அன்று மாலை சுதாங்கனியோடு அவளது தாயாரும் வந்து இறங்கினாள். மூத்தவளுக்கு விருந்தாளியான ஆனந்தியை சந்திக்கும் ஆவல் உடம்பு முழுக்கப் பரபரத்தாலும் எதையும் காட்டிக் கொள்ள வில்லை.

''முதல்ல அகிலாப் பொண்ணைப் பார்க்கணுமண்ணி. அவளுக்கு நல்ல டிசைன்ல ஒரு நகை எடுக்கணுங்கறதுல தான் ஒடிப் பேச்சு. அவளை வரச் சொல்லுங்க.''

பூனைக்குட்டியாய் சம்பந்தி அம்மாளின் முன் வந்து நின்றாள் அகிலா.



சுதாங்கனியோடு அவள் தாயாரும் காலெடுத்து வைக்க, வீட்டை பூனை போல சுருண்டு விட்டதாய் தான் தோன்றியது.

இரண்டு பவுனில் உள்ளங் கழுத்துச் சரம் ஒன்றை சின்னவளுக்கு அணிவித்து திருஷ்டி கழித்தாள் சுதாவின் தாய்.

இயல்பாய் தோன்ற முயன்றும் கூட நுழைந்த ஆனந்தியைப் பார்த்த அவள் முகத்தில் பெரிய வியப்பு - சுதாவும் கூட அயர்ந்து போனாள் -

இதென்ன இப்பெண் நாளும் பொழுதும் கூடிய வனப்புக் கூடித் தெரிகிறாளே...?

''எங்க ஊர் காத்து, சாப்பாடு எல்லாம் உனக்கு ஆகி வருது போல? உடம்பு கூடியிருச்சு.''

பாராட்டு போலவும் பழிப்பு போலவும் சொன்னாள் சுதாங்கனி.

''ஆமா, சுதா - இந்த வீட்டு கவனிப்பும் அன்பும் அப்படி.''

''ம்ம்- வந்த மறுநாளே இவரோட டவுனுக்கு போனியாமே?''

இப்போது விசாரணை போல கேட்டாள் சுதா.

''ஆமா. வங்கிக்குப் போயிருந்தோம் - காரோட்டறதில சில பயிற்சிகளையும் அத்தானே சொல்லித் தரேன்னிருக்கார்... ஆக இனியும் சேர்ந்து போவோம்.''

சுதாவின் முகத்தோடு அவளைப் பெற்றவளின் முகமும் சிவந்து கடுத்தன. ''இப்படியெல்லாம் இங்க ஆணும் பெண்ணுமாய் சேர்ந்து சுத்தறது நல்லதில்லம்மா ஊர் நாலு விதமாய் பேசும்.''

''இப்ப உங்க சுதாவுக்கு இலண்டன்லேருந்து ஒரு பரிசு வரவழைச்சிருக்கேன் - அதைப் பார்த்தாலும் நாலு பேராவது உங்ககிட்ட அது பற்றி வந்து பேசுவாங்க.''

''அதுக்காகத்தான் ஆனந்தி உங்களை இன்னைக்கு வரவழைக்கச் சொன்னா.''

''நானொன்றும் உங்களை வருந்தி அழைக்கவில்லை' என்ற தோரணையில் சொன்னாள் தனம்.

மூன்று புடவைகளையும் பிரித்து சோபாவின் மேல் பாங்காய் விரித்தாள் ஆனந்தி.

அந்த நூதன வேலைப்பாடு கண்டு அனைவரும் அயர்ந்து நின்றனர்.

பச்சையும் சிவப்புமாய் மணி, முத்து வகைகள் வைத்துத் தைக்கப்பட்டிருந்த தங்க நிறப் பட்டை அகிலா ஆர்வமாய் வருடினாள்.

''மாம்பழக் கலருன்னா... எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

'உள்ளதிலே சின்னவ, நீ முதல்ல உனக்குப் பிடிச்சதை எடு.''

அடுத்தப் புடவை வயல்வெளிப் பச்சையில் ...ண்களைக் குளிர்வித்தது. உடம்பெங்கும் பனித்துளிகள் ...பால முத்துக்கள் ஆட, முந்தானையில் நெய்த ஜோடிப் ...ச்சைக் கிளிகள்!

''நிஜமாகவே ரொம்பப் புதுமாதிரியான டிஸைன் ...ன்...'' பச்சைப் புடவையை'' எடுத்துத் தோளில் இட்டு ...கு பார்த்தாள் அமுதினி.

எஞ்சியிருந்தது. குங்கும நிறத்தில் இங்கும் அங்குமாய் ...டர்களாய் ஜரிகை வேலைப்பாட்டிலிருந்த புடவை.

''எனக்கு இதைப் பிடிச்சிருக்குது - மிஞ்சியதும் இது ...'' என்றபடி அதை எடுத்துக் கொண்டாள் சுதாங்கினி.



''தவிர மற்ற ரெண்டும் சினிமாக்காரங்க கட்டற நிஜுசிலே இருக்குது - இது பரவாயில்ல'' என்றும் விளக்கினாள்.

''என்னங்க இது உங்களுக்குப் பிடிச்சிருக்குதா?'' ஆனந்தனின் முன் காட்டி கேட்டாள்.

''உடுத்தப் போற உனக்குப் பிடிச்சிருந்தால் சரி.'' என்றான் அவன் எவ்வித ஈடுபாடும் இல்லாமல்.

காதலில் கட்டுண்டவன் சொல்ல வேண்டிய பதில் அல்ல அது. ஆனால் பெண்ணை ஆண் பலர் பாராட்டுவதோ, கொஞ்சுவதோ இங்கு நடைமுறையில் இல்லை என்பதும் ஆனந்திக்குப் புரிந்திருந்தது.

வாடிய தன் மகளின் முகத்தை,

''உன் நிறத்துக்கு இது எடுப்பாயிருக்கும்மா சுதா' என்று தூக்கி விட்டாள் தாய்.

தனக்கு நன்றி தெரிவித்த மூன்று பெண்களையும் நிறைவுடன் பார்த்தாள் ஆனந்தி. பிறரை மகிழ்விப்பதே பெரிய மகிழ்வு அல்லவா?

சின்ன அகிலாவின் கவனம் முழுக்க தன் மாம்பழப் பட்டில் லயித்திருக்க, சுதாவின் பார்வை ஆனந்தன் மீதிருந்தது.

அமுதினியின் பார்வை மொய்த்தது என்னவோ சுதாங்கினி கையிலிருந்த புடவையைத்தான்!

''இந்தப் பச்சை நிறம் ரொம்பப் 'பளீர்'னு அடிக்குதோ? குங்குமக் கலர் தேவலைல்ல?''

பாதி தனக்குள்ளாக முணுமுணுத்தாள். அவள்.

ஆனால் அருகே நின்ற ஆனந்திக்கு அது கேட்டது.

புடவையைத் தள்ளி பிடிப்பதும் தன் மீது போடுவதுமாய் அல்லாடினாள் அமுது...

புடவையை முதலில் அள்ளியதும் இருந்த பரவசம் அடங்கி இப்போது அவள் முகத்தில் சந்தேகம் வந்திருந்தது.

''எம்மா இந்த நிறம் எனக்கு ஒத்து வருதா?''

''ஏன்? உங்கலர் மட்டும் மட்டமா என்ன? எதுவும் உடுத்தலாம்டீ நீ.''

தனமும் விடாமல் தன் பெண்ணிற்குக் கொடி பிடித்தாள்.

''ஆ... ஆனா... அந்தக் குங்குமக் கலர் புடவையைத் தள்ளி நின்னு பார்த்தால், அதுதான் எனக்குப் பிடிச்சிருக்குது...''

இது காதில் விழுந்தும் கேளாதது போல தன் புடவையை மடித்து பெட்டியில் வைத்து தன் தாயின் கையில் கொடுத்து விட்டாள் சுதாங்கினி. இனி யார் அதைத் தட்டி பறிக்க முடியும்?

ஆனால் அமுதினியின் முகத்தில் திருப்தியில்லை.

இதைக் கவனித்த ஆனந்திக்குள் ஒரு எண்ணம்... திட்டம் மின்னல் போல உள்ளே வெட்டியது... வெளிச்சமிட்டது!



# 11

**சி**ல எண்ணங்கள் நமக்குள் மின்னவிட்ட வேகத்தில் மறைந்து போகும்... நாமும் அதை மறக்கக் கூடும்.

சில பொறிகள் பெரிய திட்டங்களுக்கு வழி வகுக்கும். அதைப் பாதுகாத்து, பயன்படுத்திக் கொள்ளும் மனிதன் மூளையில் இருக்கிறது சூட்சுமம்!



முன்தினம் பெண்கள் புடவையைத் தேர்ந்தெடுத்த விதத்தில் தனக்குள் தட்டிய பொறியை பறக்க விட்டு விடவில்லை ஆனந்தி பிடித்து வைத்து ஊதி ஊதி பெரிதாக்கினாள்.

அவளுக்குள் ஒரு திட்டம் உருவானது.

ஆனால் அதை நடைமுறைப் படுத்த முடியுமா எனத் தெரியவில்லை. அப்படி ஒரு நாடகம் நடத்துவது முறையா என்பது தெளிவாகவில்லை. உறவினர் வீடு என்றாலும் சில உரிமைகள் மட்டுமே இவளுக்கானவை.

வரம்பு மீறி சில உரிமைகளை எடுத்துக் கொண்டா அவமானப்பட நேரலாம்.

விஷயம் தப்பாக முடிந்தால் அது வேதனை.

புரண்டு புரண்டு படுத்தாள்.

தாமதமாய் உறங்கினாலும் அதிகாலை பால் பீய்ச்சி ஒலியில் வழக்கம் போல விழிப்பு தட்டியது.

ஜன்னல் வழியே, மசமசத்த அரை விடியலில் ரங் பால் கறந்ததைப் பார்த்தாள். இதுவரை கவனித்ததில் ரங் பொன்னிக்கு இடையே காதல் என்று சராசரி காட்சி எதையும் யாரும் பார்த்து விடவில்லை. இயல்ப பழகினார்கள்.

நமக்குள் ஒத்து போகும் -

நாம் இணைந்து நடத்தும் வாழ்க்கை சரி சந்தோஷமாய் இருக்கும் என்ற நிச்சயம் அவ இருவருக்கும் இருப்பது புரிந்தது.

ஆனால் படித்த அமுதினியிடம் அந்த நிச் இல்லை. அமுதுக்கு கவினுன் இளமுருகின் மீது பிரமிப்பு இருந்தது.

அவனும் இவள் மீது ஈடுபாடு காட்டுகிறான்.

ஆனால் ''வாழ்நாள் முழுக்க நீ வேணும் நீ இல்லாமல் முடியாது' - என்ற மூர்க்கமான முடிவு, தெளிவான ஈடுபாடு அவர்களுக்கு உண்டா என்பது அவர்களுக்கே தெரியவில்லை!

அமுது புடவையைத் தேர்ந்தெடுக்க அல்லாடியது போலத்தான் இதிலும்...!

புடவை அவ்வப்போது கட்டி அவிழ்க்கும் சமாச்சாரம். கட்டுபவன்... அதாவது தாலி கட்டுபவன் அப்படியில்லையே! காலம் முழுக்க கட்டு தெகிழாமல் தொடர வேண்டிய பந்தமல்லவா? வெளிநாட்டில் திருமணம் செய்து பிரியாமல் வாழும் தம்பதிகள் அரிது என்றால் இந்திய மண்ணில் விவாகரத்து அரிது.

அப்படியிருக்க இந்த ஆயிரம் காலத்துப் பயிரை சர்வ கவனமாய் நட வேணும்.

தனக்குள் தோன்றிய திட்டத்தை அலசியபடி ஆராய்ந்தபடி காலை கடன்களை முடித்தாள். திட்டத்திற்குத் தேவையான விவரங்களை முதலில் சேகரிக்க வேணும் - யாரிடம் கேட்பது - ஆகாஷிடம்?

கீழே ஆனந்தனின் உற்சாகக் குரல் கேட்டது.

அவன் பைருவிடம் ஏதோ சொல்ல, அதுவும் சந்தோஷமாய் குலைத்தது. இருவரும் வழக்கமான நடைக்குக் கிளம்பியாகிவிட்டது.

ஆகாஷின் பிரச்சனையும் நினைவிற்கு வர, அவனைத் தேடிப் போனாள் ஆனந்தி. தனக்கு வேண்டிய விவரத்தைக் கேட்ட கையோடு அவன் பிரச்சனை என்ன என்றும் மோப்பம் பிடிக்கலாமே!

பட்டப்படிப்பை முடித்து விட்டு பல்வேறு மேல் படிப்புக்களுக்காக விண்ணப்பித்திருப்பதாகச் சொல்லியிருந்தான்.

காலையில் காலார நடப்பது, அல்லது புத்தகம் வாசிப்பது, நண்பர்களை அழைத்து வந்து அல்லது தேடிப்



போய் கொட்டமடிப்பது என்று எதுவுமே இல்லாமல் எப்படி ஆகாஷ் பொழுதைக் கழிக்கிறான்? வழக்கம் போல அவன் அறை 'கிச்' சென மூடிக் கிடந்தது. பருமனும் பளபளப்புமான அந்தத் தேக்குக் கதவைத் தட்டினாள்.

உள்ளே சத்தமேயில்லை.

இன்னும் ஆகாஷ் எழவில்லையோ?

மணி எட்டாகப் போகிறதே - அவனை எழுப்பினாலும் பாதகமில்லை என்று பலக்கத் தட்டினாள்.

''யாரது?''

கேட்ட முரட்டுக் குரல் ஆகாஷினுடையதா?

எத்தனை விரக்தியும் வெறுப்பும் கலந்த தொனி?

தயங்கி, பின் தெளிவாய் சொன்னாள்.

''நான்தான் ஆனந்தி.''

அவன் உள்ளே அவசரமாய் சில சாமான்களை உருட்டி, ஒதுக்கி விட்டு நடந்து வருவது புரிந்தது. கதவைத் திறந்தவன் பதட்டத்துடன் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

அவசரமாய் அவனுக்குப் பின்னே தெரிந்த அறையை நோட்டமிட்டாள்.

அறை கனேபரமாய்தான் கிடந்தது.

''என்ன... என்ன?''

அவனது உலர்ந்த உதடுகள் அவசரமாய் கேட்டன.

''எனக்கு கொஞ்சம் உதவி தேவை, ஆகாஷ்.''

சிவந்த அவன் கண்கள் சற்று வியப்புடன் அவளை ஏறிட்டன.

''நான் என்ன செய்யணும்...?''

''இங்கே கிராம சேவகின்னு யாரும் உண்டா?''

புருவம் சுருக்கினான்.

''என்ன விவரம்?''

''நலிஞ்ச குழந்தைங்க, குடும்பங்களைப் பார்த்தேன். கிராம சேவகி மூலம் அவங்களுக்கு முறையான உதவி, அறிவுரை எல்லாம் கிடைக்கச் செய்யணும்.''

''காந்தி கிராமம் விலாசம், 'பேசி' எண் தேடி தர்றேன். அவங்களைத் தொடர்பு கொண்டால் சரி வரும்.''

''நன்றி - கூடவே இன்னொருத்தர் விலாசமும், 'பேசி' எண்ணும் தேவை.''

''யாருடையது?''

இவள் சொன்னதும் சற்று மென்று விழுங்கினான்.

''பாலரமணி ஸார் அண்ணாவோட ஃப்ரண்ட் - நேரே அண்ணா கிட்டயே கேட்கலாமே.''

''அத்தான் என்ன விவரம்னு கேட்பாரே. நான் இப்ப அதையெல்லாம் யார்கிட்டவும் சொல்ல முடியாது. ஆனா என்னை நம்பித் தரலாம்ங்கற உத்திரவாதம் மட்டும் தர முடியும்.''

''அதுக்கில்லை...''

''நெற்றியை தடவியபடி நின்றான்.

''ப்ளீஸ் ஆகாஷ்... தவிர இது பற்றி... அதாவது பாலரமணி போன் நம்பரை எனக்குத் தந்தது பற்றி நீ வேற யார்கிட்டவும் சொல்ல வேணாம் - உன்கிட்டதான் இப்படி உரிமையாய் கேட்க முடியும்... அதான்.''

''அந்தப் பயம் வேணாம் - ஏன்னா நான் இன்னைக்கே வெளியூர் கிளம்பறேன் - வர இருபது நாளாவது ஆகும்.''

''என்ன திடீர்னு?''

''கம்ப்யூட்டர் கோர்ஸ் சேரலாம்னு நினைக்கறேன். இங்க சும்மாவே இருக்கேன்னு அண்ணன் திட்டறார்.. அன்னைக்கு நீ பேசலை? பதினாலு வயசிலேயே உழைச்சு சம்பாதிக்க ஆரம்பிச்சேன்னு.. சரி நாம படிப்பையாவது உருப்படியாய் செய்யலாம்னுதான்... காலேஜ் அட்மிஷன்



வேலையும் இருக்குது.... ஆக இனி நான் வீட்டிலிருக்கப் போறதில்லை.

''அடிக்கடி போன் பண்ணு ஆகாஷ்.''

''ம்ம்?''

அவன் முகம் ஒரு நொடிசாய் வெளிறியது.

''எங்களோட போன் மூலம் பேசுங்கறேன்.''

''ஆ... ஆகட்டும்.''

வியர்த்த முகத்தை பரிதாபமாய் துடைத்தான்.

''இலண்டன் ஆசாமி எனக்கே வியர்க்கலை... எப்படி வியர்த்து வழியறே?''

''சாமான்களைப் பேக் பண்ணிட்டிருந்தேன் - அதான்.''

''சரி - நான் கேட்ட விபரம்?''

விரலை ஆட்டியபடி கேட்டாள்.

''தரேன். டைரி, டைரக்டரி எல்லாம் முன் அறையில் இருக்கும்.''

அவசரமாய் படியிறங்கியவனைப் பார்த்திருந்தாள். அவன் தலை மறையவும் இடது கையால் அறைக் கதவைத் திறந்து உள்ளே பார்வை ஓட்டினாள்.

அறையை அலசிய பார்வை தலையணையின் அடியில் துருத்திக் கொண்டிருந்த ஒரு புத்தகத்தின் விளிம்பில் குத்தி நின்றது.

உள்ளே விரைந்த ஆனந்தி அதை உருவினாள்.

'அடடே இளைய துரை 'ப்ளே-பாய்' ரசிகராக்கும்?'

உதடு பிதுக்கியவள் மறுபடி அந்த வெளிநாட்டு 'நீலப்பட' புத்தகத்தை தலையணையின் கீழே செருக, ஒரு 'பில்' அவள் கைக்கு சிக்கியது.

அது தொலைபேசி இலாகாவின் பில்.

இயல்பாய் அதில் கண் ஓட்டியவள், கூட்டுத் தொகையைப் பார்த்து சற்று துணுக்குற்றாள்.

அழைக்கப்பட்ட எண்களை கவனித்தவளின் குழப்பம் அதிகமானது புஜ்யத்தில் ஆரம்பித்து வாலாய் நீண்ட எண்கள் அவை.

இது இப்படி ஆத்திர அவசரமாய் ஆராயும் விஷயமில்லை என்று முடிவு செய்தவள், அறைக்கு வெளியே வந்து சமர்த்தாய் நின்று கொண்டாள்.

அடுத்த நிமிடமே மூச்சிரைக்க வந்த ஆகாஷ் நீட்டிய துண்டு சீட்டை நன்றி கூறி வாங்கிக் கொண்டாள்.

''எப்ப கிளம்பறே ஆகாஷ்?''

''அம்மாட்ட கம்ப்யூட்டர் கோர்ஸுக்குக் கட்ட பணம் கேட்டிருந்தேன். அண்ணன்ட்ட கேட்டு வாங்கி வைக்கிறதாய் சொன்னாங்க. பணம் கைக்கு வரவும் கிளம்பணும்.''

''மீண்டும் நன்றி - அடிக்கடி போகிற இடத்திலேருந்து போன் போடு... பெரிய பில்லாய் வருமேன்னு சிக்கனம் பார்க்காதே....''

அவன் முகமாற்றத்தைப் பரிதாபத்துடன் கவனித்தவள் படியிறங்கினாள்.

ஆக நேற்று ஆகாஷைக் கதிகலங்கச் செய்தது இந்தத் தொலைபேசி இலாக்காவின் பில்லாய்த்தான் இருக்க வேணும்.

18,000 என்பது எளிய தொகை அல்ல.

முதலில் வழக்கமாய் இவர்களுக்கு வரும் 'பில்'லின் தொகை எவ்வளவு என்பதைக் கேட்டறியணும். இளம் துப்பறியும் நிபுணியாய் திட்டமிடலானாள்.

காந்தி கிராமத்தின் தொலைபேசியில் அழைத்து, தனக்கு வேண்டிய தகவல்கள் கேட்க, அவர்கள் கேட்ட விவரங்களைத் தந்தாள்.



வெள்ளங்கோவில் சேரி மேம்பட ஒரு எட்டு எடுத்து வைத்தத் திருப்தியுடன் அடுத்து பாலரமணியின் 'பேசி' எண்ணை யோசனையாய் பார்த்தாள் - அவனை அழைப்பதா வேண்டாமா என்று மனசுக்குள் ஒரு குட்டி பட்டிமன்றம் நடத்தி முடிவில் அந்த எண்களைத் தன் அறையிருந்து 'பேசி'யில் தட்டினாள்.

மறுமுனையில் எடுத்தது நல்லவேளையாக பாலரமணியேதான்.

அழுத்தமான ஆனால் அலட்டாத குரல்'' வணக்கம் - பாலா'' என்று பேச்சை ஆரம்பித்தாள்.

''பாலா ஸார்... நான் ஆனந்தி பேசறேன்.''

''ஆனந்தி.. யார்... அமுதுவுடைய கஸினா?''

''அவனுக்குத் தெளிவானது போல இவளுக்கும் ஒரு விஷயம் லேசாய் பிடிபட்டது.

பாலரமணிக்கு நொடியில் ஞாபகம் வந்தது தன் அருமை நண்பன் ஆனந்தன் அல்ல - அவன் தங்கை அமுது!

இருவருக்குமே இவள் கஸின் முறைதானே.

''ஆமாம் ஸார்.... இங்கிருந்த போன் டைரியில் எனக்குத் தெரிஞ்ச ஒரே பெயர் உங்களுடையதுதான்... அதான் போட்டேன். வேறொன்றுமில்லை...''

மேம்போக்காய் இரு நிமிடங்கள் பேசி விட் தொடர்பை துண்டித்தாள்.

இளமுருகுவைச் சந்தித்து பேசின பிறகுதான் இந்த திட்டத்தில் மறுபடி கால் வைக்க வேண்டும். பாலரம இதற்கு எவ்வளவு தூரம் ஒத்துழைப்புத் தருவா தெரியவில்லை. ஆனால் சற்று வெட்கம் விட்டு பா தன்னிடம் நெருங்கிப் பழகினால்... அதாவது பழகு போல நடித்தால் அமுதுவின் பார்வை பாலாவின் நிச்சயம் புதுக்கோணத்தில் விழும்... பார்க்கலாம்.!

பெட்டி, பை எல்லாம் காரில் ஏற்றப்பட்டுவிட, கடைசியாய் ஆகாஷ் ஏற முயலுகையில் தனம்மாள் அழவே ஆரம்பித்து விட்டாள்.

''இன்னும் ஒரு மாசமாவது வீட்டில இருப்பேன்னு நினைச்சேனேப்பா.... இப்படி 'சட்'டுனு படிக்கப் போறேன்னு கிளம்பற...''

கண்ணீரைத் துடைக்கவும் மனமின்றி மகனின் கைகளைப் பற்றித் தேம்பினாள்.

''மதுரைக்குத் தானேம்மா... இடையே வந்து பார்க்கறேன்''

சாப்பாடு, குளியல், தூக்கம் குறித்து பல அறிவுரைகளுடன் வழியனுப்பினாள் தாய்.

கார் நகர்ந்து பின் வேகமெடுத்தது.

''ஹ ூம்... காரிலேயே தம்பி மதுரைக்குப் போவலாம். ஆனா பஸ் ஸ்டாண்ட்டிலே போய் ஏத்தி விட்டாப் போதும்னு டிரைவருக்கு உத்தரவு?''

''யார் - பெரிய அத்தானா?''

''வேற யாரு? இப்படி யெல்லாமா நாம காசை மிச்சம் பிடிக்கணும்?'' குறைபட்டாள் தனம்.

''இங்கிலன்ட்ல பெரும்பாலும் நாங்க சுரங்க ரயில்லதான் பயணம் செய்வோம் அத்தை. நேரத்துக்குப் போகலாம் - சிக்கனமும் கூட.''

''என்னவோப் போ... பிள்ளை படிப்புக்கு 15,000 கேட்டான் - இவனானா அஞ்சுக்கு மேல தர மாட்டேனுட்டான்.''

''அஞ்சாயிரமா...? அதுவே பெரிய தொகை தானேத்தை?''

''விலைவாசியெல்லாம் எப்படி ஏறுது - இல்லையாம்மா?''



தனக்கு சம்பந்தமே இல்லாத ஒரு விஷயத்தைத் தெரிந்தாற் போல பேசினாள் தனம்மாள்.

''ம்ம் - உங்க போன் பில் எவ்வளவு ஆகுது அத்தை?''

இதுவரை யோசித்திராத விஷயமல்லவா இது?

''அதென்னவோம்மா.... ஆனந்தனைக் கேட்டாத் தெரியும்.''

''அச்சச்சோ...''

திடீரெனக் கைகளை உதறினாள் ஆனந்தி.

''என்னாச்சு கண்ணு?''

''புக்ஸ் எடுக்க மறந்துட்டேன் அத்தை - வாசிக்கச் சொன்னு ஆகாஷ் தந்ததை அவன் அறையிலேயே விட்டுட்டேன்...''

''அவன் அறைச் சாவி எங்கிட்டேயும் உண்டும்மா. யாருகிட்டேயும் தரக் கூடாதுங்கற உத்தரவு எனக்கு. ஆனாலும் நீ எடுக்க வேண்டியதை எடுத்துட்டு உடனே அறையைப் பூட்டிரு.''

''ஸ்வீட் அத்தை நான் ஒரு மண்டு... நீங்கதான் செல்லம்.'' மகன் கிளப்பிய துக்கம் ஆறி, புன்னகைத்தாள் தனம்.

திறந்த ஆகாஷின் அறை அலங்கோலமாய் கிடந்தது.

அதை மேலும் அலங்கோலமாக்கியபடி பரபரப்பாய் தேடினாள் ஆனந்தி. அலமாரியின் வாயில் நாக்காய் சாவி தொங்கியதால் அதனுள்ளும் சோதனையிட்டாள்.

இருந்த ஆபாசப் பத்திரிகைகளைப் புரட்டியவளுக்குத் தேடிய தகவல் கிடைத்தது.

விளம்பரம் ஒன்றை வெட்டியெடுத்து அட்டையில் ஒட்டியிருந்தான். ஆகாஷ்

'இளமை, நட்பில் இனிமை, பேச்சில் புதுமை -

தொடர்பு கொள்ள தொலைபேசி எண் --------

விநாடிக்கு 60 பைசா மட்டுமே,' கவர்ச்சியான பெண்ணுடனான விளம்பரம், அது.

ஆனந்திக்கு இது புதிதல்ல.

இலண்டனில் பொது தொலைபேசிக்கான சிகப்புக் கூண்டுகளுக்குள்ளே இது போன்ற ஆபாசப் படங்கள் ஒட்டப்பட்டிருக்கும் - கூடவே தொலைபேசி எண்ணுடன்.

அவசர ஆத்திரத்திற்கு ஒரு கண்ணாடி பூத்திற்குள் போய் நின்று டயல் செய்தால் நிமிர்ந்து, இயல்பாய் நிற்க முடியாதபடியான வக்கிர படங்கள் -

அங்கே எல்லாம் வெளிப்படை.

இங்கும் வக்கிரங்கள் இல்லாமலில்லை - ஆனால் ஒளிவு மறைவாய்.

இந்த வர்ண விளம்பர வலையில் சிக்கின இளைஞர்கள் வாழ்வு நரகம். பேச்சில் சொர்க்கம் காட்டுகிறேன் - வா என்று கூறி புதைத்து விடுவார்கள்.

இதையும் மீறி ஆனந்திக்குள் ஒரு சின்ன நிம்மதி -

''நல்லவேளை கஞ்சா, எல். எஸ். டி.ன்னு போதை வஸ்துக்களையும் ஆகாஷ் பழகலை...'' முணுமுணுத்தபடி அறைக் கதவை இழுத்துப் பூட்டினாள்.



## 12

''**கொ**ண்டு வா'' என்ற ஆணையுடன் பந்து வீசப்பட்டது. அம்பாய் பந்தைத் துரத்திய பைரு அதைக் கவ்வியபடி ஆனந்தனிடம் கொண்டுவந்து தந்தது.

''கெட்டிக்காரன்டா நீ...''

எஜமான் தட்டித்தர பூரிப்பாய் வாலாட்டியது.

'இனி அடுத்த விளையாட்டு என்ன?' என்பதாய் ஆனந்தனை ஏறிட்டது அது பாசமும் விசுவாசமுமான பார்வை.



ஆனந்தனுக்கு நாய் என்றால் ரொம்பவே பிடிக்கும்.

அவற்றின் விசுவாசம், கெட்டிக்காரத்தனம், பிரியம் எல்லாவற்றையும் ரசித்ததுண்டு.

பல ஆண்டுகளுக்கு முன் இரு கோம்பை நாய்கள், பண்ணையில் சுற்றித் திரிந்தன. ஆனால் அவை இறந்தபின் வேறு நாய்களை வாங்கி வளர்க்க வேண்டும் என யாருக்கும் தோன்றவில்லை.

பண்ணையை நிர்வகிக்கவே நேரம் போதாத சமயம் அது.

நிர்வாகத்தைக் கெடுபிடியாகவே நடத்திய ஆனந்தனுக்கு யாரிடமும் இலகுவாய் பழக முடியவில்லை. கல்லூரி நாட்களில்கூட அவனுக்கு தோளில் கை போடும்படியான நண்பர்கள் இல்லை. தன்னைப் போலவே தொழிலில் சிரத்தைக் காட்டுபவன் என்பதால்தான் பால ரமணியிடம் சமீப காலமாய் நெருங்கிய பழக்கம் - தன் தங்கை அமுதுவை அவனுக்குத் தரலாம் என்று நினைக்குமளவு.

மற்றபடி ஒதுங்கி இருந்தவனை பைரு இளக்கியது.

எதிர்பார்ப்பற்ற அந்த நாயின் அன்பு இதமாக இருந்தது.

பார்க்க கன்றுக்குட்டி அளவில் இருந்தாலும் ஐந்து மாதமேயான பைருவின் உற்சாகம், தொற்று நோயாய் ஒட்டியது.

தன் எஜமானனை அடிக்கடி வாய்விட்டு சிரிக்க வைத்தது.

அதே நேரத்தில் இத்தனை வித்தியாசமான ஒரு பரிசைத் தந்த பெண்ணும் ஆனந்தன் மனதுக்குள் மின்னல் அடித்தாள்.

அவளும் வித்தியாசமானவள்தான்.

''முதல்ல எனக்குக் கார் ஓட்டிக் காண்பி... எனக்குத் திருப்தியான பிறகுதான் உனக்கு லைசென்ஸ்....'' என்

ஆனந்தன் அதட்ட, நெறிதும் பிகுவோ அலட்டலோ இன்றி காரோட்ட அமர்ந்து விட்டாள் ஆனந்தி.

அவள் காரைச் செலுத்திய லாவகத்தில் அசந்தே போனான்.

தன் கையில்கூட சலிப்பாய் முனங்கும் கார், அவள் ஓட்ட பழமாய் நழுவியது.

நினைப்பை வாய் விட்டு சொல்லிவிட்டான்

''டிரைவர்கள் கடாமுடான்னு கியர் மாத்துவாங்க.... ஏன் என் கையிலேகூட சில சமயம் முரண்டுபிடிக்கும். நீ அருமையாய் ஓட்டறே...''

''கையில இல்ல விஷயம்... கால்களில்தான்! பாதம் முறையாய் கிளட்சை அழுத்தணும்... உங்களுக்குத் தெரியாததில்லையே...?'' - சொல்லிவிட்டு இயல்பாய் தோள் குலுக்கினாள்.

சில சாலை விதிமுறைகளை அவளுக்கு விளக்கி விட்டு ''நாளைக்கே ஆர்.டி.ஓ. அலுவலகம் போய் லைசென்ஸ் வாங்கிடலாம். நெரிசலான இடத்திலேயும் ஒருமுறை ஓட்டிடுறியா?'' கேட்டான்.

''நிச்சயமாய் அத்தான். உங்க நேரத்தை எனக்காக ஒதுக்கினதற்கும்... உங்க பாராட்டுக்காகவும் நன்றி.''

அவள் சிரிக்க, தன் முகம் சிவப்பது அவனுக்கே தெரிந்தது. ஆனால் அதைத் தடுக்கத்தான் வழியில்லை.

அவன் கூறியதை எல்லாம் கவனமாய் கிரகித்துத் திறமையாய் செயல்பட்டாள். அதைப் பார்த்து பிரமித்தவனுக்கு முதல்முறையாய் ஒரு சிந்தனை.

'பெண்கள் திறமையானவர்கள் தான் போலும்' என்று! போதிய சந்தர்ப்பங்கள் அமைய அவர்களது திறமைகள் பளிச்சிடும்.

அவளுக்கு எளிதாய் லைசென்ஸ் கிடைத்துவிட்டது.



'இனி இஷ்டம்போல கார் ஓட்டி ஊரைச் சுத்தலாம்னு அர்த்தமில்லை' என்று அவளுக்கு உத்தரவு போட துடித்த தன் நாவை அடக்க, ஆனந்தன் வெகு சிரமப்பட வேண்டியது இருந்தது.

'அப்படி சுற்றத்தானே மடையா காரையும், ஓட்டும் உரிமையையும் பெற்றிருக்கிறாள்' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

ஆனால் நினைத்தது போல ஆனந்தி இஷ்டத்திற்கு சுற்றவில்லை. அம்மாவை அவ்வப்போது கோயிலுக்கு, கடைக்குக் கூட்டிச் சென்றாள். காந்தி கிராமத்தின் சேவைப் பெண்களை இழுத்துப் போட்டும் அலைகிறாள்.

நல்லவேளை! தான் அவளிடம் இசகு பிசகாய் ஏதும் சொல்லவில்லை என்று நினைத்தவனை பைரு கவ்வி இழுத்தது.

அவன் போலியாய் அடிப்பது போல கை ஓங்க, பயந்ததுபோல அது விலகிய சமயம், நாயை உரசிவிடுவது போல வந்து நின்றது அந்த கார்!

கோபத்துடன் நிமிர்ந்த ஆனந்தனின் முகம், காரினுள் அமர்ந்திருந்தவளைப் பார்த்து சற்று சமாதானமானது.

''டிரைவர், காரை அந்த மரத்தடி நிழலிலே நிறுத்திக்கோ'' என்ற உத்தரவுடன் இறங்கினாள் சுதாங்கினி.

''அதிகாலையிலே காரிலேயே போய் உட பயிற்சியா?'' ஆனந்தன் கேட்டான். அவனது கேலியை புறம்தள்ளி 'கள்'ளென தானும் கேட்டாள்.

''அவளோட போக முடியாதுன்னு அவள் தந்தநோ உலா போறீங்களாக்கும்?'' அவனுக்கு அதன் அர்த்தம் புரி சற்று நேரம் பிடித்தது.

முகம் சூடேறினாலும் அமைதியாகவே கேட்டான்.

''என்ன சொல்றே?''

''நீங்க இந்த நாயோடு தினம் உலா போறது பற்றி கேள்விபட்டுதான் வந்தேன்... உங்ககிட்ட தனியாய் பேசணும்...''

''நாம கல்யாணம் பண்ணிக்கப் போறவங்க.... வீட்டிலேயே பேசலாமே?''

''இப்பதான் நான் அங்கே தாராளமாய் வந்து பேச முடியலியே....''

''என்ன தடைன்னு எனக்குப் புரியலை...''

''ஊருக்கே தெரியறது உங்களுக்கு மட்டும் தெரியலையா?''

அந்த இடக்குத் தொனியில் ஆனந்தன் முகம் சுழித்தான். இப்போது அவன் பார்க்கும் சுதாங்கினி, புதியவள். அதிகம் பல்லைக் காட்டாத, வார்த்தைகளை அள்ளி இறைக்காத, அமரிக்கையான பெண்ணாய் அவள் இல்லை.

இப்படி அதிகாலையில் தன்னைத் துரத்தி, ஆங்காரமாய் பேசுபவளைச் சற்று சலிப்புடன் பார்த்தான்.

''அவன் பரிசான நாய் மேல் உங்களுக்கு தனி பிரியம்னு ஊரிலே பேச்சு...''

''யோசித்துத் தந்த அருமையான பரிசுதான்.''

புன்னகையுடன் ஆமோதித்தான். சற்று முன் அவனே நன்றியுடன் நினைத்தது தானே?

தன் அருகே ஒட்டி நின்ற பைரூவைத் தடவினான்.

''எனக்கு நாய்ன்னா அடியோடு ஆகாதுன்னு இது வந்த அன்னைக்கே சொல்லிட்டேன். ஏதோ விருந்தாளி முகத்துக்காக ரெண்டு மாசம் இதை வீட்டுக் கொல்லைப் புறத்துல கட்டிப்போட்டுட்டு பிறகு விரட்டிடுவீங்கன்னு பார்த்தால்... இப்படி நாயோடு உலாவல் குலாவல்னு தொடருது. எனக்கு இது பிடிக்கலை.''



''அதாவது... ஆனந்தி தந்த பரிசு என்றதால் பைரூவை நான் நேசிக்கறேன்னு சொல்ல வர்றே?''

''........''

முறைத்தாள். கடுகடுவென்றிருந்த அவள் முகம் காண சகிக்கவில்லை!

''ஆனந்தி என் முறைப்பொண்ணு. நேரடியாகவே நான் அவளோட சுத்தலாம். தப்பில்லை.''

அதிர்ச்சி, சுதாவின் முகத்தில் அப்பட்டமாய் தெரிந்தது.

''அவள் அதுக்கும் துணிஞ்சவள்தான்... செய்... செய்யுங்க'' சொன்னவள் கண்கள் கலங்கிமுட்டின.

பார்த்தவனது மனம், இளகியது. ஆண்களின் கொதிப்பெல்லாம் பெண்கள் கண்ணீரின் ஒரு துளியில் 'புஸ்' என அடங்க வேண்டியதுதானே!

''ரோட்டில் நின்னு பேச வேணாம். கிளம்பு'' ஆறுதலாய் சொன்னான்.

''நேற்று நடந்ததைச் சொன்னாளா?''

''இப்படி புதிர் போடாதே சுதா. எனக்குப் புரியாது. பிடிக்கவுமில்லை.''

''நேற்று என்னைக் காரில் ஏற்றி சேரிக்குக் கூட்டிட்டுப் போனதைச் சொன்னாளா?''

அவன் புருவங்கள் மட்டும் உயர்ந்தன.

''அங்கே உங்களுக்கு என்ன வேலை?''

''சேரி பிள்ளைகளுக்கு துணிமணி தந்தாள். அதுக்குக் கைதட்ட ஒரு ஆள் தேவைப்பட்டது போல.''

''அதுக்கு அமுது, அகிலாவை கூட்டிட்டுப்போய் இருக்கலாமே?''

''நம்ம குடும்பத்துப் பெண்ணுங்க அங்கே போக லாமா? உளறாதீங்க'' இப்படி கறாராய், காரமாய் தன்

மனைவியாகப் போகும் பெண் தன்னை அதட்டியது ஆனந்தனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை.

இறுக்கமாய் நின்றான்.

''நீ சொல்றது வெள்ளங்கோயில் பக்கமா? அங்க என்கூட ஒருதரம் வந்தாள்'' தனக்குள்ளாகப் பேசினான்.

''ஓ... அப்ப நீங்க உண்மையாலுமே அவளைக் கூட்டிட்டுச் சுத்தத்தான் செய்றீங்க...?''

''அன்று அப்படி நேர்ந்தது. சரி பைரு... நாம வீடு திரும்பலாமா?'' தன் கோபத்தை அடக்க பேச்சை மாற்றினான்.

ஆனால், சுதா விடவில்லை.

''முதல்ல நாயோட பேசுறதை, நடக்கிறதை நிறுத்துங்க. சகிக்கலை. எனக்கும் அம்மாவுக்கும் நாய்ன்னாலே ஆகாது அலர்ஜி.''

''உங்க அம்மா மாப்பிள்ளை வீட்டோட வந்து தங்கி விடப்போறாங்களா என்ன?''

''ஏன்... ஒரு நாலைஞ்சுநாள். வந்து தங்கிப் போகலாம்ல?''

''அப்ப பார்த்துக்கலாம். இப்ப நீ கிளம்பு சுதா.''

''ஆக நான் சொல்றதை நீங்க கேட்கப்போறதில்லை?''

''நீ எனக்கு உத்தரவிட வேண்டிய அவசியமில்லை.''

''உங்க அம்மாவே நான் சொன்னபடி மாறிகிட்டாங்க. வீட்டு நிர்வாகமும் கூட.''

''அது தப்புங்கிறது இப்ப புரியுது.''

திரும்பி நடந்தவனை வெறித்தபடி நின்றாள்.

கோபம் தணிந்து அவளை பயம் பிடித்து ஆட்டியது. என்றுமில்லாமல் இன்று தன் ஆங்கார முகத்தைக் காட்டியாகிவிட்டது. இதனால் என்னென்ன விளைவுகள் நேருமோ?



விலகி நடந்த ஆனந்தனுக்கு சுதாவின் இந்த புதிய பிரதிபலிப்பு எதிர்பாராதது... எரிச்சலூட்டியது.

ஆனந்தி இவனை ஏன் சேரிக்குக் கூட்டிப் போனாள்?

கூடவே தன் தவறும் அன்று அவனுக்குத் தெளிவானது. கட்டப் போகும் உரிமை உள்ளவளின் அதட்டலையே தன்னால் ரசிக்க முடியவில்லையே.. இதுவரை பண்ணை வீட்டின் ராணியாய் வளையவந்த தன் தாய் எப்படி இந்த முரட்டு அதிகாரத்தைப் பொறுக்கக் கூடும்?

பாவம், மகனுக்காக சகித்து இருக்கிறாள். ஆனாலும், அச்சூழ்நிலைக்குள் தன் தாயைத் தள்ளியது தன் தப்புதானே? முதல்நாளே ஆனந்தி சொன்னது இப்போது உள்ளே ரீங்கரித்தது.

'ஆண்கள் தவறு செய்யும்போது நாம் கண்டிச்சு மாற்றாமல் விட்டால் அவங்க சலிப்பூட்டறவங்களாய்ப் போயிடுவாங்க' - அப்படி அவள் சொன்னது உண்மை தானோ?

தனக்குள்ளாக சிரித்துக் கொண்டான்.

அன்று கொதிக்கச் செய்த அவள் பேச்சு, இன்று சிரிக்க வைக்கிறதே?

வீடு திரும்பியவன் சூடான காப்பியுடன் ஆனந்தியைத் தேடிப் போனான்.

''அவங்க கோலம் போட்டுட்டு இருக்காங்கய்யா'' பெருமிதமாய் அறிவித்தான் பெரியதாயி.

''எதுக்கு... என்ன?''

''பொன்னிகிட்ட பழகி இப்ப புது தினுசாய் போடுறாங்க.''

கூடத்தில் இருந்தே தெரிந்த காட்சி அவனைக் கட்டி நிறுத்தியது. நின்று ரசித்தான்.

மிக உன்னிப்பாய் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள் ஆனந்தி. அவ்வப்போது விரல்களால் ஏதோ கணக்கு போட்டபடி நெற்றியைத் தட்டிக்கொண்டாள்.

''ம்ம்... நல்லாத்தான் இருக்கு'' என்று எழுந்தவன், முகம் எதிரே நின்றவளைப் பார்த்து, மேலும் மலர்ந்தது.

''இது நானே உருவாக்கிய கோலம்'' என்றாள் உற்சாகமாய்.

''அத்தனை முன்னேற்றமா? ஆனா இப்ப மணி ஏழரை. கோலத்தை விடியற்காலையில் போடறதுதான் மரபு.''

''நீ.. நீ பால் கறந்தியா?''

''ம்ம்... ரங்கன்கிட்ட இருந்து ஓரளவு கத்துகிட்டேன். ஆனாலும் வேகம் பத்தலை. பசு உதைச்சிடுமோன்னு பயம் வேறு'' - இன்னும் தன் கோலத்தை ரசித்தபடியே சொன்னாள்.

''இதெல்லாம் எதுக்குக் கத்துக்கிறே?''

இப்போது அவனை முழுசாய் பார்த்தாள் ''ஒரு ஆர்வம்தான். இந்த இரண்டு மாசமும் எனக்குள்ளே அழுந்த பதிஞ்சிடும்னுதான்.''

''வேறென்ன கற்றுக்கிறே?''

''சமையல்! நேற்று நீங்க ரசிச்சுச் சாப்பிட்ட அன்னாசிப் பழ பச்சடி நான் செய்ததுதான்.''

சாப்பிடும்போது அதிகம் பேசாததான் அதை ரசித்துப் பாராட்டியது நினைப்பு இருந்தது.

''நேற்றே சொல்லி இருக்கலாமே... நீ செய்ததுன்னு.''

''ம்ம்... அதைச் சொல்லி உங்க ருசியைக் கெடுப்பானேன்னுதான் சொல்லலை'' குறும்பாய் சிரித்தாள்.

''ஆனந்தி... நான் கொஞ்சம் முரட்டு சுபாவி.''

''புரியுது அத்தான். நானும் கொஞ்சம் வெளிப்படையாய் பேசறவள். அதுதான் நம்ம முதல் சந்திப்பின்



போது ரொம்ப முரண்பாடா தெரிஞ்சது... உங்களுக்கு ஆத்திர மூட்டுறது என் நோக்கமில்லை...''

''மறந்திடுவோம் நீ காபி குடிச்சாச்சா?

''இன்னொரு அரை தம்ளர் வேணும். ''எடுத்திட்டு வாயேன். உன்கிட்ட பேசணும்.''

''எதுபற்றி?'' உற்சாகமாய் கேட்டாள்.

''நேற்று சுதாங்கினியை சேரிபக்கம் அழைச்சிட்டுப் போனியாமே... அதுபற்றி பேசணும்.''

ஒரு அசட்டு முழியுடன் நின்றிருந்தாள் அவள்!



# 13

''என்ன அது உண்மைதானா?''

கையில் இருந்த காபி கோப்பையில் இருந்து வளைந்து சுழித்து மேலேறிய ஆவியையே பார்த்து நின்றாள் ஆனந்தி.

காபியின் மணம் அபாரம்தான். நாசி முகர்ந்தாலும் மனம் அதை ரசிக்கும் நிலையில் இல்லை.

''சுதாங்கினியை நான் சேரிக்கு கூட்டிட்டுப் போனது உண்மைதான் அத்தான்.''

ஆனந்தனின் கேள்விக்கு பவ்யமாய் பதில் அளித்தாள்.

''சரி... ஏன் அந்த திடீர் விஜயம்?''

அவள் அவனைப் பார்த்தாள்.

''நன்றி. ஏன் என் காதலியை அங்கெல்லாம் கூட்டிட்டுப் போனேன்னு உடனே திட்டாமல் என்ன காரணம்னு கேட்கிறதுக்கு நன்றி.''

''ஒரு திருத்தம். அவள் என் வருங்கால மனைவி, அவ்வளவுதான்.''

''அப்படி நிச்சயிக்கப்பட்ட பிறகுமா சுதாங்கினி மேல் இன்னும் உங்களுக்குக் காதல் வரலை?''

அவளது விழிகளும் கேள்வி கேட்டன. அதில் சிக்க விரும்பாமல் நழுவினான்.

''சேரிக்கு ஏன்போனீங்க என்கிறதுதான் என் கேள்வி?''

ஆனால், கேட்டவன் தொனியில் கடுமை இல்லை, இளம் கனிவுகூட இருப்பதாய் தோன்றியது.

''அங்கிருந்த பிள்ளைகளுக்குத் துணி, தின்பண்டம் கொடுக்கறதுக்காக.''

''நாம் போன முறை அங்கே போனப்ப அந்தக் குழந்தைகளைப் பார்த்தியாக்கும்?''

''ஆமா. உங்க காரைப் பார்க்க வந்தாங்க. சுற்றி நின்று ஆராய்ச்சி நடந்தது.''

''நீ அவங்களைப் பற்றின ஆராய்ச்சியில் இறங்கிட்டே?''

''ஆராயத் தேவையென்ன? அதான் அப்பட்டமாய் தெரிஞ்சதே.''

படபடப்பாய் வந்த பதில் கேட்டு புன்னகைத்தான்.

''துணி இல்லாத பிள்ளைகளுக்குத் துணி கொடுக்கணும்னு தோணிடுச்சு. சரி, அதற்கு சுதாவுடைய துணை எதுக்கு? நம்ம அமுது, அகிலையக் கூட்டிட்டுப்போய் இருக்கலாமே?''

''அது முறையான்னு தெரியலை. நான் இப்படி இதுக்காய் போறேன்னு சொல்லிக்கவும் விரும்பலை. தனியாய் போகிறதாய்தான் இருந்தேன். ஆனால், சுதாதான் அதெல்லாம் தப்புன்னாங்க.''

''சுதாவை நீ ரெண்டே தரம் இங்கே பார்த்ததுதானே?'' யோசனையாய் மீசையை நீவினான்.



''ரங்கனை சந்தையிலே தேங்காய் மூடையோட இறக்கிவிடப் போனேன். அந்தப் பக்கம் என்னைப் பார்த்த சுதாங்கினி, கொஞ்சம் யோசனைகள் சொன்னாங்க. அதாவது - இப்படி பொண்ணு காரோட்டுறதும், வேலை ஆட்களோட வர்றதும்கூட தப்பு. ஊர்ல இஷ்டத்துக்குப் பேசுவாங்கன்னாங்க.''

''ம்ம்....'' கைகளைக் கட்டியபடி ஆனந்தன் அவள் கூறியதை உன்னிப்பாய் கவனித்தான்.

''அப்பதான் நான் கேட்டேன் நீங்களும் டிரைவரோடு தனியாய் தான் வெளியே போய் வந்துட்டு இருக்கீங்க. ஊர் உங்களைப் பற்றி பேசாதான்னு.''

எழுந்த சிரிப்பை மென்று அடக்கினான் ஆனந்தன்.

''அப்படி நான் கேட்டிருக்கக்கூடாது போல. சுதாவுக்குக் கோபம் வந்திடுச்சு.'' 'என்னைப் பற்றி ஊராருக்குத் தெரியும். என் நடத்தை அப்பழுக்கில்லாதது. தவிர ஆனந்தனின் மனைவி ஆகப் போறவள் நான். ஆனா, உன் நிலை அப்படி இல்லை. வெளிநாட்டிலே இருந்து வந்த பொண்ணு எப்படின்னு ஊர் யோசிக்கிறப்ப நீ இப்படி அலையுறது சரியில்லை'ன்னு எச்சரிச்சாங்க.''

''ம்ஹூம்...?''

''அப்பஎன்னா இப்ப நான் ஒரு இடத்துக்குப் போக வேண்டியது இருக்குது. நீங்களும் வந்தால் எனக்கு பாதுகாப்புன்னேன். எங்கேன்னு கேட்டாங்க சுதா. எனக்கு அந்த இடத்தின் பேர் உண்மையிலேயே தெரியலை அத்தான்.''

'வழி தெரியும். அங்கு இருக்கிறவங்ககிட்ட கா டிக்கியிலுள்ள பொருட்களை தந்துட்டு திரும்ப வேண்டிய தான்'னேன். சுதாங்கினி சம்மதிச்சு அவங்க காரை அனு பிட்டு என்கூட வந்துட்டாங்க.''

''உன்கூட வந்த ரங்கன் என்ன ஆனான்?''

''அவன் அடுத்த வேலையைப் பார்க்கணும்னு கிளம்பிட்டானே.''

''சுதாவுக்கு உன்கூட பேசணும்கிற எண்ணமும் இருந்திருக்கும்'' அரைச்சிரிப்புடன் கருத்து சொன்னாள்.

''ஆமா, போற வழியெல்லாம் நிறைய அறிவுரை கிடைச்சது.''

''ம்ம்... என் மாதிரி?'' பார்வையை சற்று மாற்றியபடி கேட்டான்.

எந்த நிலையிலும் அவன் கம்பீரம் மாறாததைக் கவனித்தாள். எளிய மனைப் பலகையில் சம்மணம் இட்டாலும் ராஜா போலத்தான் தோன்றுவான் போலும்!

''என்ன மாதிரி அறிவுரைன்னு கேட்டேன்.''

''அ... ஆங்... வந்து என்னால் இந்த வீட்டிலே குழப்பம் நேரக்கூடாதுன்னாங்க.''

''உன்னால் என்ன குழப்பம்?'' குழப்பத்துடனே கேட்டான்.

''அதாவது பைரூவை நான் முன்யோசனை இல்லாமல் இங்கே கூட்டிட்டு வந்துட்டேன். நாய்களை வளர்க்காத ஒரு குடும்பச் சூழலுக்கு அது தப்பான பரிசு. அப்புறம் உங்களுக்குக் கோபம் வர்ற மாதிரி பேசினது...''

''அதை சுதாவுக்கு யார் சொன்னா?''

''ஏன்... நீங்கதான் சொல்லி இருப்பீங்கன்னு நினைச்சேன்.''

''இல்லை'' அழுத்தமாய் தலை அசைத்தான்.

''தவிர'' சங்கோஜத்துடன் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.

''நீ சொன்னது முழுக்கத் தப்பில்லைன்னுகூட இப்ப தோணிச்சு ஆனந்தி...''

அவள் வெகு வியப்புடன் அவனையே பார்த்தாள்.



''அகி குட்டியிடம் நீ அந்த சூழ்நிலையில் சகஜமாய் பிரியமாய் பேசினது பெரிசு. தவிர அவள் தனியாய் படுக்கக் கூடாதுன்னு முதல்நாளே பின் அறைக்குப் போய் அவளோட இருந்தது. இதற்கெல்லாம் நான் நன்றிதான் சொல்லணும். அதெல்லாம் தவிர உன் பேச்சு, பயந்த அகிலாவைச் சிரிக்கவும் வைக்குதே...''

''சிரிக்க மட்டுமில்லை அத்தான். சிந்திக்கவும் வேண்டிய விஷயம் இது. நான் மன இயல் பாடத்திலே இந்தக் கருத்திலே ஒரு கட்டுரை எழுதினேன். அதன் தலைப்பு - சீனப் பெண்ணின் பாதங்கள்.''

''சுவாரஸ்யமான தலைப்பு.''

''போன நூற்றாண்டு வரை சீனாவில் பெண் குழந்தைகளின் பாதங்களை இறுகக் கட்டியே வைப்பார்களாம். சின்னப் பாதத்தின் சிங்கார நடைதான் பெண்ணின் அழகுன்றது அவங்க மரபு. ஆனா விளைவு? குழந்தைகளோட நரம்புமண்டலமும், வளர்ச்சியும் ரொம்பப் பாதிக்கப்பட்டன. கிழக்கே பெண்களுக்கு நிறையக் கட்டுப் பாடுகள்... அவளுக்குக் காட்டப்படும் அதிகப்படி அன்புகூட ஒரு வகை விலங்குதான். அது அவளுடைய செயல், சிந்தனைகளைப் பாதிக்கிறது. சிறகு வெட்டப்பட்ட கிளியாகிறாள். அந்தக் கிளி சுலபமாய் பூனைக்கு இரையாகிடுமே! ஆக தங்களை யாரும் அழுந்தக் கட்டி விடக்கூடாதுன்றதிலே பெண்கள் உஷாராய் இருக்கணுங் கிறது என் கருத்து. அதைத்தான் வந்ததும் சமயம் சந்தர்ப்பம் தெரியாம சொல்லிட்டேன்.''

அவன் சொன்னதை அமைதியும் ஆர்வமுமாய் கவனித்தான்.

''புரியுது. ஆனா புரியாதது என்னென்னா... சுதாவு டைய அசட்டு அறிவுரையெல்லாம் கேட்டு உனக்குத் தானே எரிச்சல் வந்திருக்கணும்? சுதாவுக்கு ஏன் எங்கிட்ட வந்து

கோபமாய் முறையிடும் அளவிற்கு ஆத்திரம்?'' பாதி தனக்குள்ளாகவும் மீதி அவளிடமாகவும் கேட்டான்.

''நான் பிள்ளைகளுக்கான துணிமணி, இனிப்பு எல்லாம் எடுத்துத் தர பொடிசுங்க குஷியாகி காருக்குள்ளே ஏறிடுச்சுங்க. சீட்டிலே குதிச்சு, ஆரனை அழுத்தி ஏகக் கலாட்டா! சுதாவையும் குழந்தைங்க தொட, அவங்க கோபத்துல இறங்கி 'விடுவிடு'ன்னு நடக்கத் தொடங் கிட்டாங்க. அதுங்களை இறக்கி விட்டுவிட்டு சுதாவை மறுபடி காரில் ஏற்றி வீட்டிலே கொண்டு விட்டேன்.''

எல்லா நாணயங்களுக்கும் இரு பக்கங்கள் உண்டு என்பது தெரிந்தவள் ஆனந்தி.

இப்போது விவரம் தெளிவாகவே புரிந்தது.

''நம்ம வேலை ஆட்களில் யாரையாவது துணைக்கு வைச்சுக்கோ அதில் தப்பில்லை. காந்தி கிராமத்தையும் இப்ப இந்த சேரியின் உதவிக்கு இழுத்துட்டியாமே?''

''ம்ம்... அந்த மக்களுக்குச் சம்பாதிக்கத் தெரியுது. அதைச் சரியா சேமிக்கவும் முறையாய் செலவழிக்கவும்தான் தெரியலை. சமூக சேவகியம்மா அதையெல்லாம் சரி பண்றாங்க. சீக்கிரம் சேரி நிலைமை கொஞ்சம் சீராயிடும்னு நம்புறேன்.''

பிரமிப்பும் பிரியமுமாய் அவளைப் பார்த்தவன் - ''சேவை நிறையவே செய்துட்டே. சுற்றுலா மாதிரி போகலாமே. கும்பக்கரை அருவிக்கு இன்னும் நீ போகலியே?'' என்றான்.

''அகிக்கு பள்ளி விடுமுறை சீக்கிரமாய், போகணும்... வரட்டா?''

''இப்ப என்ன சமையல் அறையிலே பாடமா?''

''ஆமாம். எப்படி வெந்நீர் போடறதுன்னு!''

சேர்ந்து சிரித்தனர்.



''அப்புறம் உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கணுமே...''

''கேளு.''

''இங்க சராசரி குடும்பத்து போன் கட்டணம் எவ்வளவு வரும்?''

''ஆயிரம் ரூபாய்? நம்ம வீட்டுக்கு இரண்டாயிரத்து ஐநூறு போல ஆகும். நீ பேசத்தான் ஐ.எஸ்.டி. வசதி செய்தேன் ஆனந்தி. நீ அதை அதிகம் பயன்படுத்தற தில்லையே?''

''அப்பாவே அவங்களுக்கு வசதியான நேரம் அழைக்க, அடிக்கடி பேசிக்கிறோமே... பிறகென்ன?''

இந்த சகஜமான உரையாடல் அவளை அன்று முழுக்க பூரிப்பில் ஆழ்த்தியது. உல்லாசமாய் தனக்குள்ளே மகிழ்ச்சிக் கோலம் இழுத்தாள்.... வளைத்தாள். இவ்வீட்டாரின் அன்பை எளிதாய் பெற்றுவிட்ட தனக்கு ஆனந்தனின் நல்லெண்ணம் இன்னும் கிடைக்கவில்லையே என்ற குறை இப்போது மறைந்திருந்தது.

சுதாவின் ஆத்திரத்தை மீற தன் பக்க நியாயத்தைக் கேட்ட அவனது பரிவு அவளை நெகிழ்த்தி இருந்தது.

ஆனால், அதே சமயம் வழக்கமானதை விட தொலை பேசி கட்டணம் ரொம்பவே அதிகம் வந்திருக்கிறதே என்பது உதைத்தது. அத்தனைக்கு ஆகாஷ் என்ன... யாரிடம் பேசினான்?

நேரே தன் அறைக்குப் போய் ஆகாஷின் அறையில் இருந்து எடுத்த பத்திரிகை விளம்பரத்தை மீண்டும் வாசித்தாள்.

'மூன்று மாதம் நீங்கள் ஒரே பெண்ணுடன் பேசினால் பிறகு நேரே அவளை மும்பையில் சந்திக்க ஏற்பாடும் செய்யப் படும்...' இப்படி வேறு ஒரு தூண்டிலை வீசி இருந்தார்கள்.

இப்படிப்பட்ட நிறுவனங்கள், தொடங்கிய ஜோரி லேயே லாபம் காட்டக் காரணம், இப்போது புரிந்தது.

தரப்பட்டு இருந்தது எண்ணைத் தன் தொலைபேசியில் தட்டினாள். சில விநாடிகளில் தொடர்பு கிடைத்தது.

''அலோ...'' தேனாய் வழிந்தது ஒரு குரல்.

சலிப்புடன் தொடர்பைத் துண்டித்தாள்.

ஏனோ ஆகாஷின் மீது இரக்கமே பெருகியது.

மரங்களும் தண்ணீருமான சூழல் மதியச் சூரியனையும் வென்று இருந்தது. அருவி நீர் ஆரவாரம் செய்தது.

''முன்பே இங்கே இந்த கும்பக்கரைக்கு வராமப் போனமே அமுது...'' வருந்தினாள் ஆனந்தி.

''இனி அடிக்கடி வந்தால் போச்சு. கும்பக்கரையிலே ஆண்டு முழுக்கத் தண்ணீ விழும்.''

''பஸ் வசதி இல்லாததால் பெரிய கூட்டம் இல்லை. நமக்குத் தோதான தனிமை வாய்ச்சிருக்குது.''

இவர்களது சாமான்களுக்குக் காவலாய் சற்றுத் தள்ளி பெரியதாயி இருக்க, நீரில் கால்களை அளைந்தபடி இருந்தனர் இருவரும்.

அகிலா ஆவலுடன், கொட்டும் நீரில் தலை விட்டிருந்தாள்.

''அவர்... இப்ப வருவாரா ஆனந்தி?'' அச்சமும் ஆர்வமுமாய் கேட்டாள் அமுதினி.

''வர்றதாய்த்தான் சொன்னார். அவர் வீட்டு முன்னே என்னைக் கண்ட கவிஞருக்கு வார்த்தையே வரலை... தடுமாறிட்டார் தெரியுமா?''

''ரங்கன் மூலம் அவர் வீட்டைக் கண்டுபிடிச் சேன்னியே... ரங்கன் வீட்டை ஒட்டி இருக்காரா?''

''ம்ம்... ஏறக்குறைய குடிசை. பெத்தவங்க இல்லை. பாட்டிதான் ஆடு வளர்த்து கவிஞருக்குச் சோறுபோடுறாங்க. கவிஞர், மதியம் வரை கட்டில்ல படுத்திட்டு அப்பப்ப கவிதை பாடுறதோடு சரி!''



அமுது விட்டுக் கொடுக்க வில்லை.

''படைப்பாளிங்க கொஞ்சம் விநோதமானவங்கதான்.''

''அவங்க படைப்பை வாசிப்பது பேச்சை கேட்பது என்று நாம் இருக்கும் வரை பிரச்சினை இல்லை. அவங்களோட வாழணும்ங்கிறப்பதான் பிரச்சினை வருது!''

சரக் கூழாங்கற்களைத் தடவினாள் அமுது.

''அமுது... இனி உனக்கும் சேர்த்து அந்தப் பாட்டிதான் கஞ்சி ஊத்தணும்.

''அவர் போற கவியரங்கம், கல்யாணங்களில் காசு, தரமாட்டாங்களா?''

''அது அவருடைய சலவைத் துணிக்கும், வெள்ளைச் செருப்புக்குமே சரியாயிடும்.''

''அதாவது கவிஞருக்குப் பணம் இல்லாததுதான் பிரச்சினைங்கிறயா?''

''உன்னை வாடாம காப்பாத்தற அளவு சம்பாதிக்க வேண்டியது அவர் கடமை. வரவுக்குள்ளே சமாளிக்கிறது உன் திறமை. இந்த உண்மைகள்தானே அமுது, வாழ்க்கைக்கு அடிப்படை.''

''குளிக்க வாங்க சீக்கிரம்.''

அகிலா தலை நீட்டிக் கத்த, அருவியை நோக்கி நடந்தனர் இரு பெண்களும்.



# 14

**தி**ரண்டு உருண்ட மல்யுத்த வீரனின் மார்பு போல இருந்தன மலைக்குன்றுகள். அதில் புரளும் கனத்த முத்துமாலை போல வழிந்திருந்தது அருவி. மலைச்சரிவுகளை

மூடியிருந்தவை முட்செடிகள்தான் என்றாலும் பார்வைக்கு பசுமையாய் இருந்தன. ஆள் அரவமற்ற அவ்விடத்தில் நீர் ஆரவாரம் செய்து கொண்டிருந்தது.

அதன் சாரலை நோக்கி சிலிர்ப்புடன் நடந்தனர் அமுதுவும் ஆனந்தியும். வெட்கத்துடன் முதலில் சிணுங்கி, பின் கணவனின் பிடிக்குள் முழுதாய் அடங்கும் புதுப் பெண்ணாய் அருவியின் பொழியலுக்குள் ஒன்றினார்கள்.

குளிர் தவிர வேறு ஒரு நடுக்கத்தில் அமுதினியின் உதடுகள் தந்தியடித்தன.

''கவிஞர் வந்ததும்... அவரிட்ட என்ன பேசறது ஆனந்தி?''

''அவர் பேசட்டும் - கேட்போம்....''

''ம்ம்.''

நீர் அவர்களைச் சுகமாய் சுத்தம் செய்தது.

பெரியதாயி அவர்களை அதட்டி அழைக்கும் வரை அச்சுகத்தை அனுபவித்தார்கள்.

''கண்ணெல்லாம் செந்தாமரைக் கணக்காப் போச்சு. வந்து தலையத் துவட்டிக்குங்க...''

நீரிலிருந்து வெளியேறி தலை துவட்டி, ஆடை மாற்றி விட்டு உணவின் முன் அமர்ந்தார்கள்.

சித்திரான்ன வகைகள், வடை, வடகம் என்று நாவூறச் செய்த உணவு வகைகள்.

''கபகபன்னு பசிக்குமே - ஒன்னும் மிஞ்சக் கூடாது'' என்றபடி பரிமாறினாள் பெரியதாயி.

திருப்தியாய் சாப்பிட்டு அருவிநீரில் தட்டுக்களைக் கழுவினார்கள்.

ஈரிழைத் துண்டில் முறுக்கிச் சுற்றிய கூந்தலைப் பிரித்து விட்டு ஆற்றினர்.

''அடிக்குட்டி, உந்தலையிலே ஈறாய் தெரியுதே - ட்காரு. ஆயா உருவி விடுறேன்.''



''நாங்க இப்படியே நடந்திட்டு வரோம் ஆயா...'' என்றபடி பெண்கள் இருவரும் நழுவி பாறைச் செதுக்கலான படிகளில் ஏறலாயினர்.

''பார்த்துப்பா... அதிகத் தொலைவு போயிராதீங்க...''

''ஆகட்டும் ஆயா...''

மரங்களும் நீருமான சூழல் வெயிலை ஒருங்கட்டி யிருந்தது.

சற்று நடந்ததுமே அருவியின் இரைச்சல் குறைந்தது.

'சட்'டென்று நின்ற அமுதினி ஓடை நீரை ஒட்டியிருந்த அரசமரத்தடியை நோக்கி ரகசியமாய் விரல் நீட்டினாள்... அவளது விரல்கள் நடுங்கின.

மரத்தடியில் நின்றிருந்தான் இளமுருகு!

இப்போது ஆனந்திக்குமே பதறியது.

ஏன் இவனை இங்கு வரச் சொன்னோம்? என்ன பேசுவது? என்ற பதட்டம்.

''வணக்கங்க.'' - கை குவித்தான்.

''வந்ததுக்கு நன்றி... வணக்கம்... இதுவரை நீங்க மேடையில் பேசினதைத்தான் அமுது கேட்டதுண்டு. உங்களை... அதான்... வரச் சொன்னேன்.''

''பண்ணை வீட்டிற்கு ஒருமுறை வந்தேன். பிறகு வாய்ப்பில்லை...''

அமுது துணிவைத் திரட்டி மெள்ள கேட்டாள் - ''இப்ப ஏதும் எழுதறீங்களா?''

''கவிதைகள் - சில கதைகள்.''

''ஏதும் பிரசுரமாகி இருக்குதா?''

''இலக்கிய பத்திரிகைகள்ல வரும் வர்த்தக பத்திரிகை களுக்கு எங்கள் அருமை தெரியாதே.''

சற்று காட்டமானது அவன் குரல்.

''இலக்கியப் பத்திரிகைன்னா... நீங்களும் நண்பர்களும் சேர்ந்து நடத்தற 'காட்டாறு' பத்திரிகைதானே? நூறு பிரதிகள் அச்சேறுமா?''

சற்று விழித்தவன்-

''ம்ம்... பிறரிடம் போய் வாய்ப்பிற்காகத் தொங்கறது எனக்குப் பிடிக்காது?'' என்றான் கெத்தாய்.

''ஏன் தொங்கணும்? நாம அனுப்பறது தரமானதாய் இருந்தால் தானாய் அச்சில் ஏறுமே?''

ஆனந்தி சொன்னதை அவன் எதிர்பார்க்கவில்லை.

''ஒன்னு அச்சில் ஏற நாம பத்து கவிதை அனுப்பணும்'' என்றான் அலுப்பாய்.

''பத்து வரணும்னா நூறு அனுப்பலாம் - தப்பில்லை...''

''உங்களுக்கு எங்களுடைய போராட்டமெல்லாம் புரியாது. சிற்பி தன் உளியைக் கொண்டு அம்மி கொத்தக் கூடாது.''

''வேண்டாம். சிலையே செய்ங்க - அம்சமாய் இருக்கும்.''

''ம்ம்... இப்ப நான் விஞ்ஞானத் தொடர் ஒன்றை எழுதலாம்னு இருக்கேன்... கவிதை நடையிலே ஒரு விஞ்ஞானத் தொடர் - எப்படி?''

இப்போது விழித்தது பெண்கள்தான்.

''சுஜாதா ஸார் என்ஜினியர். கம்ப்யூட்டரோடு பரிச்சயமும் இருக்கறதால் விஞ்ஞான கதைகளை இயல்பாய் எழுதறார்...'' இழுத்தாள் அமுதினி.

''உங்களுக்கும் கம்ப்யூட்டர், இன்டர்நெட் இதிலெல்லாம் பரிச்சயம் உண்டா?'' - இது ஆனந்தியின் சந்தேகம்.



''அதுக்கெல்லாம் எதுங்க நேரம்? எழுதுகோலைப் பிடிச்சால் உள்ளே ஊறுற கற்பனையை வடிக்கவே எனக்குப் பொழுதில்லை.''

சிறு எள்ளலுடன் தோள் குலுக்கினான்.

''விஞ்ஞான கண்டுபிடிப்புகள், புதிர்கள் பற்றின புத்தகமாவது வாசிக்கதுண்டா? 'பர்முடா முக்கோண பிரதேசம்' பற்றிய நூல் ரொம்ப சுவாரஸ்யம் - அங்கே நடக்கும் விபத்துக்கள், மறைவுகள் எல்லாம் மர்மம்தான்னு உலகமே மருளுதே?''

வேகமாய் தலையசைத்தான்.

''என் நோக்கம் அதில்லைங்க. நான் வாசிக்கறதில்லை. என் எழுத்தைப் பிறர் வாசிக்கணும், நேசிக்கணும்... காதலிக்கணும்...''

அவன் விழிகள் அமுதினியை விழுங்கி விடுவது போல வெறித்தன. ''200, 250 பக்கம்னு நான் எழுதி அனுப்பினதை எல்லாம் பத்திரிகை ஆபீஸில குப்பை யாட்டம் போட்டு வச்சிருக்காங்க.... நம்ம மதிப்பு பட்டணத்திலே அவங்களுக்குப் புரியலை... பத்திரிகை ஆசிரியர்களை சந்திக்கறது லேசாயில்லை...''

''உங்க எழுத்துப் பிடிச்சிருந்தால்...''

''முதல்ல அவங்களுக்குப் புரியணுமே... இவன் கிராமத்தானுங்கற இளக்காரம் வேற...''

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க. மேலாண்மை பொன்னுசாமி, கரிசல்காட்டுக்காரர். எல்லாம் கிராமத்திலே இருந்தபடிதானே எழுதறாங்க.'' சமாதானமாய் சொன்னாள் அமுதினி.

அவர்களெல்லாம் யார் என்பது போல ஒரு கர்வப் பார்வையை வீசினான்.

மேலே பேச முடியாது நின்றவளின் மேனியைத் துழாவின அவனது விழிகள்.

அருவி நீராடலால் பட்டான கூந்தல் காற்றிலாட பெண்கள் மேலும் வசீகரமாய் தெரிந்தனர். கவிஞனது கண்களும் மேலும் கூர்மையாய் அவர்களை ஆராய்ந்தன.

''நாம் போகலாமா ஆனந்தி?'' - சற்று சங்கடத்துடன் மற்றவளின் தோளைத் தட்டினாள் அமுதினி.

''ஆகட்டும். உங்களின் முயற்சிக்கு எங்களது வாழ்த்துக்கள் கவிஞரே...''

''என்ன இளம்பியாச்சா... வேறேதும் பேசலாமே?''

''பிறகு பார்ப்போம்.''

காரில் திரும்பும் போது அமுதினி பேசவேயில்லை. ...ரும் போது அவளிலிருந்த துடிப்பும் துள்ளலும் வற்றிப் ...ாயிருந்தன.

யோசனையில் ஆழ்ந்திருந்தவள், அகிலாவின் ...ர்விகளிலிருந்து தப்புவதற்காய்,

'குளிச்ச அசதி - தூக்கமாய் வருது' என்று கண்களை ...க் கொண்டாள். 'யோசிக்கட்டும்... மேடையில் ...ங்கும் கவிஞன் வேறு. வாழ்க்கையின் உண்மை ...கேசன் என்பது நன்கு புரியட்டும்' என்று ஆனந்தியும் ... விட்டாள்.

...ஆக, தான் இங்கு இளமுருகுவைத் தனிமையில் பேச ...த்ததில் தப்பில்லை என்ற ஆசுவாசத்துடன் அவளும் ... கண்களை மூடினாள்.

...மூடிய தன் கண்களுக்குள்ளே தெரிந்த உருவம் ...க் கிள்ள, திடுக்கிட்டு கண் திறந்தாள் ஆனந்தி.

...ன் இவன் உருவம் தனக்குள் தெரிகின்றது...?

...துவும் இத்தனைத் தெளிவாய்...?

...ற்றவர்களைக் கரை தூக்க முயற்சிக்கும் தானும் ஏதோ ...குட்டைக்குள் சிக்கி இருப்பது புரிந்தது.

மனம் சஞ்சலமானது!

அமுதினிக்குள்ளும் சந்தேகங்கள்.

அவை கூடி உருவாக்கிய சஞ்சலம்.

மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர அது இரட்டிப்பாகும். துயரங்களைப் பகிர்ந்தால் அவைப் பாதியாகிப் போகும் என்ற முதுமொழியில் அவளுக்கு உடன்பாடு உண்டு.

ஆனால் சில துயரங்கள், இன்பங்கள் நமக்கே நமக்கானவை. அவற்றைப் பிறருடன் பகிர மனம் வராது. இதுவும் அப்படித்தான்.

இளமுருகு... இல்லை... இல்லை... முருகேசனுடனான சந்திப்பு அவளை மிகக் கலக்கி விட்டிருந்தது.

மேடையில் வெண் நட்சத்திரமாய் மின்னியவனை அருகே நாகரிக உடையில் பார்த்தபோது தன் உள்ளே கிளர்ச்சி ஏதும் ஏற்படவே இல்லையே..?

அவன், தான் விஞ்ஞானக் கவிதை எழுதப் போவதாய் சொன்னது வெறும் நகைச்சுவையா அல்லது நக்கலோ?

ஆனால் காதல், அழகு, பருவம், உருவம் என்றே கவிதைகளைத் தரும் இளமுருகு, உழைப்பு, திறமை, விடாமுயற்சி பற்றி ஏதும் எழுதியதாய் தெரியவில்லையே?

ஆனந்தி சொன்னது போல வயதான பாட்டியின் உழைப்பில் உட்கார்ந்து சாப்பிடுகிறாராமே... அதுதான் காரணமா?

'சுடும் வரைக்கும் நெருப்பு
சுற்றும் வரைக்கும் பூமி
போராடும் வரைக்கும் மனிதன்
நீ மனிதன்'

என்ற வைரமுத்துவின் கவிதை அவளுக்குள்ளே அலையடித்தது. அக்கவியை தோற்றத்தில் ஒத்திருக்க விரும்பு

பவன் அக்கனலான கவிதை உச்சத்தை ஏன் எட்ட முயல வில்லை?

புரண்டு புரண்டு தவித்தாள்.

உடம்பு கொதிப்பது போலிருந்தது.

தன்னையே புரிந்து கொள்ள, எண்ணங்களை மாறி மாறி கடைய வேண்டியதிருந்தது. அப்படிக் கடைந்ததில் ஏதோ ஒரு சூடு உடலெங்கும் பரவியது.

கண்களுக்குள்ளே கங்குகளை வைத்தாற் போன்ற எரிச்சல் வேறு.

''ம்ம்'' - என்று முணங்கினாள்.

அந்நேரம் அறைக்குள் நுழைய இருந்த ஆனந்தி இந்த அரற்றலைக் கேட்டு மெள்ள பின்வாங்கினாள். தனக்குமே தற்சமயம் யோசிக்க தனிமைத் தேவை என்று பட ...துங்கினாள்.

மறுநாள் காலை பாலரமணியை தொலைபேசியில் ...ழைத்தாள்.

''ஹலோ ஸார் - நான் அமுதுவின் உறவுப் பெண் ...னந்தி.''

''நல்லது. சௌக்கியங்களா?' அவன் குரலில் உற்சாகம் ...ப்பளித்தது.''

''ஆமா. உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் ...ல்லணுமே...''

''சொல்லுங்க...?''

ஆனால் தன் திட்டத்தை ஐந்தே நிமிடங்களில் அவள் ...வி முடித்த போது, மறுமுனையில் இருந்து சத்தமே ...லை!

''ஸார்... லைன்லதான் இருக்கீங்களா?''

''ஆமாம்... ஆனா...''



''பேச்சு வராத அளவு அதிர்ச்சி தந்துட்டேனா?''

''ம்ம்... அதிர்ச்சிதான். உங்க திட்டம், வழிமுறை எல்லாம் விநோதமாய் இருக்குது ஆனந்தி.''

''வழிமுறைகளை விட விளைவு முக்கிய மில்லையா?''

''ரெண்டுமே சரியாய் இருக்கணும். ஆனந்தனுக்கும் மற்றவங்களுக்கும் நம் பழக்கம் விகற்பமாய் தெரியக் கூடாதே...''

''நாம மரத்தைச் சுற்றி ஆடிப் பாடப் போறதில்லை பாலா ஸார் - ரெண்டு பார்வை, பிரியமாய் நாலு வார்த்தை - அவ்வளவுதான். அப்ப அமுதுவும் தயக்கம் நீங்கி, உங்களைக் கவனிப்பாள்... உங்களைப் புரிஞ்சுக்குவா...''

''நல்லது.''

சம்மதித்த பாலரமணியின் குரலில் சிரிப்போடு சிநேகமும் இருந்தது.

இங்கு வந்த இரு வாரங்களில் ஆனந்தி பல தமிழ்படங்களை சிறிது நேரமேனும் பார்த்து இருந்தாள். நல்ல தமிழ் சினிமாக்களை இலண்டனிலேயே பார்த்த துண்டு என்றாலும், சராசரி படங்களின் கச்சடா ஆடல் - பாடல்கள் எரிச்சலுட்டின.

எப்போதும் ஆண் முழு உடையிலும் நாயகி கால்வாசி ஆடையிலும் ஆடுவது ஓரளவு பழகி மரத்து விட்டது.

நேருக்கு நேர் நின்று ஆணும் பெண்ணும் பேசவும் முடியாத ஒரு சமூகத்தின் அதீதக் கற்பனைதான் இது என்று நினைத்ததுண்டு. இப்போது சமூக நிலைமை ஓரளவு மாறிவிட்டாலும் கற்பனை இன்னும் தொடர்கின்றது!

ஆக, காதல் என்பது ஒரு அதீத உணர்வாகிவிட்டது. சிந்திக்கும் திறனன்று வெற்று கிளுகிளுப்பிலேயே இளைஞர்கள் கவிழ்ந்தடித்து விடுகிறார்கள்.

அன்றைக்கான புத்தகத்துடன் ஆனந்த் அமர, பெரியதாயி பதட்டமாய் ஓடிவந்தாள் -

''என்ன ஆயா?''

''அமுதும்மாக்குக் காய்ச்சலு...''

''அலுப்பாயிருக்கும்...இன்னைக்கு ஓய்வு எடுத்தால் சரியாயிடும்''

''எனக்கு அப்படித் தோணலைங்க...'' என்ற முதிய முகத்தில் பீதி இருந்தது.

''அப்ப டாக்டரை வரச்சொல்லலாமா?''

அவசரமாய் எழுந்தாள் ஆனந்தி.

''இதுக்கெல்லாம் டாக்டர் வந்து என்ன செய்யறது?''

''புரியலியே ஆயா.. தெளிவாச் சொல்லுங்க.''

''அனவோட அனத்தறாங்க... மூஞ்சியில ரெண்டு ...த்து கட்டி இருக்குது...'' குரல் தணித்து பயபக்தியுடன் ...ான்னாள்.

''அப்படீன்னா தட்டம்மையா?''

கண்களை மூடி பக்தி ஜிரத்துடன் தன் கன்னங்களைத் ...டிக் கொண்டாள் பெரியதாயி.

வந்த மருத்துவர் பரிசோதித்து வார்த்திருப்பது அம்மை ...று ஊர்ஜிதப்படுத்தி விட்டு, அரிப்புக்கான மருந்துகளும் ... போனார்.

பொன்னி, அமுதுவின் அறையை மெழுகித் துடைத்து, ...காங்கே வேப்பிலைக் கொத்துக்களை செருகினாள்.

'எனக்கு இதற்கான தடுப்பூசி போட்டாயிற்று - ஆக ...க்குத் தொற்றும் அபாயமில்லை' என்ற அறிவிப்புடன் ...ந்தி தன் தோழியைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் ...ண்டாள்.

ஆனாலும் மேனி மட்டுமின்றி அமுதுவின் முகம், ... வரை பொங்கி எழுந்த கொப்புளங்களைக் கண்ட ...ு உள்ளூர பயம்தான்.



அனற்றிய அமுதுவிற்கு வேப்பிலை சாமரத்தால் நீவி விட்டாள். அறையில் சன்னமான இசை, பத்திய உணவு, சுத்தம் என்று கருத்தாய் நின்றாள்.

ஒருநாள் அதிகாலையில் ஆனந்தியின் கோலத்தைப் பார்த்த ஆனந்தனுக்கு சற்று அதிர்ச்சிதான் -

''உனக்கென்ன மஞ்சள் காமாலையா?'' என்று அவன் வினவ, இவளுக்குச் சிரிப்பு தாளவில்லை.

''மஞ்சள் தேச்சுக் குளிச்சேன் அத்தான்'' - என்றாள் சிரிப்பினூடே.

''இவ்வளவா... இதென்ன புதுப் பழக்கம்?''

''ஆயாதான் சுத்தபத்தமாய் இருக்கணும்னு ஒரு டப்பா மஞ்சள்தூளைத் தந்தாங்க'' புன்னகைத்தவனின் முகத்தில் புதுக் கூர்மை!

அதிகாலையின் செவ்வொளியில் மஞ்சள் சிலையாய், கூந்தல் நுனியில் ஈரம் சொட்ட நின்றவளைப் பார்த்த உள்ளம் கனிந்தது.

அவளின் தோற்றத்தின் அழகைவிட, எதற்காக அவள் அத்தனை சிரமம் மேற்கொள்ள வேண்டும் என்ற கேள்வி அவளுடைய மன அழகையும் காட்ட,

''நன்றி ஆனந்தி'' - என்றான் - உளமார.

''அதெல்லாம் தேவையில்லை அத்தான் - நல்லதாய் இளநீர் மட்டும் கொண்டு வந்து போட்டால் தேவலை'' என்றபடி போயே விட்டாள் அவள்.

அவள் ஈரக் கூந்தலிலிருந்து சொட்டிக் கிடந்த நீர் சொட்டுக்களை ஏதோ ஒரு பரவசத்துடன் பார்த்து நின்றான் அவன்!

# 15



அத்தனை பெரிய அரங்கத்தை எறும்பாய் நிறைத்துவிட்ட மக்கள் கூட்டத்தை ஒரு திகைப்புடன் பார்த்தாள் ஆனந்தி.

எங்கும் மல்லிகைச் சரங்களின் வளைவுகள். பன்னீர், சந்தனத்தின் வாசனையும் வேறு.

ஆறு லட்ச ரூபாய்க்குக் குறையாத வாகனங்களை ஆண்கள் ஓட்டி வர, அதிலிருந்து வைரமும் பட்டுமாய் பெண்கள் இறங்கினார்கள்.

செவிக்கு வஞ்சனை செய்வானேன் என்று நாதஸ்வரக் காரர் முழக்கினார்.

நாவிற்கும் குறை வைக்காத விருந்து ஆனாலும் அத்தனை உணவு மிஞ்சியதில் ஆனந்திக்கு வருத்தம். வெற்று விரலைச் சப்பியபடி முறைக்கும் சேரிக் குழந்தைகள் நினைவில் வந்து இம்சித்தார்கள்.

இப்படி உணவை வீணாக்காமல் தேவையில் இருப்பவர்களுக்கு எப்படி கொண்டு சேர்க்கலாம் எனும் திட்டத்தில் அவள் தீவிரமாய் இருந்த சமயம், தனம்மாள் விடாமல் அவளைப் பலருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

ஆனந்திக்குப் பெரும்புள்ளிகள் பலரை ஏற்கனவே தெரிந்திருந்தது.

''அப்பா நல்லா இருக்காராம்மா...?'' என்று ன்போடு விசாரித்தனர். ஆனால் உயர்ரக வாகன மொத்த ற்பனையாளரின் மனைவி ஜெயந்தியின் அன்பு, றுவகையாய் தெரிந்தது.

''உன்னைப்பற்றி அதிகம் கேள்விப்பட்டிருக்கேன் னந்தி! படிப்பு, விளையாட்டு, சமூகசேவைன்னு எல்லாத்தி



லேயும் நீ முதல் மாணவியாமே? அழகிலும் முதல் தரம்தான்...'' என்று ஆனந்தியை நகரவிடாமல் கையைப் பற்றி, மேலும் கீழுமாய் ஆராய்ந்தாள்.

''உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி... வரட்டுமா?'' என்று இவள் நழுவ முயன்றும் முடியவில்லை.

''இரம்மா... உன்னைப் பார்க்க என்றே எத்தனை ஆவலாய் வந்தோம்... இரு...''

பக்கத்தில் நின்ற சிறுமி ஒருத்தியை ஜெயந்தி விரட்டினாள்.

''போ... போய் கேசவ் அண்ணனை வரச் சொல்லு ... ஓடு...''

வெள்ளை கற்கண்டு பரல்களை தூக்கிப் போட்டு வாயால் பிடித்துக் கொண்டிருந்த சிறுமி, மனமின்றி நகர்ந்தாள்.

வசமாய் சிக்கின பலி ஆடாய் நின்றாள் ஆனந்தி.

சுகவீனமாயிருந்த அமுதுவை விட்டுவிட்டு கல்யாணத்திற்கு வர அவளுக்கு மனமேயில்லை. பரீட்சை சமயம் என்று அகிலாவும் வர மறுத்துவிட்டாள்.

ஆனந்தன்தான் விடாது இவர்களைக் கிளப்பினான்.

''வந்ததிலேருந்து பண்ணையிலேயே அடைஞ்சு கிடந்தா எப்படி? வீடு தேடி வந்து அழைச்சவங்க வருத்தப்படுவாங்க இல்லையா? யாரேனும் கண்டிப்பாய் போகணும்'' என்று அதட்டி. தாயையும் ஆனந்தியையும் காரில் ஏற்றிவிட்டான்.

''ஐயோ அம்மையா?'' என்று கன்னம் பொத்தி அலறிய சுதாங்கினியும், அவள் தாயும் பண்ணை வீட்டுப் பக்கம் திரும்பி உட்காரவும் அஞ்சினார்கள்.

''பார்த்து மாப்பிள்ளை... அது தொற்றுநோய்... உடம்பைப் பார்த்துக்குங்க...'' வருங்கால மாமியார் பதறினாள்.

"எனக்கு வேலையே இல்லையே... அமுதுவை ஆனந்திதான் முழுக்க பார்த்துக்கிறா..."

"அவளா? சுத்த பத்தமா இருப்பாளா?"

"மனசு வெகுசுத்தம்..." நறுக்கென பதில் சொன்னான்.

"அதுக்கில்ல... அம்மன் விஷயமில்ல...? தாயைக் கூட்டிவந்து அவள் நம்ப வீட்டில எத்தினதுமே அஞ்சினேன், என்ன மாப்பிள்ளை எழுந்திட்டீங்க...?"

அவனுக்குள் ஒரு கயிறு முறுக்கியது. மனமில்லாத தாயையும் ஆனந்தியையும் கல்யாணத்துக்குப் போகச் சொல்லி கிளம்பிவிட்டான். 'ஒரு நாளிலே அமுதுக்கு எதும் ஆயிடாது' என்ற சமாதானத்துடன். ஆனால் இங்கோ "தனக்கா... இன்னைக்கு நீங்க ரெண்டு பேரும் நம்ப வீட்டிலே தங்கிட்டுதான் போகணும்" என்று உரிமையுடன் ஜெயந்தி, உடும்பாய் பிடி இறுக்கினாள்.

"இல்ல... அங்கே வீட்டில் அமுதுக்கு உடம்புக்கு முடியலை..."

"அப்ப சாப்பிட்டாவது போங்க... ஒரு மணி நேரப் பயணம்தானே பண்ணனை?"

"ஆனந்தனும் எதிர்பார்த்திட்டிருப்பான்."

"போன் மூலம் சொல்லிடலாம். அவ... அதான் உங்க வருங்கால மருமகள் எப்படி இருக்கா? ஆட்சி இப்பவே அவள் கைக்குப் போயிட்டதாய் கேள்விப்பட்டேனே?" ஜெயந்தி குரலை இறக்கி, இழுத்தாள்!

தனத்தின் முகம் வாடியது.

"முன்னே சாம்பாருக்கான காயைக்கூட குடும்பத்திலே மாமியாருதான் முடிவு பண்ணனும்... இப்ப மருமகள் உத்தரவு போடறா... வரவு செலவு என்னங்கிறா...?"

"பிள்ளைகளைத் தனிக்குடித்தனம் வச்சிடறதுதான் நல்லது. அதுங்களுக்கும் பொறுப்பு வரும். நமக்கும்



பொறுமல் இல்லை. கேசவ் எங்களுக்கு ஒரே பையன்.. ஆஸ்திரேலியாவில் மேற்படிப்பு படிச்சவன். அவனுக்கு ஏத்தவள் அமைஞ்சதும் புது ஜோடியைத் தனியாய் வச்சிடுவோம்... அவங்க மகிழ்ச்சியாய் வாழறதை நாம ஆனந்தமாய் பார்க்கணும்... என்ன?"

ஓரக்கண்ணால் தன்னைப் பார்த்தபடி இனிமையாய் அப்பெண்மணி பேச, ஆனந்திக்குப் புரிந்தது.

வரப்போகும் கேசவிற்குத் தன்னை ஜோடி சேர்க்கும் முயற்சி இது. இனி நழுவ முயற்சிக்காமல் ஓடிவிட வேண்டியதுதான் என்று அவள் முடிவெடுத்த சமயம் அங்கு, வந்து நின்றான் கேசவ்!

அந்த புதிய. விடுதி சிறுகுன்றின் மீது நின்றது. காற்று, கொள்ளையாய் வீசியது.

அந்த உயரத்திலிருந்து பார்க்க, ஏதோ வைரக் குவியலுக்கு நடுவே வைக்கப்பட்டது போன்ற பரவசம் தோன்றும். சுற்றிலும் மதுரை நகரின் தங்க, வைர விளக்குகள்.

வாகனச் சந்தடியே அற்ற அமைதியில் மரங்கள் வேண்டிய மட்டும் ஆடி ஆடி கதைகள் பேசின. தரமான சமையலின் மணம் மூக்கை வருடியது.

ஆனந்தி இவை அனைத்தையும் அனுபவிக்க, கேசவின் பார்வையோ ஆர்வமாய் அவள் மீதே நிலைத்திருந்தது.

வேலைப்பாடுமிக்க கண்ணாடிக் குவளையின் நீரைப் பருகியவள் சொன்னாள் - "நம்பவே முடியலை கேசவ்..." அவனும் இளமையுடன் வழிந்தான் -

"எனக்குந்தான்..."

"தமிழ்நாட்டிலே இப்படி ஒரு ஆண், பெண்ணை, குடும்பத்தாரே தனியே அனுப்பி வைக்கிறதைச் சொல்றேன்..."

''ம்ம்... காலையிலே நமக்குள் அறிமுகம்... இரவு தனியே சாப்பிட சந்தர்ப்பம்! நான் ரொம்ப அதிருஷ்டக்காரன்தான்...'' கேசவ், பெருமிதமாய் சிரித்தான்.

''என்கூட ஒரு மணி நேரம் பேசினபிறகுதான் உங்க அதிருஷ்டத்தைப் பத்தி முடிவு செய்யணும்...''

''ஆஹ்... இது... இதுபோதுமே!'' உற்சாகமாய் மேசையைத் தட்டினான்.

''எது..?''

''இந்த நகைச்சுவை உணர்ச்சி, பல பெண்களிடம் கிடையாது. என்தங்கையே கொஞ்சம் நான் சீண்டினால் அழத் தொடங்கிடுவா...''

''சின்னப் பெண்ணை ஏன் சீண்டறிங்க...?''

''பட்டப்படிப்பு முடிச்ச பாவை அவ...அவளுக்கும் தீவிரமாய் மாப்பிள்ளை தேடறோம்...''

'அவளுக்கும்' என்று சொல்லி விட்ட தன் தவறு உறைக்க, சற்று அசடு வழிந்தான்.

''குளிர்பானம் எதும் வேணுமா சார்?''

மாப்பிள்ளை போல முழு ஆடையில் இருந்த ஒருவன் பணிவாய்க் கேட்டான்.

''வேண்டாம்... நன்றி... நான் குடிப்பதில்லை...'' ஆனந்தியைப் பார்த்தபடி துளி கர்வத்தோடு சொன்னான் கேசவ்.''

''அப்பஐன்னா சாப்பிட ஆர்டர் பண்ணிடறீங்களா, சார்...''

''ஆமாம்.''

''அதுக்கான ஆளை அனுப்பறேன் சார்...'' அலட்டலான வணக்கத்துடன் விலகினான் இளைஞன்.



''என்ன கேசவ்? எனக்குக் குடிக்க ஏதாவது வேணுமான்னு நீங்க கேட்கவே இல்லையே...?''

பயங்கரமாய் முழித்தான்.

''நீ... நீங்க... குடிப்பீங்களா...?''

''தண்ணீரைக் காலி பண்ணிட்டேன்... ஒரு தக்காளிப் பழரசம் சொல்லலாம்னு நினைச்சேன்...''

''ஓ... கடவுளே... நான் ஒரு நிமிஷம்...''

''பயந்துட்டீங்களாக்கும்? ஆனால் கேசவ், நமக்குள் பொருந்தி வரும்னு தோணலை...''

''என்ன ஆனந்தி... வெறும் அதிர்ச்சி குண்டுகளாய் வீசறீங்க? இது நம்ப முதல் சந்திப்பு... பழகப் பழக...''

''சாப்பிட என்னென்ன வேணும் சார்...?''

''இருப்பா...'' கேசவ் சற்று எரிச்சலாய் கையாட்ட, அவன் கைபட்டு கண்ணாடிக் குவளை சரிந்து உருண்டது. அதை விழாமல் பிடித்த பணியாளனைப் பார்த்த ஆனந்தியின் கண்கள், திகைத்து விரிந்தன!

இவளைக் கவனித்த அவன் விரல்களிலும் நடுக்கம்...!

விலகியவனை 'சட்'டென எழுந்து தொடர்ந்தாள்.

''ஆகாஷ்... நீ எங்க இங்கே...?'' மெல்லிய குரலில் பதற்றமாய் கேட்டாள்.

காற்று, குறைவின்றி வீசியபோதும், இருவருக்கும் வியர்த்திருந்தது.

'பளிச்' என்ற ஆடையுடன் நின்ற ஆகாஷின் மார்பில் அவ்விடுதியின் பெயர், செப்புத் தகட்டில் மின்னியது.

''இங்க வேலை பார்க்கிறியா...?''

''.............''

''எங்கிட்ட சொல்லாமல் ஏனிப்படி...?''

உடன் பிறந்தவனைப் போன்ற பாசத் தொனியில் பதற்றமாய் ஆனந்தி கேட்க, அப்பரிவு அவனை நெட்டித் தள்ளியது.

''நான் ஏதும் உதவட்டுமா... ஆனந்தி...?'' அவளைப் பின் தொடர்ந்த கேசவ்வை, ''ஐந்தே நிமிஷம்... நான் பெண்கள் அறைக்குப் போயிட்டு வர்றேன்...'' என்று அவனுக்கு பதில் சொல்லிவிட்டு நழுவினாள்.

''எனக்கு வழிகாட்ட முடியுமா?'' என்றபடி ஆகாஷைத் தொடர்ந்தாள்.

''வாங்க...?''

நீண்ட எட்டு வைத்து நடந்தவனைக் கவனித்தாள்.

ஆகாஷ், வீட்டை விட்டு வந்து ஒரு வாரம்தான் இருக்கும். அதற்குள் உடம்பு வற்றியிருந்தது. பண்ணை வீட்டில் சதா அடைந்து கிடந்தவன், இங்கு சுறுசுறுப்பாய் இருப்பதன் விளைவு போலும்.

நடையின் மிடுக்கு, அவனது அண்ணன் ஆனந்தனை நினைவுபடுத்தியது.

நீண்ட பளிங்கு பாதையில் நடந்தவர்கள், அரவமற்ற இடத்தில் சற்று ஒதுங்கினார்கள்.

''வீட்டில எல்லாரும் சுகமா... நீங்க எப்படி... இங்கே...?''

''அமுதுக்கு அம்மை வார்த்திருக்குது... உனக்குச் சொல்லிவிட அத்தை தவிச்சாங்க... அப்பதான் நீ முகவரியோ, தொலைபேசி எண்ணோ தராதது தெரிஞ்சுது...''

''கடவுளே... அக்காவுக்கு இப்ப தேவலையா?''

''காய்ச்சல் தணிஞ்சிருச்சு... ஆனா கஷ்டப் பட்டுட்டா...''

''அம்மா, அகி எல்லாம் நல்லா இருக்காங்களா?''

''ஆமா, பையருகூட குண்டாயிருக்கான். சரி, இப்ப உன்னைப்பத்தி பேசலாமா?''

அவன் தலை கவிழ்ந்தது.

வார்த்தைகள் தடுமாறின.



''எனக்கு.. எனக்கு ஒரு பிரச்சினை ஆயிடுச்சு...''

''பிரச்சினை பற்றி வீட்டிலே சொல்லியிருக்கணும்... அதுக்கான தீர்வு இதுதான்னா... வீட்ல எங்கே போறேங்கற விவரமாவது சொல்லிட்டு கிளம்பியிருக்கணும்.''

''அது...அது... சொல்ல முடியாத விவரம்...''

''அதான் போன் பில்லை மறைச்சுட்டே இல்லையா?''

திகைத்து நிமிர்ந்தான்.

''ஆனால் கணக்குப் பிள்ளை, அதைக் கண்டு பிடிக்கவே மாட்டாரா? தொலைபேசி துறைக்கு ஒரு போன் போட்டாலே விவரம் தெரிஞ்சிடுமே...''

கலவரமானான்.

''அப்பமன்னா வீட்டுக்கு என் விவகாரம் தெரிஞ்சிடுச்சா?''

''இல்லை... வீட்டில் யாரும் இன்னும் எதையும் துப்பறியலை... பில்லும் கையுமாய் நீ போரின் வைக்கோல் பின்னே போராடினதைப் பார்க்க நேர்ந்தது. பிறகு கொஞ்சம் மோப்பம் பிடிச்சேன்... விஷயம் புரிஞ்சுது...''

அவனது இளமுகம் சிவந்தது - உதடுகளை அழுந்தக் கடித்தான்.

''என்ன புரிஞ்சுது... எங்கே போன் போட்டேன்றதா?''

''ஆமா... இளமையில் சபலங்கள் இயல்புதான் ஆகாஷ். அதை சமாளிச்சு அடக்குறவங்கதான் வெற்றி அடையறாங்க... விடுமுறை தொடங்கியதுமே நீ இப்படி ஒரு வேலையிலே சுறுசுறுப்பாய் இறங்கியிருந்தால் இது மாதிரியான சங்கடத்தில் சிக்கியிருக்கமாட்டே...?''

''இதையெல்லாம் யார்கிட்டேயும் சொல்லலியே...?''

''நியாயமாய் ஆனந்தன் அத்தான்கிட்ட நான் சொல்லியிருக்கணும். ஆனால் அமுது முடியாமல் படுக்கவும். அவளோடவே இருந்ததில் உன்னைப் பத்தின கவலை மங்கிடுச்சு...''

"தப்பிச்சேன்... இனிமேயும்...?"

"பிரச்சினையை நீ சரியான முறையிலே சமாளிக்கிறதால இதைப்பற்றி வீட்டில சொல்லத் தேவையில்லைன்னு தான் நினைக்கிறேன்..."

"நன்றி... என் மனபாரம் இறங்கிடுச்சு..."

"இங்கே சம்பளம் எவ்வளவு?"

"இரண்டாயிரம் ரூபாய்... தங்குமிடம், சாப்பாடு இலவசம். தவிர டிப்ஸ் தாராளமாய் கிடைக்குது... சீக்கிரம் பணம் சேர்த்து பில்லைக் கட்டிடலாம்கிற நம்பிக்கை வந்திருக்குது..."

"இல்லை சம்பளம் டிப்ஸ் எல்லாம் இனி என்கைக்குத் தான் வரணும்..." கறாராய் சொன்னாள்.

புரியாமல் அவளையே பார்த்தான்.

"ஏன்னா அந்தத் தொலைபேசிக் கட்டணத்தை நான் கட்டிட்டேன்..."

ஆகாஷ் மலைத்து நின்றான்!



## 16

எந்தத் தொகையைச் சேர்க்க இங்கு பயந்து பதறி சம்பாதித்துக் கொண்டிருந்தானோ அத்தொகையைத் தான் செலுத்தி விட்டதாக ஆனந்தி சொல்ல, ஆகாஷ் திகைத்தான். அதில் கூடவே தித்திப்பும் கலந்திருந்தது. கண்களை அழுந்த மூடித் திறந்தான். முகம் தளர்ந்து மலர்ந்தது.

"இன்னைக்கு கேசவ் உனக்கு டிப்ஸ் தரமாட்டான்னு நினைக்கிறேன் ஆகாஷ்! அவனைவிட உன்கிட்ட அதிகம் பேசிட்டேன்கிற கோபத்தில் இருப்பான்."

"யார் கேசவ்?"



"ஒரு கல்யாணத்துக்காக நானும் அத்தையும் மதுரை வந்தோம். இங்கே தன் மகனோட என்னை ஜோடி சேர்க்க கேசவுடைய அம்மா திட்டம் போட்டாங்க..."

"ஐயோ... எங்களுக்குத்தான் முடியலை... நீங்க சிறுசுங்க 'ராயல்' ஓட்டல் சாப்பாட்டை சுவை பார்த்துட்டு தான் வாங்களே'ன்னு எங்களை இங்கே அனுப்பி வைச்சாங்க. ஆனா நல்லவேளை அத்தை இங்கே எங்களுடன் வரலை... வந்து உன்னைப் பார்த்திருந்தால் தாங்கியிருக்க மாட்டாங்க..."

"நீ அழகாய் புரிஞ்சுகிட்ட ஆனந்தி. தப்பு செய்றது இயல்பு. அதைச் சரியாய் சமாளிக்கிறேன்னும் சொல்லிட்டியா? மனசு தெம்பாயிடுச்சு."

"இனிமே தப்பு செய்யக்கூடாதுன்னும் மனசு சொல்லுதா?"

"தீர்மானமே பண்ணிட்டேன். இந்தக் குற்ற உணர்வு என்னைக் கொன்னுடுச்சு. ஆபாசப் பத்திரிகையை வெறுமே புரட்டினால் என்ன தப்புன்னு தொடங்கினது விபரீதமாயிடுச்சு."

"காமம் நூலால கட்டப்பட்ட புலி போல. இரையைக் கண்டால் ஒரே வீச்சில் மரபை அறுத்துப் பாயும்னு சொல்வாங்க. அந்தப் புலியை உசுப்பி விடறது ஆபாசப் பத்திரிகைங்க... தொடாம இருந்திடறது புத்திசாலித் தனம்."

"உண்மைதான். இனி அடுத்ததாய் என்னன்னு மனசு பரபரக்கத் தொடங்குது. ஆனா... அதுக்கான துணிவில்லை. அப்படி நான் தவிச்சபோது தான் 'இளமையுடன் பேசுங்கள்' என்ற விளம்பரத்தைப் பார்த்தேன்."

"அதேசமயம் ஐ.எஸ்.டி. தொடர்பும் வீட்டுக்கு வர, ஐயா புகுந்து விளையாடிட்டே!"

"என்னை மறந்த ஆட்டம், பில் தொகை பதினெட்டாயிரம்னு வந்த பிறகுதான் உறைச்சிச்சு."

உதட்டிற்கு சற்று சாயமேற்றி, சிறு 'செண்ட்' குப்பியிலிருந்து துளி எடுத்து மணிக்கட்டில் தடவினாள்.

''இது, கேசவ் சந்தேகப்படாமல் இருக்க... வரட்டா?''

''ஒரு வாரமாய் தூக்கம், சாப்பாடு சரியில்லை...''

''இனி ஒழுங்காய் சாப்பிட்டு, தூங்கி வேலையும் பாரு.''

''கணக்குப்பிள்ளை 'பில்' எங்கேன்னு கேட்டிருப்பாரே... எப்படி சமாளிச்சே ஆனந்தி?''

''தொலைபேசி 'பில்'லை பைரு விளையாட்டாய் கவ்வி கிழிச்சிடுச்சு. அதுக்குப் பரிகாரமாய் நானே இரண்டாயிரத்தைக் கட்டிட்டேன்னு சொன்னேன்.''

''அதுக்காகக் காசை எடுத்துட்டு நீங்களே போய் கட்டணுமாம்மான்னு கணக்குப்பிள்ளை பணத்தை என்கிட்டே உடனே தந்திட்டார். பணம் கட்டினதுக்கான ரசீதைக் கேட்டார். அதைக் கிழிச்ச பழியையும் பைரு மேலேயே சுமத்திட்டேன்!''

''கம்ப்யூட்டர் படிப்புக்குன்னு அம்மாகிட்டேயிருந்து ஐயாயிரம் வாங்கிட்டு வந்தேன். கையில் இருக்கிற ஆயிரத்தையும் சேர்த்து, இப்பவே ஆறாயிரத்தை தந்துடறேன், ஆனந்தி. ஆக...''

''கணக்குப்பிள்ளை தந்த இரண்டாயிரம் போக எனக்கு வரவேண்டிய தொகை பத்தாயிரம்.''

வட்டிக்குப் பணம் விடுபவனின் தொனியில் மிரட்டினாள்.

''சரியாய் வந்திடும்ங்க நீங்க சமயம் பார்த்து செய்த இந்த உதவியை மறக்கமாட்டேனுங்க.''

அவனும் பணிவாய் கை கூப்பினான்!

காத்திருந்த கேசவ்வின் முகம் கடுத்திருந்தது. ஆனால், வந்தமர்ந்த ஆனந்தியின் செண்ட் மணமும் பவள இதழ்களும் அவன் கடுப்பைக் கொஞ்சம் தணித்தன.



''மன்னிக்கணும் கேசவ்... சாப்பாடு ஆர்டர் பண்ணிட்டீங்களா?''

''உன்னைக் கேட்காமல் எப்படி சொல்ல? இப்பவே அரை மணி நேரமாச்சு.''

''மதியம் சாப்பிட்ட கல்யாண சாப்பாடே இன்னும் வயிற்றில் 'திம்'னு இருக்குது. எனக்கு ஐஸ்கிரீம் மட்டும் போதுமே?''

மறுக்காமல் அவள் சொன்னதையே கொண்டுவரப் பணித்தான்.

ஐந்தாம் நிமிடம் மூன்று வித நறுமணங்களில் ஐஸ்கிரீம், உச்சியில் கோன் பிஸ்கட்டும் செர்ரிபழ சிங்காரமுமாய் வந்தது.

ஆனந்தி ரசித்து சாப்பிட்டாள்.

''ம்ம்... உங்கம்மா சொன்னது போல இங்கே உணவு பிரமாதமாய் இருக்கும் போல?''

''ஆனா, என்ன சாப்பிட்டீங்கன்னு கேட்டால் வெறுமே ஐஸ்கிரீம்னு சொல்லணும்.''

''என்ன பேசிக்கிட்டோம்னுதான் கேட்பாங்க... நமக்கிடையே திருமணமெல்லாம் சாத்தியமில்லைங்கறதை பெரியவங்களிடம் தெளிவாய் சொல்லிடணும் கேசவ்.''

கேசவ் சற்று கோபமாய் கேட்டான். ''அந்த வெய்ட்டர் யாரு?''

''உறவுப் பையன். எனக்குத் தம்பி முறை.''

''பிறகு... பிறகேன் என்னைப் பிடிக்கலை ஆனந்தி?''

''பிடிச்சிருக்குது. கண்ணியமானவர். கலகலப்பானவர். ஆனால்...''

''உன் மனசிலே வேற யாரேனும் இருக்காங்களா?''

ஆனந்தி மௌனமானாள்.

இது.அவள் தன்னையே கேட்கப் பயந்த கேள்வி. தன்னைச் சிலந்தி இழைபோல ஏதோ நுண்ணிய உணர்வுகள் சுற்றிவளைப்பது புரிந்து அதிலிருந்து விடுபட மிக முயன்று கொண்டிருந்தாள்.

"இப்போதைக்குப் படிப்பு மட்டும்தான் என் உத்தேசம் சேகவ். கல்யாணச் சிந்தனையே இல்லை."

"எனக்கும்தான். ஆனால் உன்னைப் பார்த்ததும் சபலம்!"

"நன்றி. இப்படி வெளிப்படையாய் "ஜொள்" விடறதுக்கு. தம்பியை இங்கே பார்த்தது பற்றி யாரிடமும் பேச வேணாம்" என்றாள்.

அவன், தோள் குலுக்கியபடி பில்லுக்கான தொகையை வைத்தான்.

இவர்களுக்குப் பரிமாறியவன், வேறு ஒருவன். ஆனால், காரில் ஏறும் போது ஓடிவந்த ஆகாஷ் இவளிடம் பண உறையைத் திணித்தான். அதில், 'நன்றி' என்ற கொட்டை எழுத்துகள்!

இரவு பண்ணை வீடு போய் இறங்கிய போது மணி பத்திற்கும் மேல். கூடத்தில் யாருடனோ போனில் உற்சாகமாய் உரையாடிக்கொண்டிருந்தான் ஆனந்தன்.

நீண்ட கால்களை மோடா மேல் தூக்கி வைத்திருந்தான். சட்டையில் மேல்பாகம் திறந்து, விரிந்த மார்பைக் காட்டியது.

'கறுப்பு தோல் வாருடனான கைக்கடிகாரம் தவிர எந்த ஆபரணமும் இன்றியே எத்தனை கம்பீரமாய் - கவர்ச்சியாய் தோன்றுகிறான்?' வியந்தாள் ஆனந்தி.

கம்மல், பொட்டு இல்லாவிட்டால் பல பெண்களைக் காணச் சகியாது. அப்படிப் பார்த்தால் ஆண்கள்தான் அழகில் உசத்தியோ?



"நாங்கதான் உங்களுக்கு நன்றி சொல்லணும் மாமா. ஆனந்தி இங்கே இருப்பதால் நாங்க ஆனந்தமாய் இருக்கிறோம்." என்று போனில் உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

தான் அவனை நோட்டமிட்டதைப் போல ஆனந்தனும் தன்னையே பார்த்தபடி இருப்பதைக் கண்டவள், அபிநயித்தாள் - 'யார் போனிலே... அப்பாவா?'

"இதோ ஆனந்தி வந்தாச்சு மாமா. பேசுங்க" முறுவலுடன் இவளிடம் ரிசீவரை நீட்டினான்.

நெருங்கி வாங்கினாள். அப்போது அவர்களது விரல்கள் உரசின. மின் அதிர்வு நேர்ந்தது போல அவளுக்குள் சில கணங்கள் அதிர்ந்தது!

'இதுவரை ஆண்களைத் தொட்டதில்லை' என்றெல்லாம் ஆனந்தி முழங்க முடியாது. அந்நியோன்யமாய் இல்லை எனினும் இயல்பான தொடுதல் நேர்ந்ததுண்டு.

தந்தையின் வாஞ்சையான அணைப்பு.

தோழர்கள், ஆசிரியர்களுடனான கைகுலுக்கல்.

பயண உரசல்கள் என்று...

ஆனால், இப்படி மின்சாரம் பாய்ந்தது போன்ற பரவசம்... புதிது!

மோடாவை இவளுக்காய் இழுத்துப் போட்டான். அதில் அவள் அமர, அது அவனுக்கு மிக அருகில் இருந்தது.

"அலோ அப்பா..."

"என் கண்ணம்மா! எப்படியிருந்தது மதுரைக் கல்யாணம்?"

"நிறையக் கூட்டம். பலர் உங்களை விசாரிச்சாங்கப்பா."

யாரெல்லாம் என்ற விவரங்களைச் சொன்னாள்.

ஆனால், சற்று அசைந்தாலும் ஆனந்தன் மீது உரசும் அளவுதான் நெருங்கியிருந்தது. அவனை இன்பமாய் இம்சித்தது.

'தகர்ந்து போனால் என்ன' என்றும் 'போய்விடுவாளோ' என்றும் மனம் இரு விதமாய் அல்லாடியது.

''மருமகப் பிள்ளை உன்னைப் பற்றி உசத்தியாய் சொல்றாரும்மா.''

''யாரது மருமகன்?''

''நான்தான்'' சற்று குனிந்து இவளைத் தெளிவுபடுத்தினான் ஆனந்தன்.

''உறவுமுறை சொல்லிக் கூப்பிட்டால் நெருக்கம் அதிகமாகும்ல... இப்படியே கூப்பிட்டுப் பழகிட்டேன்...''

''ஓ... அப்படின்னா நீங்க இருவரும் அடிக்கடி இப்படி பேசிக்குவீங்களாப்பா?''

ஆமாடா. அமுது பொண்ணை அருமையாய் கவனிச்சுக்கிறியாம்.''

''பாவம்ப்பா... முகமெல்லாம் அம்மை போட்டிருக்குது...''

''இள வயசுதானே. சரியாயிடும்மா. ஆனந்தி, மலேசியாவில் ரோட்டரி சங்கக் கூட்டம் நடக்குது. வர்றியா? என்னையும் அந்த கான்பரன்ஸ்ல பேச அழைச்சிருக்காங்க. மூணு நாள் நாம சேர்ந்து இருக்கலாம்?''

''உங்களைப் பார்க்க ஆசை தாம்ப்பா... ஆனா இந்தக் கல்யாணத்தப்பகூட எனக்கு அமுது நினைப்பாவே இருந்துச்சு. கணக்குக்கு நாள் மூணுன்னாலும் பயணமெல்லாம் சேர்த்தா ஐந்து நாளாயிடும். அதுக்குள்ளே அவளுக்குத் தலைக்கு ஊத்தணும்.''

''அடடே... கிழவியாட்டம் பேசறியேம்மா! அதையெல்லாம் கவனிக்க அங்கே ஆள் உண்டே. மருமகப் பிள்ளை நீ கண்டிப்பாய் வருவேன்னார்.''



தன்னையே பார்த்தவாறு இருந்த ஆனந்தனை இவள், சங்கடத்துடன் பார்த்தாள் ''அவர்... அவருக்கு எதுவும் தெரியாதுப்பா... நான் இப்ப எங்கேயும் வர முடியாது.''

''சரி... அப்ப நான் ஒரே நாள் போய் திரும்பிடறேன். வீட்டுல எல்லாரையும் கேட்டதாய் சொல்லும்மா.''

இவளிடமிருந்தரிசீவரை ஆனந்தன் வாங்கி வைத்தான். இம்முறை கை படாமல் கவனமாய் இருந்தான்.

ஆனாலும், அவன் மனம், அவளைத் தடவியது, தழுவியது. கன்னத்தை மழித்தபிறகு தடவிய திரவத்தின் சுகந்தம் கலந்த ஆண்வாசனை.

போதைப் பொருளாய் தன்னை அது கிறக்குவதை உணர்ந்து அவசரமாய் விலகினாள்.

''நீ மலேசியா போயிருக்கணும் ஆனந்தி.''

''குளிச்சுட்டு முதல்ல நான் அமுதுவைப் போய்ப் பார்க்கணும்.''

விரைந்தவளையே பார்த்தவன், நெஞ்சில் கசப்பாய் அன்று காலை நடந்த நிகழ்ச்சிகள்...

அவன், அன்று காலை சுதாங்கினி வீட்டிற்குப் போக, தடபுடலாக வரவேற்கப்பட்டான்.

''வாங்க மாப்பிள்ளை. என்ன திடீர்னு...''

''வரணும்னு தோணுச்சு வேலையும் கூட. மாமா இல்லையா?''

''காலையிலேயே பண்ணைக்குப் போயிட்டார். புதுசாய் கிணறு தோண்டறோம்ல?''

''ம்ம்... சுதா இருக்காள்ல?''

''வரச் சொல்லுறேன். நீங்க என்ன சாப்பிடறீங்க?''

''கசங்கிய சேலை, கலைந்த தலை என்றிருந்த மாமியார், அன்று வித்தியாசமாய் தெரிந்தாள்.

தவிர அவன் நுழைந்த சமயம் வேலைக்காரர்களை 'சனியனே', 'ஏ மூதி', 'விளங்காதவனே' என்ற அடைமொழிகளோடு அதட்டிக் கொண்டிருந்தாள்.

அகஸ்மாத்தாய் ஆனந்தி சொன்னது இப்போது நினைவில் வந்து உறுத்தியது. 'தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலைங்கிறது ரொம்ப சரி. 40, 50 வயசிலே ஒரு பெண் எப்படி இருப்பாங்கிறதை அவங்கம்மாவைப் பார்த்தே கணிச்சுடலாம். அமுதுவும் அகிவும் நம்ம அத்தை மாதிரியே இருப்பீங்க...''

அவனது தங்கைகளைச் சீண்டிச் சிணுங்க வைக்கச் சொன்னதிலும் உண்மை இல்லாமல் இல்லையே...

ஆனந்தியின் தாயார் ஒரு அற்புதப் பெண்ணாய் இருந்திருக்க வேணும் எனத் தோன்றியது.

அழகு, அறிவோடு கலகலப்பாய்... தன்னலமற்று...

தன் எண்ணம் அவனை ஆச்சரியப்படுத்தியது. தலையை உலுக்கிக் கொண்டான்!

''என்ன மாப்பிள்ளை... தேநீரா? காபியா?''

''மோர் போதும்.''

சமையலறையில் சில தடபுடாக்களுக்குப் பிறகு ஒரு குவளையில் மோர் வந்தது. உப்பும் புளிப்பும் அதிகம்.

''இன்னும் சுதா தயாராகலையா?''

''இப்பதான் நடுராத்திரி வரை தொலைக்காட்சித் தொடர் போடறானே தம்பி... அதான் காலையில் அசத்திடுது.''

''அப்பமன்னா அவள் இன்னும் எழவே இல்லையா?'' அவன் தொனி சொடுக்கியது.

''பாவம்! நாளெல்லாம் வேலை செய்த அலுப்பு.''

''என்ன வேலை?''



''நகை ஆசாரி; தையல்காரர்னு யாராவது வந்து போவாங்கல்ல?''

இவனுக்கு ஆயாசமாய் வந்தது. ஒரு பண்ணை சம்சாரியின் மனைவி, இப்படியிருந்தால் ஆகாதே என்ற ஆயாசம்.

கணவனுக்கு முன்னே இல்லை என்றாலும் அவனுடனாவது பெண் எழவேண்டும்.

பண்ணை வேலைகளைப் பத்தி அவனுடன் பேசி, வேலையில் ஒத்தாசையாய், கூறாக நிற்கவேணும்.

சுதா இதுவரை பிறரை அதட்டி உருட்டினாலும் அவள் வீட்டை நடத்தும் திறனை இனிதான் பார்க்க வேணும். ஆனால், நிலைமை பயமுறுத்தியது.

''நான் கிளம்பறேன். சுதாவை சீக்கிரம் எங்க வீட்டுக்கு வரச்சொல்றீங்களா?'' எழுந்தான்.

''ஆனந்தி வேறேதும் பரிசு வரவழைச்சிருக்காளா?'' ஆவலாய் வந்தது கேள்வி!

''இல்ல, ஆனந்தி, அம்மாவை மதுரைக் கல்யாணத்துக்கு அனுப்பி வைச்சேன்.''

மாமியின் முகத்தில் இப்போது சற்று வெட்கம்.

''தனியாய் இருக்கிறதால் சுதாவை அனுப்பச் சொல்றீங்களா மாப்பிள்ளை?''

''இல்லைங்க. அமுதுக்குத் துணையாய் இருக்கட்டுமேன்னு வயலுக்கு இயற்கை உரம் போட ஒருத்தர் எதிர்பாராமல் இன்னைக்கு வந்துட்டார். நான் அவரோடு வெளியே போகணும்.''

''வேலைதானே முக்கியம். நீங்க கிளம்புங்க.''

''அப்ப சுதாவை அனுப்பிடுங்க.''

''அதெதுக்குத் தம்பி? அமுதுக்கு முகமெல்லாம் வாரிக் கொட்டியிருக்காமே? கல்யாணத்துக்குக் காத்திருக்கற, நம்ப சுதா அங்கே போகலாமா? என்ன நீங்க?''

அவள் நெஞ்சுத் துடிப்பு கூடியது.

''நான் கேட்காமலேயே சுதா இதெல்லாம் செய்திருக்கனும்.''

''செய்திரானே... அம்மனுக்கு கடும் விரதம் இருக்கறா. அஸ்தமனத்துக்கு பிறகு வெறுமே பாலும் பழமும்தான்.''

''ஆக அவள் வரமுடியாது?''

''சரியாய் இருக்காதுங்களே... முகத்துல தழும்பு தங்கிட்டால் அமுதுக்கு பெரிய இடத்துலேருந்து கேட்டு வருவாங்களா? ஆனாலும் சுதாம்மா விரதத்துக்கு பலன் இருக்கும்.''

சுண்டுவிரலும் ஆட்டாமல் மாமியின் வாய் செய்த ஜாலம் அவனுக்கு எரிச்சலூட்டியது. காட்டமாய் கிளம்பி விட்டான்.

## 17



சுதாங்கினியின் வீட்டிலிருந்து திரும்பிய ஆனந்தனின் நெற்றிப் பொட்டுத் தெறித்தது.

சுதா, அங்கு தன் கண்களிலேயே படவில்லை என்பதும் உறைத்தது.

ஒன்று, அலங்காரமின்றி தன் முன்வரத் தயக்கம் இல்லை, தான்வந்த நோக்கம் புரிந்து பதுங்கினாள் போலும்.

ஊரிலிருந்து வந்தும் வராமல் அமுதுவைப் பார்க்க ஓடும் ஆனந்தியை சுதாங்கினியோடு ஒப்பிடாது இருக்க முடியவில்லை. யோசனையை ஒதுக்கிவிட்டு தாயாரைத் தேடிப் போனான்.



தனம்மாள் குளித்துச் சேலை மாற்றியிருந்தாள்.

''படுக்கலையாம்மா...?''

''அமுதுவைப் பார்க்கணுமேப்பா.... ஆனா அவளும் ஆனந்தியும் ஏதாவது ஓயாம பேசிக்குங்க... அதுக்குப் புண் உலர்ந்திடுக்க...''

''இச்சமயம்தாம்மா பிறருக்குப் பாவும் - ஆனந்தி ஜாக்கிரதையாய் இருக்கணும்...''

''சொன்னேம்ப்பா... 'எனக்குத் தடுப்பூசி போட்டாச்சு அத்தை'ன்னு சொல்லிட்டா! அவள்கூட இருக்கிறதால அமுதுவும் கஷ்டம் தெரியாம கண்டத்தைக் கடந்துட்டாள். ஆனால் ஆனந்திக்குதான் கூறாய் நடந்து மகிழ்ச்சி அடையத் தெரியலை'' வருந்தினாள் தனம்.

''என்ன... கல்யாணத்துக்குப் போனது உங்களுக்கு ஒரு மாற்றமாய் இருந்ததுல்ல?''

''இதென்ன சடங்கு, அதெதுக்குன்னு கேட்டு பார்த்து ரசித்தாள்தான்...''

''பின்ன?''

''இவளைப் பார்த்த சபாபதி மனைவிக்கு ஆனந்தியைத் தன் மருமகளாய் ஆக்கிடணும்னு ஆசை.''

''ஓகோ?''

''நானும் இன்னைக்குத்தான் அவங்க வீட்டைப் பார்த்தேன்- மாளிகைதான் போ...! மாட்டுக் கொட்டாயில் கூட காத்தாடி சுத்துது...!''

கைகளை மார்போடு அழுத்திக் கட்டியபடி கேட்டான் மகன்.

''அவள் மகன் கேசவ், வெளி நாடெல்லாம் போய் படிச்சவனாம்.''

''ஆள் எப்படி இருந்தான்?''

''உயரமும் ஜாடையுமாய் சினிமாக்காரன் கணக்கா இருந்தான்... குணமும் குறைச்சலில்லை... எங்களை அப்படி உபசரிச்சான்...''

''இவ.. நம்ம ஆனந்தி அவனோட எப்படிப் பழகினா?''
கண்களை இடுக்கிக் கேட்டான்.

''அதைத்தானே சொல்ல வரேன்... இந்தப் பொண்ணுக்குத் தனக்கு வாழ்க்கை அமைக்கத் தெரியலைனுட்டு...''

''புரியறாப்பல சொல்லுங்கம்மா...''

''பிடியே கொடுக்கலைப்பா இவ ஜெயந்தி இளைப் கனை கோழி அமுக்கறாப்பல அமுக்கி 'ராயல்' ஓட்டலுக்குத் தனியே சாப்பிட அனுப்பினா...''

''ஓகோ...?''

''ஆனந்தி இயல்பாய் போனா... வந்தா. ஆனால் அந்தப் பையன் முகத்துல போனப்ப இருந்த பிரகாசம், வந்தப்ப இல்லை.''

''ம்ம்...''

''என்னாச்சும்மான்னு நானும் காரில் வரப்ப ஜாடை மாடையா கேட்டுப் பார்த்தேன். ஐஸ்கிரீம் நல்லா யிருந்துச்சு... வைரக் குவியல் நடுவே இருக்கறாப்பல இருக்குது அந்த ஓட்டல்... நாமகூட ஒருமுறை போகனும் அத்தைன்னு...''

''டிரைவர் முன்னே வேறேதும் பேச முடியா தேம்மா...''

''அ... அப்படியெல்லாம் அவள் சுதானமாய் இருக் கிறாப்பல எனக்குத் தோணலை... எதையோ மறைக் கிறான்னு படுது...''

''நாளைக் காலை மெள்ள விசாரிங்க...'' என்ற மகனை விநோதமாய் பார்த்தாள் தனம். வழக்கமாய் வீட்டு விவகாரங்களில் மேலோட்டமாய் பேசுபவன் இன்று இத்தனை ஆர்வமாய், நுணுக்கமாய் பேசுவது ஏன்?

''அவன் மனசுல யாரோ இருக்கிறதாய் சந்தேகம்ப்பா...'' என்றான் அழுத்தமாய்.



அவன் முகத்தில் விதவிதமான உணர்வுகள் கலந்தடித்தன.

''காலையில் பேசிப் பாருங்கம்மா... இப்பப் படுங்க...'' என்றவன் நடந்தது அமுதுவின் அறையை நோக்கித்தான் - அறைக் கதவு பாதியே மூடியிருந்தது.

உள்ளே பெண்களின் பேச்சுக் குரல் கேட்டது.

அவன் கால்கள் தயங்கி, பின் நின்றன.

''அவரையின் இலைச்சாறு பிழிஞ்சுத் தடவினால் இந்தத் தழும்பெல்லாம் மறைஞ்சிடுமாம் அமுது... நீ குளிச்ச அன்னையிலேருந்து தினம் தடவிடணும்...''

''இது யார் வைத்தியம்?''

''பாலா சாருது... நேற்றுகூட வந்திருந்தார்.''

''ஓகோ...?''

''அன்பும் பாசமுமான மனுசர் அவர்.''

''ம்ம்... அப்படித்தான் தோணுது.''

''எனக்கென்ன தெரியுமா தோணுது? அவர் என்னைப் பார்க்கத்தான் அடிக்கடி இங்கே வர்றாரோன்னு...'' வெட்கமாய் ஆனந்தி சொல்ல, ஆனந்தன் அவசரமாய் அங்கிருந்து விலகினான்.

சூரிய ஒளியால் வெப்பமேறிய வேப்பிலை நீரில் அமுதினிக்கு மூன்றாம் குளியலும் ஆனது.

இளைத்திருந்தாள் - சருமம். முன்னைப்போல பளபளக்கவில்லை என்றாலும் எதிர்பார்த்த அளவு மோசமாயு மில்லை.

சிறு கிண்ணத்திலிருந்த அவரை இலையின் சாற்றைத் தானே தினம் பூசிவிட்டாள் ஆனந்தி.

''இனி தேங்காய் எண்ணெய், பாலேடு எல்லாம் தடவி குளிச்சா முன்னைவிட மின்னுவே...''

''நீ தடவிக்கிறியோ? முன்னைக்கும் இப்ப ஜொலிக்கறே ஆனந்தி.''

''பாலாகூட அப்படித்தான்... சொன்னார்....'' எனத் தொடங்கியவள் வெட்கத்துடன் பேச்சை மாற்ற முயன்றாள்.

''பாலா சார் அடிக்கடி இங்கே வர்றார் போல...?''

ஆனந்தியின் முகத்தில் பொய்க் கோபம் வந்தது.

''சொன்னால் கேட்டாத்தானே? இளநீர், இலைன்னு ஏதோ எடுத்துவர்ற சாக்கில வந்துடறார்... உனக்கெப்படி தெரியும்?''

''பொன்னி சொல்வாள். அவர் வர்றப்ப என்னை அவள் பொறுப்பிலே தான் விட்டுட்டுப் போவே?''

''ஆமாம்டீ குழந்தை...'' கிண்டலாய்க் தோழியைக் கட்டிக் கொண்டாள்.

''பாலா சுவாரசியமாய் பேசுவார்.... நேரம் போறதே தெரியாது. இலக்கியம்கூட எனக்குப் புரியறாப்பல பேசறாரே...!''

''இலக்கியமா?''

அமுதுவின் கண்கள் மின்னின.

''ம்ம்...

'மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற காடு மணக்க வரும். கத்தூரிப் பெட்டகமே'ன்னு பெண் பற்றிய பாரதிதாசனோட கவிதையை அவர் சொல்ல கண்மூடி ரசிச்சுட்டேன்.''

''பாலாவுக்கு இலக்கியத்தில் ஈடுபாடு இருந்ததாய் நினைச்சதேயில்லை நான்... கவிதை எழுதுவாராமா?''

''நீயும்தான் கவிதையை ரசிக்கிறே.. எத்தனைக் கவிதை எழுதியிருக்கே? ரசனையே உயர்ந்த விஷயம் தானே? கப்புடு. ஆடறவங்களை கூர்மையாய் விமர்சித்தாலும் அவர் ஆடறதில்லையே...''

''உண்மைதான்.''



''அன்னைக்கு நாங்க தோட்டத்தில் நடக்கிறப்போ மழை வந்திடுச்சு. கவிஞர் அப்துல்ரகுமான் வரிகளை அழகாய் சொன்னார் - அப்படியே என் மனசிலே பதியற அளவு...

'மழை பெய்தால்
குடியானவன் போற்றுகிறான்
குயவன் தூற்றுகிறான்
மழையிடம் இல்லை
பாரபட்சம்...!''

மழை கிளப்பின மண்வாசனையோட கேட்ட இந்தக் கவிதை சிலிர்ப்பாய் இருந்தது.''

அமுதுவிற்குள்ளும் ஏதோ சிலிர்த்தது.

''இளமுருகு எழுதுற மேம்போக்கான வரிகளைவிட இப்ப அருமையான வரிகளை நினைப்பு வைத்துப் பகிருவதும் சிறப்புதான் இல்லையா?''

''ம்ம்... அந்நேரம் இளமுருகு இருந்திருந்தால்.

'என் சர்க்கரைச் சிலையே மழைத்துளியில் நனையாதே என் மனம் கரையும்'ன்னு ஏதாவது சொல்லி விருப்பார். அவரையும் ஒரு நாள் பார்த்தேன் அமுது.''

இதுவரை இளமுருகின் பேச்சை இருவரும் தவிர்த்திருந்தனர்.

'கவிஞர் தன் ஏழைப் பாட்டியின் உழைப்பில் உட்கார்ந்து சாப்பிடுபவர்' என்று ஆனந்தி சொன்னது கண்ணில் விழுந்த தூசியாய் இம்சித்தது.

இப்படிப்பட்டவரை நம்பி அண்ணன் தன்னைக் கொடுக்காததில் என்ன தப்பு?

தன் அண்ணனை அதற்காக வெறுத்தது அமுதுவிற்குள் குறுகுறுத்தது.

''ஏதும் பேசினியா?''

பெரிய பொய்யைச் சொன்னேன்.''

''ம்ம்... ஒரு பெரிய பொய்யைச் சொன்னேன்.''

''என்னது?''

''உங்க அண்ணன் உங்க கல்யாணத்துக்குச் சம்மதிக்கக் கூடும்னு...''

''ச்சே... அப்படியொரு பூசணிக்காய் பொய்யை ஏன் சொன்னே?''

''ஆனால் அப்படி கல்யாணமானாலும் உனக்கு சொத்து எதும் வராதுங்கிற மாதிரி சொன்னேன்...''

''ஓ...?''

அமுதினி, ஜன்னல் வெளியே பார்த்தாள் மரக்கிளைகளில் கட்டிய கூட்டில் பறவைகள் சமர்த்தாய் குடித்தனம் பண்ணிக் கொண்டிருந்தன.

''அதுக்கு அவர் என்ன சொன்னார்?''

''எங்கிருந்தாலும் வாழ்க'ன்னு ஒரு பாட்டு இருக்கிறதா? அதை ஒரு தினுசாய் பாடினார்... அவர் எழுதும் விஞ்ஞானக் கதை மும்முரமாய் போறதாய் சொன்னார்.''

''எனக்கு அழறதா சிரிக்கிறதான்னு தெரியலை ஆனந்தி...''

''கழுத்துக்கு வந்த கத்தி கன்னத்தை உரசினதோட போச்சே என்ற நிம்மதியில் சிரிக்கத்தான் வேணும்... வருத்தமில்லையே அமுது?''

அவள் தலையை இதமாய் வருடினாள்.

''இல்லை... உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை ஆனந்தி... எனக்கு அவர் அரைகுறை கவிதை மேல கிறக்கம்னா, அவருக்கு என் பணம், வசதி மேல் நோக்கம் இருந்திருக்குது... அதை எனக்குப் புரியவைச்சு தெளியவும் வைச்சுட்டே...''

''பார்வையிலே வர்ற காதல், காகிதப்பூ அமுது. அதிலே வாசனை இருக்காது... தவிர உங்க அண்ணன் உனக்காய் பார்த்த பாலா, பிரமாதமான தேர்வு... அதுவும் புரியுதில்லை?''



தலையாட்டிய அமுதுவின் கண்களில் நீர் பெருகி வழிந்தது.

''சிரிக்கலாம்னு முடிவு பண்ணிட்டு இது ஏன்?''

அமுதுவின் கண்ணீரைத் துடைத்து நெற்றியில் முத்தமிட்டாள் ஆனந்தி.

ஆடுகளை ஓட்டி வந்து அடைத்தாள், கிழவி. ஆடுகளின் நெடி, முருகேசனின் நாசியைக் குடைந்தது.

குப்புறப் படுத்தான்.

''லேய்... இம்புட்டு நேரமாய் வெயில்லேயாக் கிடந்தே? இன்னும் அட்டைக் கரியாகவா... சாப்பிட்டியா?''

''ம்ப்ச்... இனி சாப்பிட்டா என்ன? கருத்து கருவாடானாத்தான் என்ன?''

''என்னடா புதுசாச் சலிச்சுக்கிறே?'' தனது வறண்ட முடியைத் தட்டிப் பிரித்து மறுபடி செருகி கிழவி அதட்டினாள் - ''ஏதோ கன்னி வருவா காகம் தருவான்னு பாடுவ... என்னாச்சு இன்னைக்கு?''

''உங்கண்ணு பட்டிருச்சில்ல... விளங்கிருமா?''

''லேய்... அவ கண்ணு உம்மேல பட்டுச்சா... அதை யோசிடா...''

''அதுவும் சரிதான்... புதுக் குறள் கேட்கறியா?''

''நான் நோக்கும் போது
அவள் நோக்காக்கால்.
யாள் நோக்கி என்ன பயன்?'
ஆனா முன்னே அவளும் நோக்கத்தானே செய்தா?''-
புரண்டு புலம்பினான் கவிஞன்.

''யாருடா அவ அவங்கற? யாரந்த ராசா மவ...?''

''பெரிய பண்ணை வீட்டுப் பொண்ணு... பேரு அமுதினி...''

கிழவி சற்று நேரம் வெறுமே வாயைத் திறந்து காற்றை மென்றாள்.

''ஏலே மூதி...! பஞ்சம் பிழைக்க வந்த பரதேசிக்கு வரலாமாடா இந்த நினைப்பு... ஒதுங்கிரு...''

''அவளைக் கல்யாணம் பண்ணினா காசு பத்தில சங்கடம் இல்லாம நிம்மதியாய் கவிதை, கதைன்னு எழுதலாம்னு இருந்தேன்... மண்ணு விழுந்திருச்சு...''

''நமக்கான என்னு உருண்டைய நான் தேடித் தாரேனப்பா... லட்டு உருண்டை வேணாம்... நமக்கது சேராது... செரிக்காது...''

அவளையே பார்த்தான்.

''உங்கிட்டே இருந்து தான் பாட்டி எனக்குக் கவிதை ஞானம் வந்திருக்கணும். பிரமாதமாய் பேசறே...''

''யாரும் பேசலாம்ப்பா... ஆனா நாம உழைச்சாத்தான் சோறு. வானத்தைப் பார்த்துட்டு திரிஞ்சா நிக்கற பூமியும் நிலைக்காது.''

''நாம இப்படி அஞ்சறதுதான் அவங்களுக்குப் பலம்... ஏழைதானேங்கிற எக்களிப்பு...''

''ஏழைங்கிறதால இல்லடா... உழைக்காதவன்ங்கிற இளக்காரம்... நீயே உசிரக் கொடுத்து உழைக்கிறவனா இருந்திருந்தா நான் போயிருப்பேன் பொண்ணு கேட்க...''

''ம்ப்ச்... இப்ப அதுக்கெல்லாம் வழியேயில்ல பாட்டி...''

''அப்ப விட்டுத் தொலை...''

''மனசுல உசந்த கோட்டையாக் கட்டிட்டேனே... இப்ப அதை இடிக்கத் தள்ளத் தாங்கலை...''

பல்லைக் கடித்தான்.

''ஏலே... போதும்... அந்தப் பல்லு ஒண்ணுதான் உருப்படியாய் இருக்குது... அதையும் அரைச்சு நொறுக்கிப் பிடாதே...'' எச்சரித்தாள் கிழவி!

''அவங்களுக்கும் அவமானம் வரும் பாரு... பணம் காசு இருந்தா ஆச்சா... வேற விஷயத்துல அவமானம் வரும்...!''

இளமுருகு என்ற முருகேசன் சூளுரைத்தான்.



# 18



தென்னங்கீற்றுகள் சோம்பலாய் அசைந்தன.

இளங்காலைச் சூரியன் உலகைப் பதமாய் நீவிக் கொண்டிருந்தான். ஓடையில் பிரதிபலித்த உலகைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தன் திடுக்கிட்டான்...

இதென்ன ஓடை நீரிலும் இவள் முகமே தெரிகின்றது...? நிமிர்ந்தவனுக்கு நிஜமாகவே ஆனந்தி எதிரே நிற்பதைப் பார்த்ததும் சற்று ஆசுவாசம்...! ஆக, தான் பிரமை பிடித்துத் திரியவில்லை என்ற நிம்மதி.

''பலகாரம் செய்தேன் - உங்களுக்காய் எடுத்து வந்தேன்.''

தட்டை நீட்டினாள்.

''என்னதிது?''

''டோ-நட்ஸ். இனிப்பு வடைன்னு சொல்லலாம். உங்களை வீட்டில் காணோம்னதும் தேடிட்டு வந்தேன். என்ன விஷயம் அத்தான்?''

அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''ஒன்னுமில்லையே...''

''உங்க முகம் வழக்கம் போலில்லை - வாடியிருக்குது - பிரச்சனையைச் சொல்லுங்க. அருகே அமர்ந்து முழங்காலைக் கட்டியபடி கேட்கக் காத்திருப்பவளைத் தவிர்க்க முடியவில்லை. கரிசனையுடன் பலகாரம் தந்து விசாரிப்பவளை ஒதுக்க மனமில்லை.

''தேங்காய் விலை திடீர்னு ரொம்ப சரிஞ்சிடுச்சு. கேரளாவில் கூட பாதி விலைக்குத்தான் போகுது. ஆனால் நல்ல விளைச்சல் - பெருங்காய்ங்க. அதுக்கேற்ற விலை கிடைக்கும்னு எதிர்பார்க்க இப்படியாயிட்ட ஏமாற்றம்.''

''அப்ப வேறு மாநிலங்களுக்கு அனுப்பறதுதானே. அப்படியொன்னும் உடனே அழுகிப் போற பொருள் இல்லையே?''

''ம்ம்... அந்த யோசனையில்தான்...''

''செயல்படறதில் நாம முந்திக்கணும் அத்தான். எல்லாரும் இதே யோசனையில் தான் இருப்பாங்க - அதற்கு முன்னே நாம விலை பேசி சரக்கை லாரியில் ஏற்றிடணும்.''

எழுந்தான்.

''ம்ம்... நிறைய விஸிட்டிங் கார்ட்ஸ் கிடக்குது. அதில் தோதான ஆளாய், இடமாய் தேடி எடுக்கணும்.''

தனக்குள்ளாகப் பேசியபடி நடந்தான்.

''அதில் பாதி தேவை இல்லாத முகவரிகளாய் இருக்குமே...?'' தொடர்ந்தபடி பேசினாள்.

''உண்மைதான். வரும் கார்ட்டை எல்லாம் என் மேசைக்குள் போட்டிடுவேன். ஆகக் குப்பை போல சேர்ந்திடுச்சு...''

''இப்ப உங்களுக்கு வேண்டிய முகவரிகளைத் தேடி எடுங்க - கூடவே தேவையில்லாததை கழிச்சிடுங்க. பத்திரமாய் வைக்க வேண்டியதை நான் முறையாப் பிரித்து ஒரு நோட்டில் ஒட்டி வைக்கிறேன். உங்களுக்குத் தேவையின் போது எடுக்க வசதியாய் இருக்கும்.''

''உனக்கெதுக்கு சிரமம்?''

''உங்களுக்குச் சிரமம் இல்லாமல் இருந்தால் சரி... அத்தையின் டிரங்க் பெட்டியில் ஒரு பயன்படுத்தப்படாத பெரிய கறுப்பு ஆல்பம் பார்த்தேன். விஸிட்டிங் கார்ட்டை ஒட்டி வைக்க அது தோது...''

பேசியபடி தன்னைத் தொடர்ந்தவளை, சற்று சங்கோஜத்துடனேயே தன் அறைக்குள் அழைத்தான்.

''என் அறை கொஞ்சம் கனேபரமாய்தான் இருக்கும்...''



''இருக்கட்டுமே அதனால் என்ன?'' என்றவள் குப்பையில் குவிந்திருந்த முகவரி அட்டைகளைப் பத்து பத்தாய் அடுக்கி அவனிடம் நீட்டினாள்.

அவன் வேண்டாம் என்பவற்றை அப்போதே ஒதுக்கித் தள்ளி, மற்றவற்றைப் பத்திரப்படுத்தினாள். தேவையான முகவரிகளுடன் ஆனந்தன் சொல்ல அகர வரிசையில் அட்டைகளைப் பிரித்து, ஆல்பத்தில் ஒட்டும் வேலை ஆரம்பமானது.

ஊர்வாரியாகவும் பிரித்தவள், அது பற்றி குறிப்புகளைத் தெளிவாய் அந்தந்த பக்கங்களில் எழுதி வைத்தாள்.

இரண்டு மணி நேரம் கழித்து, மறுபடி வந்தவன் அவளது வேலையை வியப்புடன் பார்த்தான்.

''இப்படிப் பண்ணனும்னு எனக்கே... தோணலையே ஆனந்தி-நன்றி.''

''பரவாயில்லை. தேங்காயை நல்ல விலைக்கு எடுத்துக்கிட்டாங்களா?''

''ஆமா... அம்மாகூட இத்தனைக் கரிசனையாய் விசாரிக்க மாட்டாங்க.'' ''என்ற அவன் கூர்மையான முகம், வெகுவாய் கனிந்திருந்தது. அவன் பார்வை தன்னையே குறுகுறுவென்று துளைப்பது சற்று சங்கடமாயிருக்க, ''இனி சுதாங்கினி வந்து எல்லாவற்றையும் சரிபண்ணுவாங்க...'' என்றாள் புன்னகையுடன்.

கனிந்த அவன் முகம் சற்று கடுத்தது.

''அது... அது பற்றித் தெரியலை... ஆனால் உன் ஆலோசனைக்கு, உதவிக்கு ரொம்ப நன்றி ஆனந்தி.''

''இருக்கட்டும் அத்தான். என் நேரமும் பயனுள்ளதாய்க் கழியுதே...

''உனக்கு எப்ப விடுமுறை முடியும் ஆனந்தி?''

''அடுத்த வாரம் நான் கிளம்பணும்... போனால் படிப்பு, வேலைன்னு மறுபடி நாட்கள் இயந்திரகதியில் பறக்கத் தொடங்கிடும்...''

அவள் குரலில் வழக்கமான துள்ளல் இல்லை... சற்று வருத்தம் இருந்ததோ?

''நான் போனதே தெரியலை... இன்னும் ஒரு மாசமாவது நீ இங்கே தங்க முடியாதா?''

அந்த அழைப்பு ஆனந்தியை விநோதமான முறையில் தாக்கியது.

ஒருபுறம் மகிழ்ச்சி. அடுத்த புறம் நெகிழ்ச்சி என்று... நடுவே சிரிப்பும் குமிழிட்டது.

இங்கு இவள் வந்த அன்று படுகாரமாய் பேசினவன் இன்று இத்தனை, இதமாய், இளகி, இணக்கமாய்...

''என்ன சிரிக்கிறே? முதல் நாள் நான் சிடுசிடுத்தது ஞாபகம் வந்திருச்சா?''

''அதேதான்!''

இருவரும் வாய்விட்டு சிரித்தனர்.

ஆனந்தியின் தலையில் ஒரு கணம் கைவைத்து மத்தாப்பாய் மின்னிய அவள் சிரிப்பை ரசித்தவன், சட்டென்று வெளியேறினான்.

அன்று நேர்ந்த தீண்டலில் மின்சாரம் இருந்தது என்றால் இன்று இதில் உடம்பெல்லாம் இனிப்பது போன்ற ஒரு குளுமை...

ஏதும் புரியாமல், புரிய விரும்பாமல் நின்றாள் அவள்.

அவரைச் சாறுள்ள குட்டி கிண்ணத்தை அமுதினிடம் தந்தாள், ஆனந்தி.

''பத்தே நாளில் தழும்பெல்லாம் ரொம்ப மங்கிடுச்சே... நாளையிலேருந்து சாறெல்லாம் வேணாம். போதும்...'' தன் கன்னத்தை தடவியபடி அமுது சொன்னாள்.



''வைட்டமின் மாத்திரை ஒழுங்காய் எடுத்துக்கிறியா?''

''எல்லாம் நீ சொன்னபடியே...''

''டாக்டர் சொன்னபடியேன்னு சொல்லு...''

''ஆனாலும் உன் சொல்படிதான் இப்ப விடே ஆடுதுன்னு தோணுது ஆனந்தி...''

அதே அறையில் அவர்களைப் பார்த்தபடி நின்ற அகிலா கிரீச்சிட்டாள் -

''யப்பா போதுமே... ரெண்டுபேரும் மாறிமாறி உருகுறது...''

''யேய் அகிக்குட்டி, ஏன் பொறாமைப்படறே?''

''எங்கிட்ட இப்ப யாரும் பேசறதேயில்லை... ஏன் என்னைப் பார்க்கிறதுகூட இல்லை.''

அகிலா உதடு பிதுக்க, ஆங்காரத்திலும், அழுகை பிறும், அவளது உதடுகள் துடிக்க - அதை மறைக்க கோபமாய்த் திரும்பி நின்றாள்.

''நீயும் பார்க்கிற மாதிரி இல்லையேடீ... இதென்ன இந்த பஃப் ரவிக்கையை விடவே மாட்டியா?''

அமுது சீண்ட, தங்கையின் கண்கள் ததும்பின.

''நானே நொந்து போயிருக்கேன் - பள்ளிக்கூடத்துல தான் மத்த பொண்ணுங்க என்னை கலாட்டா பண்றாங்கன்னா நீயும் சேர்ந்துக்கிறியே...''

''படிக்கறது நல்ல பட்டிக்காட்டு பள்ளியிலே - அங்கே யாருடி உன்னைக் கேலி பண்றது?''

''பட்டிக்காடாய் இருந்ததெல்லாம் அந்தக் காலம்... இப்ப தேறியாச்சு. பள்ளிக்கூடச் சீருடைய சல்வார் கமீஸாய் கூட தச்சுப் போட்டுக்கலாம்னு சொல்லிட்டாங்க. நான் இப்படி ரவிக்கையும் மூணு மீட்டர் தாவணியுமா போறது எனக்கே சகிக்கலை.''

''போட்டுக்காத.''

''வேற. சாதாரண ரவிக்கையே எனக்கு இல்லையே? தாவணிக்கு இதுதான் எடுப்பாய் இருக்குன்னு அம்மா எல்லாம் இதேபோல தைச்சுத் தந்துட்டாங்க.''

ஆனந்தி சமாதானப் படுத்தினாள் -

''தையல்காரரை வரச்சொல்லி இதையே பிரித்து, சாதாச் சோளியாய் மாற்றித் தரச்சொல்றேன் - சரிதானே?''

''ம்ம்.''

''இன்னும் ஒரு விஷயமிருக்குது - அதை நான் சொன்னா என்னைக் கட்டிப்பிடிச்சு முத்தம் தருவே...''

அகிலா தலை நிமிர்த்தாமல், கேள்வியுடன் விழிகளை மட்டும் உயர்த்தினாள்.

''இனி அந்த மூணு நாளும் நீ பின் அறைக்குப் போக வேணாம் - எங்கூடவே படுத்துக்கலாம்.''

அகிலாவின் முகம் சற்று மலர்ந்தது.

''அம்மா ஆகட்டும்னாங்களா?''

''சொல்ல வச்சிருவோம். என்னைப் பின் அறைக்குத் தள்ளலையே? சரி அதோட இதுவும் போகட்டும்னு உன்னை அனுமதிச்சிருவாங்க.''

''சொல்ல முடியாது அண்ணி! அம்மா எங்கிட்ட முன்னைப்போல இல்ல. சதா என்னை அப்படி உக்காராதே'' மேலாக்கைச் சரியாப்போடு', 'உரக்கச் சிரிக்காதே'ன்னு நொச்சுறாங்க. ஆம்பளையை நெருங்கி நிக்காதேன்னு அசிங்கமா வேற பேசறாங்க.''

''பெரிய பொண்ணாயிட்டியே... பத்திரமாய் உன்னைப் பார்த்து வளர்க்கணும்ங்கிற கவலை. அவ்வளவு தான் - அதைப் பெரிசுபடுத்தலாமா?''

''ஆனா.. ஆனா...''

அகிலா மறுபடி கண்கலங்க, ஆனந்தி அவளை அணைத்துக் கொண்டாள்.



''அச்சச்சோ... எங்க சமர்த்து அகிக்குட்டியா அழறது? வேணாம். ஸ்வீட்டி...''

இங்கே ஆனந்தி, சின்னவளைத் தேற்றிக்கொண்டிருந் தாள் - சுதாங்கினி வேறிடத்தில் தனக்கு வெடி வைத்துக் கொண்டிருப்பதை அறியாமல்...''

குடை பிடித்தபடி வரப்பில் கவனமாய் நடந்து வந்த சுதாங்கினியை அங்கு யாரும் எதிர்பார்க்கவில்லை.

மூன்றங்குல குதிகால் செருப்பில் வயற்காட்டில் நடப்பது சிரமமான காரியம். வழுக்கி விழாமல் நடந்த சுதாங்கினிக்குள் எரிச்சல் மண்டியது.

அவளைக் கண்டதும் உரமும் மண்ணுமாயிருந்த கைகளைக் கழுவியபடி வரப்பில் ஏறினான் ஆனந்தன்.

''என்ன - இங்கே?''

வேலையாட்கள் சற்று ஒதுங்கி வெவ்வேறு வேலைகளில் மும்முரம் காட்டினார்கள். ஆனாலும் அவர்கள் கவனமெல்லாம் அந்த ஜோடியின் மீதுதான்.

வேப்பம் புண்ணாக்குக் கலந்துகொண்டிருந்த ஒருத்தி, மற்றொருத்தியின் காதைக் கடித்தாள்.

''இது எதுக்கு இப்ப, இங்க வந்திருக்குது?''

''மூஞ்சியெல்லாம் சிவந்திருக்குது - கோவம் போல...''

''ஆமா இது சிரிச்சுதான் யாரு பார்த்தா? எப்பவும் சிடுசிடுங்குமாம்.''

''நம்ம ஐயாவ வையுதோ?''

''ஹூம்... தாலி கட்டறதுக்கு முன்னமே இப்படித் தேடி வந்து திட்டுதே?''

''வீட்டுல ஒரு புது அம்மா வந்திருக்காங்களே...''

''யாரு- ஐயாவுக்கு தினசரி மோரு, பழச்சாறுன்னு ரங்கன் கிட்ட கொடுத்து விடறவங்களா?''

''பொண்ணுன்னா அப்படி நயமாய் பாசமாய் இருக்கணும்... இதுப் பாரு... ஏதோ காரமாய் தாளிக்குது...''

சுதாங்கினி குரலைத் தாழ்த்திதான் வைத்திருந்தாள் என்றாலும் அவளால் தன் முகக் கடுப்பை மறைக்க முடிய வில்லை.

இத்தனை முக்கியமான தகவல் தனக்கு இத்தனைக் காலம் தாழ்த்திக் கிடைத்திருக்கிறதே என்ற கடுப்பில் உடனே ஆனந்தனிடம் அதைச் சொல்ல ஓடிவந்திருந்தாள்.

''எனக்கும் இப்படி வேலை நடக்கிற இடத்தில் வந்து நின்று பேசப் பிடிக்கலைதான். ஆனால், வீட்டுக்கு வரவும் பிடிக்கலை...''

பேச்சைத் தொடங்கினாள்.

''............''

''அவ.... அந்த ஆனந்தி வந்த பிறகு நம்ப வீடு வீடாவே இல்லை.''

''..........''

''உங்களுக்குக் கோபம் வந்தாலும் பரவாயில்லைன்னு தான் வந்திருக்கேன். முக்கியமான விவரம். ஆனந்தி நம்ப அமுதுவைக் கூட்டிட்டு கும்பக்கரை அருவிக்குப் போனது எதுக்காகத் தெரியுமா? கல்யாண வீடுகள்ல கவிதைன்ற பேருல ஏதோ உளறுவானே, அந்தப் பயலையும் அமுதுவையும் சந்திக்க வைக்க...''

ஆனந்தன் முகத்தில் மாற்றமில்லை.

ஆனால் அப்படி தன் முகத்தை வைத்திருக்க அவன் சிரமப்பட்டான். அவள் விடவில்லை.

''ரெண்டு பேரும் சந்திச்க பேசத்தான் அந்தப் பிக்னிக் ஏற்பாடு.''

''பேசனாங்களா?''

''பின்னே?''

''இது உனக்கெப்படி தெரிஞ்சது?''



''அது இப்ப முக்கியமில்லை. நீங்க பார்க்கவும் கூடாதுன்னவனை அழைச்சுத் தனியே பேசவும் வச்சிருக் காளே?''

''எவ்வளவு நேரம் பேசினாங்க?''

''கால் மணி நேரமோ என்னவோ?''

''வேறேதும் இல்லையே?''

''நீங்களா இப்படிக் கேட்கிறது? போய் சந்திச்சுப் பேசறதுலேயே நம் குடும்ப கௌரவம், பெருமை எல்லாம் போச்சே...''

''உளவு பார்க்கிறதும்கூட குடும்பத்துக்குக் கௌரவ மில்லை சுதா.''

அவள் முகம் மேலும் சிறுத்தது, சிவந்தது.

''இது நடந்து ரெண்டு வாரத்துக்கு மேலாச்சது... இப்பத்தான் என் காதுக்கு வந்தது- உளவறிந்திருந்தால் உடனே தெரிஞ்சிருக்கணுமே.''

''வந்து எனக்கு விவரம் சொன்னதுக்கு நன்றி... இனி இங்க வந்து பேச வேணாம்.''

''உங்க வீட்ல வியாதியும் வெக்கையுமாயிருக்குது. அம்மா அங்கே போகக் கூடாதுன்னதால மனசு கேட்காமல் இங்க வந்தேன்.''

''நன்றி.''

சற்று காரமாய் சொன்னான்.

''அவ பேர்ல ஆனந்தம் இருந்தாலும் அவளால் நம்ப வீட்டுக்கு அவமானம்தான் - ஜாக்கிரதையாய் இருங்க.''

அவன் தாடை இறுகியது கண்டு அவசரமாய்க் கிளம்பி னாள்.

ஆனந்தியைப் பற்றி வத்தி வைத்த கும்மாளம் இருந்தாலும், இனி தன் வாழ்வு ஆனந்தனுடன் மகிழ்ச்சி யாய்ப் போகுமா என்ற சந்தேகம் சுதாங்கினியை அரிக்கவும் தொடங்கியிருந்தது.

ஆனந்தனுக்கும் தன்னால் தொடர்ந்து வேலை செய்யக் கூடுமென்று தோன்றவில்லை. சுதாங்கினியைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்குள் குற்ற உணர்வு குடைகிறது. இவள் எனக்கானவள் அல்ல என்ற தவிப்பு.

கல்யாணத்தை வியாபாரமாய் எண்ணி, பெற்றவளைக் கூட ஆலோசிக்காமல் முடிவெடுத்தது பெரிய தவறு... முட்டாள்தனம்.

ஆனால், ஆனந்தி கெட்டிக்காரி.

தகுதியுடைய பாலாமணியை அவளுக்குப் பிடித்திருக்கிறது.

பாலாவிற்கும் ஆனந்தி இனிக்கிறாள்... இந்த சர்ப்பு, கல்யாணத்தில் முடிந்து விடுமோ?

அந்த எண்ணமே குளவிபோல கொட்ட அவன் துடித்துப் போனான்.

'சேச்சே... அவர்களிடையே இயல்பான நட்புதான். தன் நெஞ்சை நீவியபடி நடந்தான்.

''தம்பி.''

அந்த அழைப்பு தனக்கில்லை என்ற நினைப்பில் தொடர்ந்து நடந்தான். பச்சைப்புல் வகிடிட்ட, வரப்பில் நடப்பதை ரசிப்பவன், இன்று முள் மேல் நடப்பது போலத் தடுமாறினான்.

''முதலாளித் தம்பி - உங்களைத்தான்...''

நின்று மெள்ள திரும்பினான்.

கூனிட்ட கருத்த கிழவி ஒருத்தி, இவனைப் பார்த்தபடி நின்றாள்.

''என்னையா கூப்பிட்டீங்க?''

''ஆமா... கொஞ்சம் வாங்க.''

மாமரத்தின் தழைத்த நிழலில் ஒதுங்கினான்.



''பண்ணைவூட்டுல வந்து உங்களைத் தனியே பாக்க முடியுமான்னு தயங்கினேன்... தெய்வமாப் பார்த்து உங்களை இங்க எங்கண்ணுல காட்டிருக்க.''

''சொல்லுங்க - என்ன விஷயம்?''

''உங்க அழகினி தங்கச்சி பத்திதான்...''

கிழவி ஏதோ விவசாய விவகாரம் பேசப் போகிறாள் என்று நினைத்தவன் துணுக்குற்றான்.

''அதை சாக்கிரதையாப் பார்த்துக்குங்கய்யா...''

பெண்களில் எல்லா வயதினரும் இப்படிப் புதிர் போலத்தான் பேசுவார்களோ? சுதாவும் இப்படித்தான் சுற்றி வளைப்பாள்.

''நேரே விஷயத்தைச் சொல்லுங்க.''

''எம்பேரன் முருகேச, கவிதைன்னு ஏதோகிறுக்கிட்டு அலையறவனுங்க. இப்ப அவனுக்குப் புது கிறுக்கு பிடிச்சிருக்குது - பண்ணை வீட்டு மாப்பிள்ளையாகணுங்கிற கிறுக்கு... ஆவற காரியமா? இப்ப அதுல ஏதோ தடங்கலு வரவிட்டு பயல் குதிக்கான். 'ஏழைன்னா இளப்பமா- பழிவாங்குவேன்னு' நிற்கிறான். ஏழைங்கிறது வேற - ஆனா எம்பேரன் உதவாத பயய்யா குரங்கு. இப்பக் கள்ளும் குடிச்சுப் பிட்டு ஆடுது...''

''குடிக்கிறானா?''

''அந்தக் குடி இல்லய்யா - அதுஞ் சேர்ந்தா அவனை உடனே வீட்டை விட்டு அடிச்சுப் பத்தியிருக்க மாட்டேன்? இவன் நோக்கம் வைக்க அந்தப் பொண்ணும் பார்க்க, சிரிக்கன்னு இருந்திருக்கும் போல... அருவிக் கரையில சந்திக்கப் பேசவும் இந்தப் பயல் கோட்டைக் கட்டத் தொடங்கிட்டான்... இப்ப என்னாச்சோ தெரியலை -

'என்னைய ஏமாத்திட்டா... அவளை பதிலுக்கு அவமானப்படுத்தணும்'னு வெறியனாட்டம் உளறுறான்.''

ஆனந்தன் உன்னிப்பாய் கவனித்தான்.

'பொம்பளைப்புள்ளைய வச்சிருக்கவங்க - பெரும் தனக்காரங்க. நீங்க சாக்கிரதையாய் இருக்கணும்னு சொல்லத் தான் வந்தேன்... நான் அவனைக் கண்டிச்சு வைக்கிறேனுங்க வரட்டா?''

ஆக, சுதாங்கினி சொன்னதுபோல சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது- இப்போதே செய்தி, பாதி ஊருக்குப் பரவியிருக்கக் கூடும்... இதில் கவினுவின் குனுரைப்பு வேறு...!

இனி அமுதுவின் கல்யாணம் அத்தனை எளிதாய் நடக்காது... அந்த ஆத்திரம், ஆனந்தியின் மேல் தாவியது. பாம்புப் புற்றினுள் கைவிடுவது போல, என்ன வேலை செய்திருக்கிறாள்?

கோபத்துடன் நடையை எட்டிப் போட்டான். வரப்பு புற்கள் மடிந்து நகங்கின.



# 19

**பொ**ன்னி, படுக்கைக்கு புது விரிப்புகளை இட, தனம்மாள் தலையணைகளை சலவையான உறைகளுக்குள் திணித்துக் கொண்டிருந்தாள்.

இதெல்லாம் ஒரு மாதமாய்த்தான் - அதாவது ஆனந்தி இங்கு வந்தபிறகுதான்.

'சின்னச் சின்ன வேலைகளை எல்லாம் நீங்க செய்யலாமே அத்தை. அப்பத்தான் உடம்பும் மனசும் ஆரோக்கியமாய் இருக்கும்' என்று தன்னைக் கட்டி முத்தமிட்டபடி ஆனந்தி சொல்ல, தனமும் மறுக்க மனமில்லாமல் கைக்குக் கிடைத்த எளிய வேலைகளில் ஈடுபடத் தொடங்கினாள்.



ஒருநாள் தன் சேலை அலமாரியை மருமகளுக்குத் திறந்து காட்டி, ''உனக்கு உடுத்துமாத்துக்கு இதில் ஏதும் வேணுமான்னு பாரேன் ஆனந்தி'' என்று கூற, சின்னவள் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

''எங்கப்பா.... எத்தனை நைலக்ஸ் சேலைங்க? நீங்க நூல் அல்லது பட்டுச்சேலை உடுத்தித்தான் பார்த்திருக்கேன்.''

''இதெல்லாம் முன்ன கட்டினதும்மா. கடைக்குப் போனால் அந்த சேலைக்குக் குறையாம எடுத்துட்டு வருவதுண்டு. உங்க மாமா போன பிறகு மெல்லிசு கட்டறதில்ல.''

''அப்படி ரொம்ப மெல்லிசு ரகமில்லையே? சிலது வெளிறிடுச்சே அத்தை.''

''இத்தனை ஆண்டாய் அடைபட்டே கிடந்தால்?''

''யார் உடுத்தறாங்களோ அவங்களுக்குக் கொடுத்திட வேண்டியதுதானே.''

''அமுது வேண்டாம்னுட்டா. எல்லாம் பழைய மாடலாம்.''

''அப்ப வேலைக்காரங்களுக்குக் கொடுங்க. காந்தி கிராமத்தில் கைவிடப்பட்ட பெண்களுக்கான விடுதி ஒன்று இருக்குது. மிஞ்சியதை அங்கே கொடுத்தால் மகிழ்ச்சியாய் வாங்கிக்குவாங்க.''

புது விதமாய் தன்னை யோசிக்கத் தூண்டியவள், வீட்டு வேலைக்காரர்களுக்குத் தந்தது போக, மற்றவற்றை அடுக்கிக் கட்டி தேவை இருந்தவர்களுக்கு தரச் செய்தபோது, மனதில் அலாதி திருப்தி வந்ததுதான்.

கொடுத்து இன்பம் கண்டு விட்டால் பிறகு எதைக் கொடுப்பது - எப்படி கொடுக்கலாம் என்று உள்ளே ஒரு மாதிரியான பரபரப்பு ஏறிக்கொள்கிறது.

ஈகை இன்பம் பழகப் பழக, மனதில் திருப்தி நிறைகிறது.

கூடவே தன் வேலைகள் மட்டுமில்லாமல் வீட்டின் வேலைகளிலும் அதிகமாய் ஈடுபட தனத்தின் உடல்நிலை வேகமாய் சீரடைந்திருந்தது.

அழகிய வெள்ளிப் புகைப் படச் சட்டத்தினுள் சிரித்த தன் கணவனையே பார்த்தாள் தனம்மாள்.

'இப்ப மாமா எப்பவும் உங்க கண்ணெதிரேயே இருப்பாங்க' என்று அதை அங்கு வைத்ததுகூட ஆனந்திதான்.

தானே தினமும் கணவரின் படத்திற்குச் சின்ன மலர்ச்சரம் தொடுத்து சூடத் தொடங்கி இருந்தாள். இன்றும் அந்த வேலையைச் செய்தவளின் மனம் கலங்கியது.

அருகே இருக்கும்வரை துணையின் முழு அருமை தெரிவதில்லை. இப்போது பிள்ளைகளின் திருமணம் கூடிவரும் சமயம்... அவர் இருந்திருந்தால் அது தனிதான்.

ஆனந்தன் கூட இப்படி, 'நான் இவளைக் கல்யாணம் செய்யப் போறேன்' என்று அறிவிக்காமல், முறையாய் பெற்றவர்களின் ஆலோசனை, அனுமதி எல்லாம் கேட்டிருக்கக்கூடும்.

ஆனால், மகனையும் குறை சொல்ல முடியாது. தன் அறையைக்கூட இதுநாள் வரை வைக்கவேண்டிய முறையில் வைக்கத் தெரியாதவளாய் இருந்த தன்னிடம் மகன் அதிக நம்பிக்கை வைக்காததில் தவறென்ன?

சற்றே அசட்டுக் களையுடன் புகைப்படமாயிருந்த தன் கணவரின் முகத்தை வாஞ்சையுடன் தடவினாள்.

"உங்களுக்கு விவரம் போதலை. நானும் அப்படியே இருந்துட்டேன். ஆனா இப்ப ஏதோ தைரியம், தெளிவு எல்லாம் எனக்கு வந்திருக்குங்க... எல்லாம் நம்ம ஆனந்தி பொண்ணு வந்தபிறகுதான்."

பொன்னி துடைத்து விட்டிருந்த தன் அறையைப் பார்த்தாள். பளபளவென்ற சுத்தம். இனி வீட்டையும் ஒரு



சுற்று வந்துவிட வேண்டும். கூடவே கொல்லையின் மாட்டுக்கொட்டகையையும் தேங்காய் அறையையும் பார்க்கும்படி ஆனந்தி நேற்றே கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அத்தை! லாரி வரவும், இருக்கிற அத்தனைத் தேங்காயையும் அத்தான் ஏற்றிவிடச் சொன்னார். இந்தாங்க சாவி."

இப்படி ஆனந்தி பொறுப்புகளைத் தர, தனமும் அவற்றைத் தட்டாமல் செய்யப் பழகியிருந்தாள்.

ஞாபகமாய் கொட்டடிச் சாவிகளை எடுத்துக் கொண்டு கிளம்பியவள் கண்ணில் ஆனந்தன் பட்டான்.

"என்னப்பா... இந்நேரம் வீட்ல இருக்கிறே?"

"காரணமாத்தான்."

அவன் இறுகிய குரலைக் கேட்டவள், தன் அறையைப் பூட்டாமல் அவன் முகத்தை ஏறிட்டாள்.

அதன் கடினம் அவளைப் பதற்றமாக்கியது.

சமீபநாட்களாய் மலர்ந்தும் களித்தும் இருந்த முகமல்லவா அது?

"என்னாச்சுப்பா?"

அறைக்குள் போய் கதவைச் சாத்தினான்.

ஆனந்தனின் விழிகள் தாயின் அறையை நோட்டமிட்டன. இதிலும் ஆனந்தியின் பங்கிருப்பது புரிந்தது.

ஒரு தரம் அவளை நுழையவிட்ட சில நாட்களிலேயே தன்னுடைய அறையும் இப்படித்தானே நறுவிசும் நாகரிகமாயும் மாறிவிட்டது.

முகவரி அட்டைகளை அடுக்கிய கையோடு, "இதெல்லாம் தினசரி தேவைப்படும் சாமான்கள் இல்லையே... பரணிலே அடுக்கி வைக்கட்டுமா?"

"பாத்திரங்களைத் துடைக்க ஆயா பழைய துணி கேட்டாங்க. இந்த கிழிஞ்ச பனியன், வேட்டியைத் தந்திடவா?"

''ஜன்னலுக்குக் கொக்கி ஏதும் சரியில்லையே... ஆசாரிக்குச் சொல்லிவிட்டிருக்கேன். அவர் வரவும் கதவு, அலமாரி கட்டில் எல்லாம் தேய்த்து, பாலிஷ் பண்ணச் சொல்லட்டா?'' என்று தொணதொணத்தாள்.

''ஏதோ செய் ஆனந்தி'' என்றதும் அறை மாயம் போல புதிதானது. மரச்சாமான்களில் முகம் தெரிந்தது.

தேக்குக் கட்டிலில் சந்தனநிற சாட்டின் விரிப்பு.

திரைச்சீலைகள் சுத்தமாகி, புதிது போலத் தெரிந்தன.

துணிக்கடையின் நேர்த்தியில் அவனது துணிமணிகள் அடுக்கப்பட்டன.

அறை மட்டுமல்ல, வீடே ரம்மியமாய் மாறி விட்டிருந்தது.

ஆனால், ஆனந்தி வேண்டாத சில வேலைகளையும் செய்துகொண்டிருப்பது இப்போதுதானே அம்பலமாகி இருக்கிறது.

மறுபடி தனம், அச்சத்துடன் கேட்டாள் -

''என்னப்பா... இந்நேரம் நீ வீட்டில்?''

''ஒண்ணுமில்லம்மா... உட்காருங்க.''

முன்பு சீக்காளி போல் தோன்றிய தாய் இப்போது தெளிவும் தோரணையுமாய் இருந்ததைக் கவனித்தான்.

அம்மாவிடம் பதமாகத்தான் பேச வேண்டும்.

''கையில் என்னம்மா?''

''சாவிப்பா... லாரி வரும். அத்தனை தேங்காயையும் எத்தணும்னியாமே? ஆனந்தி அந்தப் பொறுப்பை என்கிட்ட விட்டுட்டா.''

அவன் நெஞ்சு, குற்றமுடன் குறுகுறுத்தது.

யாருக்கும் ஏதும் தெரியாது என்ற எண்ணத்தில் அத்தனை பொறுப்புகளையும் இதுவரை தானே சுமந்ததும் தப்போ?''



''ஆனந்தி எங்கே?''

''மேற்குத் தோப்பிலேருந்து நெல்லிக்காய் வந்தது. அதை ஊறுகாய் போடப் போறாளாம்... ஏதோ புத்தகத்தைப் பார்த்து கிளறிட்டிருக்கா.''

''ஊறுகாயோட அவள் நிறுத்திகிட்டால் நல்லது...''

அடக்க நினைத்தும் அடங்காமல் வார்த்தைகள் கொட்டின.

''ஏனப்பா... என்ன செய்துட்டா?''

''பெரிய விஷயங்களில் தலையிடறாள். கும்பக்கரை அருவி போனாளே...''

''அதாச்சே ரெண்டு மூணு வாரங்களுக்கு முன்னே. நீயும் போகச் சொன்னியாம். என் உத்தரவு வாங்கிட்டுதான் கிளம்பினாங்க.''

''ஆமாம்மா. அவங்க போனதில் தப்பில்லை. ஆனால் அங்கே அமுதுவைச் சந்திக்க, பேச, அந்தக் கவிதைக் கார பயலை வரவழைச்சிருக்கிறா...''

தனம்மாள் பரிதாபமாய் விழித்தாள்.

''யாரு?''

''ஒருநாள் நம்ம வீட்டுக்கே வந்தானாமே? அமுதுகூட அவன் மேலே தனக்கு நோக்கமிருந்ததாய் உங்ககிட்ட சொல்லலை?''

''இளம், பழம்னு ஏதோ பேரு... ஆமாம்.''

''அவனோடு அருவிக்கரையிலே பேச்சுவார்த்தை நடந்திருக்குது.''

''கூட பெரியதாயியும் போனாளேப்பா?''

''சிறுசுங்க தனியாய் பேசினது உண்மை.''

தனத்திற்கு கால்கள் தளர்ந்தன.

நாற்காலியில் அப்படியே சரிந்தாள்.

''நான் என் தங்கச்சிக்கு சிங்கம் மாதிரியான மாப்பிள்ளையைப் பார்த்தேன் - பாலாவைச் சொல்றேன், ஆள் பார்க்க, பழக அம்சமானவன் - உழைக்கிறவன்.''

தனத்தின் தலை மெள்ள அசைந்தது.

''ஆமாப்பா.''

''அவனுக்கும் நம்ம அமுதுவைப் பிடிச்சிருக்குது.''

இப்போது தனத்தின் தலை மறுப்பாய் அசைந்தது.

''இல்லப்பா...''

ஆனந்தனின் கண்கள் இடுங்கின.

''பாலா அடிக்கடி நம்ம வீட்டுக்கு வர்றான். அமுதுக்கு அம்மை வார்த்தது. தெரிஞ்சதிலேருந்து சதா இங்கேயே பழிகிடக்கிறான். நான் தோட்டத்துக்குப் போயிட்டாலும் அமுதுக்கு இளநீர், ஏதோ இலைன்னு எடுத்துட்டு வந்ததாய் போனில் என்கிட்ட சொல்வானே.''

எல்லாம் எனக்குத் தெரியும் என்ற தோரணையில் பேசிய மகனை சற்று அனுதாபத்துடன் பார்த்தாள் தாயார். ''அதெல்லாம் சரிப்பா. ஆனால், பாலா இங்கே வர்றது அமுதுக்காக இல்லை...''

இவன் முகம் மேலும் சுருங்கியது.

''பின்னே?'' மிக மெள்ள கேட்டான்.

''ஆனந்திக்காக.''

மகனின் முகம் போன போக்கைக் காண சகிக்கவில்லை என்றாலும் தொடர்ந்தாள்.

''அமுதுதான் உடம்புக்கு முடியாமல அறையில் அடைஞ்சு கிடந்தாளே...''

''ஆனா இளநீர், இலைன்னு...''

''அந்தச் சாக்கிலே வந்தவன் ஆனந்தியோட பேசுவான். சிலசமயம் அப்படியே பின் தோட்டத்தில் காலார நடப்பாங்க.''



ஆனந்தனின் முகம் சிவந்தது. ''நீங்க இதையெல்லாம் கவனிச்சும் ஏதும் சொல்லலையா?''

''சொல்ல என்ன இருக்குது? பாலா நல்லவன். நம்ம குடும்பத்துக்கு ஏத்தவன்னு கருதி நீயே வீட்டுக்கு அழைச்சு வந்தவன். அவன் நம்ம வீட்டுக்கு மாப்பிள்ளையா வர்றதுல எனக்குப் பூரண திருப்தி. ஆனால், அமுதுக்கு அவன்மேல் பிடிப்பில்லையே? ஆனந்திக்கு பாலாவைப் பிடிச்சிருக்குது. அவனும் இவளைத் தேடி ஓடிவர்றான்.''

மகனின் முகம் போன போக்கில் பயந்து சூழ்நிலையைச் சற்று இளக்க முயற்சித்தாள்.

''அன்னைக்கு கேபிள்ல 'அன்பேவா' படம் போட எல்லாரும் பார்த்தோம். ஆனந்திக்கு எம்.ஜி.ஆர். படப் பாட்டெல்லாம் பிடிச்சுப் போச்சு... கேசட்டும் வாங்கிப் போட்டு பாட்டெல்லாம் கேட்பாள்.''

இப்போது எதற்கு இந்த வெட்டிப் பேச்சு என்பதாய் முறைத்தான் ஆனந்தன்.

''இல்லை... அகிக்குட்டியும்,ஆனந்தியும் எம்.ஜி.ஆர். போலவே கையாட்டிப் பாடுவாங்க.

'நாம் பார்த்ததிலே
பாலா ஒருத்தருக்குத்தான்
நல்ல தகுதி என்பேன்
நல்ல அழகு என்பேன்'ன்னு.''

''இதையெல்லாம் நீங்க கண்டிக்கிறதில்லையா?''

ஏறக்குறைய உறுமினான்.

''பாலா தங்கமானவன். தவிர கண்ணியமாய்தான் பழகினாங்க. அது தவிர...''

''என்ன?''

''அண்ணன் நம்மை நம்பித்தானே ஆனந்தியை இங்கே விட்டார்? நாலு கல்யாணம், காட்சின்னு அவளைக்

கூட்டிட்டுப் போகணும்னு நினைச்சதும்கூட அவளுக்கு ஏற்றாற்போல மாப்பிள்ளைப் பையன் அமையணும்னுதான். தொடக்கத்திலே சாதாரணமாய் பழகறாங்கன்னு நினைச் சேன்... ஆனா, மதுரையில் சினிமா ஸ்டாரு மாதிரி அந்தக் கேசவ் பையனைப் பார்த்தும் ஆனந்தி அசையலியே... அப்புறம்தான் அவள் மனசில் வேற யாரோ இருக்கிறதாய் பட்டது.''

''மாமாகிட்ட - அதாவது ஆனந்தியின் அப்பாகிட்ட இதையெல்லாம் பற்றி ஏதும் சொன்னீங்களா?''

இப்போது தனம்மாளின் முகம் சற்று மலர்ந்தது.

''ரெண்டு நாள் முன்னே அண்ணன் பேசினாருப்பா...''

'என்னம்மா... சவுக்கியமா? உடம்பைக் கவனிக்கறியா?'ன்னு அத்தனை பாசமாய் விசாரிச்சாரு. நம்மைப் பெத்தவங்க போனபிறகு குடும்பத்திலேருந்து யாராவது இப்படி அனுசரணையாய் விசாரிச்சால் அது தனி தெம்புதானே?''

கோபத்துடன் கையாட்டினான்.

''பேசத் தொடங்கின விஷயத்தை விட்டுட்டு வேறெங்கோ போயிட்டீங்க?''

''ஆங்... அப்ப... அப்ப அண்ணங்கிட்ட சொன்னேம்ப்பா...''

''என்ன சொன்னீங்க?''

''இப்படி ஆனந்தி, பாலாவோட அன்பாய்ப் பழகறான்னேன். பாலாவைப் பற்றி கேட்டுத் தெரிஞ்சு கிட்டதும் அவருக்குத் திருப்தி. ஆனந்தனுடைய சிநேகிதன். நம்ம வீட்டுக்கு மாப்பிள்ளையாகணும்னு ஆனந்தனே தேர்ந்தெடுத்தவன்னு சொல்ல, உங்க மாமாவுக்கு ஏக உற்சாகம். அப்ப தகுந்த பையன்தான்'னு சொல்லிட்டார்.''

''யார், நம்ம வீட்டு மாப்பிள்ளைங்கிறதை நான்தான் முடிவு செய்யணும்'' என்று கத்திய மகனை அச்சத்துடன் பார்த்தாள் தனம்.



''எம்ப்பா உனக்கு இத்தனை கோபம்.?''

கதவின் பித்தளைக் குமிழ் அவன் கைப்பிடியில் திணறியது. அழுந்தத் திருகியதில் கழன்று தரையில் மோதி உருண்டது.

ஆத்திரத்துடன் அறையிலிருந்து வெளியேறியவனை கையாலாகாத்தனமாய் பார்த்தாள் தாய்.

அவன் கோபத்தின் காரணம் அவளுக்குப் புரியவில்லை.

ஆத்திரம் அடங்க ஒரு பாட்டில் தண்ணீரைக் குடித்தான் ஆனந்தன். இருந்தும் பத்து மைல் தூரம் ஓடியவனைப் போல இளைத்தது.

உடம்பெல்லாம் விநோத நடுக்கம். அவனுக்குமே புரியவில்லை.

ஆனந்தி பாலாவின் காதல் சமாச்சாரம் ஏன் தன்னை வெறியூட்டுகிறது என்பது புரியவேயில்லை.



## 20

**மு**ன்னறையின் விளக்கைப் போட்டு விட்டு ஒரு பத்திரிகையை புரட்டியபடி அமர்ந்தாள் ஹேமா.

இட்லி குக்கர் அழைப்பதற்குள் அதன் இரு தொடர்களையும் படித்துவிட வேண்டும் என்ற அவசரப் அவளுக்கு.

ஜன்னல் பக்கம் ஏதோ சத்தம் கேட்டது.

அவள் கண்டு கொள்ளவில்லை.

அது ஊருக்கு ஒதுங்கிய இடம்... வெகு சி வீடுகளுள்ள காலனி.

மூன்று ஆண்டில் பயம் தெளிந்து தனிமை, பழகி விட்டது.

அவள் தொடர்களை வாசித்து முடிக்கவே காத்திருந்தது போல குக்கர் விசிலடித்துக் கூப்பிட்டது.

இட்லிகளை எடுத்துப் பாத்திரத்தில் அடுக்க, வயிறு கிள்ளியது. வெங்காய சாம்பாரின் மணம் பசியைக் கிளறியது.

'ச்சே... இவர் நேரத்தோட வந்தால் என்ன? காட்டுக்குள்ள பெண்டாட்டி சாப்பிடாம காத்திருப்பாளே... நேரத்துக்கு வீடு போய் சேருவோம்ங்கிறது இவருக்குக் கிடையவே கிடையாது...' முணங்கியவளை அந்தச் சத்தம் கவர்ந்தது.

பின்பக்கம் யாரோ நடக்கிறார்கள்!

புதிதாய் பயம் தலைதூக்கியது.

யாரும் வந்தால் முன்பக்கமாய் கூப்பிடாமல் இங்கென்ன வேலை?

சன்னமாய் கொலுசின் சத்தம்...

ஹேமாவிற்கு வியர்த்தது.

ஜன்னலைத் திறந்து பார்க்கவும் துணிவு வரவில்லை.

கணவன் ஜெயசீலனுக்காய் தீவிரமாய் காத்திருக்கலானாள்.

பசி மறந்தே போனது.

கதவுகளின் தாழ்ப்பாள்களை மறுமுறை சரிபார்த்தவள் டி.வி.யை உயிர்ப்பித்தாள்.

அதன் சப்தங்கள் சற்று ஆறுதலாக இருந்தன.

அவளது கணவன் ஜெயசீலன், ஒரு புகைப்படக் கலைஞன். வெவ்வேறு இடங்களுக்குப் போய் காமிராவில் படங்களைப் பதிவு செய்பவன் என்பதால் எங்கிருக்கிறான் என்பதே தெரியாது.



கணவனின் ஸ்கூட்டர் சத்தம் அவளைத் தெம்பாக்கியது. ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

''என்ன ஒருமாதிரி திருட்டு முழியோட நிக்கிறே?''

காமராவை இவளிடம் நீட்டியவன் மெல்ல சீண்டினான்.

''சீக்கிரமாய் உள்ளே வாங்க...''

'என்னாச்சி உனக்கு' என்பதுபோல மனைவியைப் பார்த்தான்.

''பின்னால் ஒருமாதிரி சத்தம் கேட்டது...''

''யானையா... புலியா...?''

''என் தலை... யாரோ நடக்கிறாப்பல... அதுவும் கொலுசோட... அதற்குமுன்னே ஜன்னலைச் சுரண்டறாப்பல கேட்டது.... நான் சரியாய் கவனிக்கலை...''

''பொம்பளை திருட வந்திருந்தால் அப்ப எனக்குத் தான் ஆபத்து...''

''எனக்கு நிம்மதிங்கிறீங்க...?''

''சாப்பாட்டைக் கொடு... அகோர பசி... பிறகு லுங்கிக்கு மாறியதும் பின்பக்கம் ஒரு பார்வை பார்த்துடுறேன்...''

சாப்பிட்ட தட்டுகளுடன் சமையலறைக்குப் போனவள், அப்படியே நின்றாள். இப்போது கொலுசின் சிணுங்கல் தெளிவாய்க் கேட்டது.

பின்புறக் கதவை யாரோ மிக மெள்ளத் தட்டினார்கள்.

''ஏங்க... கதவைத் தட்டுறாங்க...''

அவன் எலி அடிக்க வைத்திருக்கும் தடியை கையில் எடுத்துக்கொண்டான்.

''ஐயோ... போலீசுக்குப் போன் பண்ணிடலாமா... இல்லைன்னா பக்கத்து வீட்டுக்கு?''

''முதல்ல பின்புற ஜன்னலைத் திறந்து எட்டிப் பாரு... வெளியே யாரு, எத்தனை பேர் நிக்கிறாங்கன்னு பார்த்துட்டு முடிவெடுப்போம்.''

அவள் முகத்திலும் பயவியர்வை.

ஜன்னல் வெளியே பார்த்த ஹேமாவின் முகத்தில் சற்று தெளிவு.

''என்னங்க... யாரோ ஒரு சின்னப் பொண்ணு...''

''அதுக்காக உடனே கதவைத் திறந்துடாதே... நாலு தடியனுங்க பின்னாடி உள்ளே புகுந்துடலாம்.''

''ஐயோ....''

இம்முறை கதவு தட்டப்பட, கூடவே ஒரு இளம் குரல்.

''அக்கா... கதவைத் திறங்க... எனக்குப் பயம்மா இருக்கு...'' என்றது.

ஹேமா தாளாமல் தாழ் விலக்கினாள்.

ஒடுங்கி நின்ற பெண்ணை உள்ளே இழுத்துவிட்டு, றுபடி கதவைச் சாத்தினாள்.

''யாரு.... நீ?''

''..........''

''தனியாவா வந்தே...?''

''.........''

''எங்கிருந்து வர்றே...?''

''..........''

''ஏதும் பேசாமல் இப்படி முழிச்சால்...?''

கணவனும், மனைவியும் மாறி மாறிக் கேட்க, அவள் தும் பதில் சொல்லவில்லை.

கடைசியில் ''சாப்பிட்டியா?'' என்று ஹேமா கேட்க, பெண் விசும்பலானாள்...!

சற்றே இடம் பிசகி இருந்த சோபா, நாற்காலிகளை கி வரவேற்பு அறையைப் பெருக்கினாள் பொன்னி. ந்துத் தரை பளபளத்தது.



'சாயங்காலம் ஒருதரம் வீட்டை சுத்தம் பண்ணிடணும் என்று ஆனந்தி சொல்லிவிட, பொன்னி, அதைத் தட்டுவதேயில்லை.

சமையலறையில் இருந்து பூரி மசாலாவின் வாசனை கமகமத்தது.

பள்ளியிலிருந்து அகிலா, வீடு திரும்பும் நேரம் அது. ஆக சுவையான சிற்றுண்டி அவளுக்கென்றே தயாராகி மேசையில் காத்திருக்கும்.

வாசல் பக்கமிருந்த பெரியதாயி, உள்ளே வந்தாள். அந்த நடையின் வேகத்தை, வித்தியாசத்தை கவனித்த பொன்னி, நிமிர்ந்தாள்.

பெரியதாயியின் முகத்தை இத்தனை கலவரத்துடன் இது வரை அவள் பார்த்ததில்லை.

''என்னக்கா... என்னாச்சு...?''

''நீ உள்ளே வா... ஒரு குவளைத் தண்ணி எடுத்துட்டு வா...''

''எங்கே?''

''பெரியம்மாளோட அறைக்கு.''

''அம்மாவுக்கு என்னாச்சுக்கா?''

''இனி ஏதும் ஆயிடாம இருக்கணும். கடவுளே... இந்தச் சேதியைச் சொன்னா என்னாகுமோ?''

புலம்பலுடன் தனம்மாளின் அறைப் பக்கம் வந்தனர்.

பெரியதாயிக்குப் படபடத்தது. தன்னைத் திடப் படுத்திக் கொண்டு விசயத்தைப் பொன்னியிடம் சொன்னாள்.

இப்போது பதற்றம், குரங்குக் குட்டி போல பொன்னியிடம் தாவியிருந்தது. அவளும் அல்லாடினாள்.

''ஐயோ இந்தச் சேதியை முதல்ல சின்னம்மாகிட்ட சொல்லுக்கா...''

''ஆனந்திம்மா கிட்டேதானே...?''

ஆனந்தி, ஆனந்தன், தனம் என்று அவ்விஷயம் சொல்லப்பட, அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு திசையாய் செயல்பட்டனர்.

''ஆண்டவா... இதென்ன சோதனை...'' என்ற ஆற்றாமையுடன் தனம் தொய்ந்து விழுந்தாள்.

ஆனந்தி, பேச்சின்றி யோசனையில் ஆழ்ந்தாள்.

ஆனந்தனோ அடைபட்ட புலி போல உலாவினான். பின் அவன் காரை எடுத்துக்கொண்டு அகிலாவின் பள்ளியை நோக்கிக் கிளம்ப, ஆனந்தி, வீட்டின் பின்புறம் போனாள்.

வீட்டை உலுக்கிய அந்த விசயம், கால் முளைத்து வீட்டிற்கு வெளியே கசியக் கிளம்பி இருந்தது.

சிறிது நேரத்தில் திரும்பிய ஆனந்தனின் தோள்கள் தளர்ந்திருந்தன- நடையில் தொய்வு.

முன்னறையில் அலுப்பாய் அமர்ந்தான்.

''காப்பி ஏதும் கொண்டாரட்டா...?'' பொன்னி பம்மலாய் கேட்டாள்.

போன காரியத்தில் ஏதும் நல்ல தகவல் இல்லை என்பது எஜமானின் முகமே அவளுக்குச் சொல்லிவிட்டது.

மறுப்பாய் கையாட்டினான்.

''என்ன ஏதுன்னு ஒன்னும் புரியலை. காலையில் பள்ளிக்கூடம் போறப்ப அகிலா ஏதும் சொன்னாளா...? சிநேகிதி வீட்டுக்கோ வேறெங்கேயோ போறதாய்?''

''இல்லீங்களே... ஆனந்தியம்மாட்டேயே ஏதும் சொல்லலியாமே...''

''ம்ம்...''

அந்நேரம் தொலைபேசி அழைத்தது.

வழக்கமாய் இனிய சிரிப்பு போலிருக்கும் அது, இன்று ஓலம்போல ஒலித்தது.

ரிசீவரை தொட்டுத் தூக்கியவனின் விரல்கள் நடுங்கின.

''ஆனந்தன் ஹியர்.''



''நான்தாங்க... சுதாங்கினி...''

''ம்ம்.''

''என்னங்க... இப்படித் தீராதப் பழியைத் தேடித் தந்துட்டாளே...''

''என்ன செ..ய்றே..?''

''அகிலா வீட்டை விட்டு ஓடிப்போயிட்டாளாமே...?''

''யார் சொன்னா?'' சுள்ளென்று கேட்டான்.

''அது... அது.. நான் உடனே வர்றேங்க... இந்நேரம் நான் உங்க பக்கத்துல இருந்தால்தான் நல்லது. தனியாய் இதுமாதிரியான அவமானத்தைத் தாங்க முடியாது...''

''வேணாம்... வரவேணாம்...''

அதற்குள் பெரியதாயி அவசரமாய் ஏதோ அபிநயக்க, ஒரு நிமிடம்'' என்று விட்டு, ரிசீவரின் வாய்ப்புறத்தை மூடிவிட்டு பெரியதாயியிடம் விவரம் கேட்டான்.

மறுநிமிடம் தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்தவனின் தொனியே மாறியிருந்தது.

''முதல்ல இந்தத் தப்பான தகவலை உனக்குத் தந்தது யாருன்னு தெரியணுமே சுதா...''

''அது... அது முக்கியமில்லை. ஆனால்...''

''தப்பான விசயம் அதுவும் இத்தனை தப்பான விசயத்தைச் சொன்னவன் கழுத்தை முறிக்கணுமே.. அதான் கேட்கிறேன். சொல்லு.''

இதைச் சுதாங்கினி எதிர்பார்க்கவில்லை. ஆனால், பேச்சைத் தொடர்ந்தாள்.'' இது மாதிரியான சேதி காட்டுத் தீ போல பரவிடுமேங்க.''

''அந்தத் தீயை அணைக்கத்தான் மேலும் விபரம் கேட்கிறேன்.''

''அப்ப... அப்ப அகிக் குட்டி வீட்டுல தான் இருக்காளா?''

மறு பக்கம் சுதாவின் வீட்டினர் ஒருவருக்கொருவர் பரபரப்பாய் பேசிக் கொள்வது இவனுக்குக் கேட்டது.

''வீட்டில் இல்லை. ஆனால், எங்கே இருக்கிறாங்கிறது எங்களுக்குத் தெரியும். 'ஆசிரியை வீட்டில் விசேஷம். போயிட்டு தாமதமாய்த்தான் வருவேன்'னு ஆனந்திகிட்ட சொல்லிட்டுதான் போயிருக்கா. ஆனந்தி இந்த விசயத்தை டிரைவர்கிட்டே சொல்ல மறந்ததால் ஏற்பட்ட சின்ன குழப்பம்.''

''ஓ... ஆனாலும் ஆனந்திக்கு இத்தனை மறதி லட்சியம் ஆகாது.''

''உனக்கு இத்தனை அவசரமும் ஆத்திரமும் ஆகாது ...ங்கினி. அகிக்குட்டி வீட்டைவிட்டு ஓடினதாய்... ச்சே... ...ப்படி அதை நம்பினே? துணிஞ்சு என்கிட்டயே ...ன்னே?''

''இல்லைங்க ஆனந்தன்... வந்த செய்தி அப்படி.''

''அப்படி செய்தி சொன்ன ராஸ்கல் யாருன்னு ...றேன்.''

''ரொம்பக் கோபமாய் இருக்கீங்க... மன்னிச்சிடுங்க... ...கட்டுமா?''

போனை வைத்த ஆனந்தனின் விரல்கள் இன்னும் ...ன. ஆனால், இப்போது நடுக்கத்திற்கான காரணம் ...

தொலைபேசியை எடுத்தபோது அகிலாவைக் கடத்திய ...ா ஒருவன், 'உன் தங்கை உயிரோட உனக்குக் ...க்கணும்னா இத்தனை லட்சங்களைத் தா' என்று ...ப் போகிறானோ என்ற அச்சம்... பதட்டம்.

...னால், இப்போதோ அகிலா வீடு வராத செய்தி ...ன சீக்கிரம் எப்படி சுதாங்கினியின் காதை எட்டியது ...ண்ணம்... கூடவே சுதாங்கினி பேசிய முறையும் ...க்குள் ஆத்திரத்தை மூட்டி இருந்தது. அவள்



வார்த்தைகளில், தொனியில் அக்கறையைவிட ஆங்காரமே இருந்தது.

கலவரத்தைவிட, இப்படியா விசயம் என்ற எக்களிப்பு!

அந்த நேரத்திலும் விடாமல் ஆனந்தியைக் குற்றம் சாட்டிய கீழ்மைக் குணம். இவை தவிர, விவரம் யார் மூலம் அவளுக்குத் தெரியவந்தது என்பதை அவள் மறைத்த விதம்... அவசரம்.

இதை விசாரிக்கவேண்டும்.

முன்பே ஆனந்தனுக்குள் தோன்றிய சந்தேகம் இன்று ஊர்ஜிதப்பட்டுவிட்டது.

இங்கு சுதாவிற்கான ஒரு உளவாளி யாரோ உண்டு! இங்கே நடப்பதை அங்கே சுடச்சுட பரிமாறும் ஒரு ஒற்றன்.

'யார் அவன்?'

'பெரியதாயியை அருகே அழைத்தான்.

''நல்லவேளை தக்க சமயத்துல என்கிட்ட அப்படிச் சொல்லச் சொன்னீங்க...''

''ஆனந்தியம்மாதான், அவுங்க கிளம்பறதுக்கு முன்னே யார் கேட்டாலும் அகிலா, ஆசிரியை வீட்டு விசேஷத்துக்குப் போயிருக்கிறதாய் சொல்லச் சொன்னாங்கய்யா...''

''ம்ம்... நல்லவேளை சுதா இப்படி திடீர்னு கேட்கவும் எனக்கு எதையும் மறைக்கத் தோணலை... ஆனா, உண்மையில் அகிலா அப்படி ஏதும் தகவல் தரலைதானே?''

பெரியதாயி வருத்தமாய் தலையசைத்தாள்.

''இல்லீங்க... என்னன்னு தெரியலை... ஆனா, நாம வயசுப் பிள்ளையைக் காணோம்கிறதைத் தண்டோரா போட முடியுமா? அதான் ஆனந்தியம்மா பழியைத் தன்மேலத் தூக்கிப் போட்டிட்டுக் கிளம்பி இருக்காங்க.''

''எங்கே?''

''தெரியலைங்க... ஆனா, பைரவும் கூடவே போயிருக்கான். அதனால் பயமில்லை.''

''யாருகூடவோ.. நடந்தா போனாளா?''

''ஆமாங்க. அகிக்குட்டியைக் கண்டுபிடிச்சு கூட்டிட்டு வந்திடுவேன்னு சொல்லிட்டு போயிட்டாங்க.''

அந்நேரம் கார் டிரைவர் நாராயணனை தெட்டித் தள்ளியபடி வந்தான் ரங்கன்.

''ஐயா கால்ல விழுடா. சிட்டா கொடுத்துவிட்டேறு உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணுற மூதேவி...''

தன் முன் விழுந்திருந்த ஒட்டுநரை ஒரு நிமிடம் பார்த்தான் ஆனந்தன். ''ஆக நீதான் சுதாவுக்குத் தகவல் சொன்னது இல்லையா?'' - மென்ன கேட்டான்.

''மன்னிச்சிருங்கய்யா.''

''எத்தனை நாளாய் இது நடக்குது?''

''சுதாம்மா கேட்டுக்கிட்டாங்க... அதான்... அதி லேருந்து...''

''சோறு திங்கிறது இங்கே. வாலாட்டுறது அங்கேயா? நாய்க்குகூட இதைவிட நியாயம் தெரியுதுங்களே...'' ரங்கன் பொறுமினான்.

''முதல்ல எழுந்திரி.''

எஜமானன் உத்தரவிட தடுமாறி எழுந்த நாராயணனின் உடல் நடுங்கியது. இதுவரை ஆனந்தன் இந்தத் தொனியில் அவனிடம் உத்தரவிட்டதில்லை.

தன் மதிப்பைத் தானே குறைத்துக் கொண்டது நாராயணனுக்குப் புரிந்தது.

''நீ வழக்கம் போல அகிலா பாப்பாவைக் கூட்டிவர பள்ளிக்கூடம் போனே. அப்புறம் என்ன நடந்தது?''

''அது, அப்பமே நடந்து போயிட்டாளேன்னு சில பொண்ணுங்க சொல்லிச்சுங்க. ஆனா, நான் காத்து நின்னேன். பாப்பா வரலை. எல்லாரும் போனபிறகு காவலாளி கேட்டைச் சாத்தவும்தான் சுதாரிச்சு உள்ளே போயி விசாரிச்சேனுங்க.''



''ம்ம்...''

''அங்கேயிருந்த ஆயாதான் நம்ம பாப்பா மதியத்திலே இருந்து அழுதிட்டு இருந்ததாய் சொல்லிச்சுங்க.''

ஆனந்தனின் முகம் கறுத்தது.

''என்ன விசயமாம்?''

''தினசரி மத்த பிள்ளைங்க பாப்பாவை ரவுசு பண்ணுங்களாம். பாப்பா போட்டுட்டுப் போகிற நகை, துணி வகைகளைப் பார்த்து அதுங்களுக்குப் பொறாமை. அதனால் ஏதேதோ பேசுங்களாம்... ஆனா, பாவம் பாப்பா வாயே திறக்காதாம், அப்படியே பேசினாலும் சண்டை வரும்னாங்க....''

''ஆனந்தன், பெரியதாயியைப் பார்த்தான்.

''அதெல்லாம் எனக்கு எதும் தெரியாதுங்களே... பாப்பா கொஞ்ச நாளாவே வாட்டமாகத்தான் இருந்துச்சு. மாசத்துக்கு மூணு நாளு பின்புறமாய் தனியே இருக்கிறதுதான் அதுக்குப் பிடிக்கலையாக்கும்னு ஆனந்தியம்மா பாப்பாவைத் தன்னோடவே இருக்கச் சொன்னாங்க.''

''ஓகோ?''

தன் வீட்டில், தான் அறியாத பல விசயங்கள் நடப்பது ஆனந்தனுக்கு உறைத்தது.

டிரைவரிடம் கவனத்தைத் திருப்பினான்.

''உடனே நீ யார்கிட்ட விசயத்தைச் சொன்னே?''

''வழக்கம் போல பெரியதாயி வாசல்ல காத்து நின்னுது. பாப்பா காரிலேருந்து இறங்கலைன்னதுமே பதற தொடங்கிடுச்சு. விவரம் சொல்லவும் உள்ளே ஓடி போய்ச்சு...''

''நீ உம்மவன் மூலம் சீட்டு எழுதி அனுப்பப் போயிட்டே இல்லியா?'' என்ற ரங்கன் தொடர்ந்தான் - ''முதலாளிக்கு... எங்க விசயத்தையும் இப்ப சொல்லிடுறேனுங்கய்யா. பொன்னி மேல் எனக்குக் காதலு

ஊடலெல்லாம் கிடையாதுய்யா. நாங்க ஒருத்தரை ஒருத்தர் கல்யாணம் செய்ய முடிவெடுக்கக் காரணமே எஜமான விசுவாசந்தானுங்க. வேறெங்கேயும் போகாம இங்கேயே காலம் முழுக்க வேலை செய்ய ஆசை. நானும் வேற பண்ணைக்கு மாறமாட்டேன்னு அதுக்குத் தெரியும்.''

நானும் உனக்குச் சளைத்தவன் இல்லை என்ற ரோஷம் இழைய நாராயணன் பேசினான் -

''உங்களைக் கேட்காம சதாம்மாவுக்கு விவரங்களைச் சொன்னது தப்புத்தான்யா. அது முதல்ல எம்மூளைக்கு எட்டலை...''

''அது இருந்தாத்தானே எட்டுறதுக்கு?''

ஓரமாய் நின்றிருந்த பொன்னி நொடித்தாள்.

பெரியதாயி கண்களால் அவளை அதட்டினாள்.

''நம்ம வீட்டுக்கு வரப்போற எஜமானியம்மா அவுங்க. அவுங்களுக்கு நம்ம வீட்டு விவரமெல்லாம் தெரியறதுல தப்பில்லைன்னு நினைச்சேனுங்க. எனக்கு விவரங்க உடனுக்குடனே தெரியணும்னு அவுங்க திட்டினதால் சீட்டுல எழுதிவிட்டேன்.''

''அந்த அம்மாவுக்கு விசயம் தெரியணும்னா முதலாளிகிட்டே கேட்டுக்கணும். இல்ல இங்கே பெரியம் ாவுக்கு ஒத்தாசையாய் நின்னா எல்லாம் விவரமாய் தானாய் தெரிஞ்சுட்டுப்போவுது... அவங்க எறிஞ்ச காசுக்கு ஆசைப்பட்டு துரோகம் செஞ்சுட்டே...''

ஆளாளுக்குப் பிடுங்க, ஆனந்தன் அவர்களை அடக்கினான் -

''இப்ப இதெல்லாம் பேசிப் பயனில்லை. தாசில்தார் பொண்ணு. அகிலாவுடைய வகுப்புதான். அங்கே போய் ...ம் உதவி கிடைக்குமான்னு பார்க்கிறேன்.''



''ஆனந்தனுக்குள் இளமுருகுவும், அவன் பாட்டியின் எச்சரிப்பும் வேறு சிலம்பம் அடித்தன.

அகிலா எங்கே?

யார் அவளைக் கடத்தியது?

ஆனால், அலையாய் அலைந்து, இருட்டியபின் வீடு திரும்பிய ஆனந்தனின் முகமும் இருட்டியே கிடந்தது!



## 21

''மெய்யாவாப்பா சொல்றே? அப்ப அகிக்குட்டிக்கு ஏதும் ஆபத்தில்லையே?''

ஒரே நிமிடத்தில் ஆனந்தன் சொன்ன பொய்யில் அவன் தாயின் முகம் தெளிந்து விட்டது.

''ஆமாம்மா... ஆனந்தி கிட்ட சொல்லிட்டுதான் போயிருக்கா. அகி இப்ப வந்திடுவா.''

''ஆமாம் ஏதோ ஒரு ஆசிரியை மாசமா இருக்கிறதாய் சொன்னா... அங்கு சீமந்தாய் இருக்குமோ?''

''ஏதோ ஒரு விசேஷம்.''

''என் கவலை வேறுப்பா... தாலி அறுத்தவள் வளர்த்த பொண்ணு-முறைகேடாய் போயிடுச்சு என்கிற பேச்சு வந்திடு மோன்னு அஞ்சுவேன். அதனாலேயே அவளைக் கெடுபிடி யாய் நடத்துவேன். நேத்து ரங்கன் முண்டாசைக் கட்டி அவுத்து விளையாடினாள். 'இனி ஆண்பிள்ளையைத் தொட்டால் கையை முறிச்சிடுவேன்'னு திட்டினேன் அவளும் இப்படி சதா திட்டினா வீட்டை விட்டு ஓடிடு வேன்னு மிரட்டினாள். அதைப் போல...''

''அப்படி எதுமில்லம்மா'' தாயின் கலைந்திருந்த தலைமுடியை வருடினான்.

அபூர்வமாய் கிடைத்த மகனின் பரிவில் நெகிழ்ந்த தனம்மாள், அவன் தோளில் சாய்ந்துவிட்டாள்.

தன்னிடம் ஆதரவு தேடிய தாயின் தொடுதலில் தனக்கும் ஆறுதல் கிடைப்பதை அவன் உணர்ந்தான்.

'பொருள் விலை உயர்ந்ததாய் இருந்தாலும் அது நம்மிடம் இருக்கும் போது நமக்கு அதன் அருமை புரியறதில்லை' என்றாள் ஆனந்தி முன்பு ஒரு முறை.

''என்ன சொல்ல வர்றே?''

''உங்களுக்குத் தாயின் அருமை தெரியலைன்னு தோணுது. அதான்.''

தாயற்ற ஆனந்தி. ஆற்றாமையுடன் சொன்னது உண்மைதான் என்பது அவனுக்கு இப்போது புரிந்தது.

அதேநேரம் - முள்புதரில் மாட்டியிருந்த நீல தாவணியைப் பார்த்த ஆனந்தியின் மனம் பதறியது.

''பைரு, இது அகிக்குட்டியோட தாவணிதானே?''

பைருவும் அதை நுட்பமாய் முகர்ந்தபடி பார்த்தது.

''தேடுடா பைரு... கடவுளே! அசம்பாவிதம் எதும் நேர்ந்திருக்கக் கூடாதே...'' தொழுத அவள் கண்கள் நனைந்தன.

பைரு சற்று உற்சாகமாய் தரையை முகர்ந்தபடி ஓடி அந்த வீட்டின் அருகில் நின்றது!

ஆனந்தி முன்புறமாய் போய் வாசல் மணியை அழுத்தினாள்.

கதவு திறக்க சில நிமிடங்கள் ஆயின. அதற்குள் ஆனந்தியின் வயிறு பலமுறை சுருண்டது. கதவைத் திறந்த



ஆள், பைருவைப் பார்த்து மிரண்டான். அவன் கையிலிருந்த தடி உயர்ந்தது!

''சார்... நான் ஆனந்தி... இங்கே எங்க வீட்டுப் பொண்ணு வந்தாளான்னு விசாரிக்க வந்தேன்'' - அவசரமாய் விளக்கினாள்.

உள்ளிருந்து அதற்கான பதில் வந்தது - விசும்பலாய்!

''அண்ணி...'' ஓடி வந்து இவளைக் கட்டிக்கொண் டாள். அகிலா.

ஆனந்தியின் உடம்பு நிம்மதியில் நடுங்கியது.

''கடவுளே நன்றி... நீ இங்கே எப்படி ? அகி நல்லா யிருக்கேல்ல?''

''முதல்ல உள்ள வாங்க.''

ஹேமா வரவேற்க, வீட்டிற்குள் போனாள் ஆனந்தி.

அங்கு குடித்த காபி அவளுக்கு மிகத் தேவையா இருந்தது. பைருவிற்கும் பிஸ்கட் கிடைத்தது.

கணவனும், மனைவியும் மாறி மாறிப் பேசியதை கேட்டவள், அங்கிருந்தே போன் மூலம் ஆனந்தனுக்கு அவ தங்கை பத்திரமாய் இருக்கும் விவரத்தைத் தெரிவித் விட்டாள்.

ஆனால், அகிலாவை அங்கு வைத்து வேறேது விசாரிக்கவில்லை. தங்களின் துணைக்கு வந்த ஜெயசீல பிரதான சாலைக்கு வந்ததும் திருப்பி அனுப்பிவிட்டாள்.

''ரொம்ப நன்றிங்க'' - கைகுவித்தாள். இப்போ தனியேயிருந்த இரு பெண்களிடையேயும் மவுனம் வலுவ நின்றது. ''மன்னிச்சிருங்க அண்ணி'' - 'பொல பொ வென்று அழுதாள் சின்னவள்.

''வீட்டுல எப்படி பரிதவிச்சோம் தெரியுமா... அகி... என்ன காரணம்?''

''பள்ளிக்கூடத்துல இன்னைக்கு ஒரு விசயம் நடந்திருச்சு...''

''பிரச்சினை எதுவா இருந்தாலும் இப்படியா ஓடி ஒளியறது?.. அதுக்கான தீர்வு அது இல்லையே அகி! இதுவே நீ தப்பானவங்க கையில் சிக்கியிருந்தால் பெரிய ஆபத்தாகி இருக்கும்.''

''எனக்கு யாரையும் பார்க்கப் பிடிக்கலை... தனியாய் இருக்கணும்னு அப்படியே நடந்தேன். இருட்டவும் பயமாயிருச்சு...''

''சரி,பிரச்சினை என்ன? என்ன நடந்தது?''

கண்ணீருடன் திக்கித் திணறி விவரங்களைச் சொன்ன சின்னவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டாள் ஆனந்தி.

''புரியுது. உங்கம்மா உன்னை ஆண்களைத் தொடக்கூடாது, நெருங்கிப் பழகக்கூடாதுன்னு சொன்னது உனக்கு அசிங்கமாய் பட்டது. ஆனால், அம்மா எச்சரித்ததை உண்மையாக்குவது போல உன் பள்ளிக்கூடத்துக்கு புதுசா வந்த வாத்தியார் உன்னைத் தொட முயன்றது உனக்கு ரெட்டை அருவெறுப்பு. ஒரு ஆணின் வக்கிரத்தைப் பார்த்ததும், அம்மா சொன்னது உண்மைதாங்கிறது புரிஞ்ச அதிர்ச்சி... எல்லாத்தையும் தாளமுடியாமல் தனிமையைத் தேடி ஓடிட்டே...?''

தனக்கே புரியாத விசயங்கள், ஆனந்தி சொல்கையில் அகிலாவிற்கு விளங்கியது.

ஆனால், பண்ணை வீட்டை நெருங்கியதும் அவளுக்குள் மீண்டும் கிலி...



''ஐயோ... இப்ப அம்மா, அண்ணனெல்லாம் என்னை அடிப்பாங்க. கொன்னே போட்டிடுவாங்க.'' என்று நடுங்கினாள்.

''எதுக்கு? நீ உன் ஆசிரியையின் சீமந்தத்துக்குத்தானே போயிட்டு வர்றே?''

அகிலா தன் ஈரக்கண்களை விரித்தாள்.

''அப்படித்தான் சொல்லி வைச்சிருக்கேன். யாரும்உன்னைத் திட்டாமல் பார்த்துக்கிறது என் பொறுப்பு. நீயும் இனி பொறுப்பாய் நடந்துக்கணும் அகி.''

அகிலா, மூத்தவளை கட்டிக்கொண்டாள்.

ஆனந்தன், ஆனந்தியைப் பார்த்தபடி நின்றான். இதுவரை எதை எப்படி செய்ய வேண்டும் என்று ஒண்டியாய் முடிவெடுத்த தான், அபிப்ராயம் கேட்டு ஒரு இளம் பெண்ணின் முன் நிற்பது அவனுக்குப் புதிராகத்தான் இருந்தது!

ஆனால், அப்படி நிற்பது இம்சையாய் இராமல் இன்பமாய் இருந்தது. அது அதனினும் பெரிய புதிர்!

''அகியைச் சீண்டினவனைச் சும்மா விட்டுடலாம் கிறியா?''

''அவன் நெருங்கினதுமே அகி உஷாராகிட்டா. ஆக நம்ம பெண்ணுக்குச் சேதமில்லை. போலீஸ் புகார் வேண்டாம். ஆனால், தலைமை ஆசிரியர்கிட்ட நிச்சயம் புகார் செய்யணும். அவரும் இந்தப் பிரச்சினையை வெளியே தெரியாமல் நாசுக்காய் கையாளணும். அந்த வாத்தியார் தண்டிக்கப் படலைன்னா, வேற சில குட்டிங்களுக்கும் ஆபத்தாச்சே...''

''ம்ம்... சமயோசிதமாய் யோசிச்சு 'டக்'குன்னு விசயத்தைப் பெரிசாக்காமல் திசைதிருப்பி விட்டாய் ஆனந்தி.

இல்லைன்னா இப்ப வீட்டே புலம்பி, ரசாபாசமாகி இருக்கும். நான் இது முருகேசன் வேலையோன்னு அவன் வீட்டிற்குப் போனேன். அவன் பாட்டி 'இனி உனக்குச் சோறில்லை'ன்னு சொல்லி பேரனை வீட்டைவிட்டே விரட்டிட்டாங்களாம்.''

''இதெல்லாம் பெண்களுக்கே உண்டான சூட்சும புத்தி.''

''ஆனா அது பெரியதாயிக்கோ, அம்மாவுக்கோ ஏன் தோணலை? கதா போனில் ஒப்பாரியே வைச்சுட்டா.''

ஆனந்தியின் புருவச்சுழிப்பில் இருந்த கேள்வி அவனுக்குப் புரிந்தது. ''டிரைவர் நாராயணனை உளவாளியைப் போல பயன்படுத்தி இருக்கிறாள்.''

''ஓ...'' சாதாரணமாய் கேட்கவே முயன்றாலும் அவள் முகத்தில் அவனுக்கான அனுதாபம் தெரிந்தது.

''அதுவும் நல்லதுக்குத்தான். ஆங்... அகி கிட்ட ஏதோ ரொம்ப நேரம் பேசிட்டிருந்தியே... என்ன?''

''தைரியம் சொன்னேன். அப்படியே புது சல்வார் தைக்க அளவெடுத்தேன். நல்ல துணி எடுத்து அவள் சீருடையை ஸல்வார் கம்மிசாய் தைக்கப் போறேன். காதில் ஒற்றை முத்துத் தோடு, முக்கால் பவுனிலே கழுத்துக்குச் சன்னமாய் ஒரு சங்கிலி. இதுதான் இனி பள்ளிக்கான அவள் அலங்காரம். தவிர, ஒரு ஆட்டோ வாங்கிடுங்க அத்தான். அகி பள்ளிக் கூடம் போக, வர, சந்தைக்கு நம்ம பண்ணை சாமான்களை எடுத்துட்டுப் போகவும் அது வசதி...''

''ம்ம்... நாளைக்கு மதுரைக்கும் போய் நீ சொன்ன துணி, நகைகளை வாங்கிடலாம் ஆனந்தி.''

''இங்கேயே வாங்கலாமே?''

''மதுரைக்குப் போய் வாங்கினா நமக்கொரு மாற்றமாய் இருக்கும். முக்கியமாய் அகிக்கு!''



''அதுவும் சரிதான்.''

''ஆனால், மறுநாள் மதியம் அவர்கள் மதுரை கிளம்பும் போது அகிலா உடன் வரவில்லை.

'லேசான காய்ச்சல் அகிக்கு... அரட்டியும் அலுப்பாய் சேர்ந்துச்சல்ல... ஒரு நாளு படுத்திருக்கட்டும்.'

வரவழைக்கப்பட்ட வைத்தியரும் பெரியதாயியை ஒத்தே சொல்ல ஆனந்தியும் ஆனந்தனும் மட்டும் கிளம்பினர்.

''நான் தங்கையைப் பார்த்துக்கிறேன்'' என்றாள் அமுதினி.

''சீக்கிரம் கிளம்பு ஆனந்தி. எனக்கு மதுரையில் வேறு வேலையிருக்கு'' என்று ஆனந்தன் அவசரப்படுத்த ஆனந்தி மறுக்கவில்லை.

இப்படி இருவரும் தனியே ஊர் விட்டு ஊர் போவதைச் சுதாங்கினி பார்த்தால் தன்னைக் கிழித்தே போடக்கூடும்!

ஆனால், இதற்கெல்லாம் அஞ்சும் நிலையில் ஆனந்தி இல்லை. இதைப்போல ஒரு சந்தர்ப்பம் இனி வராது. ஆக, வந்த வாய்ப்பை ஏன் விடவேண்டும்?

ஆனால், அவளது பெண் புத்தி எச்சரித்தது - 'வேண்டாம். அருகில் இருப்பவரை ரசிக்க அவர் உன் உடைமையல்ல. வேறொருத்தியினுடையவர். ஒதுங்கி நல். அதுதான் முறை என்று.

'இனி எனக்கு வேறொருவர் வேண்டாம். இந்த இனிய நினைப்புகளாவது மிஞ்சட்டுமே... இந்த ஒரு அனுபவம் வாய்க்கட்டுமே' மனம் கெஞ்சியது.

மாலை முழுவதும் மதுரையில் பல கடைகள் ஏறி இறங்கினார்கள். பொறுமையாகத் தன்னுடன் வருபவனைப் பெருமிதத்துடன் அடிக்கடி பார்த்து பூரித்தாள்.

"இது சரியா இருக்குமா அத்தான்?"

"அவள் கேட்டதற்கெல்லாம் அவன் புன்சிரிப்புடன் தலையாட்டினான். அவன் வாங்கித் தந்த மதுரை மல்லிகை, அவள் தலையில் மலர்ந்து, நிறைந்து, மணம் பரப்பியது.

அதை ஆழ சுவாசித்தவள், இந்தப் பொழுதை, இதன் இனிமையைத் தன்னுள் பதித்துக்கொள்ளப் போராடினாள். ஏனோ கண்களில் நீர் கோர்த்தது.

கார் நகர எல்லையிலிருந்து ஒதுங்கி வேகமெடுத்தது. ஊர் திரும்புகிறோம் என்ற நினைப்புடன் கண்மூடியவளுக்குக் கார் சிறு குலுக்கலுடன் நிற்க 'திடுக்'கென்றது.

அதற்குள்ளேயா பண்ணை வந்து விட்டது? மனமேயில்லாமல் கண்களைப் பிரித்தவளின் மூச்சு சில கணங்கள் நின்றேபோனது.

"இது... இதென்ன... இங்கே ஏன் வந்தோம்?"

"நீ அம்மாகிட்ட சொன்னியாமே? மறுபடி இங்கே வரணும்னு. இறங்கு. சாப்பிட்டுட்டுப் போகலாம்."

"இப்ப பசிக்கலியே... வீட்டுக்குப் போகலாம்" - படபடத்தாள்.

அவனோ காது கேளாதது போல இறங்கி, கார் கண்ணாடிகளை ஏற்றினான்.

"அத்தான்... எனக்குத் தலைவலிக்குது... வீட்டுக்குப் போகலாம்"- அவள் ஏறக்குறைய கத்தினாள்.

"ஏன் இத்தனை படபடப்பாகிறே? காற்று எப்படி வீசுது பார்... இதுல உட்கார்ந்தால் தலைவலி பறந்துபோயிடும்... வா" அவள் பக்கமாய் வந்து நின்று குனிந்து பேசினான்.

அருகே தெரிந்த அவன் முகம் அவளை மயக்கியது.



"வேணாம் அத்தான்... போகலாம்."

"ஆகாசை இந்த ஓட்டல்ல நான் பார்த்திடுவேன்னு பயப்படறே இல்லையா ஆனந்தி?" - நிறுத்தி, நிதானமாய் கேட்டான்.

தன் முகம் வெளிறுவது அவளுக்கே தெரிந்தது. பேச்சு வரவில்லை.

"இறங்கு. இப்ப ஆகாஷ் இங்கே இல்லை. கம்ப்யூட்டர் படிக்கிறான். மற்ற நேரங்களில் பாலாவுடைய பண்ணையில் வேலை பழகுகிறான்."

"........."

"உனக்கும் தெரியாமல் சிலது நடக்குது ஆனந்தி"

இறங்கத் தடுமாறியவளின் கைப்பற்றி இறக்கினான்.

மவுனமாகவே நடந்து போய் மேசை முன் அமர்ந்தனர்.

திறந்தவெளி என்பதால் காற்று, கொள்ளையாய் வீசியது.

இனிய சித்தார் இசை, மனதை மயக்கியது. வானத்து நட்சத்திரங்களுக்குப் போட்டியாய் நகரின் மின்விளக்குகளின் ஒளி வெள்ளம்.

"ஆகாசினால் குற்ற உணர்வைத் தாங்க முடியவில்லை."

தன் தம்பியைப் பற்றி பேசத் தொடங்கினான். ஆனந்தன்.

"அது வயசுக் கோளாறு... இயல்புதான்..." அவள் சமாதானப்படுத்தினாள்.

"உஷ்... கேளு. சொந்த அண்ணனிடம் இத்தனையையும் மறைக்கலாமா என்ற குற்ற உணர்வு தாங்காமல் என்னிடம் வந்து அத்தனையையும் சொல்லிட்டான்."

நீள பெருமூச்சு விட்டான். ''கேட்கவே நிம்மதியாய் இருக்கு.''

''அதற்கும் நீதான் காரணம்னான். ஒளிக்க, மறைக்கத் தான் குற்றத்தின் வீரியம் அதிகமாகுது. அதைப் பற்றி பேசி மன்னிப்புக் கேட்டால் மனபாரம் குறைஞ்சிடும் என்கிறதை உன்னிடம் கற்றுக்கொண்டான் போலும். அதான் என்கிட்ட எல்லாத்தையும் கக்கிட்டான்.''

''மகிழ்ச்சி.''

''நான் ஆகாஷ் சொன்னதை எல்லாம் சரியான விதத்தில் எடுத்ததும்கூட உன்னால்தான் ஆனந்தி.''

இப்போது அவள் முகம் சிவந்தது.

''இதென்ன எல்லாப் பழியும் என்மேல் விழுது?''

''ஆகாஷின் தவறை இயல்பாய் எடுத்து, நல்லபடி மீள உதவினே நீ. அதையே கூடப்பிறந்த நான் செய்யலைன்னா எப்படி?''

''அதான்... என்னை இங்கே அழைச்சு வந்து பயங்காட்டினீங்களாக்கும்?''

''பயங்காட்டல்லை.''

அவன் கைகள், அவள் கைகளை எடுத்து தனக்குள் பொதித்து வைத்தன. அந்த ரம்மியமான சூழலில் நேர்ந்த அந்தத் தொடுதல் அவளைக் கொள்ள கொண்டது.

ஆனந்திக்கு உடம்பின் ரத்தம் மொத்தமும் கைகளுக்கு ஓடிவந்தது போல, தலை லேசாகி கிறுகிறுத்தது.

அதிலிருந்து தப்புவதற்காய் அவசரமாய் எழுந்தாள். உடல் - மனம் இரண்டுமே தடுமாறின.

அம்பு போல எழுந்தவன், சரிந்தவளைத் தன்மேல் தாங்கிக்கொண்டான். அவனது ஆண்மை, அண்மை.



வாசனை அழகு அத்தனையும் அவளை மெய்சிலிர்க்க வைத்தன.

உடம்பு செயலற்று மேலும் தொய்ந்தது. சங்கடத்துடன் சுற்றிலும் பார்த்தாள்.

அன்று ஏதோ விசேசத்திற்கான விருந்து உள் அறையில் நடந்ததால் வெளியே யாருமில்லை.

''சிப்பந்தியை இப்ப வரவேண்டாம்னு சொல்லிட்டேன்'' விளக்கினான்.

வழக்கமாய் 'பளிச்' என்று பேசி செயல்படும் தன் நிலை ஏன் இப்படி பரிதாபமானது என்ற திகைப்புடன் நின்றாள்.

''இது தப்பு'' என்று முணங்க மட்டுமே முடிந்தது.

''ம்ம்.. நீ எங்க வீட்டுக்கு வந்தது தப்பு ஆனந்தி. அன்பும் ஆனந்தமும் இல்லாமல் வறண்டிருந்த வீட்டிலே அத்தனையையும் கொள்ளையாய்க் கொட்டினாய். ஆயிரம் அகலை ஏத்தின மாதிரி ஒவ்வொரு இடுக்கையும் ஒளியாக்கினே... இனிமேல் நீ இல்லாம... எங்களால்... என்னால் முடியாது...'' கெஞ்சலும் காதலுமாய்க் கரகரத்தது அவன் குரல்.

பேச்சோடு அவன் கைகள் அவள் மீது அலைய, அவளது நிலைமை மேலும் மோசமானது!

''சுதாங்கினி...'' என்று மட்டுமே மிக முயன்று உச்சரித்தாள்.

''சுதா உளவாளி எல்லாம் வைத்து செயல்பட்டதால் விளைஞ்ச ஒரே நன்மை - என்ன தெரியுமா? சுதாங்கினிக்கே தன் கீழ்த்தரக் குணம், வேலைக்காரங்க வரை தெரிஞ்சு

போகக்கிற அவமானம்தான்... இனி நம்ம வீட்டுப் பக்கமே அவள் வரமாட்டாளாம்...''

''நீங்க அவளைப் போய்ப் பார்த்தீங்களா?''

''பின்னே? எங்களிடையே கல்யாணம் இனி சாத்தியமில்லைங்கிறதை நேரில் போய் அவளிடம் சொல்லிடறது தானே மரியாதை?''

''ஏன்?''

அவன் பிடியிலிருந்து சற்று விலகி ஆனந்தனின் முகத்தை எதிட்டாள். தென்னை மரத்தின் நிழலுக்குள் இருந்தாலும் அவர்களை நிலவின் ஒளி மிருதுவான அழகோடு காட்டியது.

அவளையே குறும்பாய், குறுகுறுப்பாய் பார்த்தவன் புன்னகைத்தான்.

'தாளவில்லையடா உன் சிரிப்பு' என்பது போல அவள் கண்மூடினாள்.

''என்னு உனக்குப் புரியுதில்லா? பின்ன ஏன் கேட்கிறே ஆனந்தி? காதலைப் பற்றி எனக்கு இப்பதான் புரியுதும்மா. பரஸ்பர மரியாதை, நம்பிக்கைதான் காதலுக்கு அடிப்படை. சுதாங்கினியை நான் மணக்க முடிவெடுத்தது வெறும் வியாபாரம்தான். அதையும் நீதான் எனக்குப்புரியவைச்சே.''

''ஆனா, சுதாங்கினி உங்களை நேசிக்கிறா அவளை ஏமாத்துறது...''

''இல்லை, என் மூலம் வரும் அந்தஸ்தை விரும்பினாள். கவுரவத்துக்கு ஆசைப்பட்டாள். ஆனா, சுதா என் குடும்பத்தைப் பற்றி அவள் குறை சொல்ல, நானும் வீட்டாரிடம் முகட்டுத்தனமாய் நடந்துகிட்டேன். நம்ப



வீட்டு நிம்மதி குலைஞ்சுது'' தன்னையே குலுக்கிக் கொண்டான்.

''ஆனா... நான் உங்களை நேசிக்கிறதாய்... அதாவது காதலிக்கிறதாய் எப்படி நினைச்சீங்க? நானும், பாலாவும் நெருங்கிப் பழகி...''

சற்று முரண்டியவளை இழுத்து இறுக்கினான்.

''அதெல்லாம் நாடகம் என்கிறதை பாலா என்கிட்ட சொல்லிட்டான். நேற்று ராத்திரியே அவனைப் போய் பார்த்தேன். நீயும் அவனுமாய் போட்ட நாடகம் வெற்றி. உங்க திட்டத்தின்படி அமுது இப்ப பாலாவைப் புரிஞ்சுகிட்டா... விரும்புறா இல்லையா? ஆக இனி நீ அந்தக் குட்டையைக் குழப்பாதே.''

''எதையும் குழப்பக்கூடாது என்ற நினைப்போடுதான் பேசுறேன்.'' என்றவளை கோபத்துடன் சற்று எட்டத் தள்ளி நிறுத்தினான்.

''நீ இல்லைன்னாலும் நான் சுதாங்கினியைக் கல்யாணம் பண்ணுவதாய் இல்லை ஆனந்தி... அது நிச்சயம்.''

''பாலா, அமுதுவை சேர்த்து வைத்தோம்னு நான் பெருமைபடற நேரத்துல இப்படி ஒரு அசம்பாவிதம்னா...?''

''சரியான ஜோடியை சேர்த்து வைக்கிறதைப் போல தப்பான ஒரு ஜோடியைச் சேராமல் காப்பாத்துறதும் உத்தமமான வேலைதான்.''

''முந்திரிக்கொட்டை போல நான் ஏதேதோ செய்யக் கடைசியில்...''

''முந்திரிக் கொட்டை சுவையானது...'' அவள் காதுமடலைக் கவ்வினான்.

உடம்பு முழுக்கத் தீப்பிடித்தாற் போல இருவரும் அசைவற்று நின்றார்கள்.

''நீங்க தொடக்கத்துல என்னிடம் அப்படி சண்டை போட்டு சிலிர்த்தப்பவே நான் கண்டுபிடிச்சிருக்கணும்.'' என்றாள் இறுதியாய்.

''என்னன்னு?''

''இப்படி என்னிடம் சரணாகதி ஆகப்போறீங்கன்னு வெட்கத்துடன் சிரித்தாள்.

பளபளத்த அவளின் பவள உதடுகளை ஆர்வமாய்ப் பார்த்தான். அதற்குமேல் தாங்காமல் அவற்றோடு இதழ் பதித்து முத்தமிட குனிந்தான்.

பரவசத்தில் கண்களை மூடினார்கள். அவர்களுக்குள் லட்சம் லட்சமாய் ஆனந்த நட்சத்திரங்கள் மின்னின பூவாய் சொரிந்தன....

*****